# முத்துலட்சுமி ராகவன்

# இமையோரம் உன் நினைவு...



லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ இமையோரம் உன் நினைவு... ★ முத்துலட்சுமி ராகவன்



லட்சுமி பாலாஜி பதிப்பகம்



லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ இமையோரம் உன் நினைவு... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
இமையோரம் உன் நினைவு...

## முத்துலட்சுமி ராகவன் எழுதிய

## இமையோரம் உன் நினைவு...

# 1

ஜன்னலோரமாக அமர்ந்திருந்த சுமித்ராவின் முகத்தில்.. பஸ் வேகமாகப் போவதால் எதிர்காற்று வந்து மோதியது.. கூந்தல் கலைந்து முடி பறக்க.. சுமித்ரா ஜன்னல் கதவை மூடினாள்.. அதன் கண்ணாடி வழியாக சாலையில் கடந்து போகும் மரங்களை வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.. அவளது மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாய்ந்து கொண்டிருந்தது..

'தேடுவானா..' அவள் மனம் ஏங்கித் தவித்தது.. இமையோரம் சிறு நீர்முத்துக்கள் உதித்தன.. உதடுகளில் துயரப் புன்முறுவல்..

'தேட மாட்டான்.. என்னை ஏன் தேடப் போகிறான்.. எனக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது..? நான் யார்..? அவன் யார்..? நான் அவனுக்குச் சொந்த மில்லையே.. நானா அவனின் அத்தை மகள்..? மைதிலிதானே அவனின் அத்தை மகள்..'

அவள் மனம் துடித்தது.. வேண்டாமென்றுதான் கிளம்பி வந்துவிட்டாள்.. தன்னால் எதற்கு பெரியப்பாவின் மகளின் வாழ்வில் பிரச்னை உண்டாக வேண்டும் என்று தான் விலகி வந்து விட்டாள்..

ஆனால், அவளுடைய மனம்..? அது சென்னையி லேயே நங்கூரம் பாய்ச்சி வைத்தது போல இருந்து கொண்டு உடன் வர மறுக்கிறதே.. எவனை மறக்க நினைத்து வேலையைக் கூட விட்டுவிட்டு... போக விரும்பாத அண்ணனின் வீட்டிற்கு போகிறாளோ.. அந்த விவேகானந்தனை மறக்க

மாட்டேனென்று அவள் மனம் அடம்பிடிக்கிறதே.. அவனை விட்டு விலக மறுக்கிறதே..

அவளது இமையோரம் அவனது நினைவு சட்டமாக அமர்ந்து கொண்டு அவளை இமை மூட முடியாமல் செய்து கொண்டிருந்தது.. நடுநிசியைத் தொடும் அந்த நேரத்தில்.. அந்த சொகுசு பஸ்ஸில் இருந்த அனைவரும் தங்களது இருக்கைகளை படுக்கை வாக்கில் அமைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தனர்..

அவள் தூங்கவில்லை.. இமைகள் மூட மறுத்தன.. இமை மூடினால்.. மூடிய இமைகளுக்குள் அவன் முகம் வந்து நின்றது.. கண்சிமிட்டிச் சிரித்தது..

"ஐ லவ் யூ சுமி.." என்றது..

"விவேக்.." சுமித்ரா கண்கலங்கினாள்..

பஸ்ஸிற்குள் மங்கலான முன்பக்க வெளிச்சம் தவிர இருள் போர்வையாக கவிந்திருந்தது.. அந்த இருள் போர்வை தந்த பாதுகாப்பில்.. மற்றவர்கள் பார்த்து

விடப் போகிறார்களே என்ற அச்சமின்றி அவள் கண்ணீர் உகுத்தாள்..

இந்த ஒரு வருட காலமாகவே அவள் இருளில் யாருமறியாமல் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருக்கிறாள்.. என்று விவேகானந்தன் அவள் மீது ஆசைப் பட்டதை மைதிலி அறிந்து கொண்டாளோ.. அன்றிலிருந்தே அவளது கண்கள் நீர் வடித்துக் கொண்டு தான் இருக்கின்றன..

"அநாதைகளுக்கு ஐயோ பாவம்னு இரக்கம் காட்டினாங்க என் அப்பாவும் அம்மாவும்.. அவங்களுக்கு இதுவும் வேணும்.. இன்னமும் வேணும்.."

மைதிலி அன்று நெருப்பாக நாவால் சுட்டது.. இன்றும் ரணமாக சுமித்ராவின் மனதில் ஆறாமல் வலித்தது.

சும்மாவா வள்ளுவர் சொன்னார்..

'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் - ஆறாதே

நாவினால் சுட்ட வடு..' என்று

அவரே பொய்யாமொழிப் புலவர்.. அவர் வாக்கு பொய்க்குமா..? அதன் வேதனையை அறிந்தவர்கள் அவரை நினையாத நாள் உண்டா..? சுமித்ராவும் அந்த வேதனையை அறிந்தாள்.. வள்ளுவரின் வாய்மொழி உணர்த்திய உண்மையை உணர்ந்தவளாய் புழுவாய் துடித்தாள்.. 'இரக்கம் காட்டு..' என்று மைதிலியிடம் இரைஞ்சினாள்..

"நீயா மைதிலி இப்படிப் பேசுவது..?"

"ஏன்.. அதுவும் உனக்குச் சந்தேகமாகிவிட்டதா..? இது என் வீடு.. நீ ஒண்ட வந்த அகதியென்பதைத்தான் மறந்து விட்டாய்.. பேசுவது நான்தான் என்பதிலும் உனக்குச் சந்தேகம் வந்துவிட்டதா..?"

"நீ இப்படிப் பேச மாட்டாயே மைதிலி.."

"நீ பேச வைத்து விட்டாயே.. தாய் தகப்பனில்லாத அநாதைன்னு நினைத்துத்தானே உன் மேல் அன்பு காட்டினேன்..? என் வீட்டை உன் வீடாக நினைக்க வைத்தேன்.. என்னைப் பெற்றவர்களை நீயும் அம்மா.. அப்பான்னு கூப்பிட அனுமதி தந்தேன்.. கடைசியில்... என் உயிராய் நான் நினைப்பவரை நீ உன் உயிராக்கிக் கொள்ள நினைத்து விட்டதை அறிந்த பின்னும் ஏமாளியாக நிற்பேன்னு நினைத்தாயா..?"

"மைதிலி.." சுமித்ரா வாயடைத்துப் போனாள்.. கனல் கக்கும் கண்களுடன் மைதிலி அவளைச் சுடுவதற்கான காரணத்தைப் புரிந்து கொண்டதும் குற்றவாளியாய் தலைகவிழ்ந்து நின்றாள்..

"பாவி.." மைதிலி பொருமினாள்..

"நீ பாவிடி.. உண்ட வீட்டுக்கே இரண்டகம் நினைத்து விட்ட பாவி.."

"இல்லை மைதிலி.." சுமித்ரா மன்றாடினாள்..

"நீ நினைப்பது போல இல்லை மைதிலி.. என்மேல் எந்தத் தப்பும் இல்லை.. நீ என்னைத் தவறாக நினைக்காதே மைதிலி.."

"உன் மேல் தப்பில்லைடி.. உன்னை வீட்டில் சேர்த்தேன் பார்.. என் மீதுதான் தப்பு.. என் தலையில் நானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டேண்டி.."

"அப்படிச் சொல்லாதே மைதிலி.. மனதறிந்து நான் யாருக்கும் எவ்விதக் கெடுதலும் பண்ணவில்லை.."

"கெடுதல் பண்ணவில்லையா..? எனக்கு நீ கெடுதல் பண்ணவில்லையா..? என் வாழ்க்கையை தட்டிப் பறித்துக் கொள்ளத் திட்டம் தீட்டவில்லையா..?"

"இல்லை.. இல்லை.. இல்லை.."

"பின் எப்படி.. விவேக் அத்தான் உன்னை விரும்பு கிறார்..?"

"அதற்கு நான் எப்படிப் பொறுப்பாவேன் மைதிலி.."

"ம்ஹா.. நீ எப்படிப் பொறுப்பாவாய்..? நான்தாண்டி பொறுப்பு.. போக்கிடம் இல்லாமல் நின்றவளை.. என் வீட்டுக்கு கூப்பிட்டுக் கொண்டு வந்தேன் பார்.. நான்தான் இதற்கு பொறுப்பு.."

எவ்வளவு நேரம்தான் குட்டக் குட்டக் குனிவது..? சுமித்ரா ரோஷத்துடன் நிமிர்ந்தாள்..

"எனக்கு போக்கிடம் இல்லாமல் இல்லை மைதிலி.. எனக்கு என் அண்ணன் வீடு இருக்கிறது..?"

மைதிலி அதைக் கேட்டதும் எகத்தாளமாக சிரித்தாள்..

"அண்ணன் வீடு..! ம்ம்..? போ.. உன் அருமை அண்ணன் வீட்டிற்கு போய்ப் பார்.. உன் அண்ணிகாரி.. இரண்டே நாளில் உன்னை வீட்டை விட்டு விரட்டி விடுவாள்.."

"என் அண்ணன் என் மேல் உயிரையே வைத்திருக் கிறான்.. அதை மறந்துவிடாதே மைதிலி.."

"அதனால்தானே உன் அண்ணிக்கு உன் மேல் காண்டாக இருக்கிறது.. அவளைச் சொல்லியும் குற்ற மில்லை.. காதலிக்கும் கணவனின் அன்பை பிடுங்கிக் கொள்ளும் ராட்சஸியாக நீ இருந்தால்.. அவள்தான் என்ன செய்வாள்..?"

இதே மைதிலிதான்.. அண்ணி படுத்தும் பாட்டைச் சொல்லி சுமித்ரா அழுதபோது கோபம் கொண்டாள்..

"மனுஷியாடி அவள்..? கூடப் பிறந்த அண்ணனிடம் பேசக்கூட விட மாட்டேன்னு ஒருத்தி சொல்வாளா..? அதுவும்.. தாய் தகப்பனில்லாத.. அண்ணன் மட்டுமே உறவுன்னு கிடக்கும் பெண்ணிடம் இப்படி இரக்கமில்லாமல் நடந்து கொள்வாளா..? அவன் மனுஷியே இல்லைடி.. ராட்சஸி.."

அன்று சுமித்ராவின் அண்ணி மாலதி ராட்சஸியாக மைதிலியின் கண்களுக்குத் தெரிந்தாள்.. அதே மைதிலி தான் பின்னாளில் சுமித்ராவைப் பார்த்து.. 'ராட்சஸி'யென்று சொல்லி மாலதியின் அநியாயத்தை நியாயப்படுத்தினாள்..

"உயிருக்குயிராய் காதலித்துப் பார்த்தால் தெரியும்டி.. அந்தக் காதல் பறிபோகும்போது.. மனதிற்குள் ஏற்படும் வலி.. மரணவலியைவிட மோசமானதுடி.. உனக்கெங்கே அது தெரியப் போகிறது..? நீ காதலிக்கிறவள் இல்லையே.. காதலிக்க வைக்கிறவளாச்சே.."

மைதிலி இதை வேதனையுடன சொன்னபோது.. சுமித்ரா பரபரத்தாள்.. மைதிலியின் கையை பிடித்துக் கொண்டு அவள் முகம் பார்த்துக் கெஞ்சினாள்..

"புரிகிறதுதானே மைதிலி.. என் மேல் தப்பில் லைன்னு உனக்கு புரிகிறதுதானே மைதிலி.. நான் விவேக் கிடம் காதல் சொல்லவில்லை மைதிலி.. அவர்தான் என்னிடம் காதல் சொன்னார்.."

கசப்பான புன்னகையுடன்.. அவளது கையை உதறிவிட்டாள் மைதிலி.. அவள் முகம் தோற்றுவிட்ட

சோகத்தை பிரதிபலித்தது..

"நீ கொடுத்து வைத்தவள்டி.. உன் அண்ணன் கட்டிய காதல் மனைவியை விட்டு விட்டு உன் மேல் குடம் குடமாய் பாசமழையை பொழிவான்.. என் தாய்மாமனின் மகன், ஒற்றைப் பெண்ணாக.. ஏகப்பட்ட சொத்திற்கு ஒரே வாரிசாக நிற்கும் என்னை விட்டுவிட்டு உன்னிடம் வந்து காதல் சொல்வான்.. நீ மற்றவர்களுக்கு கிடைக்க வேண்டிய அன்பைப் பறிக்கவே அவதாரம் எடுத்து வந்தவளாடி..?"

சுமித்ரா எவ்வளவோ தன்னிலை விளக்கம் சொல்லிப் பார்த்தும் மைதிலியின் மனம் இரங்கவில்லை..

'போடி.. நீயுமாச்சு.. உன் கோபமுமாச்சு..' என்று சுமித்ராவினாலும் விட்டுவிட முடியவில்லை.

மைதிலியின் நேசம் அப்படிப்பட்டது.. சிறு வயதில்.. தாய் தந்தையை இழந்துவிட்ட சுமித்ராவிற்கு அவளுடைய அண்ணன் சுதர்சனம்தான் எல்லாமுமாக இருந்தான்..

ஒரு சாலை விபத்தில் அவர்களின் பெற்றோர்கள் இறந்துபோனபோது சுமித்ராவிற்கு பத்து வயது.. சுதர்சனம் அவளைவிட ஏழு வயது மூத்தவன்.. கல்லூரிப் படிப்பில் முதலாண்டு மாணவனாக இருந்தான்... பதினேழு வயதிலேயே அவன் குடும்பப் பொறுப்பை எடுத்துக் கொண்டான்.. சிறுமியாக இருந்த சுமித்ராவிற்கு.. வீட்டுக்குள் தாயாக இருந்தான்.. வெளியில் தகப்பனாக இருந்தான்..

தூத்துக்குடியின் மையப் பகுதியில்.. அவர்களுடைய அப்பா இரண்டு வீடுகளை விட்டுச் சென்றிருந்தார்.. ஒரு வீட்டை வாடகைக்கும் விட்டிருந்தார்..

சுதர்சனம்.. அவர்கள் குடியிருந்த வீட்டையும் இரண்டாகப் பிரித்து.. ஒரு பகுதியில் தங்கையுடன் இருந்து கொண்டு மறுபகுதியை வாடகைக்கு விட்டான்.. தாயின் நகைகளை பாங்க் லாக்கரில் பாதுகாப்பாக வைத்தான்.. அவர்களின் தகப்பனார் விட்டுச் சென்றிருந்த பேங்க் கையிருப்பை வட்டி வரும் டெபாஸிட்டிற்கு மாற்றினான்..

வங்கியிலிருந்து வந்த வட்டிப் பணத்திலும் வாடகைப் பணத்திலும் குடும்பம் எந்தக் குறைவுமில்லாமல் வாழ முடிந்தது.. சுமித்ராவை பணக்கஷ்டம் அணுகாமல் அவனால் வளர்க்க முடிந்தது..

பட்டப் படிப்பை முடித்தவன்.. சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதியவாறு மேலே படித்தான்.. அவன் எம்.ஏ. பட்டம் வாங்கும்போது அவன் பிறந்து வளர்ந்த தூத்துக் குடியிலேயே கலெக்டர் ஆபீஸில் அவனுக்கு வேலை கிடைத்து விட்டது..

சுமித்ரா பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது அவனுக்கு வேலை கிடைத்துவிட.. அதற்கு மேல் அவன் தங்கையின் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தான்..

அண்ணனும் தங்கையுமாக இருந்த அந்த வீட்டில்.. இளவரசியாக வலம் வந்தாள் சுமித்ரா.. வீட்டின் ஒரு பகுதியை தடுத்து வாடகைக்கு விட்டிருந்தவன்.. குடியிருந்தவர்களை காலி பண்ணச் சொல்லிவிட்டு வீட்டை ஒரே பகுதியாக்கி மாடியிலும் எடுத்துக் கட்டினான்.. வீட்டின் முன்பகுதியில் சுமித்ரா ஆசைப்பட்டது போல தோட்டமும் அமைத்துக் கொடுத்தான்..

'இப்போது அந்தத் தோட்டம் எப்படியிருகிறதோ..' சுமித்ரா பெருமூச்சு விட்டாள்..

அவள் அமைத்த தோட்டம் என்பதற்காக மாலதி.. தண்ணீர் விடாமல் செடிகளை வாட வைத்திருந்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.. ஏனெனில்.. மாலதிக்கு சுமித்ராவின் மீதிருக்கும் வெறுப்பு அத்தகையது..

அவளைப் பொறுத்தவரையில் சுமித்ரா அவளது வாழ்வை நாசமாக்கிக் கொண்டிருக்கும் சூன்யக்காரி.. இன்று அதே வார்த்தைகளைத்தான் மைதிலியும் சுமித்ராவைப் பார்த்துச் சொல்லிவிட்டாள்..

'என்ன பிறப்பெடுத்தேன்.. நான்..' சுமித்ராவின் கண்களில் இருந்து நீர் பெருக்கெடுத்து வழிந்தது..

'அம்மா..!' விட்டு விட்டுப் போய்விட்ட அன்னையை நினைத்து அவள் ஏங்கி அழுதாள்..

'என்னை யாருக்கும் பிடிக்கவில்லை அம்மா.. என்மேல் அன்பாக இருக்கிறவர்களின் அருகேயிருக்க எனக்குக் கொடுப்பினை இல்லை.. அண்ணன் என் மேல் உயிராய் இருந்தான்.. அண்ணி என் புருஷனின் அன்பைத் தட்டிப் பறிக்கிறாயேன்னு ஊடே வந்தாள்.. இப்போது விவேக் என் மேல் உயிராய் இருக்கிறார்.. மைதிலி என்னைக் குற்றம் சொல்லி விட்டாளேம்மா.. அவளுடைய உரிமையை நான் தட்டிப் பறித்துக் கொண்டேனாம்.. தட்டிப் பறிக்கிற ஆளாம்மா நான்..? எனக்குப் பறிக்கத் தெரியாதே.. இவர்கள் இருவரும்தானே எனக்கான பாசத்தைப் பறித்து என் காதலைப் பறித்து.. என்னை ஓட ஓட விரட்டுகிறார்கள்.. உதைபடும் பந்ததைப் போல இவர்கள் இருவருக்கும் இடையே நான் மிதிபடு கிறேனேம்மா..'

தேற்றுவாரின்றி அழுதாள் அந்த தாயில்லாத பேதை.

## 2

சுமித்ராவின் தாய் மரகதம் உயிரோடு இருந்தபோது மகளை இடுப்பை விட்டு இறக்கியதில்லை.. அவளுடைய கணவர் கைலாசம்கூட அதை வேடிக்கையாக சொல்லிச் சிரிப்பார்..

"இடுப்பில் பசை தடவி வைத்திருக்கிறாயா மரகதம்..? உன் மகள் இடுப்போடு ஒட்டிக் கொண்டு விட்டாளே.."

"உங்களுக்குப் பொறாமை.."

"ஏன்..? உன் இடுப்பில் என்னால் உட்கார்ந்து கொள்ள முடியவில்லையென்றா..?"

"போதுமே.. சுதர்சனத்தின் காதில் உங்கள் பேச்சு விழுந்து விட்டால் அவன் என்ன நினைப்பான்..?"

"அப்பாவின் கண்களுக்கு அம்மா இன்னும் இளமை யாகவும் அழகாகவும் தெரிகிறாளேன்னு நினைப்பான்.."

"அப்போ.. என்னைக் கிழவின்னு சொல்றீங்களா..?"

"உனக்கு நூறு வயதானாலும்.. நான் அப்படிச் சொல்வேனா மரகதம்..?"

கைலாசம் காதலுடன் மனைவியைப் பார்ப்பார்.. அவர்களின் அன்னியோன்யம்.. அவர்களுடைய உறவினர் வட்டாரங்களில் பிரசித்தி பெற்றது..

"கைலாசம் பெண்டாட்டிதாசனப்பா.. பெண்டாட் டியை விட்டு ஒரு நொடிகூட பிரிந்திருக்க மாட்டான்.. அவளைப் பிரியவும் விட மாட்டான்.."

ஊரார் கண்பட்டதோ உறவினரின் சொல் பட்டதோ தெரியவில்லை.. சாலை விபத்தில் பலியானபோது கைலாசம், மரகதத்தின் கைபிடித்து தன்னுடனேயே அழைத்துக் கொண்டு சென்று விட்டார்..

"அம்மா.. எனக்கு அம்மா வேணும்.."

தாயைத் தேடி பத்து வயதுச் சிறுமி அழும்போது.. தேற்றும் வகை தெரியாமல் பதினோரு வயது சுதர்சனம் திகைத்து நின்றான்.. அப்போது உதவிக்கரம் நீட்டியவள் தான் மைதிலி.. அவளுக்கும் சுமித்ராவின் வயதுதான்.. கைலாசத்தின் பெரியப்பா மகனான மோகனரங்கத்தின் மகள்.. ஒன்றுவிட்ட தம்பியாக இருந்தபோதும் கைலாசத்தின் மீது அளவுகடந்த பாசம் வைத்திருந்தார் மேகானரங்கம்.. இந்தக் குடும்பம் சென்னைக்கு அவர்களின் வீட்டிற்கு விருந்தினராகப் போவதும்.. அந்தக் குடும்பம்.. சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு இவர்களின் வீட்டிற்கு விருந்தினராக வருவதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகள்..

ஒற்றைப் பெண்ணாக வளர்ந்த மைதிலிக்கு.. சுமித்ரா விளையாட்டுத் தோழி.. தன் தோழி தாயில்லாமல் தவித்து அழுதபோது மைதிலி தானே ஒரு தாயாக மாறி சுமித்ராவை அரவணைத்துக் கொண்டாள்..

"அம்மா எங்கேயும் போய்விடலை.. இனி என் அம்மா தான் உனக்கும் அம்மா.. நீ அம்மான்னு கூப்பிடணும்னு ஆசைப்பட்டாயானால் என் அம்மாவை அம்மான்னு கூப்பிடு.."

சுமித்ரா.. 'அம்மா..' என்று அழைத்தபோது.. மைதிலியின் தாய் பூங்கோதை.. உண்மையான தாய்ப் பாசத்தை பதிலுக்கு காட்டினாள்..

காலாண்டு.. அரையாண்டு.. முழுஆண்டு விடுமுறை களை சென்னையில் மோகனரங்கத்தின் வீட்டில் தான் சுமித்ரா கழித்தாள்..

தம்பியின் மகள் என்று மோகனரங்கம் இயல்பாய் பாசம் காட்டினார்.. தாயில்லாத பெண் என்று பூங்கோதை கனிவு காட்டினாள்.. மைதிலியோ கூடப்பிறந்தவளைப் போல ஒட்டிக் கொண்டாள்..

அவர்கள் வீட்டில் சுமித்ரா இருக்கும் போது.. பெற்ற மகளுக்கும் சுமித்ராவுக்கும் இடையில் அவர்கள் பேதம் பார்த்ததில்லை.. எதை வாங்கினாலும் மைதிலிக்கு

சமதை யாக சுமித்ராவுக்கும் வாங்கிக் கொடுத்தார்கள். மெல்ல மெல்ல சுமித்ரா.. தாய் தந்தையை மறந்து பூங்கோதையையும் மோகனரங்கத்தையும் தாய் தந்தையாக நினைக்க ஆரம்பித்தாள்..

அவள் பட்டப் படிப்பை முடித்தபோது.. சுதர்சனத்திற்கு திருமணம் நடைபெற்றது.. காதல் திருமணம்.. சுதர்சனம் மாலதியைக் காதலிக்கவில்லை.. அவன் மனதில் தங்கையைத் தவிர வேறொரு எண்ண மில்லை.. ஆனால்.. மாலதி.. சுதர்சனத்தை மாய்ந்து மாய்ந்து காதலித்தாள்.. திருமணம் செய்து கொண்டால் அவனைத்தான் செய்து கொள்வேனென்று சொல்லி ஒற்றைக் காலில் நின்றாள்..

மாலதி அவர்களுடைய தூரத்து உறவுக்காரரின் மகள் என்பதால் மோகனரங்கம் சென்னையிலிருந்து வந்து தம்பி மகனுக்காக பெண் கேட்டுச் சென்றார்.. திருமணமும்

நடந்தது.. அண்ணி வரப் போகிறாள்.. அவள் இன்னொரு தாயாக இருப்பாள் என்று சுமித்ராவும் மகிழ்ந்து போனாள்..

ஆனால்.. நடந்து வேறாக இருந்தது.. மாலதி.. சுதர்சனத்தை நெருங்கும் போதெல்லாம்.. அவன் சுமித்ரா வைப் பற்றியே பேசிவைக்க.. மாலதியின் மனதில் பொறாமைத் தீ பற்றி எரிந்தது.. அதன் தணல் வீச்சில் சுமித்ரா பொசுங்க ஆரம்பித்தாள்.. மனதில் உள்ளதை வழக்கம் போல அவள் செல்போனில் மைதிலியிடம் கொட்ட.. அவள் கொதித்துப் போனாள்..

"என்னடி நினைத்துக்கிட்டிருக்கா அவ..? உன்னை எது செய்தாலும் கேட்பதற்கு ஆளில்லைன்னு நினைத்துக் கிட்டு இருக்காளா..? அண்ணனிடம் ஒரு வார்த்தை

இதைப் பற்றிச் சொன்னால் போதும்.. வாழ்க்கை முழுவதும் அவள் முகத்தை திரும்பிக்கூடப் பார்க்க மாட்டான்.. நான் அவனிடம் சொல்லட்டுமா..?"

ஆனால் சுமித்ரா.. தானும் மாலதியைப் பற்றி சுதர்சனத்திடம் சொல்லவில்லை.. மைதிலியையும் சொல்ல விடவில்லை..

## 3

"வேண்டாம் மைதிலி.. இதைப் பற்றி அண்ணனிடம் பேசாதே.."

"ஏண்டி..?"

"எனக்காவது ஒண்டிக்கொள்ள உன் நிழல் இருக்கிறது.. அண்ணனுக்கென்று யார் இருக்கிறார்கள்..?"

"சுமித்ரா.."

"நினைத்துப் பார் மைதிலி.. பதினோரு வயதில் மற்ற ஆண்பிள்ளைகள் எவ்வளவு ஜாலியாக இருப்பார்கள்.. ஆனால் என் அண்ணன்.. என்னை வளர்ப்பதிலேயும்

எங்கள் குடும்பப் பாட்டை சிரமமில்லாமல் நகர்த்து வதிலேயும் கவனமாக இருந்தான்.. அவன் தனக்குன்னு வாழ்ந்த தில்லை மைதிலி.."

"ஆனால் சுமி.. உன் அண்ணி உன்னை இப்படிக் கொடுமைப்படுத்துகிறாளே.. இது அவனுக்குத் தெரிய வேண்டாமா..?"

"வேண்டாம்.. என் அண்ணிக்கு என்னைத்தான் பிடிக்காது.. என் அண்ணனை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.. அவன் மேல் உயிராய் இருப்பாள்.. அவனுக்கு வேண்டிய தைப் பார்த்துப் பார்த்துச் செய்வாள்.. எனக்கு அதுபோதும் மைதிலி..."

சுமித்ராவின் இப்படிப்பட்ட மனதாலேயே மைதிலிக்கு அவளைப் பிடித்துப் போனது.. ஆனாலும் தோழியைத் தொடர்ந்து துன்பத்தில் விட்டு வைக்க அவளுக்கு மனமில்லை..

"நீ சென்னைக்கு வந்துவிடு சுமி.."

"எதைச் சொல்லி நான் அங்கு வரமுடியும் மைதிலி..?"

அதுவரை.. விடுமுறை என்ற காரணத்தைக் காட்டித் தான் சுமித்ரா சென்னைக்குச் செல்ல சுதர்சனத்திடம் அனுமதி வாங்குவாள்.. தேவையில்லாமல் தங்கையை உறவினரின் வீட்டிற்கு அனுப்ப மாட்டான் சுதர்சனம்.. அதுபாசம் காட்டும் மோகனரங்கத்தின் வீடாக இருந்தாலும் சரி..

"வேண்டாம் பெரியப்பா.. அவள் இங்கேயே இருக்கட்டும்.. தேவையில்லாத அலைச்சல் எதற்கு.. எனக்கு அவளில்லாமல் வீடு வெறிச்சுன்னு இருக்கும்.." என்று மறுத்துவிடுவான்..

"கவலையே படாதே.. இங்கே வேலை பார்க்கன்னு கிளம்பி வந்துவிடு.."

சுமித்ராவிற்கு இந்த ஏற்பாடு மிகவும் பிடித்துப் போனது..

"எனக்கு சென்னையில் வேலை கிடைக்குமா மைதிலி..?"

"கட்டாயம் கிடைக்கும்.. தூத்துக்குடியைவிட சென்னையில் வேலைவாய்ப்பு

அதிகம் உண்டு.. உனக்கென்னடி.. டிகிரி படித்திருக்கிறாயே.. கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்திருக்கிறாய்.. உனக்கு வேலை ஈஸியாக கிடைக்கும்.."

சொன்னபடியே மைதிலி.. சுமித்ராவிற்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் விளம்பரங்களை அனுப்பி வைத்தாள்.. மோகனரங்கத்தின் வீட்டு முகவரியைக் கொடுத்து சுமித்ரா விண்ணப்பித்து வைத்தாள்.. நேர்முகத் தேர்விற்கு சுதர்சனத்திடம் அனுமதி வாங்கத்தான் அவள் சிரமப்பட வேண்டியிருந்தது.. ஆனால்.. சுமித்ரா எதைச் செய்தாலும் அதற்கு பாதகமாகவே செயல்படும் மாலதி.. எதிர்பாராத வகையில் சுமித்ராவிற்கு ஆதரவுக் கரம் நீட்டினாள்..

"சென்னைக்கு இன்டர்வியூவுக்கு போகிறாயா.. வேண்டவே வேண்டாம்.. நீ வேலை பார்க்க வேண்டும்ன்னு ஆசைப்பட்டால்.. தூத்துக்குடியிலேயே உனக்கு வேலை வாங்கித் தருகிறேன்.. உன் கல்யாணம் நிச்சயம் ஆகும் வரை வேலை பார்.. அதை விட்டுவிட்டு வெளியூரில் போய் வேலை பார்க்க வேண்டாம்.." சுதர்ஸனம் கண்டிப்புடன் கூறிவிட்டான்.

"இல்லைண்ணா.. மைதிலி எனக்காக சிரமப்பட்டு இந்த இன்டர்வியூக்களை வர வைத்திருக்கிறாள்.. கொஞ்ச நாள் அவளுடன் இருந்துவிட்டு வருகிறேனே.." சுமித்ரா மென்று விழுங்கினாள்.

"ஏங்க.. இப்ப காலம் எவ்வளவோ மாறிப் போய் விட்டது.. எல்லோரும் வேலை பார்க்கும் பெண்தான் வேண்டும்ன்னு கேட்கிறாங்க.. அதனால்.. சுமித்ரா வேலைக்குப் போகட்டுமே.." என்று மாலதி அவளுக்காகப் பரிந்து பேசினாள்..

"நீ வேலை பார்க்கிறாயா.. நான் உன் வேலையைப் பார்த்துத்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேனா..?" சுதர்சனம் மனைவியை மடக்கினான்..

"நீங்க கோடியில் ஒருத்தர்.. உங்களைப் போலவே எல்லோரும் இருப்பாங்களா.." மாலதி கணவனின் மேல் இருக்கும் காதலை வெளிப்படுத்த கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டாள்..

"அதுக்குத்தான் தூத்துக்குடியில் வேலை வாங்கித் தருகிறேன்னு சொல்கிறேனே.."

"குண்டுச் சட்டியில் குதிரையை ஓட்டுவானேன்..? சுமித்ராவின் படிப்பிற்கும் அழகிற்கும் அவளுக்கும் சென்னையில் உயர்ந்த இடத்திலிருந்து மாப்பிள்ளை அமைந்தாலும் அமையலாமில்லையா..? அதை நாம் ஏன் தடுக்க வேண்டும்..?"

எந்த இடத்தில் அடித்தால் எதை ஜெயிக்கலாம் என்று கற்ற வித்தையை கைக்குள் வைத்திருக்கும் மாலதி.. சுமித்ராவின் வளமான எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையில் இருந்த கணவனின் சம்மதத்தை சுமித்ராவிற்கு பெற்றுத் தந்துவிட்டாள்..

# 4

மாலதியைப் பொறுத்தவரையில் சுதர்சனம் அவளது கணவன்.. சுதர்சனத்தின் வீடு அவளுடைய வீடு.. அங்கே சுமித்ராவிற்கு இடமில்லை.. அவளைக் கண்காணாத இடத்திற்கு அனுப்பினால்தான் அவளால் நிம்மதியாக சுதர்சனத்துடன் குடும்பம் நடத்த இயலும்..

மாலதியின் உதவி எதனால் கிடைத்தது என்பதை அறிந்து கொள்ளாமல் இருக்க.. சுமித்ரா ஒன்றும் முட்டாள் இல்லையே..

"என்னமாய் கள்ளத்தனம் பண்ணுகிறாள்.. இவளிடம் உன்னால் காலம் தள்ள முடியாது சுமி.. பேசாமல் எங்களுடனேயே இருந்துவிடு.."

மைதிலி அவள் கரம் பற்றிக் கொண்டாள்.. அப்படிச் சொன்ன மைதிலியின் வாயிலிருந்துதான்.. 'இனி என் முகத்திலேயே விழிக்காதே சுமித்ரா..' என்ற வார்த்தைகளும் வந்தன..

"மைதிலி.. நீயா இப்படிச் சொல்கிறாய்..?" சுமித்ரா அதிர்ந்தாள்.

இதுவரை 'சுமி'யென்று அழைத்த மைதிலி.. 'சுமித்ரா' என்று முழுப் பெயரையும் சொல்லி அழைத்ததையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்..

"போய்விடு சுமித்ரா.. உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நீ செய்த துரோகம் மட்டும்தான் என் நினைவில் இருக்கும்.. அதனால் என் முகத்தில் விழிக்காமல் போய்விடு.."

"நான் உனக்குத் துரோகம் செய்யவில்லை மைதிலி.."

"இனியும் இந்த வார்த்தைகளை.. எப்படி நீ சொல் கிறன்னுதான் எனக்குத் தெரியவில்லை.."

"உண்மையாகவே விவேக் இப்படிச் சொல்வாருன்னு நான் எதிர்பார்க்கவில்லை மைதிலி.."

மைதிலி நிமிர்ந்து.. சுமித்ராவின் கண்களை ஊடுருவிப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் தெரிந்த தோல்வி சுமித்ராவின் மனதில் தாக்கியது..

'இதற்காகவா நான் பிறந்தேன்..?' சுமித்ரா துவண்டு போனாள்..

மைதிலியின் மீது ஒரு தவறும் இல்லை.. அவள் சிறு வயதிலிருந்து தன்னைத்தான் தன் மாமன் மகன் திருமணம் செய்து கொள்ளப் போகிறான் என்று நினைத்தாள்.. அந்த நிச்சயத்தில் இருந்தவளுக்கு அது சிதறிப் போனதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

இது நடக்கும் என்று சுமித்ரா நினைத்துக்கூடப் பார்க்கவில்லைதான்..

சென்னைக்கு வேலைக்குச் சென்றவளுக்கு வேலை பிடித்துவிட்டது.. பணிச்சூழலும் பிடித்துவிட்டது.. அவளுடைய திறமையினாலும் உழைப்பினாலும் அலுவலகத்தில் அவளுக்கென்று ஒரு நிரந்தரமான இடத்தையும் அவளால் பிடித்துவிட முடிந்தது..

கிடைத்த நற்பெயரை அலுவலகத்தில் தக்க வைத்துக் கொண்டவளுக்கு மைதிலியின் பாசத்தையும், சிநேகத் தையும் தக்க வைத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது..

மைதிலியின் வீட்டிற்கு பலமுறை சுமித்ரா போய் இருக்கிறாள்.. சிறு வயதில் அவளுடைய விடுமுறைகளை கழித்ததெல்லாம் மைதிலியின் வீட்டில்தானே.. அப்போ தெல்லாம்.. ஒருமுறைகூட அவள் விவேகானந்தனை அங்கே பார்த்ததில்லை.. மைதிலியும் தன் மனதில் இருந்த காதலை சுமித்ராவிடம் சொல்லவில்லை..

"அவன் வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்தான்.." என்று பின்னொரு நாளில் சொன்னாள்..

"உன் மனதில் காதல் இருந்ததை என்னிடம் சொல்ல வில்லையே மைதிலி.." என்று சுமித்ரா பரிதவித்தபோது.. மைதிலி சொன்ன பதிலைக் கேட்டு இன்னும் மனம் துடித்துப் போனாள்..

"எப்படிச் சொல்லுவேண்டி.. நீயோ தாய் தகப்பனில்லாமல் இருக்கிறாய்.. உன் அண்ணனிடம் பாசம் காட்டக்கூட உன் அண்ணி விடமாட்டேன் என்கிறாள்.. இப்படி அன்பிற்காக ஏங்கிக் கொண்டு நீ தனித்திருக்கும் போது என் காதலை உன்னிடம் சொல்வது தவறுன்னு நினைத்தேண்டி.. நீ ஏக்கப்படுவாய்ன்னு நினைத்தேனே யொழிய.. இப்படி நீ என் காதலைத் தட்டிப் பறித்துக் கொள்வாய்ன்னு நினைக்கவில்லையே... நீ தனிமைப் பட்டுவிடக் கூடாதுன்னு நான் விவேக்குடன் வெளியில் போகும்போதெல்லாம் உன்னையும் சேர்த்துக் கூப்பிட்டுக் கொண்டு போனேனே.. விவேக் என்னை விட்டுவிட்டு

உன் மேல் ஆசைப்படுவான்னு நான் நினைத்துப் பார்க்க வில்லையேடி.. நான் உனக்கு நன்மை செய்ததாக நினைத்து எரிகின்ற கொள்ளியைத் தூக்கி என் தலையில் வைத்துக் கொண்டேனே.. இதை எங்கே போய் சொல்லுவேன்..?"

மைதிலியின் குமுறலில் இருந்த நியாயம் சுமித்ராவை ஆக்டோபஸ் போல வளைத்தது.. பாவி.. நீ பாவியென்று குற்றம் சாட்டியது.. கடலில் மூழ்கியவளுக்கு கைகொடுத்தவளை கடலில் தள்ளிவிட்ட பதைப்புடன் சுமித்ரா பதறிப் போனாள்.. விவேகானந்தனை விட்டுத் தொலைவில் விலகி விட முடிவு செய்தாள்..

"பொதுநலம்.. எந்த விஷயத்தில் பார்ப்பது.. சுமித்ரா..? காதலில் பொதுநலம் வராது.. சுயநலம் மட்டும்தானே இருக்கும்.. நான் ஏன் சுயநலமாய் இல்லாமல் போனேன்..? விவேகானந்தன் வெளிநாட்டில் இருந்து வந்ததும் உன்னை வீட்டை விட்டு ஏன் அனுப்பாமல் போனேன்.. அவன் கண்களில் நீ பட்டிருக்காவிட்டால் இந்த வினையே எனக்கு வந்திருக்காதே சுமித்ரா.."

ஆனால், விவேகானந்தன் சொன்னது வேறுவிதமாக இருந்தது..

"நீ என் கண்ணில் பட வேண்டும் என்பது விதி சுமி.." என்றான் அவன்..

"எத்தனையோ பெண்களை நான் என் வாழ்வில் சந்தித்து இருக்கிறேன்.. அத்தனை பெண்களில் ஒருத்தி மீது கூட வராத காதல் உன் மீது எனக்கு ஏன் வந்தது..?"

"ஏன் வந்தது..?"

"ஏனென்றால்.. நீ எனக்காக பிறந்தவள்.."

அன்று விவேகானந்தன் அதைக் கூறியபோது.. அவன் கண்களில் தெரிந்த காதலில் சுமித்ரா வீழ்ந்து போனாள்.. அவன்தான் எல்லாமும் என்று ஆகிப்போனாள்.. மனதில் அழுத்திய இன்ப நினைவுகளின் சுமையைத் தாங்க முடியாதவளாய்.. மைதிலியிடம் அதைப் பகிர்ந்து கொண்ட போதுதான் மைதிலியின்.. மனதின் மறுபக்கத்தை அவள் தெரிந்துகொள்ள வேண்டி வந்தது..

கண்கள் நிலைகுத்த.. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மைதிலி அப்படியே பேச்சு மூச்சில்லாமல் உட்கார்ந்து விட்டாள்.. சுமித்ரா பதறிப் போனாள்..

"மைதிலி.. மைதிலி.." என்று அவளைப் பிடித்து உலுக்கினாள்..

ஒரு வழியாய் தன் நிலைக்கு திரும்பிய மைதிலி.. தான் தோள் மீது கிடந்த சுமித்ராவின் கையை விலக்கி விட்டு அவளை வெறுப்புடன் பார்த்தாள்..

"என்ன மைதிலி.." சுமித்ரா திகைத்தாள்..

"ஏண்டி.. என் காதலை பறித்தாய்..?"

"மைதிலி.."

"துரோகி.."

இப்போது.. கண்கள் நிலைகுத்த நெஞ்சைப் பிடித்துக் கொள்வது சுமித்ராவின் முறையானது.. ஆனால், சுமித்ரா காட்டிய இரக்கத்தை மைதிலி காட்டவில்லை..

மைதிலியின் துக்கம்.. வார்த்தைகளில் வடிக்க முடியாததாக இருந்தது.. அந்தத் துக்கத்திற்கு தான் காரணமாகிவிட்டதை நினைத்து சுமித்ரா மனம் குன்றிப் போனாள்.. அத்தனை தூரம் பாதிக்கப்பட்டும் வீட்டுப் பெரியவர்களிடம் நியாயம் கேட்காமல் மைதிலி அமைதியாக சுமித்ராவைக் காப்பாற்றியதைக் கண்டு சுமித்ரா.. இன்னும் அதிகமான குற்றஉணர்வில் தவித்துப் போனாள்.

"கண்ணதாசன் சரியாகத்தான் பாடியிருக்கார்டி.." மைதிலி பாடிக் காட்டினாள்..

"கடலில் விழுந்த நண்பனுக்கு..

கை கொடுத்தேன்.. அவன் கரையேற..

கரையில் அவன்தான் ஏறிவிட்டான்..

கடலில் நானோ விழுந்து விட்டேன்..

சொல்லி அழுதால் தீர்ந்துவிடும்..

சொல்லத்தானே வார்த்தை இல்லை.."

பாடலைப் பாடிய மைதிலியின் குரலில்தான் எத்தனை துயரம் சோகம் அவளது இதயத்தைப் பிழிந்து போட்டது போல அவள் உணர்த்தி விட்டாள்.. அதன் சுமையைத் தாங்க முடியாமல் சுமித்ரா துவண்டு போனாள்..

"நான் உன்னைத் தூத்துக்குடியிலிருந்து கூப்பிட்டுக் கொண்டே வந்திருக்கக்கூடாது சுமித்ரா.."

அன்று அவள் சொன்ன வார்த்தைகள் இன்றும் சுமித்ராவின் செவிப்பறையில் மோதி ஒலித்துக்கொண்டே யிருந்தன..

'ஏன் கூப்பிட்டுக் கொண்டாய் மைதிலி..? உன் அன்பையும்.. உன்னைப் பெற்றவர்களின் பாசத்தையும் ஏன் அள்ளி அள்ளி கொடுத்தாய்..? காதலை உணராத அதைப் பற்றி அரிச்சுவடிகூடத் தெரியாத என் மனதில் விவேகானந்தன் காதலை விதைத்த பின்னால்வந்து வேரோடு பிடுங்கப்

பார்க்கிறாயே.. இதற்காகவா என்னை அழைத்துக் கொண்டாய்..?'

எது எப்படி இருந்தாலும்.. மைதிலி.. சுமித்ராவிடம் காட்டிய நட்பு உன்னதமானது.. அதற்காக அவளிடம் நன்றிக்கடன் பட்டுவிட்ட சுமித்ரா.. கடனைக் கழிக்க.. தன் காதலை விட்டுக் கொடுக்க முடிவு செய்தாள்..

"நான் என்ன பொம்மையா சுமி..?" விவேக் கோபம் கொண்டான்..

"நான் உன்னைக் காதலிக்கிறேன் சுமி.."

"ஆனால்.. மைதிலியும் உங்களைக் காதலிக் கிறாளே.."

"அவள் என் அத்தை மகள்.."

"அந்த உரிமையும் சொந்தமும் எனக்கு இல்லையே.."

"முட்டாள் போலப் பேசாதே.. சொந்த அத்தை மகளை யாராவது கல்யாணம் செய்து கொள்வாங்களா..?"

"பெரியவங்க காலத்தில் செய்து கொண்டாங்களே.."

"சயின்டிபிக்கா அது தவறு சுமி.."

"மனதிற்கு சயின்ஸ் தெரியாது விவேக்.. அவளிடம் இருப்பது வெறும் சொந்தம் மட்டுமில்லை... காதல்..! உங்கள் மேல் அவள் வைத்திருக்கும் கரை காணாத காதல்."

விவேகானந்தனின் பார்வை சுமித்ராவை ஊடுருவியது.. அவள் தன் பார்வையை விலக்கிக் கொண்டு கடலைப் பார்த்தாள்..

"அவளிடம் இருக்கும் கரை காணாத காதல் மட்டுமே உன் கண்ணுக்குத் தெரிகிறதா.. உன் மேல் எனக்கிருக்கும் காதல் உன் கண்ணுக்குத் தெரியவில்லையா..?"

சுமித்ரா உதட்டைக் கடித்து தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டாள்.. எதிரே தெரிந்த அலைகடல் போல் அவள் மனம் ஆடியது..

'என்ன வரம் வாங்கிப் பிறந்தேன்..' தன்னைத்தானே நொந்து கொண்டவள்.. மனதை இரும்பாக்கிக் கொண்டாள்..

"தெரியவில்லை விவேக்.. மைதிலியை எனக்கு சிறுவயதிலிருந்தே தெரியும்.. அவளிடம் பொய் கிடையாது.. தன் உணர்ச்சிகளை மறைக்கத் தெரியாத சுபாவம் அவளுக்கு.."

விவேகானந்தனின் முகம் சுருங்கியது.. அவன் கண்கள் இடுங்கின.. வார்த்தைகளை கோபத்துடன் கடித்துத் துப்பினான்..

"நீ என்ன சொல்ல வருகிறாய்.. என்னிடம் பொய் இருக்கிறதா.. நான் மனதை மறைக்கிறேனா..?"

சுமித்ரா இல்லையென்று சொல்லாதது அவனுடைய கோபத்தை அதிகரித்தது.. அதை அறிந்தவளாய் வேண்டு மென்றே மௌனம் சாதித்தாள் சுமித்ரா.. அவனுடைய கோபத்தை தூண்டிவிட்டாள்..

"பேசுடி.. ஏன் ஊமை போல நிற்கிறாய்.. பேசு.." விவேக் கொதித்தான்..

"பேச என்ன இருக்கிறது.." சுமித்ரா அசிரத்தையாய் பதில் சொன்னாள்..

"பேச ஒன்றுமே இல்லையா..?" விவேகானந்தனின் முகம் பயங்கரமாய் மாறியது..

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க.. கர்ணன் உயிரை விட்டான்.. சுமித்ரா தன் காதலை விட்டாள்..

## 6

பெற்றவர்கள் யாரென்று தெரியாமல் அநாதையாக நீரின் மேல் மிதந்து வந்தவன்.. தேரோட்டியின் மகனாக வளர்ந்து வந்தவன்.. ஒரே நாளில் அரசனாக உயர்வு பெற்றான்.. அது

யாரால்..? துரியோதனனால், பெற்றவள் வந்து அழைத்தும் அவள் பின்னால் கர்ணன் போகவில்லை.. கூடப் பிறந்தவர்கள் என்று தெரிந்தும் அவர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போர்க்களத்தில் நின்றான்.. எதற்காக..? துரியோதனனுக்காக.. அவன் தந்த நட்பிற்காக.. அவன் காட்டிய பாசத்திற்காக.. அவனிடம் பட்ட நன்றிக்கடனுக்காக.. செஞ்சோற்றுக் கடன் தீர்க்க கடைசி வரை தன் நண்பனின் பக்கம் நின்று போராடிக் தன் குருதியை போர்க்களத்தில் கொட்டி நன்றிக்கடனைத் தீர்த்துக் கொண்டான் கர்ணன்..

சுமித்ராவின் நெஞ்சமும் குருதியைக் கொட்டியது.. அவள் மனம் துடித்தாள்.. விவேகானந்தனின் முகம் பார்த்து அவனை மறுக்க இயலாமல் தனக்குள் போராடினாள்.. ஒன்றுமேயில்லையா என்று கேட்டவனின் முகம் பார்த்து..

"ஒன்றுமேயில்லை.." என்று பொய் சொன்னாள்..

'பளார்' என்று ஓங்கி ஒரு அறை விட்டான் விவேக்.. சுமித்ரா மணலில் சுருண்டு விழுந்தாள்..

"மைதிலியிடம் பொய் கிடையாதுடி.. அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.. ஆனால்.. நீ..? உன்னிடம் எப்படி பொய் வந்தது..? நம்மிருவருக்கும் இடையே எதுவுமே இல்லைன்னு கூசாமல் பொய் சொல்ல உன்னால் எப்படி முடிந்தது..?"

சுமித்ரா சிலை போல் அமர்ந்திருந்தாள்.. விவேக்கின் விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன..

"மைதிலி என் மேல் ஆசைப்பட்டால்.. அது அவள் பாடு.. அதைப் பற்றி எனக்கென்ன வந்தது..?"

"எனக்கு வந்திருக்கிறதே.."

"எது..?"

"குற்ற உணர்வு.."

"ப்ச்ச்.. உனக்கேண்டி இந்த வீண் வேலை.. நம் வாழ்க்கை நம்மோடு.. இதில் ஏன் தேவையில்லாமல் நீ மைதிலியை

ஊடே இழுக்கிறாய்..?"

"இல்லை விவேக்.. உங்களுக்கும் எனக்கும் இடையில் மைதிலி வரவில்லை.. அவளுக்கும் உங்களுக்கும் இடையில்தான் நான் வந்து விட்டேன்.."

"முட்டாள் போல பேசாதே.. நான் உன்னைப் பார்க்காமல் இருந்திருந்தால் மட்டும் மைதிலியை காதலித்து விடுவேனா..? அவள் மேல் எனக்கு பாசம்தான் வருகிறது.. காதல் வரவில்லை.."

"என்னைப் பார்க்காமலிருந்ததிருந்தால் வந்திருக்கும்.."

"ஏண்டி சொன்னதையே திரும்பித் திரும்பச் சொல்கிற..?"

"உங்கள் மனதில் பதிய வேண்டும் என்பதற்காகத் தான்.."

"இப்போது நீ என்னதான் சொல்கிற..?"

"நீங்கள் மைதிலியைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.."

"திரும்பவும் என்னிடம் அறை வாங்கப் போகிற... நீ என்ன கல்யாணத் தரகரா..?"

"இந்த விஷயத்தில் நான் அப்படித்தான்.. மைதிலி ஆசைப்படும் வாழ்க்கையை நான் வாழ முடியாது.."

விவேகானந்தன் அவளை வெறித்துப் பார்த்தான்.. அவன் மனதில் என்ன ஓடுகிறது என்று அவன் முகத்தை வைத்துக் கண்டுபிடிக்க முடியவில்லை..

"ஓகே.. வேறு எந்த வாழ்க்கையைத்தான் உன்னால் வாழ முடியும்..?"

அவன் கேள்வி சுமித்ராவிற்கு புரியாமல் இல்லை.. என்னை விட்டு இன்னொருவனுடன் வாழப் போகிறாயா என்று கேட்கிறான்..

அந்த நொடியில்தான் சுமித்ராவிற்கு அது தோன்றியது.. ஏன் அப்படி ஒரு பொய்யைச் சொல்லக் கூடாது..?

மைதிலியின் காதலை ஏற்றுக் கொள் என்று அவள் சொன்னால்.. 'நான் என்ன நீ விளையாடும் பொம்மையா.. மைதிலி ஆசைப்பட்டால் என்னை நீ அவளிடம் தூக்கிக் கொடுத்து விடுவாயா..? என் காதல் என்பது உனக்கு அப்படி எளிதானதாக போய்விட்டதா..?' என்று வாதம் செய்வான்..

'நீ எனக்கு வேண்டாம்..' என்று சொல்லிவிட்டால்.. என்ன செய்வான்..?

சுமித்ரா முடிவு செய்துவிட்டாள்.. தன்னெஞ்சறிய பொய் சொல்லக் கூடாது என்று சொன்ன வள்ளுவரே.. பொய்மையும் வாய்மையிடத்து என்று வழிகாட்டியிருக்கும் போது அவள்தான் என்ன செய்வாள்..? மைதிலியின் காதலைக் காப்பாற்ற சுமித்ரா துணிந்து ஒரு பொய்யைச் சொன்னாள்..

"எங்கள் அம்மா வழியில் தூரத்துச் சொந்தக்காரர் ஒருவரின் மகன்.. பெரிய பணக்காரர்.. என்னை விரும்புகிறேன்னு சொல்லி என் அண்ணனிடம் பெண் கேட்டாராம்.. நான் அவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அந்த வாழ்க்கையை வாழப் போகிறேன்.."

அவள் சொல்லி வாய் மூடிய அடுத்த நொடியில் விவேக் அவள் கழுத்தை நெரித்தான்..

## 7

விவேகானந்தனின் விழிகளில் கொலைவெறி தாண்டவமாடியது.. அவன் விரல்கள் சுமித்ராவின் கழுத்தில் அழுத்தமாகப் பதிந்திருந்தன..

"எவ்வளவு தைரியம் இருந்தால் என்னிடமே இதைச் சொல்லுவாய்..?"

"இதைச் சொல்ல தைரியம் எதற்கு.. என் மனதில் இருப்பதைச் சொன்னேன்.."

அவன் விரல்கள் பதிந்திருந்ததால்.. திக்கித் திணறிய படி சுமித்ரா இதைக் கூறினாள்.. ஆத்திரத்தில் அவன் அவளைக் கொன்றுவிடும் அபாயம் இருந்ததை அவள் நன்கு அறிவாள்.. அப்படி அவன் கையில் செத்தாலும் பரவாயில்லை என்று அவளுக்குத் தோன்றிவிட்டது..

எப்படியும் இனி அவளால் அவனுடன் சேர்ந்து வாழ முடியப் போவதில்லை.. அவனுடன் வாழத்தான் அவளுக்கு கொடுத்து வைக்கவில்லை.. அவன் கையால் செத்து விடலாமே..

"உன் மனதில் நான் இல்லையா..?"

"இல்லை.."

"நீ வேறொருவனை மேரேஜ் பண்ணிக் கொள் வாயா..?"

"ஆமாம்.."

"ச்சீ.."

அவன் அவளை மணலில் தள்ளிவிட்டுப் போய் விட்டான்.. சுமித்ரா வெகுநேரம் மணலில் தனியாக அமர்ந்து அழுது கொண்டிருந்தாள்..

அன்று வீட்டிற்கு அவள் திரும்பியபோது இருட்டி யிருந்தது.. மைதிலி அவளை பொறாமையுடன் பார்த்தாள்..

"பீச்சுக்கு போய்விட்டு வரயா..?"

சுமித்ரா பதில் சொல்லவில்லை.. மைதிலி பதிலை வாங்காமல் விடுவதாக இல்லை..

"இல்லைன்னு பொய் சொல்லப் போகிறாயா..? உன் செருப்பில் பீச் மணல் ஒட்டியிருக்கு."

"நான் இல்லைன்னு சொன்னால்தானே நீ இப்படிக் கண்டுபிடித்தாய்னு விளக்கம் சொல்லணும்... நான்

இல்லைன்னு சொல்லவே இல்லையே.. ஆமாம்.. பீச்சுக்குத்தான் போயிருந்தேன்"

"விவேக்கைப் பார்த்தாயா..?"

"தனியாக கடலின் அழகைப் பார்க்கப் போனேன்னு சொல்லப் போவதில்லை.. ஆமாம்.. விவேக்கைப் பார்க்கத் தான் போயிருந்தேன்.."

மைதிலி உதடுகள் துடிக்க அவளை வெறித்தாள்.. விவேகானந்தனின் வலுவான கைகள் அறைந்ததால் உடல் சோர்வடைந்திருந்தாள் சுமித்ரா.. அவன் கழுத்தைப் பிடித்து நெரித்ததால் தொண்டையில் வலி இருந்தது.. அவனது வெறுப்பான அனல் பார்வையினால் அவளது நெஞ்சம் பொசுங்கிப் போன ரணத்தின் வேதனை தாங்காமல் அவள் மனம் துடித்துக் கொண்டிருந்தாள்..

அதை உணராத மைதிலி.. தன் பங்குக்கு அவளை நாவால் சுட்டுக் கொண்டிருந்தாள்..

"அவன் உன்னிடம் காதலைச் சொன்னபோதுதான் நான் அவனைக் காதலிக்கிறேன்னு உனக்குத் தெரியாது.. இப்போது அவனுடன் உல்லாசமாக ஊர் சுற்றுகிறாயே.. இப்போதுமா தெரியாது..?"

"தெரிந்ததால் தான் அவனைப் பார்க்க பீச்சுக்குப் போனேன்.."

"எவ்வளவு குரூரமான மனசுடி உனக்கு.. இதை என்னிடமே சொல்லி என்னை உயிரோடு கொல்லத்தான் நீ தூத்துக்குடியிலிருந்து கிளம்பி இங்கே வந்தாயா..?"

"இல்லை.. நான் என் அண்ணன் வீட்டில் கஷ்டப் பட்டாலும் நிம்மதியாக இருந்தேன்.. நீதான் என்னை சென்னைக்கு கூப்பிட்டாய்.."

"கூப்பிட்ட கொடுமைக்குத்தான் நீ எனக்கு பரிசைக் கொடுத்து விட்டாயே.. வாழ்நாளெல்லாம் உன்னை

ஏன் கூப்பிட்டோம்ன்னு என்னை வருத்தப்பட வைத்து விட்டாயே.."

சுமித்ரா.. மைதிலியின் நிஷ்டூரமான பார்வையை.. இமைக்காமல் எதிர்கொண்டாள்.. அவள் பார்வையிலிருந்த வேதனையைக் கண்ட மைதிலி திகைத்துப் போனாள்..

"இல்லை மைதிலி.. என்னால் ஒருபோதும் நீ வருத்தப்பட மாட்டாய்.. நானும் உன்னை வருத்தப்பட விட மாட்டேன்.."

"சுமி.."

நீண்ட.. நெடிய.. கொடிய நாள்களுக்குப் பிறகு தோழியின் வாயிலிருந்து வந்த 'சுமி..' என்ற வார்த்தையைக் கேட்டு கண்கலங்கி விட்டாள் சுமித்ரா..

"நான் போகிறேன் மைதிலி.. உன் வாழ்க்கையி லிருந்து மட்டுமில்லை.. விவேக்கின் வாழ்க்கையை விட்டும் விலகிப் போகிறேன்.."

அந்த வினாடியில் மைதிலியின் விழிகளில் பிரதிபலித்த உணர்வுகளை தன் வாழ்நாளில் மறக்க மாட்டாள் சுமித்ரா..

மகிழ்ச்சி.. துக்கம்.. பரிதவிப்பு.. காதல் திரும்பவும் கைகூடி விடுமோ என்ற எதிர்பார்ப்பு.. தன் தோழியிட மிருந்து அவளுடைய காதலைப் பிடுங்கிக் கொள்ளும் துயரம்.. இவை அனைத்தும் சேர்ந்த கலவையாக அவள் பார்வை இருந்தது..

மைதிலி நல்லவள்.. மிக மிக நல்லவள்.. அவள் சுமித்ராவிற்காக தன் உயிரையும் கொடுப்பாள்.. காதல்.. உயிரை விட உயர்ந்தது..

## 8

மைதிலி மௌனமாகி விட்டாள்.. சுமித்ரா தன் வேலையை ராஜினாமா செய்தபோதும் சரி.. புறப்படு வதற்கான ஆயத்தங்களில் அவள் இறங்கியபோதும் சரி.. மைதிலி வாய் திறக்கவில்லை.. எல்லையில்லாத வேதனையை வெளிப்படுத்தும் பார்வையுடன்.. சுமித்ராவின்

செயல்பாடுகளுக்கு ஒரு மௌன சாட்சியாக அவள் மாறிவிட்டாள்..

சுதர்சனம் செய்தி அறிந்ததும் மிகவும் சந்தோஷப் பட்டான்..

"வேலை பிடிக்கவில்லையா..? பிடிக்காத வேலையை நீ ஏன் பார்க்கணும்..? நீ சம்பாதித்துக் கொடுத்துதான்.. நம் குடும்பம் நடக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறதா.. புறப்பட்டு நம் வீட்டுக்கு வந்துவிடு.."

நம்வீடு.. நம் குடும்பம் என்று மனதாரச் சொன்ன தமையனின் வார்த்தைகளைக் கேட்டதும் கண்கலங்கி விட்டாள் சுமித்ரா..

ஆயிரம்தான் இருந்தாலும் சுதர்சனம் அவளுக்கு கூடப் பிறந்தவன்.. தூத்துக்குடி அவள் பிறந்த ஊர்.. அங்கிருப்பது அவளுடைய பிறந்த வீடு.. அதை விட்டு விட்டு அடுத்தவரின் வீட்டுக்கு நிம்மதியைத் தேடி அவள் வரலாமா.. இப்போது இருக்கிற நிம்மதியையும் தொலைத்துவிட்டு பிறந்தவீட்டுக்குத் திரும்புகிறாளே.. அவள் இருக்கும் இடத்தில் இருந்திருந்தால் இந்த நிலைமை அவளுக்கு வந்திருக்குமா..?

மாலதி அவளை உதாசீனப்படுத்தினால்தான் என்ன.. அவள் யார்..? சுமித்ராவின் அண்ணிதானே.. அவள் பேசுவதை சுமித்ரா கேட்டுக்கொண்டால்தான் என்ன.. குறைந்தா போயிருப்பாள்..? இப்படி மைதிலியின் வாயிலிருந்து ஆயிரம் தடவை.. 'அநாதை..' யென்ற வார்த்தையைக் கேட்க வேண்டி வந்திருக்காதே..

இத்தனைக்கும் மேலாக.. மைதிலியிடம் நன்றிக்கடன் படப் போய்த்தானே விவேக்கின் காதலை அவள் தியாகம் செய்ய வேண்டி வந்தது..?

மைதிலியிடம் மட்டும் அவள் நன்றிக்கடன் படாமல் இருந்திருந்தால்.. அவள் உயிரைக்கூட விட்டிருப்பாள்.. ஆனால்.. அவளுடைய உயிருக்கும் மேலான காதலை விட்டிருக்க மாட்டாள்..

"இத்தனை நாளும் பிடித்திருந்த வேலை.. இப்போது ஏன் பிடிக்காமல் போனது.. ஆபீஸில் ஏதும் பிரச்னையா..? நான் வந்து விசாரிக்கவா..?" மோகனரங்கம் தூண்டித் துருவினார்..

"மாலதியின் போக்கு சரியில்லைன்னுதானே இங்கே வந்தாய்.. இப்போது திரும்பிப் போகிறேன் என்கிறாயே.. உன்னால் அவளிடம் தாக்குப்பிடித்து இருந்துவிட முடியுமா..? கல்யாணம் ஆகிறவரைக்கும் எங்களுடன் இருப்பாய்னுதானே நினைச்சுக்கிட்டிருந்தேன்.. திடீர்ன்னு இப்படிச் சொல்கிறாயே சுமி.. இங்கே எங்களுக்கு உன் கவலையாகவே இருக்குமே.." பூங்கோதை வேறுவிதமாகக் கவலைப்பட்டாள்..

பெற்றவர்களைப் போல் பாசம் காட்டிய ஒன்றுவிட்ட பெரிய தந்தையையும்.. பெரியன்னையையும் விட்டு விட்டுப் போக சுமித்ராவும் சிரமப்பட்டாள்தான்.. ஆனால், அவள் போயாக வேண்டுமே.. சென்னையை விட்டு அகன்றாக வேண்டுமே.. விவேகானந்தனின் கண் பார்வையில் அவள் இருந்தால் நிச்சயம் அவன் அவளை மறக்க மாட்டான்.. அதோடு.. என்னதான் பெரிய தியாகச் செம்மல் போல் அவள் மைதிலிக்கு தன் காதலனை விட்டுக் கொடுத்து விட்டாலும் கண் முன்னால் மைதிலியோடு அவன் சேர்ந்து நடப்பதைக்கூட அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா..?

சுமித்ரா கிளம்பி விட்டாள்.. மோகனரங்கம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்காமல் வேலையை விட்டாள், பூங்கோதை எவ்வளவோ மறுத்துச் சொல்லியும் கேட்காமல் சென்னைக்குக் கிளம்பி விட்டாள்..

சுமித்ரா கிளம்பும் நாளன்று.. மைதிலி அவளிடம் வந்தாள்.. சுமித்ராவின் முகம் பார்க்காமல் தரையைப் பார்த்தபடி பேசினாள்..

"என்னை மன்னித்து விடுடி.."

"..."

"நீ பதில் சொல்ல மாட்டாய்.. நானும் உன் பதிலை எதிர்பார்க்கவில்லை.."

"..."

"சுமி.. நீ என்னிடம் இருக்கும் எதை வேண்டு மானாலும் கேள்.. நான் தருகிறேன்.. அடையாறில் அப்பா என் பெயரில் வாங்கிப் போட்டிருக்கும் பங்களா வேண்டுமா.. உடனே உன் பெயருக்கு மாற்றித் தருகிறேன்.. சொல்லு சுமி.."

சுமித்ரா நிமிர்ந்து மைதிலியை ஊடுருவிப் பார்த்தாள்.. மைதிலியின் விழிகளில் நீர் அரும்பிவிட்டது..

"அப்படிப் பார்க்காதே சுமி.. நீ நினைப்பது போல நான் கொடுமைக்காரி இல்லை.."

"நான் உன்னைக் கொடுமைக்காரி போல நினைக்கிறேன்னு யார் உனக்குச் சொன்னது..?"

சுமித்ரா நிதானமான குரலில் வினவினாள்..

9

சுமித்ராவிடம் அமைதி தென்பட்டது.. அது அசாத்திய அமைதி.. புயலை தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் காற்றின் அமைதி.. அனல் குழம்பை வெளிவிடாமல் அடக்கிக் கொண்டிருக்கும் எரிமலையின் அமைதி.. கொந்தளிக்கும் அலைகடலை வெளித் தெரியாமல் மனதிற்குள் புதைத்துக் கொண்டிருக்கும் பேதைப் பெண்ணின் அமைதி..

அதை அறியாதவள் அல்ல மைதிலி.. தோழிக்கு எதையாவது செய்து.. தன் கைம்மாறை காட்டிவிடத் துடித்தாள் அவள்.. ஆனால், கடன்பட்ட சுமித்ரா தன் நன்றிக் கடனைக் கழிப்பதில்தான் குறியாக இருந்தாளே தவிர.. பதிலுக்கு மைதிலியிடம் நின்று பேசக்கூட அவள் தயாராக இல்லை..

"என்னிடம் முகம் கொடுத்துப் பேசாமல் நீ போவது என்னைக் கொடுமைக்காரின்னு சொல்லாமல் சொல்லுதே சுமி.."

"பேச வேண்டியதையெல்லாம் நிறைய பேசியாகி விட்டது மைதிலி.. நான் செய்ய வேண்டியதையும் செய்து விட்டேன்.. இனி பேச நமக்குள் என்ன இருக்கிறது..?"

"எனக்காக எதையாவது நீ வாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும்.."

"எதற்கு விலை கொடுக்கப் போகிறாய் மைதிலி..?"

சுரீர் என்று சாட்டையில் அடித்தது போல கேட்டாள் சுமித்ரா.. துடித்து நிமிர்ந்தாள் மைதிலி..

"காதலுக்கு விலை கொடுக்க முடியுமா மைதிலி..? உன் மனதில் விவேக் இருக்கிறாருன்னு தெரிந்திருந்தால் நான் அவர் இருக்கும் திசைப்பக்கம்கூடத் தலை

வைத்துப் படுத்திருக்க மாட்டேன்.. ஆனால், எனக்கு அது தெரியாமல் போய்விட்டதே.. நான் அவரை மனதார நினைத்து விட்டேனே.. இப்போது அவரை விட்டுக் கொடுத்துவிட்டு விலகிப்போவதற்கு நீ விலை தரப் போகிறாயா மைதிலி..?"

"சுமி.."

"வேண்டாம் மைதிலி.. இனிமேல் என்னை நீ சுமித்ரான்னே கூப்பிடு.."

சுமித்ரா பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வெளியே போய் விட்டாள்.. மைதிலி.. கற்சிலை போல் அந்த அறையினுள் அமர்ந்துவிட்டாள்..

மோகனரங்கம் வந்து பஸ் ஏற்றிவிட்டார்..

"டிரெயினுக்கு டிக்கெட் கிடைக்கவில்லைன்னா டிக்கெட் கிடைக்கும்போது போக வேண்டியதுதானே.. காலையில் வேலையை விட்டவள்... சாயந்திரமே சென்னையை விட்டு ஓடனுமா..?"

"அண்ணனைப் பார்க்க வேண்டும் போல இருக்கு பெரியப்பா.."

பஸ் கிளம்ப நேரம் இருந்தது.. காலியாக இருந்த சுமித்ராவின் பக்கத்து ஸீட்டில் அமர்ந்தார் மோகனரங்கம்..

"இத்தனை நாள் நினைவுக்கு வராத அண்ணனின் நினைவு.. இப்போது திடீர்னு வந்து நிற்க காரணம் என்ன சுமி..?" அவர் குரல் அழமாய் ஒலித்தது..

"பெரியப்பா.." சுமித்ரா திகைத்து தடுமாறினாள்..

"விவேகானந்தன்தான் காரணமா..?" மோகனரங் கத்தின் குரலில் வேதனை இருந்தது..

"பெரியப்பா.." சுமித்ரா அதிர்ந்து நிமிர்ந்தாள்..

"எனக்குத் தெரியும் சுமி.. மைதிலியின் மனமும் தெரியும்.. உன் நிலையும் தெரியும்.. எப்படி உனக்கு இவ்வளவு பெரிய மனம் வந்தது சுமி..? கொடை வள்ளல் கர்ணன் தன் உடம்போடு ஒட்டியிருந்த கவசகுண்டலத்தை தானமாகக் கொடுத்ததாக நம் இதிகாசம் சொல்கிறது.. அந்த கர்ணன்கூட காதலைத் தானமாகக் கொடுக்கத் துணிந்திருக்க மாட்டான்.. காதல் மனதோடு ஒட்டியது.. அதை வெட்டிப் பிரிக்க முடியாது.. நீ எப்படி சுமித்ரா உன் காதலை மைதிலிக்கு தானம் செய்துவிட்டு பார்த்துக் கொண்டிருந்த நல்ல வேலையையும் உதறிவிட்டுப் போராட வேண்டும் என்று தெரிந்து கொண்டே அண்ணன் வீட்டிற்குப் போகிற..?" மோகனரங்கம் குரல் கம்ம வினவினார்..

"என்னால் எப்படி பெரியப்பா மைதிலி வாழ நினைத்த வாழ்க்கையை வாழ முடியும்..? அவள் மனதில் விவேக் இருப்பதைத் தெரிந்த பின்னால்.. குற்ற உணர்வில்லாமல் என்னால் நிம்மதியாக வாழ முடியுமா..? எனக்கு இப்போது தான் விவேக்கை தெரியும்.. மைதிலி பிறந்ததில் இருந்தே விவேக்கை நினைத்துக் கொண்டிருக்கிறாளே.." சுமித்ரா கண்களில் இருந்த நீரை மோகனரங்கம் பார்த்து விடாமலிருக்க ஜன்னல் புறமாய் திரும்பிக் கொண்டாள்..

மோகனரங்கம்.. சுமித்ராவின் தலைமீது ஆசீர்வதிப்பது போல தன் வலக்கையை வைத்தார்.. இப்போது தாள மாட்டாமல் சுமித்ரா தேம்பியழுதாள்.. மோகனரங்கத்தின் கை ஆறுதலாக மகளின் தோளை வளைக்க.. வளர்ப்புத் தந்தையின் தோளில் முகம் புதைத்து மனம் விட்டு அழுதாள் சுமித்ரா..

"அழாதேம்மா.. அழாதே.. உன் நல்ல மனதுக்கு ஆண்டவன் நிச்சயமாய் நல்ல வழியைக் காட்டுவார்.."

பேசியபடியே திரும்பியவர்.. ஜன்னலுக்கு வெளியே பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டவாறு தலை கலைந்து கண்கள் சிவக்க.. உன்மத்தம் பிடித்தவன் போல் நின்ற விவேகானந்தனைப் பார்த்துவிட்டார்..

"சுமி.. நான் கிளம்புகிறேன்ம்மா.."

"பஸ் கிளம்ப நேரம் இருக்கே பெரியப்பா.."

"வீட்டில் முக்கியமான வேலை இருக்கும்மா.."

இனி சென்னைக்குத் திரும்பக்கூடாது என்ற முடிவுடன் கிளம்பிக் கொண்டிருக்கும் தம்பியின் மகளை வழியனுப்பி வைப்பதைவிட முக்கியமான வேலை மோகனரங்கத்திற்கு எப்படி வந்தது என்ற கேள்விக்கு விடை.. பஸ்ஸிற்குள் ஏறி அவளருகில் வந்து அமர்ந்த விவேகானந்தனைப் பார்த்தவுடன் சுமித்ராவிற்கு கிடைத்து விட்டது..

மோகனரங்கம்.. விவேகானந்தனைப் பார்த்தவுடன்.. அவன் சுமித்ராவுடன் பேச வழிவிட்டுக் கிளம்பிப் போய் விட்டார் என்பதைப் புரிந்துகொண்ட சுமித்ராவின் நெஞ்சம் நெகிழ்ந்தது..

பல வருடங்கள் குழந்தையில்லாமல் தவித்த மோகனரங்கத்திற்கு தாமதமாகப் பிறந்த ஒரே பெண் குழந்தை மைதிலி.. அவள் கேட்ட எதையும் முடியாது என்று இதுவரை மோகனரங்கம் மறுத்ததே கிடையாது..

அந்தச் செல்ல மகளின் மனதில் விவேகானந்தன் இருப்பது அவருக்குத் தெரியும்.. விவேகானந்தனின் மனதில் சுமித்ரா

இருப்பதும் அவருக்குத் தெரியும்.. அவர் பெற்ற மகளுக்காக.. அவருடைய வளர்ப்பு மகள்.. காதலைத் தியாகம் செய்துவிட்டு ஊரை விட்டுப் போவதும் அவருக்குத் தெரியும்..

இத்தனையும் தெரிந்திருந்தும் அவர்.. விவேகானந்தன் சுமித்ராவுடன் பேச வழிசெய்து விலகிச் சென்றார்.. இதுதான் மோகனரங்கம்..

10

அதுவரை சுமித்ராவின் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச சலனமும் மோகனரங்கத்தின் செய்கையைக் கண்டதும் சுத்தமாக ஓடிவிட்டது.. அவள் விவேகானந்தனை ஏறிட்டாள்..

'எப்படி இருந்தவன்.. எப்படி ஆகிவிட்டான்..'

இதற்குக் காரணம் தான்தானே என்று அவள் மனம் வருந்தியது.. அவன் அவளையே உற்றுப் பார்த்தான்.. ஊடுருவும் அவனது எக்ஸ்ரே பார்வையைத் தாங்க இயலாத வளாய் சுமித்ரா முகம் திருப்பிக் கொண்டாள்..

"கிளம்பியே விட்டாயா..?"

"ம்ம்ம்..."

"என் நினைவே உன் மனதில் இல்லையா..?"

"இல்லை.."

"அதை என் முகத்தைப் பார்த்துச் சொல்.."

அவன் முகத்தைப் பார்த்துச் சொல்ல அவளால் முடியுமா.. அவன் தெரிந்து கொண்டே அவளை சவாலுக்கு அழைப்பதை அவள் புரிந்து கொண்டாள்..

"உங்கள் முகத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்க வில்லை.."

எதைச் சொன்னால் அவன் கோபப்படுவான் என்பது தான் அவளுக்கு நன்றாகத் தெரியுமே.. அவள் கணிப்பு பொய்க்கவில்லை.. அவன் கோபப்பட்டான்..

"வேறு எவன் முகத்தைப் பார்க்க உனக்குப் பிடித்திருக்கிறது..?"

"நான் உங்களிடம் அதைச் சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை.."

"பஸ்ஸில்.. நான்கு பேர் பார்ப்பார்களேன்னு பார்க் கிறேன்.."

"இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்..?"

"அறைந்து பல்லைக் கழட்டிவிடுவேன்.."

"அதற்கு தோதாக நான் என் முகத்தைக் காட்டிக் கொண்டிருப்பேன்னு நினைத்தீங்களா.. அதற்கு நான் என்ன உங்கள் அத்தை மகளா..? நீங்கள் தான் என் மாமன் மகனா..?"

"சுமி.. என் கோபத்தைக் கிளறாதே.."

"என் பெயர் சுமித்ரா.. நீங்கள் என் முழுப்பெயரையும் சொல்லியே கூப்பிடுங்க.."

"எனக்கு இப்படிக் கூப்பிட்டுத்தான் பழக்கம்.."

"என் நெருங்கிய சொந்தக்காரங்க.. ஃப்ரெண்ட்ஸ் இவங்களைத் தவிர.. வேறு யாரையும் என் பெயரை ஷார்ட்டாக கூப்பிட அனுமதித்து எனக்குப் பழக்கமில்லை.."

"ஹா.. நேற்று வரை என் மடியில் தலை வைத்து படுத்திருந்தவள்தானேடி நீ.. நான் உனக்கு நெருக்க மில்லாதவனா..?"

"ஆமாம்.. மனதால் உங்களை விட்டுத் தொலை தூரத்தில் நான் விலகிவிட்ட பின்னால்.. தேவையில்லாத பேச்சுகள் எதற்கு..?"

"அப்போ.. உனக்கும் எனக்கும் ஒன்றுமில்லைன்னு சொல்கிற.."

"கரடியாய் கத்திக் கொண்டிருக்கிறேன்.."

"என் வாழ்க்கையில் இனி நீ வரமாட்டாய்..?"

"ஆமாம்.. வரமாட்டேன்.."

"என்னைவிட்டு.. இன்னொருவனை மேரேஜ் பண்ணிக் கொள்வாய்..?"

"ஆமாம்.. பண்ணிக் கொள்வேன்.."

"ச்சீ.."

விவேகானந்தன் எழுந்து சென்றுவிட்டான்.. பஸ்ஸில் அனைவரும் வந்து அமர்ந்துவிட்டனர்.. பஸ் கிளம்பி வேகமெடுத்து தூத்துக்குடியை நோக்கிப் பறந்தது..

இருட்டுக்குள் தொலைந்துபோன தன் எதிர்காலத் தைத் துழாவுகிறவள் போல் விடிய விடியக் கண் விழித்து அழுதுகொண்டே தூத்துக்குடிக்குப் போய் சேர்ந்தாள் சுமித்ரா..

அவளை அழைத்துக் கொண்டு போவதற்காக பஸ் நிலையத்தில் காத்திருந்தான் சுதர்சனம்.. பஸ்ஸில் இருந்து இறங்கிக் கொண்டிருந்த சுமித்ராவின் பெட்டிகளை வாங்கிக் கொண்டவன்.. தங்கைப் பார்த்து பாசத்துடன் சிரித்தான்..

"என்னடாம்மா.. சென்னையில் வேலை வேலைன்னு ஓடிக்கிட்டே இருந்தாயா.. ஒழுங்காய்ச் சாப்பிட வில்லையா..? இப்படி இளைத்து துரும்பாகி வந்திருக்கிறாயே.."

"போ அண்ணா.. ஒரு சுற்று பெருத்திருக்கிறேன்.. என்னைப் போய் ஒல்லின்னு சொல்கிறாயே.. உன் கண்ணை டெஸ்ட் பண்ண வேண்டும்.."

"உன் அண்ணிதான் ஒரு சுற்றுப் பெருத்திருக் கிறாள்.. நீ வத்தலும் தொத்தலுமாக இருக்கிறாய்.."

மாலதியைப் பற்றிய பேச்சு வந்ததும் சுமித்ராவின் மனம் கலங்கியது.. பேயைப் பற்றித் தெரிந்துகொண்டே அது இருக்கும் வீட்டிற்குப் போகிறோமே என்று மனம் நடுங்கியது.

"இத்தனைக்கும் உன் அண்ணி சரியாகவே சாப்பிடுவதில்லை.. அப்படி இருந்தும் பெருத்துவிட்டாள்.."

சுதர்சனத்திடம் தென்பட்ட அந்த மாற்றத்தைக் கவனித்தாள் சுமித்ரா.. முதலில் எல்லாம் தங்கையிடம் பேசும்போது.. வேறு பேச்சுகளைப் பேச மாட்டான்.. இப்போது வார்த்தைக்கு வார்த்தை மாலதியைப் பற்றியே பேசினான்..

அந்த மாற்றம் சுமித்ராவிற்கு ஒருவிதமான நிம்மதியை அளித்தது..

'பாவம் அண்ணி.. அண்ணனை விழுந்து விழுந்து காதலித்தாள்.. அவன் மனதில் அவளுக்கு இரண்டாவது இடம்னு தெரிந்ததும் எப்படி வருத்தப்பட்டிருப்பாள் இப்போதாவது அண்ணன் மாறினானே..'

"நீ வீட்டுக்கு வந்து உன் அண்ணியைப் பாரேன்.. ஆளே அடையாளம் தெரியாத அளவிற்கு மாறிப் போயிருப்பாள்.."

'உருவத்தில் மாறி என்ன செய்ய.. குணம் மாறியிருக் கிறதா..?'

"நீ ஆச்சரியத்தில் மயக்கம் போட்டு விடுவாய்.."

'என்னைப் பார்த்ததும் அண்ணி.. அதிர்ச்சியில் ஆட்டம் போடாமல் இருந்தால் சரி..'

"நீ வருகிறாய்னு தெரிந்ததும் அவளுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா..?"

சந்தோஷமாய் பேசிய அண்ணனை பரிவுடன் பார்த்தாள் தங்கை.. இவனுக்கு உண்மை தெரியாது.. சுமித்ரா வருவதில் அவனுடைய மனைவிக்கு துளிக்கூட சந்தோஷம் கிடையாதுன்னு தெரிந்தால் பாவம்.. ஆடிப்போய் விடுவான்..

'நீ பாவம் அண்ணா..' சுமித்ரா மனதிற்குள் வேதனையுடன் சொல்லிக் கொண்டாள்..

'தாய் தகப்பனில்லாத நமக்கு நாமே துணை என்று இருந்தோம்.. எனக்குத் தாயக்குத் தாயாய் தந்தைக்குத் தந்தையாய் அனைத்துமானவனாய் நீ இருந்தாய்.. உன்னைக் காதலிக்க ஒருத்தி வந்தாள்.. நான் தூத்துக்குடியை விட்டு சென்னைக்கு ஓடினேன்.. என்னைக் காதலிக்க ஒருவன் வந்தான்.. இப்போது சுவரில் அடிபட்ட பந்தாய் சென்னையை விட்டு தூத்துக்குடிக்கு ஓடி வந்திருக்கிறேனே அண்ணா.. என் ஓட்டத்திற்கு முடிவே இல்லையா.. இனி உன் மனைவியிடமிருந்து தப்பிக்க நான் எங்கே ஓட வேண்டுமோ தெரியவில்லையே..'

தூரத்தில் வீடு தெரிந்தது.. சுமித்ராவின் மனம் படபடத்தது.. ஆட்டோ வீட்டின் முன் நிற்க.. சுமித்ரா இறங்கினாள்..

## 11

ஆட்டோவிற்கு பணம் கொடுத்துவிட்டு வந்த சுதர்சனம் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டான்.. பஸ் நிலையத்தில் அவன் பெட்டிகளைத் தூக்கிக் கொள்ளும் போது பேசாமல் கொடுத்த சுமித்ரா.. இப்போது மனதிற்குள் பயத்துடன்.. அண்ணனின் கையில் இருந்த பெட்டியைப் பிடுங்க முயன்றாள்..

அவள் மனதிற்குள் மாலதியின் முறைத்த உருவம் தோன்றியது..

'உனக்கு பெட்டி தூக்க என் புருஷன் என்ன.. உன் வீட்டு வேலைக்காரனா..' என்று கேட்டது..

"அண்ணா.. சொன்னா கேள்.. என் பெட்டிகளைத் தூக்கிக் கொள்ள எனக்குத் தெரியும்.."

"ஏம்மா.. இந்தப் பெட்டி இருக்கும் வெயிட்கூட நீ இருக்க மாட்ட... அப்புறம் எதுக்கு இந்த வேண்டாத வேலை..?"

சுதர்சனம் பிடிவாதமாய் பெட்டிகளைத் தூக்கிக் கொள்ள, வேறுவழியின்றி பெரிய டிராவல் பேக்கை மட்டும் கைப்பற்றி தோளில் மாட்டிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள் சுமித்ரா..

"ஏங்க.. இது உங்களுக்கே நல்லா இருக்கா..?" என்று உள்ளேயிருந்து மாலதியின் குரல் கேட்டது..

'போச்சு.. வந்தவுடனேயே பெட்டி தூக்கியதற்கு அண்ணனுக்கு மண்டகப்படி ஆரம்பமாகிவிட்டதா.. முதலில் எல்லாம் அண்ணனைப் பார்த்தாலே அண்ணி வாயைத் திறக்க மாட்டாளே.. இப்போது மட்டும் எப்படி இப்படி அதட்டல் போடுகிறாள்..?'

சுமித்ரா யோசனையுடன் தமையனைப் பார்த்தாள் அவன் மகா பெருமையுடன் தங்கையைப் பார்த்தான்..

"உன் அண்ணிக்கு வரும் கோபத்தைப் பார்த்தாயா..?"

'அதைப் பார்த்த பீதியில்தானே நான் உன்னை விட்டு ஓடினேன்.. எனக்குத் தெரியாததைச் சொல்வது போல நீ இவ்வளவு பில்ட் அப் கொடுக்கிறாயே..'

அவள் இரக்கத்துடன் சுதர்சனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது மீண்டும் மாலதியின் குரல் ஓங்கி ஒலித்தது..

"அவளைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறவர்.. அவளைப் பையைத் தூக்க விடலாமா..? நீங்கள் வாங்கிக் கொண்டு வருவதற்கென்ன..?"

தன் காதுகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாமல் சுமித்ரா திகைத்துப் போனாள்.. இது கனவா.. இல்லை நனவா என்று கையை லேசாக கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்..

"உன் அண்ணி சொன்னதைக் கேட்டாயா..?"

'கேட்டுக் கொண்டுதானே இருக்கிறேன்.. உள்ளே பேசுவது உன் பெண்டாட்டியா.. இல்லை.. என் மனப் பிரமையா..?'

சுமித்ராவின் குழப்பத்தை அதிகப்படுத்துவது போல மாலதியின் குரல் தொடர்ந்து ஒலித்தது..

"டூ வீலரில் போனால் பெட்டிகளைக் கொண்டு வருவது சிரமம்னு ஆட்டோ பிடித்துக் கொண்டு போனீர்களே.. போகும்போது ஆட்டோ பிடித்தீங்க.. சரி.. திரும்பி வரும்போது ஆட்டோதான் பிடித்து வரணுமா..?"

சுதர்சனம் தங்கையைப் பார்க்க.. சுமித்ராவின் மனம் பதைத்தது..

'ஐயையோ.. பஸ்ஸில் என்னைக் கூப்பிட்டுக் கொண்டு வராமல் இப்படி ஆட்டோவில் அழைத்துக் கொண்டு வந்து இடி வாங்குகிறானே இந்த அண்ணன்..'

என்ன செய்வது என்று தெரியாமல் கையை அவள் பிசைய.. சுதர்சனம் சிரித்துக் கொண்டே மாலதிக்கு பதில் குரல் கொடுத்தான்..

"இப்ப நான் என்ன செய்துவிட்டேன்னு நீ என்னைக் கோபித்துக் கொள்கிற மாலதி..?"

"இத்தனை மாதம் கழித்து வீட்டுக்கு வரும் பெண்ணை ஒரு வாடகைக் கார் பிடித்துக் கூப்பிட்டுக் கொண்டு வரணும்கிற எண்ணம்கூட உங்களுக்கு இல்லையா.. இதைக் கூட நான்தான் சொல்லித் தரணுமா..?"

சுமித்ராவிற்கு தலை சுற்றி மயக்கமே வந்துவிட்டது.. அவள் அப்படியே கண்களைக் கொட்டியபடி சோபாவில் அமர்ந்துவிட.. சுதர்சனம் தலைக்கு மேல் கைகளைக் குவித்தவாறு சமையலறைக்குள் புகுந்தான்..

"தப்புத்தான் தாயே.. தப்புத்தான்.. உன் நாத்தனாரை காரில் கூப்பிட்டுக் கொண்டு வராமல் ஆட்டோவில் கூப்பிட்டுக் கொண்டு வந்தது என் தப்புத்தான்.."

அதற்கு மாலதி சன்னக்குரலில் எதையோ சொல் வதையும் அதைக் கேட்டுவிட்டு சுதர்சனம் பகபகவென்று சிரிப்பதையும் வியப்புடன் கேட்டவாறு.. சமையலறையை பார்த்துக் கொண்டிருந்தாள் சுமித்ரா..

கையில் காபிக் கோப்பையுடன் சமையலறையை விட்டு வெளியே வந்த மாலதியைக் கண்டதும்.. சுமித்ரா விற்கு அவள் மேல் இருந்த பயம்.. வெறுப்பு.. கோபம்.. எரிச்சல் எல்லாமே மறைந்து ஓடியே போய்விட்டன..

"அண்ணி.. என்னிடம் சொல்லவே இல்லையே.." என்றவாறு ஆனந்தத்துடன் எழுந்து கொண்டாள் சுமித்ரா..

வெட்கப் புன்முறுவலுடன் நாத்தனாரிடம் காபிக் கோப்பையை நீட்டிய மாலதி.. நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள்..

"ஏன்.. அண்ணா என்னிடம் சொல்லவில்லை..!" சுமித்ரா, சுதர்சனத்திடம் சண்டைக்குப் போனாள்..

"உன் அண்ணிதான் சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டாள்.. என்மேல் தப்பில்லை.." சுதர்சனம் மனைவியைக் கைகாட்டினான்..

மாலதியின் மனதில் என்ன இருந்ததோ என்ற நினைவுடன் சுமித்ரா தயங்கி நிற்கையில்.. மாலதி பரிவுடன் சுமித்ராவைப் பார்த்தாள்..

"விடிய விடிய கண்விழித்து பஸ் பிரயாணம் பண்ணியிருக்கிறாய்.. முதலில் காபியைக் குடி.. நான் தான் உன் அண்ணனிடம் உனக்குத் தகவல் சொல்ல வேண்டாம்ன்னு சொன்னேன்.. என்னால் இரண்டு மாதமாகத்தான் எழுந்து நடமாட முடிகிறது.. அதற்கு முன்னால் ஒரே வாந்தி.. மயக்கம்னு.. படுக்கையாய் இருந்தேன்.. என் அம்மாதான் வந்து வீட்டைக் கவனித்துக் கிட்டாங்க.. உன்னிடம் சொன்னால் நீ உடனே வந்து விடுவாய்.. வீட்டையும் கவனித்து என்னையும் கவனிக்க முடியாமல் திண்டாடி விடுவாய்.. அதனால்தான் உனக்குச் சொல்லவில்லை.."

மாலதிக்கு அவ்வளவு அன்பாகவும், பாசமாகவும்.. பரிவாகம் பேசத் தெரியுமென்று அன்றுதான் சுமித்ரா அறிந்தாள்..

'இது அண்ணிதானா..' ஆச்சரியத்தில் அவள் விழி விரித்தாள்..

வாழ்வில் எந்த நேரம்.. எந்த மாறுதல் வருமென்று யாரால் சொல்ல இயலும்..?

மாற்றம் ஒன்றுதானே.. மாற்றமில்லாதது..!

அன்பே உருவான மைதிலி.. அன்பில்லாதவளாக மாறிப் போக.. அன்பையே சுமித்ராவிடம் காட்டி அறியாத மாலதி.. அன்பின் வடிவாக சுமித்ராவை அரவணைத்துக் கொண்டாள்..

"உனக்கு இடியாப்பம் பிடிக்கும்தானே.. சூடாக செய்து வைத்திருக்கிறேன்.. குளித்துவிட்டு வா.."

"தலையை ஒழுங்காய் துவட்ட மாட்டாயா.. ஈரம் அப்படியே இருக்கிறது.. தலையைக் காண்பி.."

"கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திரு சுமி.. மதிய சாப்பாட்டு நேரத்திற்கு எழுப்புகிறேன்.."

"சுமி.. எழுந்திரும்மா.. ஒருவாய் சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கு.. உனக்காக உன் அண்ணன் சாப்பிடாமல் காத்திருக்கிறார் பாரு.."

"தலைவாரிப் பின்னிக்க சுமி.. சாயங்காலத்தில் தூங்கக் கூடாது.. மல்லிகைப் பூவை தொடுத்து வைத்திருக்கிறேன்.. தலையைக் காட்டு.. வைத்து விடுகிறேன்.."

அன்று மாலை வரை மாலதியின் அன்பான கவனிப்பில் திளைத்த சுமித்ராவிற்கு அதற்கு மேல் தாங்காது என்று தோன்றிவிட்டது.. சுதர்சனம் வெளியே சென்றவுடன் மாலதியை நேராக நோக்கினாள்.. பதிலுக்கு மாலதி புன்னகைத்தாள்..

"என்ன சுமி.. புதிதாய் யாரையோ பார்ப்பதைப் போலவே என்னைப் பார்க்கிற..?"

"நீ புதிதுதானே அண்ணி.. இந்த மாற்றம் புதிது தானே.."

மாலதி நிதானமாக நாத்தனாரை நிமிர்ந்து பார்த்தாள்..

அவள் முகத்தில் தாய்மையின் சுடர் தெரிந்தது..

"இந்த மாற்றம்கூட நீ கொடுத்ததுதான் சுமி.."

"நானா.. நானே இன்றைக்குத்தானே சென்னையில் இருந்து வந்திருக்கிறேன்.."

"இரண்டு வருட தனிமையை எனக்கும் உன் அண்ணனுக்கும் கொடுத்தாயே.. என் காதலை அவர் புரிந்துகொள்ளவும்.. அவருக்கு உன் மீது இருக்கும் பாசத்தை நான் புரிந்துகொள்ளவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தாயே.. நீ மட்டும் விலகிப் போகாமல் இருந்திருந்தால்.. உன் அண்ணன் என்னைத் திரும்பிக் கூட பார்த்திருக்க மாட்டார்.."

"அண்ணி.."

"நான் இப்போது தாயாகப் போகிறேன் சுமி.. என் குழந்தையைப் பொத்திப் பொத்தி வளர்க்க வேண்டும்ன்னு இப்போதிருந்தே ஆயிரம் திட்டங்கள் போடுகிறேன்..

அது போலத்தானே அத்தையும் நினைத்திருப்பாங்க.. அவங்க போனபோது இவருக்காவது பதினேழு வயது.. உனக்கு வெறும் பத்து வயதுதானாமே.. உன்னை இவர்தான் வளர்த்தாராமே.. பெத்தவங்களுக்கு அடுத்த படியா இருந்த அண்ணன்கிட்ட இருந்து உன்னைப் பிரித்து விட்டேனே.. என்னை மன்னிப்பாயா சுமி.."

"அண்ணி.."

மாலதி.. சுமித்ராவைவிட மூன்று வயது மூத்தவள்.. சுமித்ராவின் கண்களுக்கு அவள் மிகப் பெரியவளாக.. பெற்ற தாயைப் போல தெரிந்தாள்.. புண்பட்ட மனத்தோடு.. எங்கே அண்ணனின் நிழலும் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்துடன் வந்தவளுக்கு மாலதியின் அன்பு.. பாலைவனத்தின் சுடுமணலின் இடையே தென்பட்ட சோலையாகத் தோன்ற.. அவள் கதறி அழுதவாறு மாலதியின் மடியில் முகம் புதைத்தாள்.. மாலதி பதறிவிட்டாள்..

"சுமி.. சுமித்ரா.. என்னம்மா இது.. பச்சைப் பிள்ளை யாட்டம் ஏன் இப்படி அழுகிற..?"

மாலதி எத்தனை விதமாகக் கேட்டுப் பார்த்தும் சுமித்ரா பதில் சொல்லவில்லை.. ஒருவழியாக அழுது ஓய்ந்தவள்.. எழுந்து நின்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. உள்ளே சென்று தன் பேங்க் பாஸ் புத்தகத்தையும்.. நகைப் பெட்டியையும் எடுத்து வந்து மாலதியிடம் கொடுத்தாள்..

"இதையேன் என்கிட்ட கொடுக்கிற சுமி..?" மாலதி திகைத்தாள்..

"வைத்துக்கொள் அண்ணி.. இது அம்மா எனக்காக விட்டுப் போன நகைகள்.. இது.. இந்த இரண்டு வருடங்களாய் நான் சம்பாதித்துச் சேர்த்த பணம் மூன்று லட்சம்.. நீயே வைத்துக் கொள்.. இந்த வீட்டிலும் எனக்கு பங்கு தர வேண்டாம்.. கடைசி வரைக்கும் இந்தப் பாசத்தை மட்டும் எனக்குக் கொடு அண்ணி.. திரும்பவும் என்னை வீட்டை விட்டுத் துரத்திவிடாதே.."

மிக அழகானவள்.. படித்தவள்.. சுயமரியாதை பார்ப்பவள் என்று அனைவராலும் அறியப்பட்ட சுமித்ரா.. கைகுவித்து ஒரு யாசகி போல் மாலதியிடம்.. கண்களில் நீர் வழிய விண்ணப்பித்தாள்..

"சுமி.. என்ன இது.. பைத்தியக்காரத்தனமாய் பேசுகிற..?"

"இல்லை அண்ணி.. நான் ஓய்ந்துபோய் வந்திருக் கிறேன்.. பாசம் கிடைக்கிறதுன்னு நான் உன்னை விட்டு ஓடியதற்கு எனக்கு கைமேல் பலன் கிடைத்துவிட்டது.. என்னை ஓண்ட வந்த அகதின்னு சொல்லிவிட்டாள் அண்ணி.."

"என்னது..?"

மாலதியின் கண்கள் கோபத்தில் சிவந்துவிட்டன.. அவள் சுமித்ராவின் முகத்தை நிமிர்ந்தி சினத்துடன் கேட்டாள்..

"யார் இப்படிச் சொன்னது.. மைதிலியா..?"

"ம்ம்ம்.."

சுமித்ரா கண்களில் நீர் வழிய கேவினாள்.. நாத்தனாரின் கண்ணீர் முகத்தைத் காணும்போது மாலதிக்கு வயிற்றைப் பிசைந்தது..

'என்னால் அல்லவோ இவளுக்கு இவ்வளவு பெரிய துயரம் வந்துவிட்டது..'

"அவள் எப்படி.. அப்படிக் கேட்கலாம்..? போனைக் கொடு.. அவளிடம் நான் பேசுகிறேன்.. அவளை உண்டு இல்லைன்னு பண்ணி விடுகிறேன்.."

"வேண்டாம் அண்ணி.. அவள் பேசியது.. பெரியப்பா விற்கும் பெரியம்மாவிற்கும் தெரியாது.. அவங்களுக்குத் தெரிந்தால் வருத்தப்படுவாங்க.."

"அதுக்காக.. நீயே எல்லாவற்றையும் உன் மனதில் போட்டுப் புதைத்துக் கொண்டிருக்கிறாயா.. அவள் இதை மட்டும்தான் சொன்னாளா.. இன்னும் சொன்னாளா..?"

"போக்கிடம் இல்லாத அநாதைன்னு சொன்னாள்.. தாய் தகப்பன் இல்லாதவளுக்கு அடைக்கலம் கொடுத்த தாகச் சொன்னாள்.."

"சுமி.. என்னால்தானே.. நீ இப்படிப் பேச்சுக் கேட்டிருக்கிற..?"

"இல்லை அண்ணி.. இது நானாகத் தேடிக் கொண்டது.. என்மேல் கோபம் காட்டியது யார்..? என் அண்ணி தானே.. நான் இதை நினைத்துப் பார்த்திருந்தால் இந்த வீட்டை விட்டுப் போயிருப்பேனா..? நீயும் ஏன்.. என் மேல் கோபம் காட்டினாய்..? அண்ணனுக்கும் உனக்கும் இடையே நந்தி போல் நான் நின்றுகொண்டிருந்தேன் என்பதால் தானே..? நான் உன்னைப் பற்றி அண்ணனிடம் பேசியிருக்க வேண்டாமா..? இப்போது கேட்டதுபோல அன்றைக்கே உன்னிடம் பாசத்தைக் கேட்டிருக்க வேண்டாமா..?"

"சுமி.."

மாலதி.. தன் கணவனின் தங்கையைத் தான் பெற்ற மகள் போல் தன் இரு கைகளிலும் அவள் முகத்தை ஏந்தி அவள் நெற்றியில் முத்தமிட்டாள்..

"நீ ஒரு வார்த்தை பேசினால் நான் குறைந்தா போய் விடுவேன் அண்ணி..? பேசுவது யார்.. என் அண்ணி தானேன்னு நான் நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா..? அதை விட்டுவிட்டு உன் நிழலை விட்டு ஓடினேன்.. பட்டுத் திரும்பியிருக்கிறேன்.."

மாலதி சோபாவில் அமர்ந்திருக்க.. அவள் மடியில் முகம் புதைத்து.. அவள் காலடியில் தரையில் அமர்ந் திருந்தாள் சுமித்ரா.. மாலதி சிந்தனையுடன் சுமித்ராவின் முடிகோதிக் கொண்டே வினவினாள்..

"உனக்கும் மைதிலிக்கும் இடையே சண்டையே வராதே.. எதனால் சண்டை வந்தது..?"

"உனக்குக்கூடத்தான் யார் மீதும் கோபமே வராதே.. என்மேல் ஏன் கோபம் வந்தது..?"

"சுமி..?"

"ம்ம்ம்.. அவளுடைய தாய்மாமனின் மகன்... பெயர் விவேகானந்தன்.. வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்தார்.."

விவேகானந்தனைப் பற்றிப் பேசும்போது சுமித்ராவின் குரலில் தெரிந்த சொந்தத்தையும் பரவசத்தையும் மாலதி சட்டென்று இனம் கண்டு கொண்டாள்..

அவளும் காதலித்தவள்தானே.. சுதர்சனத்தின் பெயரைச் சொல்லும் சந்தர்ப்பம் கிடைத்தால்.. அதை மயக்கத்தோடு சொல்லிப் பார்த்தவள்தானே..

சிக்கலான நூலின் முனை அவளுக்குக் கிடைத்து விட்டது..

"விவேகானந்தனை மைதிலி விரும்பினாளா..?"

"ம்ம்ம்.."

"அவர் உன் மேல் ஆசைப்பட்டாரா..?"

"அண்ணி.."

சுமித்ரா சட்டென்று நிமிர்ந்து மாலதியின் முகம் பார்த்தாள்.

"எப்படி அண்ணி கண்டுபிடித்தாய்..?"

"இப்படித்தான் இருக்குமென்ற யூகம்தான்.. மைதிலியின் மனதில் அவர் இருந்தால்.. அவள் என்ன வேண்டுமானாலும் உன்னைப் பேசிவிடலாமா..? அவள் கேள்வி கேட்க வேண்டியது விவேகானந்தனிடம்.. உன்னிடமில்லை.."

"அவர்தான்.. அவள்மேல் பாசம்தான் வருகிறது.. காதல் வரவில்லைன்னு சொல்லிவிட்டாரே.."

"அது அவள் தலைவிதி.. நீயென்ன செய்வாய்..?"

"அவளுடைய கோபத்தையும்.. ஆற்றாமையையும் அவரிடம் காட்ட முடியவில்லை.. என்னிடம் காட்டி விட்டாள்.."

"அதற்காக நீ சென்னையில் பார்த்துக் கொண்டிருந்த நல்ல வேலையை ஏன் விட்டாய்.. அவள் வீட்டில்தான் நீ இருக்க வேண்டுமா என்ன..? உனக்காக உன் அண்ணன் தனி வீடு பார்த்துக் கொடுப்பாரே.. என் அப்பாவின் ஊரில்.. வீட்டோடு இருக்கிறது போல சொந்தத்தில் இருந்து ஒரு அம்மாவை அனுப்புங்கன்னு சொன்னால்.. என் அப்பா உடனே அனுப்பி வைப்பாரே.. நானும் உன் அண்ணனும் மாதத்திற்கு ஒரு தடவை.. உன்னுடன் வந்து தங்கியிருந்து விட்டு வருவோமே.."

"அங்கேயிருந்தால்.. நான் விவேகானந்தனின் கண்களில் பட்டுக் கொண்டிருப்பேனே.. அப்புறம்.. அவர் என்னை எப்படி மறப்பார்..?"

"சுமி.."

"ஆமாம் அண்ணி.. நான் வேலையை மட்டும் விட்டுவிட்டு வரவில்லை.. விவேகானந்தனின் காதலையும் விட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.."

"உன்னை அவர் மறப்பாரா..?"

"மறப்பார்.. கட்டாயம் மறப்பார்.. நான் வேறு ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்னு

சொன்ன பின்னால்.. அவரால் என்னை நினைக்க முடியாது.. மறந்து விடுவார்.."

"ஏன்ம்மா.. அப்படி ஒரு பொய்யைச் சொன்னாய்..?"

"நான் வேறென்ன செய்ய முடியும் அண்ணி..? மைதிலி அவர்மேல் உயிராய் இருக்கிறாள்.. அவளுடைய காதலனின் காதலை என்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்..?"

மாலதி.. சுமித்ராவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.. அதில் தெரிந்த அளவுகடந்த வேதனையையும் நிராசை யையும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

'இந்த வேதனை.. மைதிலியின் சுடுசொல்லைக் கேட்டதால் மட்டும்தான் வந்ததா..?'

இல்லையென்று மாலதியின் மனத்திற்குத் தெரிந்தது.. காதல் தோல்வி தரும் எல்லையற்ற விரக்தியும் பற்றில்லா தன்மையும் சுமித்ராவிடம் குடிகொண்டிருந்தன..

"அவர் உன்னை மறப்பது ஒருபுறமிருக்கட்டும்.. நீ அவரை மறந்துவிட்டாயா சுமித்ரா..?" மாலதி அழுத்தமாக வினவினாள்..

"அண்ணி.." பிடிபட்டுவிட்டவளாக சுமித்ரா விழித்தாள்..

"முடியுமா சுமி..? உன்னால் அவரை மறந்துவிட முடியுமா..? அவரின் காதலை நீ ஏற்றுக் கொள்ள வில்லையா..?"

"அண்ணி.."

"பைத்தியக்காரி..! எதை தியாகம் செய்வது..? காதலையா..? காதலுக்காக எதையும் தியாகம் செய்யலாம்.. காதலை எதற்காகவும் தியாகம் செய்யக் கூடாது.."

"அண்ணி.."

"சொல் சுமி.. ஒரு வார்த்தை சரின்னு நீ சொல்.. உன் அண்ணனைக் கூப்பிட்டுக் கொண்டு இப்போதே சென்னைக்குப் போகிறேன்.. விவேகானந்தனின் வீட்டில்

கல்யாணத்தைப் பேசி.. உறுதிபண்ணிவிட்டு வருகிறேன்.. நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்.."

சுமித்ரா அந்த ஒரு வார்த்தையைச் சொன்னாள் மாலதி கோபம் கொண்டாள்..

"வேண்டாம்.."

"முட்டாளா நீ..? அவர் உன்னைக் காதலிக்கிறார்.. நீ அவரைக் காதலிக்கிறாய்.. ஆயிரம் பெண்கள் அவர் மேல் ஆசைப்பட்டிருப்பார்கள்.. ஆயிரம் ஆண்கள் உன்மேல் ஆசைப்பட்டிருப்பார்கள்.. அதையெல்லாம் நினைத்துக் கொண்டிருக்க முடியுமா..?"

"மைதிலி.. ஆயிரத்தில் ஒருத்தி அண்ணி.."

"மைதிலி.. மைதிலி.. நீ அவளைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன சுமி...? அவரே அவளைப் பற்றி நினைத்துப் பார்க்கவில்லையே.."

"அவருக்கும் அவளுக்கும் இடையில் வெறும் உறவுமுறை மட்டும்தான் அண்ணி இருக்கிறது.. எனக்கும் மைதிலிக்கும் இடையில் நட்பு இருக்கிறதே.. அவள் எனக்கு நட்பைத் தந்தவள் அண்ணி.. என்னை நேசித்தவள்.. அன்பு காட்டியவள்.. அவள் நேசிக்கும் காதலிக்கும் மனிதனுடன் நான் எப்படி வாழ முடியும் அண்ணி..?"

மாலதி.. சுமித்ராவின் உறுதியைக் கண்டு வியந்து போனாள்..

## 14

நட்பு..! அதுதான் எவ்வளவு உயர்ந்தது.. உயிரினும் மேலான காதலைத் துறந்துவிட்டு.. ஒரு துறவி போல வந்து நிற்கும் சுமித்ராவின் மேல் மாலதிக்கு அளவு கடந்த பரிதாபம் ஏற்பட்டது..

பெண்கள் விரும்பும் நகைகளை.. இனி அவள் விரும்பமாட்டாள் என்பதை மாலதி உணர்ந்து கொண்டாள்.. பணமும் அவளுக்குத் தேவைப்படாது.. பாசத்தைத் தேடி நிற்கிறவளுக்கு பணம் ஒரு போதும் நிறைவைத் தந்து விடாது.. பதவியும் அவளுக்கு மனநிம்மதியைத் தந்து விடாது.. பார்த்துக் கொண்டிருந்த இன்னும் பல உயர்வுகளைத் தரக்கூடிய.. நல்ல வேலையை உதறிவிட்டு சுமித்ரா வந்திருக்கிறாள் என்றால் அவள் மனதில் எப்பேர்ப்பட்ட துறவு மனப்பான்மை நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை மாலதியால் புரிந்து கொள்ள முடிந்தது..

'பூ முடிப்பதும்.. பொட்டு வைப்பதும்..

யாருக்காக..?'

கண்ணதாசனின் பாடல் வரிகளில் ஒரு பெண் கேட்கும் கேள்வி இது.. யாருக்காக ஒரு பெண்.. தன்னை அழகுபடுத்திக் கொள்ள முனைவாள்..?

தன்னை ரசிக்கும் ஆண்மகனுக்காக.. அவன் கண்களுக்கு அவள் அழகாகத் தெரியவேண்டு மென்பதற்காக அவள் தன்னை அழகுப் படுத்திக் கொள்ள விழைவாள்..

'மல்லிகை.. என் மன்னன் மயங்கும்..

பொன்னான மலரல்லவோ..

எந்நேரமும்.. உன்னாசை போல்..

பெண்பாவை.. நான் பூச்சூடிக் கொள்ளவோ..'

மல்லிகையின் நறுமணத்தை நுகர விரும்பும் கணவனுக்காக தலை நிறைய மல்லிகைச் சரத்தை சூடிக் கொண்டுபாடும் மனைவியின் வார்த்தைகள் இவை..

இது பெண்ணடிமைத்தனமா..? ஆணாதிக்கத்திற்கு அடிபணியும் பெண்ணின் மனோநிலையா..?

இதைப் பற்றியெல்லாம் காதல்வசப்பட்ட பெண்கள் நினைத்துக் குழம்பிக் கொள்வதில்லை..

சுமித்ராவும் அப்படித்தான்.. ஒரு காலத்தில் விவேகானந்தனின் ஆர்வப் பார்வையை உணர்ந்ததும் அவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொண்டாள்..

அவனைத் துறக்க வேண்டிய நிலை வரவும்.. கண்ணாடி பார்க்கக்கூட மறந்து விட்டாள்..

வெளியே காலடியோசை கேட்கவும்.. சுமித்ரா அவசரமாய் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து கொண்டாள்..

"அண்ணி.. அண்ணனிடம் எதையும் சொல்லி விடாதே.."

"இல்லை.. நான் சொல்ல மாட்டேன்.."

"இப்போது மட்டுமில்லை அண்ணி.. எப்போதுமே இதை யாரிடமும் சொல்லிவிடாதே.."

"என் காதிற்குள் போனது.. வாய்வழியாக வெளியே வராது.. நீ என்னைத் தாராளமாக நம்பலாம்.. கவலைப் படாமல் இரு.."

மாலதி சொன்ன வாக்கைக் காப்பாற்றினாள்.. மறந்தும் சுமித்ரா சொன்னவற்றை தன் கணவனிடம் சொல்ல வில்லை.. மாறாக.. சுமித்ரா தனக்குள்ளேயே புதைந்து கொண்டிருக்கும் சோகப் புதைகுழியில் இருந்து அவளை மீட்க வழி தேடினாள்..

'சும்மா இருக்கும் மனம்..

சாத்தானின் உலைக் களம்..

சும்மா இருக்காமல்..

சுற்றியாரும் பம்பரமாய்..

இறக்கை விரித்தேன் - ஒரு

இயந்திரப் பறவையாய்..'

அவள் படித்த கவிதை வரிகள் நினைவுக்கு வர.. மாலதி தன் தந்தையிடம் போனில் பேசினாள்..

"அப்பா.. நம்ம தேவா அண்ணனின் ஃபேக்டரியில் சுமித்ராவுக்கு வேலை வாங்கித் தர முடியுமா..?"

"என்னம்மா இப்படிக் கேட்டுட்ட.. நான் கேட்டு அவன் இல்லைன்னு சொல்லிவிடுவானா..? யாரு அவன்..? என் பெரியப்பாவுடைய சகலபாடிக்கு கொழுந்தியா மகன்.."

"இப்ப.. இந்த உறவுமுறையை நான் கேட்டேனா..?"

"நீ கேட்காவிட்டாலும் நான் சொல்லியாகணுமே.. அது என் கடமையாச்சே.."

"உங்க கடமையைக் கொண்டு போய் தூத்துக்குடி கடலில் போடுங்க.. இப்பத்தான் எனக்கு தலைசுற்றுவது நின்றிருக்கிறது.. திரும்பவும் தலையை சுற்ற வைக்காமல் நாளைக்கு இங்கே வந்து கையோடு சுமித்ராவைக் கூப்பிட்டுக்கிட்டுப் போய்.. அண்ணனின் கம்பெனியில் ஒரு வேலையை வாங்கிக் கொடுங்க.."

மாலதியின் தந்தை பெரியசாமி மறுநாளே தூத்துக்குடிக்கு வந்தார்.. சுமித்ராவை அழைத்தார்..

"உன் சர்டிபிகேட் எடுத்துக் கொண்டு என்னுடன் கிளம்பும்மா.."

"எங்கே மாமா..?"

"கேள்வியே கேட்கக்கூடாது.. கிளம்புன்னா கிளம்பு என்னை யாருன்னு நினைத்தே.. உன் பெரியப்பன் மட்டும் தான் பெரிய ஆளா..? உன் மாமன்.. இந்தப் பெரியசாமியும் பெரிய ஆளுதான்.."

சுமித்ரா மறுக்க முடியாமல் அவருடன் கிளம்பிப் போனாள்.. தூத்துக்குடியின் பிரதான சாலையில் இருந்து பிரிந்து.. கடற்கரையோரமாக.. அகன்று.. விரிந்து சென்ற தார்ச்சாலையில் அவர்கள் சென்ற ஆட்டோ பயணித்தது..

"இறங்கும்மா.."

பெரியசாமி சொல்லவும் இறங்கிய சுமித்ரா.. எதிரே இருந்த மிகப்பெரிய கட்டடத்தை அண்ணாந்து பார்த்தாள்.

'தேவா.. இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட்..' என்று நியான் எழுத்துகள் மின்னின..

பெரிய கேட்டின் முன்னாலிருந்த செக்யூரிட்டியிடம் விஷயம் சொல்லிவிட்டு.. காத்து நின்றார் பெரியசாமி..

"யெஸ் சார்.. யெஸ் சார்.." என்றபடி போனை வைத்த செக்யூரிட்டி.. பெரியசாமிக்கு ஒரு மிகப் பெரிய சல்யூட்டை வைத்தான்..

'எப்புடி..' என்பது போல பெருமையாக சுமித்ராவைப் பார்த்துக் கொண்டே செக்யூரிட்டி கேட்டைத் திறந்துவிட சுமித்ராவுடன் உள்ளே பிரவேசித்தார் பெரியசாமி..

வரவேற்பறைப் பெண்ணும் செக்யூரிட்டியை போலவே மரியாதை கொடுத்து உள்ளே அனுப்ப.. தேவேந்திரனின் அறைக்கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே சுமித்ரா பின்தொடர சென்றார் பெரியசாமி..

அவர்களுக்கு முதுகைக் காட்டியவாறு கம்ப்யூட்டரின் திரையைப் பார்த்துக் கொண்டிருந்தவன்..

"வணக்கம்.. தேவா தம்பி.." என்ற பெரியசாமியின் குரலைக் கேட்டதும்.. சுழல்நாற்காலியில்.. சுழன்று திரும்பினான்..

## 15

தேவேந்திரன்.. கூர்மையான பார்வையுடனும் கம்பீரமான தோற்றத்துடனும் இருந்தான்.. பெரியசாமியைப் பார்த்து அளவாகப் புன்னகைத்தான்..

"வாங்க சித்தப்பா.. எப்படி இருக்கீங்க..?"

"எனக்கென்ன தம்பி.. உப்புத் தண்ணீர் வற்றாத கடலிருக்க.. உப்பை அள்ளிக் கொடுக்க உப்பளம் இருக்கு.. என் பிழைப்புக்கு ஒரு குறைவுமில்லை.. ஆண்டவன் புண்ணியத்தில்.. அந்தக் கடல் தாயி புண்ணியத்தில.. நல்லாயிருக்கேன்.."

'இவருக்கு ஒரு வார்த்தையில் 'ஃபைன்' என்று பதில் சொல்லத் தெரியாதா..' என்று சுமித்ரா யோசித்துக் கொண்டிருக்க.. பெரியசாமியின் குண இயல்பிற்கு பழகிப் போனவனாக தேவேந்திரன் புன்னகைத்தான்..

"மாலதி எப்படியிருக்கு..?"

"அதுக்கென்ன தம்பி.. ஒரு பொண்ணுக்கு என்ன வேணும்.. மனசுக்கு பிடிச்சவன்.. புருஷனாக வரவேணும்.. அதுக்கு அந்த வரத்தை ஆண்டவன் அள்ளிக் கொடுத் திருக்காரு.. அப்புறம் அதுக்கு என்ன குறையிருக்கப் போகுது.. ஆண்டவனின் புண்ணியத்திலே ஒரு புள்ளைக்கும் அம்மாவாகப் போகுது.. நல்லா இருக்கு தம்பி.."

'மனதுக்குப் பிடித்த புருஷன்..' சுமித்ராவின் இமை யோரம் விவேகானந்தனின் நினைவு.. நீர்முத்தாக உதித்தது..

அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த போது.. பெரியசாமி அவளை தேவேந்திரனிடம் காட்டி..

"இதுதான் தம்பி சுமித்ரா.." என்றார்..

'இந்த மனிதரிடம் இது ஒன்று இருக்கிறது.. தேவை யில்லாததற்கு.. வளவளவென்று பேசுவார்.. தேவைப் படுவதற்கு ஒரே வார்த்தையில் சொல்லி வைப்பார்.. இதுதான் சுமித்ரான்னு சொன்னால்.. நான் என்னவென்று எடுத்துக் கொள்ள.. பெயரைச் சொன்னதும் நான் புரிந்து கொள்வதற்கு.. இது என்ன வி.ஐ.பி யோட பெயரா..?' தேவேந்திரன் மனதிற்குள் எரிச்சல் பட்டவாறு சுமித்ராவை பார்வையிட்டான்..

கருநீல நிறத்தில் அடர்த்தியான ரோஜா வண்ணத்தில் ஜரிகை கரைகொண்ட காட்டன் சேலையை உடுத்தி.. அதே அடர்த்தியான ரோஜா வண்ணத்தில் ஜாக்கெட்

அணிந்திருந்த சுமித்ரா லேசாக விழியுயர்த்தி தேவேந்திரனைப் பார்த்தாள்..

அந்த ஒரு பார்வையில் விழுந்து விட்டான் தேவேந்திரன்.. எளிமையான அமைதியுடன் இருந்த சுமித்ராவிடம் தெரிந்த எல்லையற்ற வனப்பு அவனை ஈர்த்தது.. அதிகமான ஒப்பனை இல்லாமல் அளவான ஒப்பனையுடன் இருந்த அவளின் இயற்கை அழகு அவனை வசீகரித்தது தேவேந்திரன் நிமிர்ந்து அமர்ந்தான்..

"இவங்க யாரு சித்தப்பா..?"

"என்ன தம்பி இப்படிக் கேட்டுப்புட்டீங்க.."

கேட்கக்கூடாத கேள்வியை அவன் கேட்டுவிட்டது போல் பெரியசாமி வினவ.. அவன் அப்படி என்ன கேட்டு விட்டான் என்ற யோசனையுடன் சுமித்ரா பெரியசாமியைப் பார்த்தாள்..

அவரது குண இயல்பை நன்கு அறிந்து வைத்திருந்த தேவேந்திரன்.. அலட்டிக்கொள்ளவே இல்லை.. மௌனமாக சுமித்ராவை மீண்டும் பார்த்தான்..

"நம்ம மாலதியோட நாத்தனாருதான் சுமித்ரா.."

"ஓ.. ஐ.. ஸீ.."

"சென்னையில் பெரிய கம்பெனியில் வேலை பார்த்துக்கிட்டு இருந்துச்சு.. அண்ணனை விட்டு விட்டு இருக்க முடியலைன்னு வேலையையே விட்டுப்புட்டு வந்திருச்சுன்னா.. பார்த்துங்கங்க.."

அவரே பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்ட பின்னால் பார்க்காமலிருந்தால் நன்றாக இருக்காது என்று நினைத்தானோ என்னவோ.. தேவேந்திரன் சுமித்ராவை நன்றாக பார்க்க ஆரம்பித்துவிட்டான்..

"வீட்டில் சும்மா இருக்க முடியாமல்.. கொட்டக் கொட்ட முழிச்சுக்கிட்டு.. விட்டத்தைப் பார்த்துக்கிட்டு இருந்துச்சாம்.. மாலதி என்னை போனில் கூப்பிட்டு.. அண்ணன்

கம்பெனியில் என் நாத்னாருக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்கக்கூடாதான்னு கேட்டுப்புடுச்சு.."

"ஓ.. மாலதியின் சிஸ்டர் இன் லாவிற்கு வேலை கொடுக்கச் சொல்லி.. மாலதி ரெகமென்ட் பண்ணுச்சா.."

"ஆமாம் தம்பி.. அதனால்தான் உப்பளத்தை கிளறுவதை அப்படியே அம்போன்னு விட்டுப்புட்டு காலங்கார்த்தாலே கிளம்பி தூத்துக்குடிக்கு வந்தேன்.."

தேவேந்திரன் இப்போது நேரடியாக சுமித்ராவிடம் பேசினான்..

"உங்க சர்டிபிகேட்டைக் கொடுங்க.."

சுமித்ரா தன் ஃபைலை நீட்டினாள்.. வாங்கிப் புரட்டிப் பார்த்தவனின் முகம் திருப்தியைக் காட்டியது..

"வெல்.. ஐ ஆம் சேடிஸ்ஃபை எபௌட் யூவர் குவாலிபிகேஷன்ஸ்.. என்னுடைய பி.ஏ.வாக வேலை பார்த்த பெண்ணிற்கு மேரேஜ் ஆகிவிட்டது.. அந்தப் பெண்ணின் ஹஸ்பெண்ட் பெங்களூரில் வொர்க் பண்ணுவதால் நேற்றுதான் வேலையை ரிஸைன் பண்ணியது.. இன்றைக்கு பேப்பரில் அட்வர்டைஸ்மெண்ட் கொடுக்கலாமுன்னு நினைத்தேன்.. அதற்குள் நீங்க என் கண்ணெதிரே வந்து விட்டிங்க.. இன்றைக்கே வேலையில் ஜாயின் பண்ணி விடுங்க.. உங்க அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் ஆறே நிமிடங்களில் உங்கள் கையில் வந்து சேரும்."

பெரியசாமி மகிழ்ந்து போனார்.. வீட்டிற்குப் போய் உடனடியாக மகளிடம் பெருமையடிக்க விரும்பியவர்.. சுமித்ராவைப் பார்த்து.. "அப்போ நான் கிளம்புகிறேன்ம்மா.. பயப்படாமல் வேலை பாரு.. சாயங்காலம் மாப்பிள்ளை வந்து உன்னைக் கூப்பிட்டுக்கொண்டு வருவாரு.." என்று கூறிவிட்டுப் போய்விட்டார்..

சுமித்ரா தயக்கத்துடன் தேவேந்திரனைப் பார்த்தாள்..

"என் வேலை என்னன்னு தெரியலையே சார்.."

"இப்போதுதானே ஜாயின் பண்ணியிருக்கிறீங்க.. உடனே தெரிந்துவிடுமா.. என் கேபினுக்குள் இருக்கும் அந்த ஸீட்தான் உங்களுடைய ஸீட்.. உங்களுக்கு பாஸ் வேர்டை கிரியேட் பண்ணிக்கோங்க.. கம்ப்யூட்டரை ஓப்பன் பண்ண நான் சொல்லித் தருகிறேன்.. என்ன வேலைகள் என்பதையும் சொல்லித் தருகிறேன்.. உங்களைப் பார்த்தால் வெரி கிளவர்னு தோணுது.. சீக்கிரமாய் பிக்அப் பண்ணிக் கொள்வீங்க.."

சுமித்ராவுக்கான ஸீட்டைக் காண்பித்த தேவேந்திரன்.. அவளருகே சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.. அவன் மீதிருந்து வந்த யுடிகுளோன் கலந்த நறுமணம் சுமித்ராவின் நாசியை வருடியது.. அவள் மனம் விவேகானந்தனை நினைத்துக் கொண்டது..

'அவனிடமும் இதேபோல்தான் வாசனை வரும்..'

தன் அருகாமை.. சுமித்ராவின் மனதில் வேறு ஒருவனைப் பற்றிய நினைவுகளை உண்டாக்குவதை அறியாமல் தேவேந்திரன் அவளைப் பார்த்தான்..

## 16

ஆறே நாள்களில் சுமித்ரா வேலையைக் கற்றுக் கொண்டு விட்டாள்.. அதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான் தேவேந்திரன்..

'வாட் எ இன்டலிஜெண்ட் கேர்ள்..'

சுமித்ரா.. மெல்ல மெல்ல.. அந்த வேலையில் ஒன்றிப் போனாள்.. தேவேந்திரனின் மனதில்.. மெல்ல மெல்ல அவள் மேலான ஈர்ப்பு கூடிக்கொண்டே போனது..

அந்த மாத இறுதியில் விவேகானந்தனுக்கும் மைதிலிக்கும் நடக்க இருக்கும் திருமணத்தை அறிவித்த அழைப்பிதழ் தபாலில் வந்து சேர்ந்தது.. கூடவே நேரில் வந்து அழைக்க

முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து கடிதம் ஒன்றும் இருந்தது..

சுதர்சனமும் சுமித்ராவும் வேலைக்குச் சென்றிருக்க.. வீட்டில் இருந்த மாலதி அந்தக் கடிதத்தையும் அழைப்பிதழையும் பெற்றுக் கொண்டாள்.. அவளுக்கு மோகனரங்கத்தின் மனம் புரிந்தது.. சுமித்ராவைப் பெற்ற பெண் போல நினைத்தவர்.. அவள் முகத்தில் விழிக்க முடியாமல் தவிக்கிறார்..

மாலதி அழைப்பிதழையும் கடிதத்தையும் சுதர்சனத்திற்கும் மாலதிக்கும் தெரியாமல் மறைத்தாள்.. சுதர்சனம் எதையும் அறியாதவன்.. தங்கையின் மன வேதனையை அறிந்தால் துடித்துப் போய்விடுவான்.. அதனாலேயே சுமித்ராவின் வேண்டுகோளை ஏற்று கணவனுக்கு விவரம் தெரியாமல் மறைத்தாள் மாலதி.. இப்போது.. இந்த திருமண அழைப்பிதழைப் பார்த்தால் சுமித்ரா உயிரோடு செத்து விடுவாள்.. சுதர்சனம் தங்கையிடம்தான் முதலில் இந்தச் செய்தியைக் கூறுவான்.. நடந்ததை அறியாதவன் என்பதால் சுமித்ராவை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு மைதிலியின் திருமணத்திற்குச் சென்றாலும் ஆச்சரியமில்லை.. எனவேதான் கணவனுக்கும் நாத்தனாருக்கும் தெரியாமல் கல்யாண அழைப்பிதழை மறைத்துவிட்டாள் மாலதி..

மைதிலியின் திருமணத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன்னால் மாலதிக்கு பிரசவ வேதனை வந்துவிட.. பெரியசாமியும் அவர் மனைவி ஆண்டாளும் தூத்துக்குடிக்கு பறந்து கொண்டு வந்தவிட்டனர்..

"இந்த மனுஷன் எம்புட்டுச் சம்பாதிச்சு என்ன பிரயோசனம்..? பட்டிக்காட்டில் இருக்கிறவருக்கு டவுனுப் பக்கம் வர கால் வரலையே.. என் பொண்ணுக்கு தலைப் பிரசவத்தை தாய்வீட்டில் வைத்துப் பார்க்கும் கொடுப்பினை எனக்கு இல்லையே.." ஆண்டாள் புலம்பித் தீர்த்து விட்டாள்..

"ஏண்டி.. பட்டிக்காட்டில் இருக்கிற மனுஷங்க.. எல்லாம் குழந்தை பெற்றுக்கொள்வது இல்லையா..?" பெரியசாமி எகிறினார்..

"என்கிட்ட வம்புக்கு வராதீங்க.. நானே கோபத்தில் இருக்கிறேன்.. என் வாயில் நல்லா வந்துவிடும்.. ஆமாம்.. சொல்லிட்டேன்.. ஆஸ்பத்திரி வசதியில்லாத ஊரில். என் பொண்ணுக்கு எப்படி பிரசவம் பார்ப்பது..?"

"இது தூத்துக்குடி டவுன்தானே.. இந்தா.. உன் மகளுக்கு வலி வந்திருச்சு.. அடுத்த வீட்டில் இருக்கும் ஆஸ்பத்திரிக்கு கூப்பிட்டுக் கொண்டு போய் வைத்தியம் பாரு.."

"என் கூட மல்லுக்கட்ட இந்த நேரம்தான் எம்புட்டுச்சா..? ஒரு காரை வரச் சொல்லுங்க.. ஆஸ்பத்திரிக்கு பொண்ணை அழைச்சுக்கிட்டுப் போகணும்.."

"நாம் வந்த காரையே வாசலில் நிப்பாட்டி வச்சிருக்கேன்.. பொண்ணுக்கு பிரசவ வலி வந்தவுடன் இதுபோல காரைப் பிடித்து கூப்பிட்டுக் கொண்டு வர மாட்டோமா..? இங்கேயிருந்து ஆஸ்பத்திரிக்குப் போவதைவிட பதினைந்து நிமிடம் கூட ஆகும்.. அம்புட்டுத்தானே.. அதை விட்டுப் புட்டு.. டவுனு டவுனுன்னு புலம்புகிறாள்.. எல்லா இடத்திலும் எங்கேயாவது போகனுமுன்னா ஆட்டோவோ காரோ பிடித்துத்தான் போகனும்.. அந்தக் காரை தூத்துக்குடியில் பிடித்தாலென்ன.. நம்ம ஊரில் பிடித்தா லென்ன.. நம்ம பொண்ணுக்கு மாப்பிள்ளையை விட்டு விட்டு வர மனசில்லை.. மாப்பிள்ளைக்கும் பொண்ணை நம்ம கூட அனுப்ப இஷ்டமில்லை.. அதுக்கு நம்ம

ஊரை ஒரு சாக்காய் சொல்லிட்டாங்க.. இதுபுரியாமல் நீ ஆடுகிறாயே.."

"ஆமாம்.. நான் தில்லானா மோகனாம்பாள்.. ஆடுகிறேன்... நீங்கதான் நாதஸ்வர சக்கரவர்த்தி சண்முகசுந்தரம்.. நாயணம் வாசிங்க.. பேச வாயைத் திறந்தால் மூடவே தெரியாதா.. நீங்க பேசி முடிக்கிறதுக்குள் பொண்ணுக்கு குழந்தையே பிறந்துவிடும்.. வாயை மூடுங்க.."

அதட்டல் போட்டாள் ஆண்டாள்.. வாயை மூடினார் பெரியசாமி.. சுமித்ரா அலுவலகத்தில் இருந்து சீக்கிரமாக வந்திருந்தாள்.. மாலதிக்கு தேவையானவைகளை ஆண்டாள் சொல்லச் சொல்ல பரபரவென்று வயர் கூடையில் அடுக்கினாள்.. காத்து நின்ற காரில் மாலதியின் இரு பக்கமும் ஆண்டாளும் சுமித்ராவும் பின்பக்க ஸீட்டில் அமர்ந்து கொள்ள.. பெரியசாமி.. முன் ஸீட்டில் அமர்ந்து கொண்டார்.. தன் இருசக்கர வாகனத்தில் காரைப் பின் தொடர்ந்தான் சுதர்சனம்..

சுதர்சனத்திற்கு மகன் பிறந்தான்.. மாலதி.. தாயாகி விட்ட அயர்வில் கண்மூடிப் படுத்திருக்க.. சுமித்ரா.. தொட்டிலில் படுத்திருந்த குழந்தையைத் தூக்கி சுதர்சனத்திடம் காண்பித்து ஆரவாரித்தாள்..

"பார் அண்ணா.. உன் மகனைப் பார்.."

சுதர்சனத்தின் மகன்.. பெற்றவர்களுக்கு ஆனந்தத் தைத் கொடுத்தானோ இல்லையோ.. சுமித்ராவின் மனக் காயத்தை ஆற்றும் மருந்தாக் இருந்தான்..

சுமித்ரா குழந்தையைக் கீழே விடாமல் கையில் தாங்கிக்கொண்டாள்.. அவள் பெற்ற குழந்தை போல பிரியமனமின்றி.. குழந்தையைப் பிரிந்து அலுவலகம் செல்வாள்..

"பார்த்துக்கங்க அத்தை.. பத்திரம்.." ஆண்டாளிடம் ஆயிரம் முறை சொல்வாள்..

"ஊரில.. உலகத்தில்.. நாத்தனாருன்னு ஒருத்தி இருந்தால் பொறாமைப் படுவாளுக.. போட்டிக்கு வருவளுக.. நம்ம அண்ணன் பெண்டாட்டி பிள்ளை பெத்தால்.. நாம அவளுக்கு சேவகம் செய்யணுமான்னு திமிர் பிடித்து.. போய் திரும்பிக்கூட பார்க்க மாட்டாளுக.. உன் நாத்தனார் அப்படியில்லை மாலதி.. நீ ஆஸ்பத்திரியில் இருந்தப்போ.. உனக்குத் துணையாய் நானும் ஆஸ்பத்திரியிலேயே இருந்தேன்.. வீட்டைக் கவனித்து.. வீட்டில் இருந்த ஆண்பிள்ளைகளையும் கவனித்து.. சமைத்து.. உனக்கும் எனக்கும் சாப்பாட்டைக் கொண்டு வந்து ஆஸ்பத்திரியில்

கொடுத்து விட்டு ஆபீஸிற்கும் ஓடுவாள்.. இப்பப் பாரு.. உன் பிள்ளையை.. தன் பிள்ளை போல் நினைத்து பார்த்துக் கொள்கிறாள்.. நீ கொடுத்து வைத்தவள்டி.."

ஆண்டாள் சொல்லும்போது மாலதியின் கண்கலங்கியது.. 'இவளைத்தான் நான் வீட்டில் இருக்க விடாமல் சென்னைக்குத் துரத்தினேன்.. இவள்.. மாறாத மனரணத்தை வாங்கிக் கொண்டு திரும்பியிருக்கிறாள்..' என்று நினைத்துக் கொண்டாள்..

## 17

கொடுத்து வைத்தவளாக தான் இருக்க.. சுமித்ரா கொடுத்து வைக்காதவளாக ஆகிப்போய்விட்ட கொடுமையை நினைத்து மனம் வருந்தினாள் மாலதி..

"அண்ணி.. இவன் முகம் பார்க்க ஆரம்பித்து விட்டான் பாரேன்.."

சுமித்ரா தன் மடியில் இருந்த குழந்தையைக் கொஞ்சிக் கொண்டு இருந்தாள்.. அவளுடைய தனிமையை சுதர்சனத்தின் குழந்தை போக்கிக் கொண்டிருந்தான்.. அதை உணர்ந்த மாலதி.. சுமித்ரா அலுவலகத்தில் இருந்து வந்தவுடன் குழந்தையை அவள் கையில் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்வாள்..

சுதர்சனத்தின் மகனுக்கு பெயர் வைக்கும் உரிமையைக்கூட சுமித்ராவுக்குத்தான் கொடுத்தாள் மாலதி.. ஊர் கூடியிருந்த சபையில் குழந்தையின் பெயர் சூட்டும் விழா நாளின் போது..

"நீ இவனுக்குப் பெயர் வை சுமி.." என்றாள் மாலதி..

"நானா அண்ணி..? நீயும்.. அண்ணனும் சேர்ந்து குழந்தைக்கு பெயர் வையுங்க.. அதுதான் முறை.." சுமித்ரா விலக முயன்றாள்..

"ஊஹும்.. அவன் மேல் எங்களுக்கு இருக்கும் பாசத்தைவிட உனக்குத்தான் அதிகமாக இருக்கிறது.. நீயே பெயர் வை.."

சுமித்ரா யோசித்துவிட்டு..

"நரேந்திரன்.." என்று சொன்னாள்..

"ஃபென்டாஸ்டிக் நேம்.." சுதர்சனம் மகிழ்ந்து போய் பாராட்ட.. மாலதி, சுமித்ராவை இரக்கத்துடன் பார்த்தாள்..

'இவளால் விவேகானந்தனை மறக்கவே முடியாதா..?'

நரேந்திரன் என்பது சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர்.. அந்தப் பெயரை குழந்தைக்கு சுமித்ரா வைக்க வேண்டுமென்றால் அவள் மனதில் விவேகானந்தனின் நினைவு எப்படி வேரோடிப் போயிருக்க வேண்டும் என்பதை மாலதியால் புரிந்து கொள்ள முடிந்தது..

நரேந்திரன்.. முகம் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்த போது.. அலுவலகத்தில் தேவேந்திரன்.. சுமித்ராவின் முகம் பார்த்து சிரித்துப் பேச ஆரம்பித்தான்..

"என் அண்ணன் மகனுக்கு நாளைக்கு பெயர் சூட்டு விழா சார்.. நீங்கள் கண்டிப்பாக வர வேண்டும்..!" என்று சுமித்ரா அழைத்தவுடன்,

"அதனாலென்ன.. கண்டிப்பாய் வருகிறேன்.. சித்தப்பாவும் மாலதியும் போனில் அழைப்புச் சொல்லியிருக் காங்க.. நீங்க நேரடியாகவே இன்வைட் பண்ணுகிறீங்க.. வந்துவிட்டால் போச்சு..!" என்று உடனே ஒப்புக் கொண்டான் தேவேந்திரன்..

சொன்னது போல குறித்த நேரத்திற்கு வந்தான்.. குழந்தைக்கு பரிசாக ஒரு பவுன் தங்கச் சங்கிலியை சபையில் போட்டான்.. பெரியசாமிக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது..

"பெத்தது மூணும் பொண்ணுக.. மாலதி மூத்தவளாக போய்விட்டாள்.. ஆயிரம்தான் பிறந்தவீட்டுச் சீர்

இருந்தாலும்.. கூடப்பிறந்த பிறப்பு செய்கிற சீருக்கு தனி மதிப்பு இருக்கில்ல.. அதிலயும் தாய்மாமன் சீருன்னா சொல்லவா வேண்டும்..? என் மகளுக்கு அந்தக் குறையில்லாம.. என் அண்ணன் மகன் தாய்மாமன் சீர்செய்து விட்டாருல்ல.." சொல்லிச் சொல்லி மகிழ்ந்து போனார்..

சுமித்ரா குழந்தைக்கு 'நரேந்திரன்..' என்று பெயர் வைத்ததும் தேவேந்திரனின் முகம் பிரகாசமாகிவிட்டது..

அவள் தன்னை மனதில் நினைத்துக் கொண்டு குழந்தைக்கு பெயர் வைத்திருக்கிறாள் என்று நினைத்து விட்டான் தேவேந்திரன்..

'தேவேந்திரன்.. நரேந்திரன்.. என்னைப் பற்றிய நினைவு இவள் மனதில் இல்லாமலா குழந்தைக்கு என் பெயரைப் போல் பெயர் வைத்திருப்பாள்..?'

அடுத்து வந்த நாள்களில் சுமித்ராவின் இயல்பான ஒவ்வொரு பேச்சிற்கும் புதுப்புது அர்த்தங்களைக் கண்டு பிடிக்க ஆரம்பித்தான் தேவேந்திரன்..

"நான் உங்களுக்கு சொந்தக்காரன்தானே சுமித்ரா.." இருபொருள்படக் கேட்பான் தேவேந்திரன்..

"அதிலென்ன சார்.. உங்களுக்குச் சந்தேகம்..?" சுமித்ரா இதழ் விரித்துச் சிரிப்பாள்..

'இவளுக்கு நான் உரிமையானவன்.. எனக்கு இவள் சொந்தமானவள் என்பதை உறுதிபடுத்துகிறாள்..' தேவேந்திரன் நினைத்துக் கொள்வான்..

"நான் உங்களுக்கு என்ன முறையாகணும் சுமித்ரா..?"

"ஊம்.. என் அண்ணன்.. உங்கள் தங்கைக்கு ஹஸ்பெண்டுன்னா... நீங்கள் எனக்கு என்ன முறையாகணுமோ.. அந்த முறையாகணும்.."

தேவேந்திரனின் மனம் இந்த பதிலைக் கேட்டதும் சிறகடிக்க ஆரம்பித்துவிட்டது.. சுமித்ரா என்னவோ.. நான் உனக்கு

என்ன முறையாக வேண்டுமோ.. அந்த முறை ஆகவேண்டும் என்ற ரீதியில்தான் பதில் சொன்னாள்..

தேவேந்திரனோ.. உன் தங்கைக்கு என் அண்ணன் கணவனென்றால்.. நீ எனக்கு கணவன் என்ற முறையாக வேண்டும் என்று பொருள் கொண்டுவிட்டான்..

"நீங்க என்னை சார்னு கூப்பிடுவது எனக்கு என்னவோ போல் இருக்கிறது.." என்று ஒரு நாள் கூறினான் தேவேந்திரன்.. பதிலுக்கு அவளும்..

'நீங்கள் என்னை வா.. போன்னு கூப்பிடாமல் வாங்க.. போங்க என்று மரியாதை கொடுப்பது எனக்கும் என்னவோ போலிருக்கு..' என்று சொல்வாள் என்று எதிர்பார்த்தான் அவன்..

அவளோ வேறுவிதமாக பதில் கூறினாள்..

"இது ஆபீஸ் சார்.. இங்கே சொந்தங்களைக் காட்டிக் கொள்ளக்கூடாது.. ஆபீஸ் அட்மாஸ்பியர் மாறிவிடும்.."

'ஓ.. இவள் ஆபீஸ் என்பதால் அடக்கி வாசிக்கிறாள் போல..' அவன் அதற்கும் ஒரு அர்த்தத்தைக் கண்டு பிடித்தான்..

நரேந்திரனுக்கு ஆறு மாதமானபோது.. தேவேந்திரன் குழந்தையைப் பார்க்க.. கை நிறைய பொம்மைகளோடு சுதர்சனத்தின் வீட்டுக்கு வந்தான்..

"இவன்மேல் எனக்குத் தனி பிரியம் வந்துவிட்டது மாலதி.."

குழந்தையைக் கொஞ்சிக் கொண்டே சுமித்ராவைப் பார்த்தான் தேவேந்திரன்.. அவளோ வெள்ளையாக சிரித்தாள்..

'இவனுக்கு உண்மையிலேயே பிரியம் வந்திருப்பது குழந்தையின் மேலா.. இல்லை.. சுமித்ராவின் மேலா..'

மாலதி யோசனையுடன் தேவேந்திரனைப் பார்த்தாள்.

மாலதிக்கு சூட்சும புத்தி மிகவும் அதிகம்.. அவர்களது உறவினர் வட்டாரத்திலேயே மிகப் பெரிய உயரத்தில் இருக்கும் தேவேந்திரன்.. ஏதாவது திருமணம் போன்ற உறவினர் வீட்டு விழாக்களில் பார்க்கும்போது ஒப்புக்கு நலம் விசாரிப்பானே தவிர, அதிகப்படியான ஒட்டுதலை யார் மீதும் காட்டமாட்டான்.. மாலதியும் அதற்கு விதிவிலக்கில்லை..

அப்படிப்பட்டவனுக்கு இப்போது புதிதாக மாலதியின் மீது பாசம் பொங்கி வழிகிறது என்பதை மாலதி ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை..

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது மாலதிக்குத் தெரியாதா என்ன..?

தேவேந்திரன் வருவதை மாலதி மனதிற்குள் ஆதரித்தாள்.. நாத்தனாருக்கு உயர்ந்த இடத்தில் வாழ்க்கை கிடைப்பதில் அவளுக்கு பொறாமை எதுவும் இல்லை.. தேவேந்திரன் பணக்காரன் என்பதனாலும் அவள் அவனை சுமித்ராவிற்காக தேர்வு செய்யவில்லை..

தேவேந்திரன் சுமித்ராவை விரும்பினான்... அதை மாலதி தெளிவாக புரிந்துகொண்டு விட்டாள்.. தேவேந்திரனால் சுமித்ராவின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டு விடாதா என்று மாலதி ஏக்கப்பட்டாள்..

"உன் அண்ணனுக்கு உன்மேல் பாசம் அதிகம் போல.."

அடிக்கடி தேவேந்திரன் வீட்டிற்கு வருவதைக் கவனித்துவிட்டு சுதர்சனம், மாலதியிடம் வினவினான்..

"உங்களுக்கு உங்கள் தங்கையின் மேல் பாசம் இருப்பதைப்போல என் அண்ணனுக்கு என்மேல் பாசம் இருக்கக்கூடாதா..?"

"சுமித்ரா என் கூடப் பிறந்தவள்.."

"கூடப்பிறந்தால்தான் பாசம் வருமா..? ஒன்றுவிட்ட அண்ணனாக இருந்தால் பாசம் வராதா..?"

"இவர் ஒன்றுவிட்ட அண்ணன்கூட இல்லையே.. மூன்று விட்ட அண்ணனாச்சே.."

சுதர்சனம் விடாமல் வாதாட.. மாலதி புருவம் உயர்த்தினாள்..

"இப்ப என்னாங்கறீங்க..?"

"மாலு.. வீட்டில் நாம் மட்டுமில்லை.. சுமித்ராவும் இருக்கிறாள்.."

"அதற்கு என்ன..? எனக்கு அது தெரியாதா..?"

"வயதுப் பெண் இருக்கும் வீட்டில் அடிக்கடி உன் அண்ணன் வந்து போனால் நன்றாக இருக்குமா..? நான் என் நண்பர்களைக் கூட வீட்டிற்கு வர அனுமதித்தது இல்லை.."

சுதர்சனம் கடைப்பிடித்த கட்டுப்பாடுகளைப் பற்றி மாலதிக்கு தெரியாமல் இருக்குமா..? ஆனால்.. தேவேந்திரனின் விஷயத்தில் மாலதியின் எதிர்ப்பார்ப்பே வேறு ஆயிற்றே..

"அண்ணனிடம்தானே நம் சுமி பி.ஏ.வாக இருக்கிறாள்..?"

"அது ஆபீஸ்.. இது வீடு.. ஆபீஸின் பழக்கம் ஆபீஸோடு.. அது வீடுவரை வரக்கூடாது.."

"ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.."

"என்ன விஷயம்..?"

"நான் ஒன்றும் அண்ணனை வீட்டுக்கு வரச்சொல்லி கூப்பிடவில்லை.."

"சுமித்ரா கூப்பிட்டாள்னு சொல்லப் போகிறாயா..?"

"ராமா.. நான் ஏன் அப்படிச் சொல்லப் போகிறேன்..? நம் சுமி அப்படிப்பட்ட ஆளா..?"

"பின்னே.. வேறு என்னடி சொல்லப்போகிறாய்..?"

"நம் வீட்டுக்கு தேவா அண்ணன் தானாகத்தான் வருகிறார்.. அவர் அப்படித் தேவையில்லாமல் ஒரு வீட்டிற்குப்

போகக்கூடிய ஆளில்லை.."

"அதற்காக.. நாம வாயை மூடிக்கொண்டிருக்கலாமா.. ஊரில் நான்கு பேர் நான்கு விதமாய் பேசிவிட மாட்டங்களா..?"

"எனக்கும் அது தெரியும்.. தேவா அண்ணனுக்கும் அது தெரியாமல் இருக்காது.."

"தெரிந்தேதான் வருகிறான்னு நினைக்கிறாயா..?"

"ஊம்.."

சுதர்சனம்.. புருவங்கள் முடிச்சிட மனைவியை முறைத்தான்..

"மாலு.. இது பெரியவங்க இல்லாத வீடு.. ஆனால், அந்தக் குறை சுமிக்கு வந்துவிடாமல் நான் பொத்திப் பொத்தி அவளை இதுவரை பாதுகாத்து வந்திருக்கிறேன்.."

"இனியும் அந்தக் குறை வராது.. நான் அவளை என் கண்ணுக்குள் வைத்துப் பாதுகாப்பேன்.."

"இப்படிச் சொல்கிறவள்.. உன் அண்ணனிடம் ஜாடையாகச் சொல்லி இங்கே அவர் வருவதை தடுக்கலாமே.."

"நீங்கள் சொல்லித்தான் இதை நான் செய்யணுமா..? சொல்லாமலே இதைச் செய்ய எனக்குத் தெரியாதா..? காரணமாகத்தான் பேசாமல் இருக்கிறேன்.."

"என்ன காரணம்டி..?"

"அண்ணனுக்கு சுமித்ராவின் மீது நோக்கம் இருப்பது போல என் மனதுக்குப் படுகிறது.."

"மாலதி.."

"ம்ம்.. தேவேந்திரன் அண்ணன் நல்லவர்.. மோசமான பழக்கவழக்கம் எதுவும் இல்லாதவர்.. எனக்கு அண்ணன் முறை வேறு.."

"ஆனால்.. அவர் மிகப் பெரிய பணக்காரர் மாலதி அதை மறந்துவிட்டுப் பேசாதே.. இது பகல் கனவு.."

"அதெல்லாம்.. இது பலிக்கும் கனவுதான்.."

"உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகி விட முடியாது மாலு.."

"குருவிக்கு ஒன்றும் பருந்தின் மீது ஆசையில் லையே.. பருந்துதானே குருவி மீது ஆசைப்படுகிறது.. தன் மேல் குருவியை சவாரி செய்ய வைத்து.. பருந்து எவ்வளவு உயரத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாமே."

"தகுதிக்கு மீறி ஆசைப்படக்கூடாது மாலு.."

"நம் தகுதியே சுமித்ராதானே.. அவள் அழகுக்கும் அறிவுக்கும் தேவா அண்ணன் வீட்டில் மகாராணி போல வாழும் அதிர்ஷ்டம் அவளுக்கு தேடி வந்திருக்கிறது.."

"ஆனாலும் மாலதி.. இப்படிப் பெண்கூட மாப்பிள்ளையை பழகவிட்டு கல்யாணம் பண்ணிக் கொடுப்பதா.. நம் குடும்பத்தில் இது வழக்கமில்லை.."

"நீங்க கொஞ்சம் சும்மா இருக்கீங்களா.. அப்படி என்ன அவங்க இரண்டு பேரும் பழகுவதை நீங்க கண்டு விட்டிங்க.. அண்ணன் வந்தால்.. ஹால் சோபாவில் உட்கார்ந்திருக்கிறார்.. சுமி.. தரையில் உட்கார்ந்து நரேனுடன் விளையாடிக் கொண்டிருக்கிறாள்.. இதுதான் பழகுவதா..?"

சுதர்சனம் அப்போதும் சமாதானமாகாமல் தாடையைத் தடவினான்..

19

மாலதி.. சொல்வதில் சுதர்சனத்திற்கு மகிழ்ச்சிதான்.. சுமித்ராவுக்கு வளமான வாழ்க்கை அமைவதில் அவனுக்கு விருப்பமில்லாமல் போய் விடுமா என்ன..?

ஆனால்.. பெண்ணை விரும்புகிறவன்.. முறைப்படி பெற்றவர்களுடன் பெண் கேட்டு வருவதை விட்டுவிட்டு..

இப்படி வீட்டுக்கு அடிக்கடி வருவதில் அவனுக்கு விருப்ப மில்லை..

இந்தச் சூழ்நிலையில்.. நரேந்திரனுக்கு முதல் பிறந்த நாள் வந்தது.. இந்த முறையும் சுமித்ராவே தேவேந்திரனுக்கு அழைப்பு விடுத்தாள்.. அதுவும்.. சும்மாவும் இல்லாமல்..

"நினைவிருக்கிறதா சார்.. நாளைக்கு நம் நரேந்திரனுக்குப் பிறந்தநாள்.." என்று சொல்லி வைத்தாள்.

அவ்வளவுதான்.. தேவேந்திரனின் விழிகள் மின்ன ஆரம்பித்தன.. மாலதி.. தேவேந்திரனின் தங்கை என்ற உறவுமுறையில் சுமித்ரா சொல்லிவைக்க.. அவன் அதை மறந்து.. சுமித்ராவிற்கும் அவனுக்கும் சொந்தம் என்ற முறையில் எடுத்துக் கொண்டான்..

'நம் நரேந்திரனா..'

மறுநாள் மாலையில்.. முதல் விருந்தினராக தேவேந்திரன் வருகை தந்தான்.. விழா நாளுக்காக.. பிரத்தியேகமாய் அலங்காரம் செய்து கொண்டிருந்த சுமித்ராவின் மீது அவன் விழிகள் பதிந்து மீண்டு கொண்டிருந்தன.. அதைக் கவனித்துக் கொண்டிருந்த சுதர்சனம் சங்கடப்பட்டான்..

"என்ன மாலு.. இப்படி சுமியை பார்த்துவைக்கிறாரு.."

"பொறுமையை கடைபிடிங்க.."

"நீ என்னிடம் அடிதான் வாங்கப் போகிற.."

"நான்தான் சுமி கூடவே இருக்கிறேனே.."

"இது எங்கே போய் முடியும்னே தெரியலை.."

"நன்றாகத்தான் முடியும்.."

"இப்படியே சொல்லிக்கொண்டிரு.. இதில் கொஞ்சம் கூட எனக்குப் பிடித்தமில்லை.."

விட்டால் சுதர்சனம்.. முடிவேயில்லாமல் இதைப் பேசிக் கொண்டிருப்பானென்று தோன்ற.. மாலதி.. மற்றவர்களைக் கவனிக்கும் சாக்கில் ஓடிவிட்டாள்..

எல்லோரும் போன பின்னால்.. கடைசி ஆளாக சுமித்ராவை பிரிய மனமில்லாமல் விடைபெற்றான் தேவேந்திரன்..

"சுமி.. போய்விட்டு வரவா..?"

"ம்ம்ம். நரேன்.. மாமாவுக்கு டாட்டா சொல்லு.."

தேவேந்திரன்.. குழந்தையைக் கொஞ்சும் சாக்கில்.. சுமித்ராவின் முகத்திற்கு மிக அருகாமையில்.. தன் முகத்தைக் கொண்டு சென்றான்.. அவனது அடர்ந்த மீசையின் முடிகள் சுமித்ராவின் கைமீது பட்டு விலக.. சுமித்ராவின் மனம்.. விவேகானந்தனிடம் தாவியது..

'அவன் முத்தமிட்டபோது.. இப்படித்தானே மீசையின் முடி உராய்ந்தது..' அவள் மனதின் ரணம் கிளறிவிடப்பட்டு விட்டது..

அதை அறியாதவனாக சுமித்ராவின் அருகாமையில் உணர்ந்த பூவாசத்துடன் கூடிய இதமான நறுமணத்தை நுகர்ந்தவனாய் தேவேந்திரன் கிறக்கத்துடன் அவளைப் பார்த்தான்..

"யூ லுக் ஸோ பியூட்டிஃபுல் டுடே.."

"தேங்க்யூ.."

"ஐ லைக் யூ வெரிமச்.."

"தேங்க்ஸ் எகைன்.."

தேவேந்திரன்.. மறைமுகமாய் தன் காதலைச் சொல்லிவிட.. அதை உணராத சுமித்ரா.. இயல்பாக புன்னகைத்து கை அசைத்தாள்.. பதிலுக்கு கையசைத்தபடி காரில் ஏறி அமர்ந்தான் தேவேந்திரன்.

"பார்த்தீங்களா.." என்றாள் மாலதி..

"அதைத்தானே.. உன் அண்ணன் வந்ததில் இருந்து செய்து கொண்டிருக்கிறேன்.. இதற்கு முன்னால் இப்படி என் தங்கையை நான் காவல் காத்ததில்லை.." அலுத்துக் கொண்டான் சுதர்சனம்..

"கொஞ்சம் புலம்புவதை நிறுத்துகிறீங்களா..?"

"உன் அண்ணனை நிறுத்தச் சொல்.. நான் நிறுத்து கிறேன்.."

"உங்களிடம் போய் பேச வந்தேனே.."

"பேசாதே.. போய்விடு.. நானே கடுப்பில் இருக்கிறேன்.."

சுதர்சனம் கொதிகலனாக இருக்க.. மாலதி வாயை மூடிக்கொண்டாள்..

அன்றைய நாளுக்குப் பின்னால்.. தேவேந்திரன் சுமித்ராவிடம் அதிகமான நெருக்கத்தை அலுவலகத்தில் காட்டினான்..

அவனுக்குத் தெரியும்.. வீட்டில் அனுமதி கேட்டால் சுதர்சனம் கட்டாயம் சுமித்ராவை தேவேந்திரனுடன் வெளியே அனுப்பி வைக்கமாட்டான் என்பது..

அதனால் அலுவலகத்தில் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டு சுமித்ராவை வெளியே அழைத்துக் கொண்டு போக ஆரம்பித்தான்..

"சுமி.."

அவன் இப்போதெல்லாம் சுமித்ராவை இப்படித்தான் அழைக்கிறான்.. ஆனால், சுமித்ரா தன் அழைப்பு முறையை மாற்றிக்கொள்ளவில்லை..

"யெஸ் சார்.." என்றபடி அவன் முன்னால் வந்து நின்றாள்..

"இன்றைக்கு மதியம் நாம் ஒரு பிஸினஸ் லன்ச்சை அட்டெண்ட் பண்ண வேண்டும்.."

"நானுமா சார்.."

சுமித்ரா தயங்கினாள்.. அதை கண்டுகொள்ளாதவன் போல தேவேந்திரன் கண்டிப்புடன் கூறினான்..

"யெஸ்.. என் பி.ஏ. என்ற முறையில் நீங்களும் வந்தாக வேண்டும்.."

அவர்கள் போனது.. பெரிய ஸ்டார் ஹோட்டலுக்கு.. அவர்களுக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருந்த மேஜையில் அமர்ந்ததும் சுமித்ரா சுற்றுமுற்றும் பார்த்தாள்..

"என்ன பார்க்கிறாய்..?" தேவேந்திரன் இயல்பாக ஒருமைக்குத் தாவினான்..

"பிஸினஸ் லன்ச்னு சொன்னீங்க.. யாரையும் காணோமே.."

அவள் அறியாதவளாய் வினவினாள்..

"ஏன் லேட்டுன்னு தெரியலையே.. கொஞ்சம் பொறு.. அவங்களிடமே கேட்டுவிடுகிறேன்.." செல்போனை கையில் எடுத்தான் தேவேந்திரன்..

"ஓ.. அவர்களால் வர முடியலையாம்.. ஓகே.. நாம் லன்ச் சாப்பிடலாம்.. சொல்லு.. உனக்கு என்னென்ன பிடிக்கும்..?"

சுமித்ராவினால் ஒன்றும் மறுப்புச் சொல்ல முடிய வில்லை.. அன்று தேவேந்திரன் அவளிடம் நிறையப் பேசினான்.. அவன் பிறந்ததில் இருந்து வெளிநாட்டில் படிப்பை முடித்துவிட்டு வந்து சொந்தமாய் தொழில் தொடங்க ஆரம்பித்தது வரை எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்..

ஒரு நண்பனைப் போல அவன் பேசியதால்.. சுமித்ராவும் அவன் பேச்சைக் கவனித்துக் கேட்டாள்.. அவள் அக்கறையாய் அவன் சொல்லியதைக் கேட்டுக் கொண்டவிதம் அவனுக்குப் பிடித்திருந்தது.. அவளிடம் அவன் மயங்கினான்..

## 20

சுமித்ராவின் மனதில் விவேகானந்தன் மட்டுமே இருக்க, அதை உணராத தேவேந்திரன்.. சுமித்ராவை விரும்பினான்.. புதுக் கார் வாங்கியிருப்பதற்காக பூஜை செய்ய வேண்டும் என்று ஒரு நாள் அவளை கோயிலுக்கு அழைத்துச் சென்றான்.. கப்பலின் ஏற்றுமதி விவரங்களை

சுமித்ராவும் அறிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லி ஒருநாள் அவளை கடற்கரைக்கு அழைத்துச் சென்றான்..

ஒரு பக்கம் முதலாளி.. இன்னொரு பக்கம் அண்ணியின் அண்ணன்.. இரு பக்கமும் வலுவான பந்தம் இருந்ததால், சுமித்ரா கேள்வி கேட்காமல் அவனுடன் சென்றாள்..

"சுமித்ரா.."

கடல் அலைகள் கால் நனைக்க நின்றபடி தேவேந்திரன் அவளை அழைத்தான்.. சுமித்ராவின் மனம் அங்கு இல்லை.. கடைசியாய் விவேகானந்தனை சந்தித்த கடற்கரைச் சந்திப்பிற்கு அவள் மனம் ஓடிவிட்டது.. விவேகானந்தனின் முகம் மனதில் தோன்றியது..

'மைதிலியின் காதல்தான் உன் கண்ணுக்குத் தெரிகிறதா.. என் காதல் உன் கண்ணிற்குத் தெரிய வில்லையா..?' என்று கேட்டது..

'ஒன்றுமேயில்லையா.. நமக்குள் ஒன்றுமே யில்லையா..' என்று சினந்தது..

'என்னுடன் வாழாத வாழ்க்கையை வேறு யாருடன் வாழப்போகிறாய்..?' என்று முறைத்தது..

சுமித்ரா அந்த முகத்தின் கோபத்தை ரசித்தாள்.. கண்திறந்து நின்றால்.. எங்கே அவன் முகம் மறைந்து விடுமோ என்ற கவலையுடன் கண்மூடிக் கொண்டாள்..

அவள் மெய்மறந்து நின்ற வேளையில்.. ஒரு கரம் அவளைப் பிடித்து இழுத்து கரையில் நிறுத்தியது..

'இது.. இந்தத் தொடுகை.. விவேகானந்தனுடையது அல்லவா..'

சுமித்ரா பதறிக் கண் திறந்தாள்.. சுற்றுமுற்றும் பார்வையால் தேடினாள்.. அருகினில் தேவேந்திரன்தான் நின்றுகொண்டிருந்தான்.. கரையில் அவர்கள் நின்று கொண்டிருந்த இடம் வரை அலையடித்த நீர் அடையாளம் தெரிந்தது.. "என்ன சுமி.. இப்படிப் பண்ணிவிட்ட.. நீ

யோசனை செய்ய கடல்தான் கிடைத்ததா..? கரையோரமாக நின்று யோசிக்கக்கூடாதா..?"

தேவேந்திரன் படபடத்தான்.. சுமித்ரா புரியாமல் அவனைப் பார்த்தாள்..

"ஏன்.. என்ன ஆச்சு..?"

"என்ன ஆச்சா..? நல்லா கேட்டாய் போ.. நீபாட்டுக்கு கடலுக்குப் பக்கத்தில் தண்ணீருக்குள் நின்று கொண்டு கண்ணை மூடிக் கொண்டாய்.. ஒரு பெரிய அலை வந்துவிட்டது.."

"அப்படியா..?"

மிகச் சாதாரணமாய்க் கேட்டவளை விசித்திரமாகப் பார்த்தான் தேவேந்திரன்.. சரியான நேரத்தில் கரையில் ஒதுங்கிவிட்டாள்.. இல்லாவிட்டால் என்னவாகியிருக்கும் என்பதை அறியாத முட்டாளில்லையே இவள்..? இவளுக்கு என்னவானது..?

"என்ன சுமி.. சாதாரணமாக கேட்டுவிட்ட..?"

சுமி பதில் சொல்லாமல் தேவேந்திரனின் முகத்தைப் பார்த்தாள்.. அவன் முகத்தில் ஓடும் சிந்தனை ரேகைகளை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.. பேச்சை மாற்ற விரும்பியவளாய்..

"நீங்கள்தான் என்னை கரைக்கு இழுத்து வந்தீர்களா..?" என்று வினவினாள்..

தேவேந்திரனின் முகம் ஏமாற்றத்தை பிரதிபலித் ததைக் கண்டதும் அவள் நெஞ்சம் படபடத்தது..

'இவனில்லை.. அப்படியானால்.. அப்படியானால்.. அது என்னுடைய விவேக்தான்.. அவர் எங்கே..?'

சுமித்ராவின் பார்வை ஆவலுடன் தேடியது.. அவன் முகம் எங்கும் தென்படவில்லை..

'என் உள்ளுணர்வு பொய் சொல்லாது.. அது விவேக்கேதான்..'

சுமித்ராவிற்கு அழுகை வந்தது.. தேவேந்திரனின் முன்னால் அழ விரும்பாதவளாக இமைகளை சிமிட்டித் தன்னை சரிப்படுத்திக் கொண்டாள்..

"நான் உன் பக்கத்தில் வருவதற்குள் வேறு ஒருத்தர் உன் கையைப் பிடித்து இழுத்துக் கரையில் நிறுத்தி விட்டார்.."

'அவர் எங்கே..?' என்று கேட்க நினைத்தவள்.. கேட்காமல் வாய் மூடிக்கொண்டாள்..

கேட்டுத்தான் என்ன ஆகப்போகிறது..? விவேகானந்தன் ஒன்றும் அவளைக் கைவிடவில்லையே.. அவள்தானே விவேகானந்தனை விட்டு விட்டு ஓடிவந்தாள்.. இப்போது போய் அவனைப் பார்க்க மனம் அலைபாய்ந்து ஆகப் போவதென்ன..?

அவள் ஒன்றும் பேசாமல் தேவேந்திரனின் அருகே இணைந்து மெதுவாக கடற்கரையின் மணல்பரப்பில் நடந்தாள்.. தேவேந்திரன் பேசிக்கொண்டே வந்தான்.. இயந்திர கதியில் 'ஊம்..' கொட்டியவாறு காரை நெருங்கினாள்.. காருக்குள் ஏறப்போன கடைசி வினாடியில் அவளுக்கு அது உறைத்தது..

'யாரோ என்னைப் பார்க்கிறது போல இருக்கிறதே..'

அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.. பார்த்த விழி அப்படியே நிலைத்து நிற்க.. அவள் உறைந்து நின்றாள்.. சற்றுத் தூரத்தில் படகின் மேல் சாய்ந்து நின்று.. அவளைப் பார்த்துக் கொண்டிருந்தது விவேகானந்தன் தான்..

'அவன்தானா.. அவனேதானா..'

கடைசியில் சுமித்ராவின் உள்ளுணர்வு அவளை ஏமாற்றவில்லை.. அவள் உணர்ந்த தொடுகை உணர்வு.. விவேகானந்தனுடையதுதான்..

'ஏன் என்னைக் காப்பாற்றினாய்.. நிம்மதியாய் இந்தக் கடலின் மடியில் தஞ்சம் புகுந்திருப்பேனே.. ஏன்.. என்னைக் கரை சேர்த்தாய்..? இந்தக் கடலில் இருந்து என்னை கரை

சேர்த்துவிட்டால் போதுமா..? துன்பப் பெருங்கடலில் இருந்து கரை சேர்க்க வேண்டாமா..?'

அவள் அசைவற்று நிற்க.. தேவேந்திரன் அவளது பார்வையை உணர்ந்தவனாக... விவேகானந்தனைப் பார்த்தான்..

"அவர்தான் உன்னைக் கரைக்கு இழுத்துவந்து விட்டார்.. அவரை உனக்குத் தெரியுமா..?"

சுமித்ரா பதில் சொல்லாமல்.. மீண்டும் படகைப் பார்த்தாள்.. இப்போது அவன் அங்கே இல்லை..

'எங்கே அவன்..?'

சுமித்ராவின் விழிகள் பரபரப்பாய் அவனைத் தேடி கடற்கரை முழுவதையும் துழாவின.. அவளது அந்தப் பரபரப்பை கண்டுகொண்ட தேவேந்திரனின் முகத்தில் சிந்தனை வந்தது..

## 21

ஆயிரமாவது முறையாக சுமித்ராவைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டான் தேவேந்திரன்..

"அவரை உனக்குத் தெரியுமா சுமித்ரா..?"

சுமித்ராவிடமிருந்து இந்த கேள்விக்கு பதிலே வரவில்லை.. அவள் 'ஆமாம்' என்று சொன்னால்.. யார்.. எவர்.. என்று மேலே விசாரணையைத் தொடரலாம்.. 'இல்லை' யென்று சொன்னால் நிம்மதியாக இருக்கலாம்.. இப்படி இரண்டையும் சொல்லாமல் அவள் மௌனமாக இருந்தது தான் தேவேந்திரனுக்கு பெரும் துன்பமாக இருந்தது..

அன்று முழுவதும்.. பலவிதமாக கேட்டுப்பார்த்தும் அவளிடமிருந்து பதில் வராமல் போனதில் அவனுக்கு ஆத்திரம் வந்துவிட்டது..

"நான் கிளம்புகிறேன் சார்.." மாலையில் அவள் கிளம்ப யத்தனித்தபோது.. தேவேந்திரன் அவளை உறுத்துப் பார்த்தான்..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?' அவள் புரியாமல் பார்த்தாள்..

"கடைசி வரை என் கேள்விக்கு நீ பதிலே சொல்ல வேயில்லை.."

"எந்தக் கேள்வியைச் சொல்கிறீங்க சார்..?"

"தெரியாதா..? இல்லை.. தெரியாதவள் போல் நடிக்கிறாயா..?"

"நான் ஏன் உங்களிடம் நடிக்க வேண்டும்..? எனக்கு அதற்கான அவசியமே இல்லையே.."

"அப்படியானால் பதில் சொல்லு.."

"என்ன பதிலைச் சொல்ல..? எதற்குப் பதிலைச் சொல்ல..?"

"எவன்.. அவன்..?"

சுமித்ராவின் கண் சிவந்துவிட்டது.. தேவேந்திரன், விவேகானந்தனைத்தான் குறிப்பிடுகிறான் என்பதை உணர்ந்து கொண்டவளாய் அவள் கோபத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்..

"சார்.. நான் உங்களின் செக்ரெட்டரி.. நாம் கடற்கரையில் பார்த்தவர் யார் என்ற விவரம் எந்த வகையில் இந்த ஆபீஸிற்குத் தேவை என்பதைச் சொல்லுங்கள்.. நான் அதற்கு பதிலைச் சொல்லுகிறேன்.."

'என் சொந்த விஷயத்தில் மூக்கை நுழைக்காதே..' என்ற மறைமுகமான சுமித்ராவின் வார்த்தைகளைச் சட்டென்று புரிந்து கொண்டு விட்டான் தேவேந்திரன்..

அவன் முகம் மாறியது.. அறையை விட்டு அவன் அனுமதியை எதிர்பார்க்காமல் வெளியேறப் போன சுமித்ராவை அவன் குரல் தடுத்து நிறுத்தியது..

"நில்.."

சுமித்ரா நின்றாள்.. தேவேந்திரன் அவனுடைய சுழல்நாற்காலியை விட்டு எழுந்து அவளருகில் சென்றான்.

"ஓகே.. நான் அவன் யாரென்று கேட்கவில்லை.. ஆனால், நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போ.."

"சொல்லுங்கள்.."

"ஐ லவ் யூ சுமி.."

"வாட்..?"

சுமித்ரா அதிர்ந்து நிமிர்ந்தாள்.. அவளுடைய விவேகானந்தன் அவளைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளை வேறொருவன் சொல்வதா..? அவள் அதை காதுகொடுத்துக் கேட்பதா..?

"ப்ளீஸ் சார்.. என்னிடம் இதுபோல் பேசாதீங்க.."

"ஏன்.. பேசினால் என்ன..? நான் உன்னைக் காதலிக்கிறேன்.. உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்.. இது உனக்கும் தெரியும்தானே..?"

"எனக்குத் தெரியுமா..? இது என்ன பிதற்றல்..?"

"பிதற்றுகிறேனா..? நானா..? ஏன் சொல்ல மாட்டாய்..? என்னைப் பற்றிய நினைவில்தானே உன் அண்ணனின் குழந்தைக்கு என் பெயரைப் போலவே நரேந்திரன்னு பெயர் வைத்தாய்..?"

'அடக்கடவுளே..' சுமித்ராவிற்கு வியர்த்துவிட்டது..

தேவேந்திரன்.. நரேந்திரன்.. இரண்டு பெயர் களுக்கும் பொதுவாக இந்திரன் என்ற பெயர் வருவதை இப்போதுதான் உணர்ந்தாள் அவள்..

'நான் என் விவேகானந்தனை நினைத்தல்லவா இந்தப் பெயரை வைத்தேன்..'

அதை அவனிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் அவள் தவிக்க.. தேவேந்திரனோ அவள் வெட்கப் படுகிறாள் என்ற நினைவில் புன்னகை

பூத்தான்..

"சரி.. சரி.. சங்கடப்பட்டுக் கொள்ளாதே.. இப்போது என்ன ஆகிவிட்டது..? என் நினைவை நீ மனதில் மறைத்து வைத்திருந்ததை நான் கண்டுபிடித்துவிட்டேன்.. அவ்வளவுதானே.. யார் கண்டுபிடித்தது..? நான்தானே கண்டுபிடித்தேன்.. நமக்குள் எதற்கு இந்த கண்ணாமூச்சி விளையாட்டு.. ஐ லவ் யு ஸோமச் சுமி.. உன்னை என் உயிராய் நினைக்கிறேன் கண்ணம்மா.."

அதைக் கேட்ட சுமித்ராவிற்கு மயக்கமே வந்து விட்டது.. அதை உணராதவனாய் தேவேந்திரன் தொடர்ந்து பேசினான்..

"உன்னைப் பார்த்த முதல் நாளே நீ என்னை இம்ப்ரஸ் பண்ணிவிட்டாய் சுமித்ரா.. உன்னுடன் பழகப் பழக எப்படியென்றே தெரியவில்லை.. என் மனதில் நீ இடம் பிடித்துவிட்டாய்.. உன்னிடம் என் மனதைச் சொல்ல நேரம் பார்த்துக் கொண்டிருந்தபோது.. நீ உன் அண்ணனின் குழந்தைக்கு என் பெயரைப் போலப் பெயரை வைத்து உன் மனதை எனக்கு உணர்த்திவிட்டாய்.. உடனே உன்னை என் மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்றுதான் நினைத்தேன்.. ஆனால்.. கல்யாணத்திற்கு முன்னால் காதலிப்பதில் ஒரு சுகம் இருக்கிறது.. அதை இழக்க மனமில்லாமல்.. நம் கல்யாணத்தை தள்ளிப் போட்டுக் கொண்டு இருக்கிறேன்.."

அந்த நேரம் பார்த்து அக்கவுண்டன்ட் உள்ளே வர.. சுமித்ரா தப்பித்தோம் பிழைத்தோமென்று ஓட்டம் பிடித்து விட்டாள்..

'ம்ஹும்.. பூஜை வேளை கரடி போல இந்த ஆள் வந்து நுழைந்து என் காதலை.. இன்னும் அவளுக்குச் சொல்லவிடாமல் கெடுத்தானே..'

தேவேந்திரனின் கோபம் அக்கவுண்டன்டின் மீது பாய்ந்தது.. அவனுடைய கோபத்தின் காரணம் புரியாமல் அவர் விழித்துக் கொண்டிருந்தார்..

எப்போதும் வீட்டுக்கு வந்தவுடன் நரேந்திரனைத் தூக்கிக் கொஞ்சும் சுமித்ரா.. அன்று குழந்தையையும் கவனிக்காமல் உடையை மாற்றிக் கொள்ளவும் செய்யாமல் பிரமைபிடித்தவள் போல அறைக்குள் சென்று அடைந்து கொண்டதைக் கவனித்த மாலதியின் புருவங்கள் சுருங்கின..

'என்னவாக இருக்கும்..?' என்ற யோசனையுடன் காபியைக் கலந்தவள்.. சுமித்ராவின் அறைக்கதவைத் தட்டினாள்..

"சுமி.. சுமி..."

கதவைத் திறந்த சுமித்ராவின் முகம் கலங்கிச் சிவந்திருந்தது.. மாலதியின் மனம் துணுக்குற்றது.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் காபியை அவள் கையில் கொடுக்கும் சாக்கில் அறைக்குள் புகுந்து சுவாதீனமாய் சுமித்ராவின் கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.. சுமித்ரா.. காபி தம்ளரை இறுக்கிப் பிடித்தபடி காபிக்குள் தன் தொலைந்துபோன கடந்த காலத்தை தேடுபவள் போல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

## 22

சுமித்ராவின் பார்வையைக் கண்டு மாலதி கவலையானாள்.. 'கொஞ்ச நாள்களாகத்தானே இவள் சிரித்துக் கொண்டிருக்கிறாள்.. இப்போது அந்தச் சிரிப்பு தொலைந்து போய் இப்படி விழித்துக்கொண்டு உட்கார்ந் திருக்கிறாளே.. என்ன நடந்திருக்கும்..?

"சுமி.." மாலதி மெல்ல அழைத்தாள்..

"....." சுமித்ராவிடம் அசைவே இல்லை..

"சுமி.." மாலதி பலமான குரலில் அதட்டினாள்..

"என்.. என்ன.. அண்ணி.." சுமித்ரா உடல் தூக்கிப் போட வினவினாள்..

"என்ன ஆச்சு..?"

"அண்ணி.."

"உனக்கு என்ன ஆச்சுன்னு கேட்கிறேன்.."

"ஒண்.. ஒண்ணும் இல்லையே.."

"உனக்கு பொய் சொல்ல வராது சுமித்ரா.."

சுமித்ரா இப்போது கண்ணீர்விட ஆரம்பித்தாள்.. மாலதி.. அவள் கையைப் பற்றிக் கொண்டு சமாதானம் செய்வது போல் தட்டிக் கொடுத்தாள்..

"முதலில் காபியைக் குடி.."

சுமித்ரா காபியைக் குடித்தவுடன் காலி தம்பளரை வாங்கி வைத்துவிட்டு.. தளர்நடை நடந்து வந்து சுமித்ராவின் கால்களைக் கட்டிக் கொண்ட குழந்தையைக் காட்டினாள்.

"பாரு.. நீ வந்தவுடனேயே இவனைத் தூக்கிக் கொள்வாய்.. அதை இன்றைக்கு நீ மறந்துவிட்டாய்.. இவன் மறந்தானா..? உன்னைத்தேடி வந்துவிட்டான்.. இவன் குழந்தை சுமி.. இவனை நீ புறக்கணிப்பதை இவன் அறிய மாட்டான்.."

சுமித்ரா அவசரமாய் குனிந்து குழந்தையைத் தூக்கி மடியில் உட்கார வைத்துக் கொண்டாள்..

"இப்போது சொல்லு சுமி.. பிள்ளையைக் கூட மறக்கடிக்கிற அளவுக்கு உனக்கு வந்திருக்கும் பிரச்னை தான் என்ன..?"

"அண்ணி.."

"நீ தனி இல்லை சுமித்ரா.. உனக்காக உன் அண்ணனும் நானும் நரேந்திரனும் இருக்கிறோம்.. எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லு.. நீயாக மனதில் போட்டு உழப்பிக் கொண்டிருக்காதே.."

சுமித்ரா.. குழந்தையின் விரல்களைப் பிடித்து தன் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.. மனபாரம் கொஞ்சம் இறங்குவதாக உணர்ந்தாள்.. பின் மெல்லக் கேட்டாள்..

"அண்ணன் எங்கேண்ணி..?"

"வெளியே போயிருக்கிறார்.. வர நேரமாகும்.. நீ பேச நினைப்பதை பேசிமுடி.."

"இன்றைக்கு விவேகானந்தனைப் பார்த்தேன்.."

சுமித்ரா தலைநிமிராமல் சொல்ல... மாலதி அதிர்ந்தாள்... மைதிலியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவன் தூத்துக்குடிக்கு ஏன் வந்தான்..?

"எப்போது பார்த்தாய்..? எங்கே பார்த்தாய்..?"

"ஈவினிங் டயத்தில் பீச்சில் பார்த்தேன்.. நான் ஏதோ யோசனையாய் கடலுக்கு ரொம்பப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன்.. பெரிய அலை வந்து என் மேல் விழப் போனபோது விவேகானந்தன்தான் என்னைக் கரைக்கு இழுத்தார்.."

"ஓ.. நீ ஆபீஸிற்குத்தானே போனாய்.. கடற்கரையில் உனக்கு என்ன வேலை..?"

"இதை உன் அண்ணனிடம் கேளு அண்ணி.. அவர்தான் எக்ஸ்போர்ட் விஷயமாய் பேசணும்னு சொல்லி ஹார்பருக்கு என்னையும் கூட அழைத்துப் போனார்.."

"ஓ.. அண்ணனுடன் போனாயா..?"

மாலதி உடனே சமாதானமாகி விட்டாள்.. அவசரமாக வேறு ஒன்று நினைவுக்கு வந்தவளாக..

"அண்ணன் விவேகானந்தனைப் பார்த்தாரா..?" என்று வினவினாள்..

"பார்த்தார்.."

"அடக்கடவுளே.. யாரு.. எவருன்னு கேட்டுத் தொலைத்தாரா..?"

"கேட்டார்.."

"நீ என்ன சொன்னாய்..?"

"ஒன்றுமே சொல்லவில்லை.."

"நல்ல காரியம் செய்தாய்.."

"ம்ச்ச்.. இன்றைக்கு எல்லாமே ஏடாகூடமாக நடந்து தொலைக்கிறது அண்ணி.. திரும்பவும் பார்க்கவே கூடாதுன்னு நினைத்துக் கொண்டிருந்த விவேகானந்தனை பார்த்து வைத்தேன்.."

"போகுதுவிடு.. அவரைத்தான் யாருன்னு தேவேந்திர அண்ணன் தெரிந்து கொள்ளவில்லையே.."

"சொல்லியிருக்கணும் அண்ணி.. அவர் யாருன்னு கேட்டவுடனேயே விவேக்கைப் பற்றி நான் சொல்லி யிருக்கணும்.. சொல்லியிருந்தால் உன் அண்ணன் இப்படிப் பேசியிருக்க மாட்டாரு.. நான் தப்பு செய்து விட்டேன் அண்ணி.. மைதிலியின் கணவரை நான் காதலர்னு அடையாளம் காட்டக்கூடாதுன்னு நினைத்தேன்.. அதுவே எனக்கு வினையாக போய்விட்டது.."

"மைதிலியின் கணவனா..? அது உனக்கு எப்படித் தெரியும்..?"

தூக்கிவாரிப் போட்டவளாக மாலதி கேட்க.. சுமித்ரா மௌனமாக அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.. அந்த விழிகளில் தெரிந்த சோகத்தைக் கண்ட மாலதியின் மனம் பதறியது..

"தெரியும் அண்ணி.. எனக்கு எல்லாம் தெரியும்.. வீட்டுக்கு வந்த பத்திரிகையைத்தான் உன்னால் மறைத்து வைக்க முடிந்தது.. என்னைப் புண்படுத்த விவேகானந்தன் எனக்குப் பத்திரிகை அனுப்பி வைப்பதை தடுத்து நிறுத்த உன்னால் முடிந்ததா..?"

"சுமித்ரா.."

"ஆமாம் அண்ணி.. விவேகானந்தன் எனக்கு கல்யாண இன்விடேஷனை அனுப்பியிருந்தார்.. கூடவே ஒரு கடிதமும் எழுதியிருந்தார்.."

"என்ன எழுதியிருந்தான்..?"

"மைதிலிக்கு என்னை தாரை வார்த்துக் கொடுக்க நீ தயாராகி விட்டபோதும் என் மனதில் கடைசியாக ஒரு துளி நம்பிக்கை உன்மீது மீதமிருக்கிறது.. கல்யாணம் நடக்கும் போது அந்தக் கடைசி வினாடியில்கூட உன் மனம் மாறிவிட்டால் உடனே எனக்கு போன் பண்ணு மாலையைக் கழட்டி எறிந்துவிட்டு உன்னைத் தேடி வந்து விடுகிறேன்'னு எழுதியிருந்தார்.."

"சுமி.."

மாலதிக்கு பேச நா எழும்பவில்லை..

'என்ன மாதிரியான காதல் இது.. நீ வேண்டாமென்று உதறிவிட்டு வந்த காதலியிடம்.. கடைசி வினாடி வரை மனம் திரும்பச் சொல்லிக் கெஞ்சிக் கொண்டே மணமேடை ஏறியிருக்கிறானே.. இவனுடைய காதலை கை நழுவவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியிருக் கிறாளே.. அதற்கு இவள் போன ஜென்மத்தில் பாவம் செய்திருக்க வேண்டும்..'

நடந்ததைச் சொல்லும்போதே நெஞ்சம் வெடித்து விடும்போல விம்மும் குரலில் சொல்லிக் கொண்டிருந்த சுமித்ராவை இரக்கத்துடன் பார்த்தாள் மாலதி..

## 23

"உனக்குக் கஷ்டமாக இல்லையா சுமித்ரா.."

இரக்கத்துடன் கேட்ட மாலதியை விழியுயர்த்திப் பார்த்த சுமித்ராவின் பார்வை.. அடிபட்டு குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கும் பறவையின் பார்வையாக இருக்க.. மாலதி உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனித்தாள்..

"ஆமாம்.. கஷ்டமாக இருந்ததுன்னு வெறும் வார்த்தைகளில் சொல்கிற கஷ்டமில்லை அண்ணி.. என் கஷ்டம்.. அது உயிரைக் குடிக்கும் வேதனை.. மனதை ரம்பம்

போட்டு அறுக்கும் வலி.. அதைத் தாங்கிக் கொள்ளச் சக்தியில்லாமல் அன்றைக்கே நான் செத்துப் போயிருப்பேன்.."

"சுமித்ரா.."

"பயப்படாதே அண்ணி.. என்னை இந்த உலகத்தில் இழுத்துப் பிடிக்க.. இந்தக் குழந்தை வந்தான்.. என் மன வேதனையை இவனுடைய பிஞ்சு விரல்களால் குறைத்து விட்டான்.."

"போனதை விடும்மா.. இனி நடக்கப் போவதைப் பாரு.."

"நான்பாட்டுக்கு நானுண்டு.. என் வேலையுண்டு.. இந்த வீடுண்டு.. நரேந்திரனுண்டுண்ணு இருக்கிறேனே அண்ணி.. அது உன் அண்ணனுக்கு பொறுக்க வில்லையா..?"

"ஏன்.. என் அண்ணன் என்ன பண்ணினார்..?"

"என்னைக் காதலிக்கிறாராம்.."

சுமித்ரா களையிழந்த முகத்துடன் இதைக்கூற, மாலதியின் முகம் பிரகாசமானது..

"நிஜமாகவா..? எப்போது சொன்னார்.."

குதூகலத்துடன் இதைக் கேட்டாள் மாலதி... அவளுடைய குதூகலத்தைக் கவனிக்காதவளாய்... சோர்வுடன் கூற ஆரம்பித்தாள் சுமித்ரா..

"இப்போது.. நான் ஆபீஸிலிருந்து வரும்போது இதைச் சொன்னார்.."

"கடவுளே.. உனக்கு நன்றி.. இந்த வார்த்தையை எப்போது நீ சொல்லுவாய்னு காத்துக் கெண்டு இருந்தேன் சுமித்ரா.."

"அண்ணி.."

"தேவா அண்ணன் குணத்தில் தங்கக் கம்பி.. நம் சொந்தக்கார வட்டாரத்திலேயே உயர்வான இடத்தில் இருப்பவர்.. அவ்வளவு எளிதாக மத்தவங்களிடம் பழகிவிட

மாட்டார்.. நம் வீட்டுக்கு அடிக்கடி அவர் வந்து போகும் போதே இது ஒரு நாள் நடக்குமுன்னு நான் நினைத்தேன்.. இன்றைக்கு அது நடந்து விட்டது.."

சுமித்ராவின் கண்களில் தெரிந்த அதிர்ச்சியைக் கண்டதும் அவசரமாகப் பேச்சை நிறுத்தினாள் மாலதி..

"நீயா அண்ணி.. இப்படிப் பேசுவது..?"

"நான் என்ன சொல்ல வருகிறேன்னா.."

"வேண்டாம் அண்ணி..! நீ எதுவும் சொல்ல வேண்டாம்.. இப்போது பேசியதே போதும்.. என் மனது தெரிந்திருந்தும் நீ இப்படிப் பேசலாமா அண்ணி..?"

"பைத்தியக்காரியைப் போல் பேசாதே சுமித்ரா.. விவேகானந்தனுக்கு கல்யாணம் ஆகி அவன் ஒரு குழந்தைக்கு அப்பா ஆகி விட்டான்.."

சுமித்ரா சட்டென்று மாலதியின் முகத்தைப் பார்த்தாள்.. அவள் முகம் ஆயிரம் உணர்ச்சிகளைப் பிரதிபலித்ததைக் கண்ட மாலதிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை..

'அவசரப்பட்டு இதைச் சொல்லிவிட்டேனே..' என்று தன்னைத் தானே நொந்து கொண்டவள்..

'வேறுவழியில்லையே.. இதை இவள் தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டும்.. கற்பனை வேறு.. நடை முறை வாழ்க்கை என்பது வேறுன்னு புரிய வேண்டாமா..?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு தைரியமாய் நிமிர்ந்து சுமித்ராவின் பார்வையைச் சந்தித்தாள்..

"என்ன அப்படிப் பார்க்கிற..? இதுதான் உலகம்.. கடைசி வினாடியில்கூட உனக்காக மணவறையிலிருந்து மாலையைக் கழட்டிவிட்டு எழுந்து வரத் தயாராக

இருந்த உன் காதலன்தான்.. கல்யாணமான பத்தாவது மாதத்திலேயே மைதிலியை அம்மாவாக்கி இருக்கிறான்.. இதைப் புரிந்துகொள்ளாமல் இன்னும் அவனை

உன் காதலன்னே நினைத்துக் கொண்டிருக்கிறாயே.. பைத்தியக்காரி.."

சுமித்ரா பதில் பேசாமல் குழந்தையின் தலைமுடியை விரல்களால் கோதிவிட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள்..

"நான் சொல்வதைக் கேள் சுமித்ரா.. மைதிலிக்காக விவேகானந்தனை விட்டுக் கொடுத்துவிட்டாய்.. உனக்குன்னு ஒரு வாழ்க்கையை நீ வாழ வேண்டாமா..?"

"விவேக்கைத் தவிர வேற ஒருவருடன் என்னால் வாழ முடியுமா..?"

"ஏன் முடியாது.. இப்போது விவேகானந்தன் மைதிலியோடு வாழவில்லையா..? குழந்தை பெற்றுக் கொள்ளவில்லையா..? அவர்களால் முடிவது உன்னால் மட்டும் முடியாதா..?"

"அண்ணி.. விவேகானந்தனின் மனம் நோக நான் தான் பேசினேன்.. அவரை விட்டுவிட்டு நான்தான் ஓடி வந்தேன்.. இன்னொருத்தியுடன் வாழச் சொல்லி அவரை நான்தான் கட்டாயப்படுத்தினேன்.. அவர் என்னைக் கைவிட்டு விட்டு வேறொருத்தியுடன் போயிருந்தால் நீ சொல்வது நியாயம்தான்.. ஆனால்.. நான்தானே அண்ணி அவரைக் கைவிட்டேன்..!"

"நீ சொன்னால் கேட்டுக்கொள்கிற ரகமில்லை.. சரி.. உன் வாதத்திற்கே வருகிறேன்.. உன் வாழ்க்கையைப் பற்றி உன் அண்ணனுக்கு கவலையிருக்காதா.. இல்லை.. உன்னைப் பற்றி முடிவெடுக்கும் உரிமைதான் உன் அண்ணனுக்கு இல்லையா..?"

மாலதியின் அறிவுகூர்மையைப் பற்றி சுமித்ரா அறிய மாட்டாள்.. எந்த இடத்தில் அடித்தால்.. யாரை வீழ்த்தலாம் என்று அவளுக்குத் தெரியும்.. தாய் தகப்பனில்லாத சுமித்ராவிற்கு இரண்டுமாக இருக்கும் சுதர்சனத்திற்கு சுமித்ராவின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உரிமை யில்லையென்று சுமித்ராவினால் சொல்லிவிட முடியுமா..?

"அண்ணி.. என் மனதைப் புரிந்துகொள்ள மாட்டாயா..?"

"நீ முதலில் உன் அண்ணனின் நிலைமையைப் புரிந்துகொள்.. கல்யாணம் பண்ணிக் கொடுக்காமல் உன்னை வீட்டிலேயே வைத்திருந்தால் இந்த ஊர் உலகம் அவரைப் பழிக்காதா..? கூடப் பிறந்த தங்கைக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமலிருக்கத்தான் அவரால் முடியுமா..?"

"நீ அண்ணனிடம் பேசு.."

"என்ன பேச.. சொல்லு.. என்ன பேச.. நீ சென்னையி லிருந்து எதற்காக ஓடிவந்தாய்னு பேசச் சொல்கிறாயா..?"

"ஐயோயோ.. வேண்டாம் அண்ணி.."

"தெரியுதில்ல.. அதைச் சொன்னால் உன் அண்ணன் தாங்க மாட்டாருன்னு தெரியுதில்ல.. அப்புறம் ஏன் வீணாய் பிடிவாதம் பிடிக்கிறாய்..?"

மாலதி முகத்தில் வரவழைத்துக் கொண்ட கடுமையுடன் கொஞ்சம்கூடத் தயவுதாட்சண்யம் காட்டாமல் பேசினாள்..

## 24

சுமித்ரவிற்கு மாலதி கூறியது புரிந்தது.. ஆனால் அவளால் விவேகானந்தனை மறக்க முடியவில்லை.. அவனை விட்டு வேறு ஒருவனுடன் வாழ முடியுமென்று அவளுக்குத் தோன்றவில்லை..

"எனக்கு கொஞ்சநாள் அவகாசம் கொடு அண்ணி.."

"உனக்கு இப்போதுதான் பதினாறு வயதுப் பெண்ணுன்னு மனதிற்குள் நினைப்பா..?"

"இதுவரை பொறுத்தாயே.."

"அப்போது தகுந்த மாப்பிள்ளை கிடைக்கவில்லை.."

"இப்போது மட்டும் கிடைத்துவிட்டானா..?"

"என் தேவா அண்ணனை அவன் இவனென்று பேசாதே.."

மாலதி பேசியதற்கு.. பதிலுக்குப் பேசி.. அவள்வாயை அடக்க நினைத்து சுமித்ரா, வாய் திறந்த நேரம் பார்த்து வாசலில் இருந்து "மாலதி.." என்று குரல் கொடுத்தபடி உள்ளே வந்தான் சுதர்சனம்.. அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது..

"ஸ்ஸ்.. அடக்கி வாசி.. உன் அண்ணன் வந்து விட்டார்.." நாத்தனாரை எச்சரித்தவண்ணம் மாலதி எழுந்து அறையை விட்டு வெளியே போனாள்..

"என்னங்க.. இவ்வளவு சந்தோஷமா வர்றீங்க.. என்ன விஷயம்..? என்கிட்ட சொல்ல மாட்டீங்களா..?" என்று வினவியபடி கணவனின் சட்டையை வாங்கிக் கொள்ள கைநீட்டினாள் மாலதி..

அவளிடம் சட்டையைக் கொடுத்துக் கொண்டே "சுமித்ரா எங்கே..?" என்று கேட்டான் சுதர்சனம்..

"உள்ளே இருக்கிறாள்..?" கணவனுக்கு மாற்றிக் கொள்ள கைலியைக் கொடுத்தபடி மாலதி பதில் கூறினாள்..

"உள்ளே என்ன செய்கிறாள்..?"

"வேறு என்ன செய்வாள்..? உங்க மகனோடு விளையாடிக் கொண்டிருக்கிறாள்.. நரேன் பிறந்ததில் இருந்து அவள்தான் அவனை விட்டு நகர மாட்டேன் கிறாளே.."

சுதர்சனம்.. கைலியும் பனியனுமாக சுமித்ராவின் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.. நரேந்திரனை மடியில் வைத்துக்கொண்டிருந்த சுமித்ரா.. அவனைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்..

"என்னம்மா செய்துகிட்டு இருக்கே..?"

"ஒன்றுமில்லை அண்ணா.. சும்மாதான்.. நரேனை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன்.."

"உன்னிடம் பேச வேண்டும்.. கொஞ்சம் வெளியில் வா.."

சுமித்ரா புரியாதவளாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.. சுதர்சனம் சமையலறையில் வேலையாக இருந்த மாலதியை அழைத்தான்..

"மாலதி.. நீயும் வா.."

"நான் வந்துவிட்டால் நைட்டுக்கு டிபனை யார்ரெடி பண்ணுவது..?"

"அதை மெதுவாக செய்து கொள்ளலாம்.. முதலில் நீ வெளியில் வா.."

மாலதி அடுப்பை அணைத்துவிட்டு சமையல் அறையை விட்டு வெளியில் வந்தாள்..

"என்னங்க..?"

"நான் ஏன் இவ்வளவு சந்தோமாக இருக்கிறேன்னு கேட்டாயே.. ஏன்னு சொல்லவா..?"

"சொல்லுங்களேன்.."

"நம்ம சுமித்ராவிற்கு கல்யாண வேளை கூடிவந்து விட்டது மாலதி.."

சுதர்சனம் சந்தோஷம் கொப்புளிக்கும் குரலோடு கூற.. சுமித்ராவும் மாலதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"யாரு மாப்பிள்ளைன்னு நீ கேட்கலையே மாலதி.."

"நீங்கள் சொல்லவில்லையே.."

"எல்லாம் உனக்குத் தெரிந்த மாப்பிள்ளைதான்.. இன்னும் சொல்லப்போனால் நீ எதிர்பார்த்த மாப்பிள்ளை தான்.."

மாலதிக்கு எதுவோ புரிந்தது போல் இருந்தது.. அவள் ஆவலுடன் கணவனை நோக்கினாள்..

"நீங்க யாரைச் சொல்கிறீங்க அத்தான்..?"

"வேறு யாரைச் சொல்வேன்.. உன் தேவா அண்ணன் நம் சுமித்ராவை பெண் கேட்கிறார்.."

"உண்மையாகவா..?"

தேவேந்திரன் இவ்வளவு விரைவாக செயல்படக் கூடும் என்பதை அறியாத சுமித்ரா, திக்பிரமை பிடித்து நிற்க.. மாலதியோ ஆனந்தத்தில் ஆழ்ந்தாள்..

"உண்மையாகத்தான் மாலதி.. என்னைப் பார்க்க வேண்டும்னு அவர் போன் பண்ணி.. அவருடைய ஆபீஸிற்கு வரச் சொன்னார்.. நான் போனபோது சுமித்ரா அப்போதுதான் கிளம்பியதாக தேவா மாப்பிள்ளை சொன்னார்.."

'தேவா மாப்பிள்ளையா..' சுமித்ராவிற்கு நா உலர்ந்தது..

"என்னை உட்காரச் சொல்லி ஜூஸ் வரவழைத்துக் கொடுத்தார்.. அப்புறமாய் நேரடியாகவே என்னிடம் நம் சுமியைப் பெண் கேட்டார்.."

"நீங்க என்ன சொன்னீங்க..? சம்மதம்னு சொல்லிட் டீங்கதானே..?"

"அது எப்படி மாலதி.. முறைப்படி அவருடைய அப்பாவும்.. அம்மாவும்தானே பெண் கேட்க வேண்டும்..?"

"அதுதானே பார்த்தேன்.. நீங்க ரைட் ரங்காச்சாரி யாச்சே.. அதுக்கு அண்ணன் என்ன சொன்னார்..?"

"இந்த வாரம் வெள்ளிக்கிழமையன்னிக்கு அவரோட பெத்தவங்க நம் வீட்டுக்கு சுமியைப் பெண் கேட்டு வருவாங்களாம்.."

"இந்த வெள்ளிக்கிழமையேவா..?" மாலதி ஆச்சரியத் துடன் வாய் விட்டுக் கேட்க.. சுமித்ரா மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்..

"எனக்கு ரொம்பச் சந்தோஷமாயிருக்கு சுமி.. அப்பாவும்.. அம்மாவும் என்னை நம்பி உன்னை விட்டு விட்டுப் போயிட்டாங்களே.. உன்னை எப்படி மேடேத்தப் போகிறேனோன்னு பயந்து போயிருந்தேன்.. கடவுளாகப் பார்த்து நமக்கு ஒரு நல்ல வழியைக் காட்டியிருக்கிறார்.. என்னால் உனக்கு இப்படியொரு வாழ்க்கையை

அமைத்துத் தர முடியும்னு நான் கனவிலயும் நினைக்கலை.. கால நேரம் கூடிவந்தால் நல்ல காரியம் எல்லாம் தானாக நடக்கும் என்கிறதுக்கு இது ஒரு நல்ல உதாரணம்.."

சுதர்சனத்தின் முகத்திலும் வார்த்தைகளிலும் மகிழ்ச்சி பொங்கி வழிவதை சுமித்ராவினால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. அதைக் கெடுப்பதற்கான மனத்துணிவு அவளுக்கு வரவில்லை..

அன்று இரவு அவள் தூங்காமல் யோசித்தாள்.. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள்..

'சாட்சிக்காரன் காலில் விழுவதற்குப் பதிலாக.. ஏன் சண்டைக்காரன் காலில் விழக்கூடாது..?'

25

காலையில் சுமித்ரா அலுவலகம் கிளம்பும்போது மாலதி அவளைத் தடுத்தாள்..

"கல்யாணம் பேச ஆரம்பித்த பின்னால் சுமித்ரா அங்கே வேலைக்குப் போனால் நன்றாக இருக்குமா..? அவள் வீட்டிலேயே இருக்கட்டும்.."

மாலதியின் சாதுர்யத்தை சுமித்ரா சட்டென்று இனம் கண்டுகொண்டாள்.. அண்ணன் மனைவியின் புத்திசாலித்தனத்தை மனதிற்குள் வியந்தபடி கெஞ்சுதலாய் சுதர்சனத்தைப் பார்த்தாள்..

"எப்படியும் கல்யாணம் ஆன பின்னால் என்னை வேலைக்கு அனுப்பமாட்டாங்க.. அதுவரைக்கும் வேலைக்கு போகிறேன் அண்ணா..! ப்ளீஸ்.."

அவ்வளவுதான்.. சுதர்சனம் மனைவியை முறைக்க ஆரம்பித்துவிட்டான்..

"இப்ப எதுக்கு அவளை வேலைக்குப் போக வேண்டாமுன்னு சொல்ற..?"

"அதில்லைங்க.. அது வந்து.."

"வந்தாவது.. போயாவது.. அவள் வேலைக்குப் போகட்டும்.. கல்யாணம் ஆகும் வரைக்கும் அவள் சுதந்திரப் பறவையாய் இருக்கட்டும்.."

"இப்போ நான் சிறைப்பறவையாய் இருக்கிறேனா..?"

"ஏய்ய்.. போடி.. போய் உள்ளே வேலை எதுவும் இருந்தால் பாரு.. சும்மா அவளைத் தடுத்து நிறுத்தாதே.. நீ வேலைக்கு போம்மா.."

தங்கையின் திட்டம் புரியாமல்.. அவள் இஷ்டப்படி வேலைக்குப் போக அனுமதித்துவிட்ட கணவனைப் பார்க்கும்போது மாலதிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது..

'அட.. என் அப்பாவி புருஷா..! உங்க தங்கை கல்யாணம் நடக்கும் வரைக்கும் வேலைக்குப் போகட்டு முன்னு நீங்க நினைக்கறீங்க.. கல்யாணத்தையே நடக்க விடக்கூடாதுன்னு அவள் நினைக்கிறாள்.. இது புரியாமல்.. என் அண்ணனின் மனதைக் கலைக்க அவளை அனுப்பி வைத்துவிட்டு என்கிட்ட அதிகாரம் பண்ண வருகிறீங்களே.. உங்கள் புத்தியை நீங்கதான் மெச்சிக்கணும்..'

செய்வதறியாதவளாய் மாலதி உள்ளே சென்றுவிட.. வெற்றிகரமாக வீட்டை விட்டு வெளியேறி.. தெருமுனைக்கு வந்த சுமித்ரா செல்போனை எடுத்தாள்.. தேவேந்திரனை அழைத்தாள்..

"வாட் எ பிரசன்ட் சர்ப்ரைஸ்.. யூ காலிங் மீ.." மறுமுனையில் தேவேந்திரன் பரபரத்தான்..

'இவன் மனதை வருத்தப்பட வைக்க வேண்டுமே..' சுமித்ரா குற்றஉணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

"சார்.. நான் உங்களைப் பார்க்க வேண்டுமே.."

"ஆபீஸிற்கு வரவில்லையா சுமி..?"

"ஆபீஸில் வேண்டாம் சார்.. நான் உங்களிடம் பேச வேண்டியது நிறைய இருக்கிறது.."

"ஓ.. ஷ்யூர்.. எங்கே வரட்டும்..? பொறு.. நீ எங்கேயிருந்து பேசுகிறாய்.."

"எங்கள் தெருமுனையில் இருந்து.."

"அங்கேயே வெயிட் பண்ணு.. நான் காரில் வந்து உன்னை பிக் அப் பண்ணிக்கொள்கிறேன்.."

தேவேந்திரன் அவசரமாய் கம்பெனியின் வாசலில் இறங்கி காரை நோக்கிப் போனான்.. அவன் மனம் தளும்பியது.. முதன்முதலாய் சுமித்ரா அவனுடன் தனியே பேச விருப்பப்பட்டிருக்கிறாள்.. ஒரு காதலியைத் தேடிப் போகும் காதலனின் மனநிலையோடு அவன் சுமித்ராவைத் தேடிப் போனான்..

தூரத்தில் சுமித்ரா.. பஸ் நிறுத்தத்தின் நிழல் குடையின் அடியில் நிற்பது தெரிந்தது.. தேவேந்திரன் காரை அவளருகே கொண்டு சென்று நிறுத்தினான்..

"ஏறிக்கொள்.." என்று முன்பக்க கதவைத் திறந்து விட்டான்.

தயங்கினாலும்.. அவனுடன் பேச அதுதான் வசதியென்று மனதிற்குப் பட்டதால் சுமித்ராவும் ஏறிக்கொண்டாள்..

"எங்கே போகலாம்..?" அவன் உல்லாசமாய் வினவினான்..

"ஏதாவது ஒரு அமைதியான இடத்திற்குப் போனால் தேவலை.." சுமித்ரா சாலையை வெறித்தபடி பதில் சொன்னாள்..

"ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே.."

"வேண்டாம்.. எனக்கு அமைதியான சூழல் வேண்டும்.. மற்றவர்கள் முன்னால் என் மனபாரத்தை உங்களிடம் இறக்கி வைக்க என்னால் முடியாது.."

அவளது உதடுகள் துடிப்பதை யோசனையோடு பார்த்தான் தேவேந்திரன்.. நகரை விட்டு வெளியே விரைந்தகார்.. ஒரு மரத்தின் கீழ் ஒதுங்கி நின்றது.. அவள் புறம் திரும்பி அமர்ந்தவன்..

"ம்ம்.. சொல்லு சுமி.. வாட் இஸ் யூவர் பிராப்ளம்..?" என்றான்..

சுமித்ரா சொன்னாள்.. மைதிலிக்கும் அவளுக்கும் இடையே இருந்த நட்பைப் பற்றிச் சொன்னாள்.. அவளுடைய மனதில் இருந்த விவேகானந்தன்.. தன்னிடம்

காதல் சொன்னதைச் சொன்னாள்.. மைதிலியின் மனத்தை அறியாமல் தானும் விவேகானந்தனை காதலிக்க ஆரம்பித்து விட்டதைச் சொன்னாள்..

"விஷயம் தெரிந்தவுடன் மைதிலி என்னைத் துரோகின்னு சொல்லிவிட்டாள்.. அதை இல்லையென்று நிரூபிக்க நான் விவேக்கை விட்டு விலகி வந்துவிட்டேன்."

"அவங்க இரண்டு பேருக்கும் மேரேஜ் ஆகிவிட்டதே.. ஒரு குழந்தைகூட இருப்பதாய் கேள்விப் பட்டேனே.."

"ஆமாம்.."

"அப்புறமும் நீ ஏன் உன் லைஃபை வேஸ்ட் பண்ணிக் கொண்டிருக்கிறாய்..? என் காதலை ஏற்றுக் கொள்ள உனக்கு ஏன் இத்தனை தயக்கம்..?"

"சார்.."

தேவேந்திரனின் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வரும் என்பதை எதிர்பார்த்திராத சுமித்ரா திகைத்துப் போனாள்..

'இவனால் எப்படி இவ்வளவு எளிதாகப் பேச முடிகின்றது..?'

"உன்னை அன்றைக்கு காப்பாற்றியவன்தான் விவேகானந்தனா..?"

"ம்...ம்.."

"லுக் சுமி.. இதை நான் லைட்டாக எடுத்துக் கொண்டதில் உனக்கு ஆச்சரியம் வந்திருக்கலாம்.."

தேவேந்திரன் நிதானமாக அவள் முகம் பார்த்துப் பேச.. 'ஆமாம்..' என்று சொல்ல முடியாமல் சுமித்ரா மௌனமாக இருந்தாள்..

## 26

"முன்பைவிட இப்போதுதான் உன்னை அதிகமாக எனக்குப் பிடித்திருக்கிறது சுமித்ரா.. உன்னிடம் ஒரு நேர்மை இருக்கிறது.. விவேகானந்தன் உன்னைத்தான் காதலித்தான்.. அவனே சொன்னது போல மைதிலி அவனைக் காதலித்ததால்.. அது அவனுடைய பிரச்சனையே இல்லை.. உனக்கும் அவனுக்கும் ஊடே மைதிலி வர வேண்டிய அவசியமே இல்லை.. அவன் உனக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தான்.. ஆனாலும் நீ மைதிலிக்காக அவனை விட்டுக் கொடுத்தாய்.. இந்த குணம் யாருக்கு வரும்..?"

"மைதிலியும் நல்லவள்தான் சார்..?"

"உன்னைவிட நல்லவள் அல்ல.."

"நீங்கள் அவளுடன் பழகியதில்லை.."

"வேண்டாம்.. அவளுடைய பழக்கமே எனக்கு வேண்டாம்.. உன்னுடன் பழகியிருக்கிறேன்.. அதுவே எனக்குப் போதும்.."

"அவள் விவேகானந்தனை காதலித்தாள்.."

"நீ காதலிக்கவில்லையா..?"

"நான் சென்னைக்குப் போய் விவேக்கின் கண்ணில் பட்டிருக்காவிட்டால் அவர் மைதிலியைத்தானே காதலித் திருந்திருப்பார்..?"

"இது உன் கற்பனை.. அது முடிந்த கதை.. அதைப் பற்றிய பேச்சே இப்போது வேண்டாம்.. நான் பணக்காரன் சுமித்ரா.. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததும் நீ பழையதை மறந்து என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தயாராகாமல் உன்னைப் பற்றிய உண்மைகளை என்னிடம் வந்து சொல்கிறாயே.. இந்த உண்மை யாருக்கு வரும்..?"

'இவனோடு முடியாது..' சுமித்ராவிற்கு அலுப்பாக இருந்தது.. அவள் என்ன சொல்ல வருகிறாள்.. இவன் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்.. விவேகானந்தனை மறக்க முடியாது.. அவனை நினைத்த மனது வேறொருவனை நினைக்காது என்று சொல்ல வந்தால்.. அது இவனுக்கு ஒரு பொருட்டாகவே படவில்லையா..?

அதை விட்டுவிட்டு.. சுமித்ராவின் நேர்மையைப் புகழ்ந்து கொண்டு உட்கார்ந்திருக்கிறானே..

"சார்.. நான் சொல்ல வருவதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.."

"நீ மனதில் நிறையக் காயம் பட்டிருக்கிறாய் சுமி.. என்னுடன் வாழப்போகும் வாழ்க்கை உன் மனக்காயங் களை ஆற்றிவிடும்.."

"சார்.."

சுமித்ரா அழமாட்டாத குறையாக எதையோ சொல்ல வாயெடுக்கும்போது.. தேவேந்திரனின் செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பேசியவன் பரபரப்பானான்..

"சுமி.. எக்ஸ்போர்ட் பண்ணவேண்டிய அயிட்டங் களை பேக் பண்ணுமிடத்தில் தகராறாம்.. நான் உடனே போக வேண்டும்.. நீ இந்த மனநிலையோடு ஆபீஸிற்கு வர வேண்டாம்.. உன்னை வீட்டில் விட்டுவிட்டுப் போகவா..?"

"வேண்டாம் சார்.. அதோ பஸ் ஸ்டாப் இருக்கிறது.. நான் பஸ் பிடித்து வீட்டிற்குப் போய் கொள்கிறேன்.."

"அது எதுக்கு தேவையில்லாத அலைச்சல்..?"

"ப்ளீஸ்.. என் மனநிலைக்கு அதுதான் நல்லது.."

சுமித்ரா கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கி விட்டாள்.. தேவேந்திரன் அவள் மனநிலை புரிந்தவனாய் காரைக் கிளப்பிக்கொண்டு போய்விட்டான்..

ஆளரவமற்ற சாலையில்... மெதுவாய் பஸ் நிறுத்தத்தை நோக்கி நடந்த கொண்டிருந்தவளின் முன்னால் வந்து நின்றான் விவேகானந்தன்..

குனிந்த தலையுடன் நடந்து கொண்டிருந்த சுமித்ரா.. தன் முன்னால் படிந்த நிழலைக் கண்டதும் கண்களில் கேள்வியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.. பார்த்தவள் விழி விரிய நின்றுவிட்டாள்..

"விவேக்.."

"என் பெயர்கூட உனக்கு நினைவில் இருக்கா..?"

"நீங்க தூத்துக்குடிக்கு எப்ப வந்தீங்க..?"

"ஏன் வந்தீங்கன்னு கேட்காமல் கேட்கிறாயா..?"

"மைதிலி எப்படியிருக்கிறாள்..?"

"நான் எப்படியிருக்கிறேன்னு கேட்க உனக்குத் தோன்றவில்லை.. உன் சிநேகிதியைப் பற்றி மட்டுமே இப்போதும் கவலைப்படுகிறாய்.."

"உங்களுக்கு குழந்தை பிறந்திருக்கிறதாமே.."

"உனக்கு இதுபோல பேசத் தெரியும்.. என்னோடு பேச மட்டும் வாய் வராது.."

"குழந்தை.. ஆணா.. பெண்ணா..?"

"அவன் யார்..?"

சுமித்ராவின் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் விவேகானந்தன் கண்கள் சிவக்கக் கேட்டதும்.. அவள் யாரைப் பற்றிக் கேட்கிறான் என்பது புரியாதவளாய் சுமித்ரா விழித்தாள்..

"யாரைக் கேட்கறீங்க..?"

"நேற்று பீச்சில் யாரோடு கொஞ்சிக் கொண்டிருந்தாயோ.. அவனைப் பற்றிக் கேட்கிறேன்.. இப்போ.. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் யாரோடு காரில் உட்கார்ந்து குலாவிக் கொண்டிருந்தாயோ.. அவனைப் பற்றிக் கேட்கிறேன்.."

"அவர் அண்ணியின் அண்ணன்.."

"நீ சொன்ன அவன்.. இவன்தானா..?"

"நான் என்ன சொன்னேன்..?"

சுமித்ராவிற்கு சட்டென்று அவள் என்ன சொன்னாள் என்று நினைவு வந்துவிட்டது..

'வேறு யாரோடு வாழப் போகிறாய்..?' என்று விவேகானந்தன் சினந்தபோது..

'என் அண்ணனின் தூரத்துச் சொந்தக்காரர் ஒருவர்.. பெரிய பணக்காரர்.. அவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அவருடன் வாழப்போகிறேன்..' என்று சொல்லித் தொலைத்திருந்தாளே..

இப்போது அதுவே உண்மையாகிவிடும் போல இருக்கிறதே.. சுமித்ரா பரிதவிப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"விசாரித்தேன்.. நீ சொன்னதுபோல இவன் பெரிய பணக்காரன்தான்.. ஆளும் நன்றாக இருக்கிறான்.. உடனே கல்யாணம் பண்ணிக்கொள்ளாமல் இந்த ஒன்றரை வருடங்களாக காதலித்திருக்கிறீர்கள்.. வெரிகுட் ஜாப்.. ஆனால் சுமி.. இவன் என்னைவிட பணக்காரனா..?"

கடைசியில் சுமித்ரா.. பணத்திற்கு விலை போகிறவள் ஆகிவிட்டாளா..? அவள் உதடு துடிக்க விவேகானந்தனையே கண்களில் நீர் மல்க பார்த்தாள்..

அவளுடைய பார்வையைத் தாளாதவனாக.. அவன் அவளுடைய தோள் பற்றி இழுக்க.. அவள் அவன் மேல்

சாய்ந்துவிட்டாள்.. விவேகானந்தனின் கரங்கள் அவளது தோள் தடவ.. சுமித்ராவின் கரங்கள் அவன் முதுகில் பரவிப் படர்ந்தன..

எத்தனையோ.. நீண்ட கொடிய நாள்களுக்குப் பின்னால் சாய்ந்து கொள்ள அவனது தோள் கிடைத்து விட்ட ஆனந்தத்தில் அவள் ஆவலுடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்..

# 27

சுமித்ராவின் உடலெங்கும்.. அலையலையாய் உணர்வுகள் பொங்கிக் கொண்டிருந்தன.. பத்தொன்பது மாதங்களாய் அவனைப் பார்க்கக்கூட முடியாமல் பிரிந்திருந்த தவிப்பில்.. அவள் ஆவேசமாய் அவனைத் தழுவிக் கொண்டாள்.. அவளுடைய ஆவேசத்திற்கு கொஞ்சம்கூட குறையாத ஆவேசத்துடன் விவேகானந்தன் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு அவளது கன்னத்தில் இதழ் பதித்தான்.. அதைத் தாங்க முடியாமல் கண்மூடிக் கிறங்கியவளின் இதழோடு இதழ் பதித்தான்..

சுமித்ரா தாள முடியாமல்.. அவனுள் புதையுண்ட அந்த நேரத்தில்.. அவள் மனதில் மைதிலியின் முகம் வந்தது..

'துரோகி.. இவன் என் புருஷன்டி..' என்றது..

சுமித்ரா அதிர்ந்து விலகினாள்.. விவேகானந்தன் புருவங்கள் முடிச்சிட அவளைப் பார்த்தான்..

"ஏன்..?" என்று உறுமினான்..

"இது தப்பு.." சுமித்ராவின் உடல் நடுங்கியது..

"இவ்வளவு நேரமும் இது உனக்குத் தெரிய வில்லையா..?"

"ப்ளீஸ்.. என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்.. போய்விடுங்கள்.. நீங்கள்.. நீங்கள்.. மைதிலியின் ஹஸ்பெண்ட்.."

இதைக் கேட்டதும் விவேகானந்தனின் முகம் பயங்கரமாய் மாறியது.. அவளது கையைப் பிடித்து நிறுத்தியவன், "உன்னால்தாண்டி.. எனக்கு அந்தப் பெயர் வந்தது.. மைதிலியின் ஹஸ்பெண்ட்..! நீதானேடி என்னை அவளுடன் சேர்த்து வைத்தாய்.." என்று விழி சிவக்கக் கேட்டான்..

"யார் சொல்லி நடந்திருந்தாலும் அதுதானே உண்மை..?"

"ம்..ம்.. அதுதான் உண்மை.. நான் மைதிலியின் ஹஸ்பெண்ட்.. உனக்கு அந்த தேவேந்திரன்தான் வருங்கால கணவன்.. கெட்டிக்காரிடி நீ.. நினைத்ததை சாதிச்சிட்டே.."

"வேண்டாம் விவேக்.. கோபப்படாதீங்க.. போய் விடுங்க.."

"இரண்டு வருஷத்துக்கு முன்னால் போகாதேன்னு நான் உன்னைக் கெஞ்சினேன்.. நீ பிடிவாதமாய் கிளம்பி வந்தாய்.. இப்போது நான் போக மாட்டேன்னு சொல்கிறேன்.. நீ பிடிவாதமாய் என்னைப் போகச் சொல்கிறாய்.."

அன்றைய தினத்தின் நினைவில் சுமித்ரா.. அனல் மேல் மெழுகானாள்.. விவேகானந்தனை நிமிர்ந்து நீர் நிறைந்த கண்களுடன் பார்த்தாள்.. அந்தப் பார்வையை கண்டுகொண்ட விவேகானந்தனின் விழிகளில் திருப்தி வந்தது..

அவன் அவளை நெருங்கினான்.. அவள் அவசரமாய் பின்னால் நகர்ந்தாள்..

"பயமா..?" அவன் குரலில் எள்ளல் இருந்தது..

"உங்களிடம் போய் நான் ஏன் பயப்பட வேண்டும்..?" அவள் குரலில் துயரம் இருந்தது..

"என்னிடம் பயப்படாமல் வேறு யாரிடம் பயப்படப் போகிறாய்.. நான் தொட்டால்.. நீ எளிதாக என்னிடம் தோற்றுப் போய் விடுவாய்.."

சுமித்ரா சட்டென்று நிமிர்ந்து நேருக்கு நேராய் அவனின் பார்வையைச் சந்தித்தாள்.. அவளுடைய பார்வையின் பொருளை புரிந்துகொண்டவன் சிரித்தான்..

"தெரியும்.. நீ என்னிடம் மட்டும்தான் தோற்பாய்னு எனக்குத் தெரியும்.. பார்த்தேனே.. இந்த ஒரு மாதமாய்.. உன்னோடு அந்த தேவேந்திரன் வரும்போது நீ நடந்து கொள்ளும் விதத்தை பின்னாலே வந்து பார்த்தேனே.. அவன் முகம் பார்க்காமல்.. நாலடி தள்ளி நடந்து எப்படி கண்ணியம் காத்தாய்.. நான் தொட்டவுடன் பாகாய் உருகுகிறாயே.. அவனுடைய விரல் நகம் உன் மேல் பட்டால் கூட நீ தாங்கிக் கொள்வாயா..?"

"சீச்சீ..! என்ன பேச்சு இது..? என் பாஸ் ஒரு ஜென்டில் மேன்.. அவரை அசிங்கமாகப் பேசாதீங்க.."

"பாஸா..? யார் அது..?"

"மிஸ்டர் தேவேந்திரன்.."

"ஓ.. முதலாளி என்ற முறையைத் தாண்டி வேறு முறை சொல்ல உனக்கு வாய் வரவில்லை.. பார்த்தாயா..?"

"உங்களுக்கு என்ன வேண்டும்..?"

"வேறு என்ன வேண்டும்..? நீதான் வேண்டும்.."

'இவனால் எப்படி இப்படியெல்லாம் பேச முடிகின்றது..?' சுமித்ரா திகைத்தாள்..

'இவன் மைதிலியின் கணவன்.. அவளுடைய குழந்தைக்குத் தகப்பன்.. இதை மறந்துவிட்டுப் பேசுகிறானே..'

"என்ன விஷயம்..?"

அவள் முகத்தையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தவன் கேட்டான்..

"நீங்கள் இப்போது.. ஒரு குழந்தைக்கு அப்பா.."

"அதனால் நான் உனக்கு வேண்டாம் என்று சொல்கிறாயா..?"

"கடவுளே.. உங்களுக்கு நான் எப்படிப் புரிய வைப்பேன்..?"

"அதுதான் புரிய வைத்துவிட்டாயே.. உன்னை எனக்கு நன்றாக புரிய வைத்துவிட்டாயே.. என்மேல் உனக்கு ஆசை அதிகம்.. காதல் அதிகம்.. மயக்ககமும் அதிகம்.. என்னைத் தவிர வேறு ஒருவனின் நிழலைக் கூட நீ தொட மாட்டாய்.. நான் தொட்டால் முழுமனதாய் உன்னை எனக்குக் கொடுத்துவிடுவாய்.. இவ்வளவு இருந்தும்.. என்னுடன் சேராமல் பிரிந்து ஓடுவாய்.. ஏன்னா.. மைதிலி என்னைக் காதலித்துவிட்டாள்.."

சுமித்ராவின் கண்களில் நீர் வழிய ஆரம்பித் திருந்தது.. விவேகானந்தனின் வார்த்தைகளில் இருந்த உண்மை அவளைச் சுட்டது..

"மைதிலி கேட்டாளென்று என்னைத் தூக்கி அவளிடம் கொடுத்துவிட்டாய்.. ஆனால்.. உன்னை இன்னொருவனுக்குக் கொடுக்க என்னால் முடியவில்லைடி.."

"உளறாதீங்க.."

"நான் பேசுவது உனக்கு உளறல்.. அதுவே மைதிலி பேசினால் அது உனக்கு வேதம்.."

"முடிந்த கதையை பேசி என்ன ஆகப் போகிறது..?"

விரக்தியுடன் பெருமூச்சு விட்ட சுமித்ராவையே பார்த்தான் அவன்..

"முடிந்த கதை தொடரலாமே.."

"விவேக்.."

கண்களில் பயரேகை ஓட.. சுமித்ரா.. நிமிர்ந்து விவேகானந்தனைப் பார்த்தாள்.. அவன் முகத்திலிருந்த தீவிரம் அவளை அச்சுறுத்தியது..

விவேகானந்தன்.. அந்த மரத்தின் மீது ஒரு காலை ஊன்றி சாய்ந்து நின்றான்.. லேசாய் வீசிய காற்றில்.. அவன் தலைமுடி கலைந்து கவர்ச்சியாய் முகத்தில் படிந்தது.. அலை பாய்ந்த அவனுடைய முடியைக் கண்டு சுமித்ராவின் மனமும் அலைபாய்ந்தது..

அவளுடைய கண்களில் வழிந்த காதலைக் கண்டவன் கோபத்துடன் சிரித்தான்..

"இந்த பார்வைக்கொன்றும் குறைச்சலில்லை.. தள்ளி நின்று இப்படி ஏன் பார்க்க வேண்டும்..? கிட்டே நெருங்கி வர வேண்டியதுதானே.."

"ம்ச்.. நான் போகிறேன்.."

"அதுதான் போய் விட்டாயே.."

விவேகானந்தனின் வார்த்தைகளில் குற்றச்சாட்டு தொனித்தது.. சுமித்ரா கண்கள் கலங்க அவனை இறைஞ்சுதலாய் பார்த்தாள்..

"வேண்டாம் விவேக்.. போனதைப் பேசுவதால் யாருக்கு என்ன லாபம்..? சொல்லுங்க.."

"யாருக்கு.. என்ன லாபமா..? லாபம் இருக்கிறது.. நம் இரண்டு பேருக்குமே லாபம் இருக்கிறது.."

'ஊஹும்.. இவன் தூண்டிலை வீசிக்கொண்டிருக் கிறான்.. நான் மாட்டிவிடக்கூடாது.. இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே நின்றால்.. நான் கட்டாயம் மைதிலிக்கு துரோகம் செய்துவிடுவேன்..'

சுமித்ராவின் மனதில் எச்சரிக்கை மணி ஒலித்தது..

"என்ன நினைக்கிறாய் சுமி..? இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நின்றால் மைதிலிக்கு துரோகம் செய்து விடுவா யென்று பயப்படுகிறாயா..?" அவன் கிண்டலாகக் கேட்டான்..

'எப்படிக் கண்டுபிடித்தான்..' அவள் விழிகளில் வியப்புடன் நிமிர்ந்து பார்த்துவிட்டாள்..

"இதைக் கண்டுபிடிப்பது என்ன அவ்வளவு கஷ்ட மான ஒன்றா..? உன்னை வலுக்கட்டாயமாய் தொட்டுக் காட்டவா..? அப்போது பார்க்கலாமா..? நீ என்னை எதிர்த்துப் போராடுகிறாயா..? இல்லை.. என்னோடு கலந்துவிடு கிறாயான்னு பார்த்து விடலாமா..?"

அவன் ஒரு எட்டு முன் வைக்க.. சுமித்ரா அவசரமாய் பின்னுக்கு நகர்ந்து கொண்டாள்.. அவன் பலமாக சிரித்தான்.. அவன் முகம் சிவந்து விட்டது..

"ஏன்.. நான் தொட்டால் என்ன..? கரைந்தா போய் விடுவாய்..?"

'ஆமாம்.. நீ தொட்டால் நான் கரைந்துதான் போய் விடுவேன்..' என்று அவள் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்..

'பாகாய் உருகி விடுவேன்.. இருக்குமிடம் தெரியாமல் கரைந்து.. உன்னோடு கலந்து காணாமல் போய் விடுவேன்.. அதனால் என்மேல் இரக்கம் காட்டி என்னை விட்டுப் போய்விடு.. உன் நினைவுகளை மனதில் சுமந்து கொண்டு வாழ்கிறவள் நான்.. கண்ணெதிரே நீ வந்து நின்ற ஆனந்தத்தில் இருந்து இன்னும் நான் மீளவில்லை.. என்னை சோதிக்காமல் போய்விடு..'

விவேகானந்தன் அவளையே விழுங்கிவிடுவது போல் பார்த்துக் கொண்டு நின்றான்.. இத்தனை நாளாய் அவளைத் தேடி வராதவன்.. இப்போது ஏன் வந்து நிற்கிறான் என்று அவளுக்குப் புரியவில்லை..

"மைதிலி எப்படியிருக்கிறாள் விவேக்..?" அவள் மெல்லக் கேட்டாள்..

"நான் எப்படியிருக்கிறேன்னு கேட்க மாட்டாயா..?" அவன் அவளை ஆழமாய் பார்த்தான்..

அந்தப் பார்வையில் சுமித்ராவின் மனம் அசைந்தது.

"முடிந்து போனதைப் பேச வேண்டாமே.."

"முடிவிலும் ஒன்று தொடர்ந்தால் முடிந்து போனதைப் பேசாமல் எப்படி இருப்பது..?"

"நீங்கள் என்ன சொல்கிறீங்க..?"

அவன் மரத்தில் சாய்ந்து நின்ற வண்ணம் கைகளை மடித்துக் கட்டிக் கொண்டான்.. மெதுவான குரலில் பாடினான்..

"உறவுகள் தொடர்கதை..

உணர்வுகள் விடுகதை..

ஒரு கதை என்றும் முடியலாம்..

முடிவிலும் ஒன்று தொடரலாம்..

இனியெல்லாம் சுபமே.."

சுமித்ராவின் விழிகளில் அதிர்ச்சி உற்பத்தியானது.. இது சரியில்லை என்று அவள் மனம் கூறியது..

"உன் கண்களின் ஓரம்..

எதற்காகவோ ஈரம்..

கண்ணீரை நான் மாற்றுவேன்.."

அவள் விழிகளில் துளிர்த்த நீரைத் துடைக்க அவன் கைநீண்டது.. அவள் அவசரமாய் விலகிக் கொண்டாள்..

"விவேக்.. நீங்கள் மைதிலியின் கணவர்.."

"அதனால்.. உனக்கு நான் கணவனாகக் கூடாதா..?"

"கடவுளே.. இது என்ன விபரீதமான பேச்சு..? ஒரு குழந்தைக்கு தகப்பனும் ஆன பின்னால் இதுபோல பேசலாமா..?"

"ம்ம்.. நான் உன் காதலன்.. மைதிலி என்னை கணவனாக்கிக் கொண்டாள்.. உன் காதலனை அவள் கணவனாக்கிக் கொள்ளக் கொஞ்சம்கூடத் தயங்க

வில்லை.. நீ ஏன்.. அவளுடைய குழந்தையை உன் குழந்தையாக்கிக் கொள்ளக்கூடாது..?"

"விவேக்.."

"ஏன் அதிர்ச்சியாகிறாய் சுமி..? நான் நிஜமாகத்தான் கேட்கிறேன்.. உன் காதலனுக்கு அவள் மனைவியாக ஆகும் போது நீயேன் அவளுடைய குழந்தைக்கு அம்மாவாகக் கூடாது..?"

இவன் ஏன் இப்படிப் பிதற்றுகிறான்.. ஒருவேளை புத்தி பிசகிவிட்டதோ என்று சுமித்ரா பயந்துபோனாள்.. கடைசியில் அவளைக் காதலித்த பாவத்திற்காக அவளுடைய விவேகானந்தன் பைத்தியமாகி விட்டான்.. அவனை பைத்தியமாக்கிவிட்டு சுமித்ரா மட்டும் நிம்மதியாக இருக்கிறாள்..

"விவேக்.. உங்களுக்கு என்னவாகி விட்டது..?"

"ஏன்.. எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதுன்னு பயந்து போய் விட்டாயா..?"

'ஆமாம்..' என்று சொல்லவும் முடியாமல்.. அப்படிப் பேசிக் கொண்டிருப்பவனை விட்டுவிட்டுப் போகவும் முடியாமல்.. அவள் உதவிக்கு யாராவது வரமாட்டார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்..

"இந்தப் பைத்தியத்திடமிருந்து காப்பாற்ற யாராவது வருவாங்களான்னு பார்க்கிறியா..?"

'இவன் ஏன் இப்படி என் மனதை படித்துத் தொலைக்கிறான்..'

"ஐயா சாமி.. நான் சும்மாதான் பார்த்தேன்.. நீங்க கிளம்புங்க.."

"நீயில்லாமலா.. வா.. நீயும் நானும் சேர்ந்து கிளம்பலாம்.." இப்போது சுமித்ரா நிஜமாகவே அவனை முறைத்தாள்..

"விவேக்.. நான் மைதிலிக்கு போன் பண்ணிச் சொல்லிவிடுவேன்.."

"எங்கே போன் பண்ணுவாய்..? மேல் உலகத்திற்கா..?"

"விவேக்.."

"மைதிலி இப்போது உயிரோடு இல்லை.. இறந்து விட்டாள்.."

## 29

தன் காதுகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாமல் பேயறைந்தவள் போல விழித்தாள் சுமித்ரா..

"என்.. என்ன.. என்ன சொன்னீங்க..?"

"மைதிலி இறந்துவிட்டாள்னு சொன்னேன்.."

"எப்போது..?"

"எட்டு மாதங்களுக்கு முன்னால்.."

"ஏன் இதை என்னிடம் யாரும் சொல்லவில்லை..?"

"சில காரணங்களால் சொல்லவில்லை.."

"அது என்ன காரணம்..? ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் இப்படிப்பட்ட விஷயத்தை என்னிடமிருந்து எப்படி மறைக்கலாம்..?"

"யாரிடம் மறைக்க நினைத்தாலும்.. உன்னிடம் மறைக்க நினைக்க மாட்டேண்டி.. உனக்கே அதற்கான காரணம் தெரியும்.."

விவேகானந்தன் ஏன் இத்தனை நாள்களாக அவளைத் தேடி வராமல் இப்போது தேடி வந்திருக்கிறான் என்று சுமித்ராவிற்கு புரிந்தது..

மைதிலிக்கு துரோகம் செய்யும் கணவனாக அவன் இல்லை என்ற நினைவில்.. அவள் மனம் நிம்மதியடைந்தது.

'என் விவேகானந்தன்.. நேர்மை தவறவில்லை..'

மைதிலியின் நினைவு மீண்டும் அவள் மனதை ஆக்கிரமிக்க.. சுமித்ராவின் கண்கள் கலங்கின..

'பாவி.. ஆசைப்பட்ட கணவனை அடைந்தும்.. வாழக்கொடுத்து வைக்காமல் அல்பாயுசில் போய் விட்டாளே..'

"மைதிலிக்கு என்ன ஆனது..?"

"யாருக்குத் தெரியும்..?"

விவேகானந்தனின் விட்டேற்றியான பதில் சுமித்ராவிற்கு அதிர்ச்சியைத் தந்தது..

"என்ன விவேக்.. இப்படிச் சொல்கிறீங்க..?"

"வேறு எப்படிச் சொல்லச் சொல்கிறாய் சுமி..?"

"அவள் உங்கள் மனைவி.."

"இதையே எத்தனை தடவைதான் சொல்லுவாய்..? அவள் என் மனைவிதான்.. யார் இல்லையென்று சொன்னது..?"

"கட்டின மனைவி எப்படி இறந்தாள்ன்னு கேட்டால்.. தெரியாதுன்னு சொல்கிறீங்களே.. இது கொஞ்சம் கூட நல்லா இல்லை விவேக்.."

"அவள் இறந்துபோனபோது நான் இந்தியாவிலேயே இல்லை.. கனடாவில் இருந்தேன்.. நான் வருவதற்குள் காரியங்களை முடித்து.. அவளுடைய போட்டோவை மட்டும் ஹாலில் மாட்டி வைத்திருந்தார்கள்.. என்னன்னு கேட்டால்.. எதுவுமே பதில் சொல்லாமல்.. ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்து அழுது தீர்த்தார்கள்.. எனக்கே தெரியாத ஒன்றை நீ கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்ல..?"

விவேகானந்தனின் முகத்தில் இருந்தது வருத்தமா.. துயரமா என்று சுமித்ராவினால் கண்டுபிடிக்க முடிய வில்லை.. அவள் மனதில்.. மைதிலியின் மீது பரிதாபம் சுரந்தது..

'இந்த வாழ்க்கையை வாழத்தான் நீ அன்றைக்கு அந்தப் பாடு பட்டாயா.. மைதிலி..?'

"என்ன.. பேசாமல் என்னையே பார்த்துக் கொண்டு நிற்கிறாய்..? மனதிற்குள் உன் தோழியைக் கொன்ற ராட்சஸன் என்று என்னைத் திட்டிக் கொண்டிருக்கிறாயா..?"

"எப்போது கனடாவிற்கு போனீங்க..?"

"ஒன்றரை வருடத்திற்கு முன்னால்.."

"என்னது..?"

சுமித்ராவின் முகம் மீண்டும் அதிர்ச்சியை பிரதிபலித்தது.. மைதிலிக்கு விவேகானந்தனை விட்டுக் கொடுத்துவிட்டு.. அவள் தூத்துக்குடிக்கு திரும்பி வந்து ஒன்றரை வருடம்தான் ஆகிறது.. இவனும் அதையேதான் சொல்கிறான்.. அப்படியென்றால் தாலி கட்டிய கையுடன் கனடா போய்விட்டானா..?

"ஆமாம்.." என்றான் விவேகானந்தன்..

"இது அநியாயம்.." மனம் தாளாமல் பொருமினாள் சுமித்ரா..

"எதுடி அநியாயம்..? என் மனதில் நீதான் இருக்கிறாய்னு தெரிந்த பின்னாலும் உன்னை டார்ச்சர் பண்ணி ஊரை விட்டுத் துரத்துவாள் ஒருத்தி...

அவளிடம் பட்ட நன்றிக்கடனுக்காக என்னை அவளிடம் விற்றுவிட்டு நீயும் ஊரை விட்டு ஓடிவந்து விடுவாய்.. நான் அவளுக்குத் தாலிகட்டி.. அவளுடன் குடும்பம்

நடத்த வேண்டுமா..?"

"அதற்காக.. அதற்காக.. இப்படி நீங்கள் செய்யலாமா..?"

"என்ன செய்தேன்..? என் விருப்பத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல்.. மைதிலி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுவிட்டாளென்ற காரணத்தைக் காட்டி என்னைப் பெத்தவங்களும் அவளைப் பெத்தவங்களும் கல்யாணத்தை முடிவு பண்ணினாங்க... மற்றவங்க ஆட்டு

விக்க.. ஆடுகின்ற பொம்மையில்லைடி நான்.. அவங்க விருப்பப்படி மைதிலியின் கழுத்தில் தாலியைக் கட்டினேன்.. என் விருப்பப்படி.. கனடாவில் பிஸினஸ் பண்ணப் போய்விட்டேன்."

"போனவர் மைதிலியையும் கூட அழைத்துக் கொண்டு போயிருக்க வேண்டியதுதானே.."

"ம்ம்.. எல்லோரும் அதைத்தான் சொன்னார்கள்.."

"சென்னையில் மூச்சு முட்டுதுன்னுதானே கனடா போனேன்.. அங்கேயும் மூச்சு முட்டவைக்க அவளை அழைத்துக் கொண்டு போகச் சொல்கிறாயா..?"

சுமித்ரா திகைத்தாள்.. மைதிலி வாழவே யில்லையா..? அப்படியானால்.. குழந்தை..?

அவளுடைய மனதின் கேள்வியைப் படிப்பவன் ஆயிற்றே அவன்.. உடனே அதற்குப் பதிலைச் சொன்னான்..

"கட்டின மனைவியோடு ஒரு வாரமாவது சந்தோஷமாக இருக்க வேண்டுமாம்.. அப்படியில்லா விட்டால்.. நானும் விஷத்தைக் குடித்துவிடுகிறேன்னு என் அப்பா கத்தினார்.. மைதிலி அவருடைய தங்கையின் மகளாச்சே.."

கடைசியில் ஒரு வாரம்தான் மைதிலி.. விவேகானந் தனுடன் குடும்பம் நடத்தினாளா..? இதற்காகவா அந்ததுடிதுடித்தாள்..? சுமித்ராவின் மனம் வேதனைப் பட்டது..

## 30

மைதிலியின் நினைவு சுமித்ராவின் மனத்தை தொட்டு நிரப்பியது..

"பாவம்.." சுமித்ரா பெருமூச்சு விட்டாள்..

"குழந்தை பிறந்தவுடன் நீங்க பார்க்க வர வில்லையா..?"

"இல்லை.."

"அது உங்கள் குழந்தை விவேக்.. அதன் மேல் பாசம் காட்ட வேண்டாமா..?"

"ஆனால்.. அது மைதிலியின் பிடிவாதத்தால் வந்த குழந்தை.."

"விவேக்.."

இந்த அளவுக்கா மைதிலியை இவன் வெறுத்தான்..? பெற்ற குழந்தையை.. மைதிலியின் மேலிருக்கும் வெறுப்பினால் ஒதுக்கி வைத்திருக்கிறானே... இந்த வெறுப்பு எதனால் வந்தது..? மைதிலியின் கரைகடந்த காதலை இவன் புரிந்து கொள்ளவே இல்லையா..?

"யாருக்கு வேண்டும் அவளுடைய காதல்.." வெறுப்பாக பேசினான் விவேகானந்தன்..

"அப்படிச் சொல்லாதீங்க விவேக்.. அவள் உண்மையிலேயே உங்களை மனமாரக் காதலித்தாள்.."

"காதல்.. நட்பு.. இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் அர்த்தம் என்னன்னு தெரியுமா அவளுக்கு.. காதலிக் கிறவங்களின் உயிரைக் குடிப்பதுதான் காதலா..? நட்பின் பெயரைச் சொல்லி.. காதலை விட்டுக்கொடுக்க வைப்பது தான் நட்பா..?"

"அவள் என்னதான் செய்வாள்..?"

"ஏன்.. நீ அவளுக்காக என்னைப் பிரிய துணிய வில்லையா..? அதே பாசம் உன்மீது அவளுக்கு இருந்திருந்தால்.. என்னிடமிருந்து உன்னைப் பிரித்திருப்பாளா..? என் மேல் காதலிருந்திருந்தால்.. என் மனதில் நீயிருப்பதை தெரிந்து கொண்டதுமே என் வாழ்க்கைக்காக அவள் ஒதுங்கியிருப்பாள்.. அவள் அப்படிச் செய்யவில்லை சுமி.. உன்னையும் என்னையும் பிரித்து விட்டால் நம் இருவருக்கும் இடையே இருந்த காதல் செத்துவிடும்னு அவள் நினைத்தாள்.. காதல் சாகுமா சுமி..?

உன்னால் என்னையும் என்னால் உன்னையும் அவ்வளவு சீக்கிரமாய் மறந்துவிட முடியுமா..?"

எப்படி முடியும்..? சென்னையை விட்டு வந்ததில் இருந்து ஒரு வினாடிகூட விவேகானந்தனை மறந்து அவள் இருந்ததில்லையே.. அப்படியிருக்க.. விவேகானந்தனைக் குறைசொல்லி என்ன பயன்..?

ஆனால்.. மைதிலி..? அவளுடைய நினைவு வந்ததும் சுமித்ரா மீண்டும் கண்கலங்கினாள்..

"இப்படிச் செய்துவிட்டீங்களே விவேக்.. மைதிலி நிம்மதியில்லாமல் செத்துவிட்டாளே.. பெரியப்பாவும் பெரியம்மாவும் இதற்குக் காரணம் நான்தான்னு நினைத்துக் கொள்வாங்களே.."

"இப்போதும் உனக்கு அவர்களைப் பற்றிய கவலை தானா..? என்னைப் பற்றிக் கொஞ்சம்கூட நீ கவலைப்பட மாட்டாயா..?"

"என்னை கொலைகாரின்னு சொல்வாங்க விவேக்.."

"ஆல்ரெடி.. என்னை அப்படிச் சொல்லிவிட்டாங்க.."

சுமித்ரா பதைத்துப்போய் விவேகானந்தனை நிமிர்ந்து பார்த்தாள்.. கொலைகாரனா..? அவனா..? அவளுடைய விவேகானந்தனை அப்படிச் சொல்கிறாங்களா..? அதற்கு அவளே காரணமாகி விட்டாளா..?

"விவேக்.."

சுமித்ரா.. முதல் முறையாய் அவனை நோக்கி கைவிரித்து அழைத்தாள்.. அவன் கண்கள் மின்ன.. அவளது கரத்தில் புகுந்து கொண்டான்..

"சுமி.." அவன் குரல் கம்மியிருந்தது..

"கஷ்டமாக இருக்கு சுமி.. நான் என்ன தவறு செய்தேன்..? மனதார ஒருத்தியின் மேல் ஆசை வைத்தேன்.. அவள் எனக்குக் கிடைக்கவில்லை.. அவளிடமிருந்து என்னைத் தட்டிப் பறித்து எனக்கு கழுத்தை நீட்டினாள் வேறு ஒருத்தி..

அவள் கழுத்தில் வேண்டாவெறுப்பாக தாலியைக் கட்டினாலும்.. அவளுடன் ஒரு வாரம் குடும்பம் நடத்தினேனா இல்லையா..? மனதில் ஒருத்தியை வைத்துக் கொண்டு அவளுடன் குடும்பம் நடத்த முடியாமல் வெளிநாட்டிற்குத்தானே ஓடினேன்..? என் மனதில் இருந்தவளிடம் ஓடவில்லையே.. அப்புறமும் ஏன் என்னைக் கொலைகாரன்னு சொல்கிறாங்க.."

சுமித்ரா.. மரத்தின் அடிப்பாகத்தில் இருந்த பெரிய வேரின் மீது அமர்ந்திருந்தாள்.. அருகே மரத்தின் அடிப் பாகத்தில் கால் நீட்டி உட்கார்ந்திருந்த விவேகானந்தன்.. சுமித்ராவின் மடிமேல் சாய்ந்திருந்தான்... அவனது மனம் படும் வேதனையைத் தாங்க முடியாதவளாக அவனது முடி கோதி ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள் சுமித்ரா..

"வேண்டாம் விவேக்.. விட்டு விடுங்க.."

"அன்றைக்கு இந்த வார்த்தையை நீ சொல்லாமல் இருந்திருந்தால்.. இன்றைக்கு இந்தப் பழி என் மீது விழுந்திருக்குமா..?"

நிஜம்தானோ, விவேகானந்தன் சொல்வதும் உண்மை தானோ, மைதிலி 'துரோகி'யென்று சொன்னால்.. சுமித்ரா 'துரோகி'யாகிவிடுவாளா..? அவள் சொன்னால் சொல்லட்டும் என்று சுமித்ரா தன் காதலில் உறுதியாக நின்றிருக்க வேண்டுமோ.. காதலித்தவனின் மனதை உடைத்து சுக்குநூறாக்கிவிட்டு.. 'தியாகி' பட்டத்தைச் சுமந்து கொண்டு ஓடிவந்ததுதான் தவறோ.. அப்படி சுமித்ரா வராமல் தன் காதலில் உறுதியாக நின்றிருந்தால்.. விவேகானந்தனும் வாழ்ந்திருப்பான்.. மைதிலியும் வேறு ஒருவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு உயிரோடு இருந்திருப்பாள்..

இவை இரண்டும் நடக்காமல் போனதற்கு யார் காரணம்..?

'நான்தான் காரணம்..?' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் சுமித்ரா..

பொய்யாமொழிப் புலவன் சொன்னானே..

'தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்..' என்று

சுமித்ரா தன்னையும் காத்துக் கொள்ளவில்லை.. தன்னைக் காதலித்தவனையும் காக்கவில்லை.. சொன்ன சொல்லைக் காப்பாற்றுகிறேன் பேர்வழியென்று காதலித் தவனை கைவிட்டுவிட்டு வேறு ஒருவனை நினைக்கவும் முடியாமல் சோர்ந்து போய் மூலையில் முடங்கிக் கொண்டு கிடக்கிறாள்..

# 31

தன்னை நம்பிய காதலனை காக்கத் தவறிவிட்டாள் சுமித்ரா.. அவள் மனதில் குற்ற உணர்வு எழுந்தது.. விவேகானந்தன் அவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் கேட்காமல், தான் அவனை விட்டு வந்தது எவ்வளவு பெரிய தவறு என்று காலம் கடந்து அவள் புரிந்து கொண்டாள்..

"நீங்கள் சொல்வது உண்மைதான் விவேக்.. நான் உங்களை விட்டு விட்டு வந்திருக்கக் கூடாது.."

"சுமி.. நான் ஒன்றும் மனச்சாட்சி இல்லாதவன் கிடையாது.. மைதிலியிடம் என் மனம் போக மறுத்தது.. வெளிநாட்டிற்கு விலகிப்போனேன்.. உன்னைத் தேடி வரவில்லை.. அவள் இறந்துவிட்டாள் என்ற செய்தி கிடைத்ததும் இந்தியாவிற்கு திரும்பி வந்தேன்.. நான் இந்தியா திரும்பி எட்டு மாதங்கள் ஆகிவிட்டன.. மைதிலி செத்து விட்டாள்.. நமக்குள் இருந்த தடை அகன்று விட்டதுன்னு உடனே உன்னைத் தேடிக்கொண்டு ஓடிவந்துவிட வில்லை.."

"ம்ம்..."

விவேகானந்தன் தன் மனதிலிருப்பதை கொட்டிக் கொண்டிருந்தான்.. அவனைப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள் சுமித்ரா..

"அவளை நான் வெறுத்தேன்தான்.. எதற்காக..? அநியாயமாய் அவளுடைய ஆசைக்காக உன்னையும் என்னையும் பிரித்தாளே.. அதற்காக.."

"ம்ம்..."

"அவளுக்கு தாலி கட்டிய பின்.. அவளுக்கு உண்மையாகத்தான் இருந்தேன்.. அவள் உயிரை விட்ட பின்பும் அவளுடைய ஆத்மாவிற்கு மரியாதை கொடுத்து உடனே உன்னைத் தேடி வராமல் இருந்தேன்.."

"ம்ம்.."

"பட்.. இரண்டு மாதங்களுக்கு முன்னால் தேவேந்திரன் அவனுடைய தொழில் சம்பந்தமாக சென்னைக்கு வந்திருக்கிறான்.. வந்தவன்.. எங்களுக்கு தூரத்துச் சொந்தக்காரர் ஒருவரிடம் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதாக சொல்லியிருக்கிறான்..

அவர் பேச்சு வாக்கில் போன மாதம்தான் இதை என்னிடம் சொன்னார்.. திரும்பவும் எப்படிட உன்னை நான் இழப்பேன்..? அன்றைக்கு மைதிலி நம்மிருவருக்கும் ஊடே வந்தாள்.. நீ போராடாமல் என்னை தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு விலகி ஓடிவந்துவிட்டாய.. இன்றைக்கு தேவேந்திரன் நம் இருவருக்கும் இடையே வந்திருக் கிறான்.. என்னால் உன்னை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுக்க முடியாது.."

"என் விவேக்.."

சுமித்ரா.. தன் மடியில் சாய்ந்திருந்த விவேகானந் தனின் தலையில் முகம் புதைத்துக் கொண்டாள்.. அவளது மடியில் கண்மூடிப் படுத்திருந்த விவேகானந்தன் மெதுவாக கூறினான்..

"எத்தனை நாள்களாகி விட்டன சுமி.. இப்படி மனதில் பாரம் இல்லாமல்.. நான் நிம்மதியாக கண்மூடித் தூங்கி.. ஒன்றரை வருடமாகிறது சுமி.."

சுமித்ராவின் கண்களில் இருந்து வழிந்த நீர் அவன் முகத்தில் பட்டுத் தெரித்தது.. மழைக்கு ஏங்கிய சாதகப் பட்சியைப் போல் அவள் தனக்காக விட்ட கண்ணீரை ஆனந்தத்துடன் ஏற்றுக் கொண்டான் அவன்..

அந்தக் கண்ணீர்.. அவனுக்காக அவனுக்கு மட்டுமே சொந்தமான அவனுடைய காதலி.. அவனுடைய துன்பம் கேட்டுத் துடித்துவிடும் கண்ணீர்.. வேறொருத்தியின் கழுத்தில் தாலிகட்டி.. ஒரு குழந்தைக்கு தந்தையும் ஆகி.. மனைவியை இழந்து நிற்கும் ஒருவனிடம் துளியளவுகூட காதல் குறையாதவளாய் அவனை மடிதாங்கி அவனுடைய காதலி விடும் கண்ணீர்..

"சுமி..."

"ம்ம்.."

"என்னை விட்டுப் போய் விடாதே.."

"இனிமேல் எப்படிப் போவேன்..?"

"தேவேந்திரன் உன்னை விரும்புகிறான்.."

"நான் உங்களைத்தானே காதலிக்கிறேன்.. உங்களை மட்டும்தானே என்னால் காதலிக்க முடியும்..?"

சுமித்ரா தன் மடி சாய்ந்திருந்தவனின் முடி கோதி கனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்..

விவேகானந்தன் அண்ணாந்து அவள் முகம் பார்த்தான்.. தன் கைகளால் அவள் முகத்தை வளைத்து அருகில் இழுத்தான்.. மறுப்புச் சொல்லாமல் குனிந்தாள் சுமித்ரா.. அவளுடைய இதழ் தேடிய அவனுடைய இதழ்களில் முத்தமிட்டாள்.. அவன் கேட்டதைக் கொடுத்தாள்.. அவன் எழுந்து அமர்ந்து அவளை இழுத்துக் கொண்டபோது இணக்கமாய் அவன் மடி சாய்ந்தாள்..

விவேகானந்தனின் முகம் ஒளிர்ந்தது.. விழிகளில் தாபமும் ஆவலும் போட்டி போட்டுக் கொண்டு தோன்றின.. அவன் சுமித்ராவை தன்னுடன் சேர்த்து தழுவிக் கொண்டு மரத்தடியில் சரிந்தான்.. சுமித்ரா விலகவில்லை..

அவளுடைய சரணாகதியைக் கண்டு அலைபாய்ந்து கொண்டிருந்த அவனுடைய மனம் அமைதியடைந்தது.. திருப்தியுடன் அவள் தோளில் முகம் புதைத்துக் கொண்டான்.. அவன் தலையில் முகம் புதைத்து விலகாமல் அமர்ந்திருந்தாள் சுமித்ரா..

"நாம் நிறைய எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி யிருக்கும் சுமி.."

"சந்திக்கலாம்.."

"உன் அண்ணன் உன்னை எனக்கு கல்யாணம் பண்ணிக்கொடுக்க யோசிப்பார்.."

"நான் என் விருப்பத்தைச் சொல்வேன்.."

"அவர் சம்மதிக்காவிட்டால்..?"

"சம்மதிப்பார்.."

"ஒருவேளை சம்மதிக்க மறுத்தால்..?"

"நாம் வேறு பேசலாமே.. ப்ளீஸ்.."

விவேகானந்தன் முகம் சுளித்தான்.. விலகி அமர முனைந்தான்.. சுமித்ரா அவனை நெருங்கி அமர்ந்து கொண்டாள்..

"ம்ச்.. பிடி கொடுக்காமல் பேசுகிறாய்டி.."

"என் பிடி என்றைக்குமே உங்கள் கையில் மட்டும் தான்.. தெரிந்திருந்தும் பேசுகிறீங்களே.."

"உனக்குத் தெரியாது சுமி.. உன் அண்ணனின் மனதைக் கலைக்க மைதிலியின் பேரண்ட்ஸ் டிரை பண்ணுவாங்க.."

சுமித்ராவை பெற்ற மகளைப் போல் நினைத்த மோகனரங்கமும் பூங்கோதையும் அவளுக்கு எதிராக சுதர்சனத்திடம் பேசுவார்களா..?

"இப்போது நிலைமையே தலைகீழாய் மாறிவிட்டது சுமித்ரா.." என்றான் விவேகானந்தன்..

அவன் முகத்தில் சிந்தனை படர்ந்திருந்தது... அவனை விட்டு விலகாமல் அவனை விலகவும் அனுமதிக்காமல் அவன் கைகளை இறுக்கிப் பிடித்து.. அவன் தோள் மேல் தலைசாய்த்திருந்த சுமித்ராவை இரக்கத்துடன் பார்த்தான் அவன்..

"இப்போது இப்படி இறுக்கிப் பிடிப்பவள்.. அன்றைக்கு ஏன் கோட்டைவிட்டாய்..?"

"வேண்டாம் விவேக்.. அதைப் பற்றி நினைவு படுத்த வேண்டாமே.."

"முடியவில்லைடி.. யாருக்காக நீ என்னை விட்டு விலகி ஓடிவந்தாயோ.. அந்த மைதிலியின் சாவிற்கு நீ வரக்கூடாதுன்னு மைதிலியின் அம்மா ஆத்திரப்பட்டாங் களாம்.. அவருடைய அப்பாவும் அதைக் கேட்டுக் கொண்டாராம்.. இது உனக்குத் தெரியுமா..?"

தெரியாதே.. சுமித்ராவிற்கு எதுவும் தெரியாதே.. அவள் என்ன தவறு செய்தாளென்று.. ஒரு இறப்பைக் கூடச் சொல்லாமல் அவளை தள்ளி வைத்தார்கள்..?

"உன்னால்தான் அவங்க மகள் இறந்துவிட்டாள்னு அவங்க நினைக்கிறாங்க.."

"நிஜம்தானே விவேக்.. என்னால்தானே மைதிலி இறந்துபோனாள்.. என்னை நினைத்துக் கொண்டுதானே நீங்க அவளை ஒதுக்கி வைத்தீங்க..?"

"அடித்துப் பல்லைக் கழட்டிவிடுவேன்.. ராஸ்கல்.. ஏண்டி.. எப்போது பார்த்தாலும் இப்படியே பேசித் தொலைப்பாயா..?"

அவனின் கோபம் மயிலிறகாய் மனம் வருட.. சுமித்ரா மெல்ல வாய் பொத்திச் சிரித்தாள்..

வெகுநாட்களாக சிரிப்பையே தொலைத்து விட்டிருந்த முகத்தில் மீண்டும் சிரிப்பு உதயமானதைக் கண்டதும்

அவன் முகம் கனிந்தது..

"ஏண்டி.. இப்படிச் சிரிக்கிறாய்..?"

"ம்ம்.. என்னதான் வெளிநாட்டில் படித்துவிட்டு வந்தாலும் நம்ம ஊர் கலாசாரத்தை நம்ம நாட்டு ஆண்கள் மறப்பதில்லைன்னு நினைத்தேன்.. சிரித்தேன்.."

"ஊஹீம்..? அப்படி என்ன நம்ம ஊர் கலாசாரத்தை நான் பின்பற்றி விட்டேன்..?"

"பெண்களை அடிப்பது.. பல்லைக் கழட்டுவது.. அவங்களை வாடி.. போடின்னு கூப்பிடுவது.."

மீண்டும் கன்னம் குழிய சிரித்த சுமித்ராவை இரு கன்னங்களையும் பிடித்துக் கிள்ளினான் விவேகானந்தன்..

"எது எப்படியோ.. இனி உன்னை கைநழுவ விட மாட்டேன்.."

"நானும் கைநழுவிப் போகமாட்டேன்.."

"போய்த்தான் பாரேன்.. உன்னைக் கொன்று தூக்கி.. என் தோளில் போட்டுக் கொண்டு வந்து விடுவேன்.."

"ஹப்பா.. என்ன மாதிரியான ராட்சஸக் காதல்.."

சுமித்ரா மகிழ்ந்து சிரித்தாள்.. அவள் கன்னத்தில் அவன் மூக்கை உரச.. மூக்கைக் கிள்ளிவிட்டு அவன் காதைப் பிடித்துத் திருகினாள்..

"ஸ்ஸ்.. வலிக்குதுடி.. இப்ப எதுக்கு காதைப் பிடித்து திருகுகிற..?"

"சேட்டை பண்ணினால் இப்படித்தான்.."

"அப்போ.. ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் என் காதைப் பிடித்து திருகுவதுதான் உன் வேலையாக ஆகிவிடும்.."

சுமித்ரா விவேகானந்தனின் விரல் கோத்துக் கொண்டாள்..

"குழந்தை ஆணா.. பெண்ணான்னு கேட்டேன்.. நீங்க பதிலே சொல்லவில்லை.." மெதுவான குரலில்

வினவினாள்..

விவேகானந்தனின் உடல் விறைத்துக் கொள்வதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

"பெண் குழந்தையாம்.."

அவன் குரலால் என்ன உணர்வு தெரிகிறது என்று அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை..

"பெண் குழந்தையாம்னு சொன்னால் எப்படி..? நீங்கள் போய் பார்க்கவில்லையா..?"

சுமித்ராவின் குரலில் குற்றச்சாட்டுத் தெரிந்தது.. விவேகானந்தன் அவளை முறைத்தான்.. அவளும் பதிலுக்கு இமைக்காமல் அவனைப் பார்த்தாள்..

"எப்பப் பார்த்தாலும் என்னையே குற்றம் சொல்வதில் குறியாக இரு.. ஏண்டி குழந்தையை என் கண்ணில் காட்டினால்தானே.. நான் பார்க்க முடியும்..?"

"விவேக்.."

"அவங்கதான் குழந்தையை என் கண்ணில் காட்டமல் வைத்துக் கொண்டு இருக்கிறாங்களே.. அப்புறம் எப்படி நான் குழந்தையைப் பார்க்க முடியும்..?"

"அது உங்க குழந்தை விவேக்.."

"நான் இல்லைன்னா சொன்னேன்..?"

"அதைப் பார்க்க வேண்டும்னு அவர்களிடம் வற்புறுத்திக் குழந்தையைப் பார்ப்பது உங்கள் உரிமை..?"

"அது என்ன தேவைக்கு..?"

"ஊஹீம்.. இது சரியில்லை.."

"நான் எதைச் சொன்னாலும் சரியில்லைன்னுதான் நீ சொல்லுவாய்.."

"பெற்ற குழந்தையைப் பார்க்காமல் ஒரு அப்பா இருப்பாராம்.. அதை ஏன்னு யாரும் கேட்கக் கூடாதாம்.."

"லுக் சுமித்ரா.. இது உரிமைக் குரல் எழுப்ப வேண்டிய விஷயமில்லை.. குழந்தை பிறந்த ஒரு மாதத்தில் மைதிலி இறந்துபோயிருக்கிறாள்.. அந்தக் குழந்தையை மைதிலியின் அம்மாதான் பார்த்துக் கொண்டிருக்காங்க.. ஒரு மாதக் குழந்தையைப் பாதுகாத்து வளர்க்க எனக்கு தெரியுமா..? அதற்கு அவங்க துணை அவசிய மில்லையா..? அவங்கதான் என்னை எதிரியைப் போல பார்க்கிறாங்களே.. அவங்க கோபத்தைத் தூண்டிவிட்டால்.. குழந்தைதான் கஷ்டப்படும்.. அதனால்தான் அந்தப் பிஞ்சுக் குழந்தையைப் பார்க்க நான் முயலவில்லை.. அதற்கு இப்போது பாதுகாப்பான வளர்ப்புத்தாய் தேவை சுமி.."

'வளர்ப்புத்தாய்..' சுமித்ராவின் கண்கள் கரித்தன.. அவளுடைய விவேகானந்தனின் குழந்தை... தாயில்லாமல் தகப்பனின் முகத்தைப் பார்க்காமல்.. பாட்டியின் வளர்ப்பில் வளர வேண்டுமா..? தாய்க்குத் தாயாக.. கண்ணுக்குள் வைத்து சுமித்ரா அந்தக் குழந்தையை வளர்க்க மாட்டாளா..?

"என்ன யோசிக்கிறாய்..?"

"அது நம் குழந்தை விவேக்.. அது நம்மிடம்தான் வளர வேண்டும்.."

சுமித்ரா உறுதியான குரலில் கூறினாள்.. விவேகானந்தன் பதில் சொல்லவில்லை.. யோசனையாய் இருந்தான்..

## 33

சுமித்ராவின் வீடு இருந்த தெருவில் விவேகானந்தனின் கார் நுழைந்தது.. இறங்கிய சுமித்ரா.. விவேகானந்தனைப் பார்த்தாள்..

"உள்ளே வாங்க.."

விவேகானந்தன் மறுக்கவுமில்லை.. தயங்கவு மில்லை.. சுமித்ராவைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் சென்றான்..

மகனை மடியில் வைத்து மசிய வைத்த பருப்புச் சாதத்தை ஊட்டி விட்டுக் கொண்டிருந்த மாலதி.. அவர்கள் இருவரையும் பார்த்தவுடன் புரியாமல் விழித்தாள்..

"என்ன சுமி.. காலையில் ஆபீஸ் போகிறேன்னு சொல்லிவிட்டுப் போன.. இப்போ என்னன்னா மதியமே திரும்பி வந்து நிற்கிற.. வேலைக்குப் போகவில்லையா.. யாரு இவரு..?"

"அண்ணி.. இவர்தான் விவேகானந்தன்.."

மாலதியின் கையிலிருந்த சாப்பாட்டுக் கிண்ணம் நழுவியது.. அவள் குழந்தையை தரையில் அமர வைத்து விட்டு அவசரமாய் எழுந்து நின்றாள்..

"யாருன்னு சொன்னாய்..?"

"விவேகானந்தன்னு சொன்னேன்.."

"மைதிலியின் புருஷனா..?"

மாலதி எரிச்சலுடன் வினவவும்.. விவேகானந்தனின் முகம் மாறியது.. அவன் 'பார்த்தாயா..' என்பது போல சுமித்ராவை முறைத்தான்..

'இதுதான் என் அடையாளமா..?' என்று அவன் பார்வை கேட்டது..

சுமித்ரா உதட்டைக் கடித்துக் கொண்டு மாலதியைப் பார்த்தாள்..

"இவர் என் காதலர் அண்ணி..!"

சுமித்ராவின் குரல் உறுதியாக ஒலித்தது.. விவேகானந்தனின் முகம் ஒளிர்ந்தது.. மாலதி அயர்ந்து போனாள்..

"உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது சுமித்ரா..?"

"இப்போதும் இவர் பின்னால் நான் போகாவிட்டால் கட்டாயம் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் அண்ணி.."

"முட்டாள் மாதிரி பேசாதே.. உனக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை காத்திருக்கிறதுன்னு தெரிந்து கொண்டே இப்படிப் பேசி உன் தலையில் நீயே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளாதே.."

"எனக்கு எப்பேர்ப்பட்ட வாழ்க்கையும் வேண்டாம்.. என் விவேகானந்தனுடன் வாழும் வாழ்க்கைதான் வேண்டும்.."

"சுமித்ரா.. இப்படிப் பேச உனக்கு வெட்கமாக இல்லை..?"

"என் மனதுக்குப் பிடித்தவருடன் வாழப் போகி றேன்னு சொல்ல நான் ஏன் வெட்கப்பட வேண்டும்..?"

"இவர்.. மைதிலியின் புருஷன்.. இன்னொருத்தியின் புருஷனை கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாயா.. இதற்காகவா.. இவரை மைதிலிக்கு விட்டுக் கொடுத்து விட்டு வந்தாய்..? இதற்கு அப்போதே இவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாமே.."

"அதைத்தான் செய்யாமல் விட்டுவிட்டேன் அண்ணி.. அப்படி மட்டும் நான் செய்திருந்தால் நானும் உயிரோடு செத்துக்கொண்டிருக்க மாட்டேன்.. மைதிலியும் செத்திருக்க மாட்டாள்.. எந்தத் தப்பையும் செய்யாமல்.. இவர் குற்றவாளி போல மனம் புழுங்கிக் கொண்டிருக்க மாட்டார்.."

மாலதிக்கு சற்றுநேரம் எதுவுமே விளங்கவில்லை.. சுமித்ரா கூறிய வார்த்தைகளை உட்கிரகித்துக் கொண்ட வளாள்.. அந்தச் செய்தியை நம்பவே முடியவில்லை..

"என்னம்மா சொல்கிறாய்.. மைதிலி செத்து விட்டாளா..?"

"ஆமாம் அண்ணி.."

சுமித்ரா கண்கலங்கினாள்.. மாலதி.. அவள் கைகளைப் பிடித்து தட்டிக்கொடுத்தபடி.. விவேகானந் தனைப் பார்த்து..

"உட்காருங்க.. இது எப்போது நடந்தது..?" என்று கேட்டாள்..

"எட்டு மாதமிருக்கும்.." என்றான் விவேகானந்தன்..

"எங்களுக்குத் தகவல் சொல்லவில்லையே.."

விவேகானந்தன் சுமித்ராவைப் பார்த்தான்.. அவள் வேதனையுடன் மாலதிக்கு மறுமொழி கூறினாள்..

"பெரியப்பாவும்.. பெரியம்மாவும் என்னை வெறுக் கிறாங்களாம் அண்ணி.."

"அது எதுக்காம்..? உன் வாழ்க்கையை விட்டுக் கொடுத்துவிட்டு.. பார்த்துக்கொண்டிருந்த வேலையையும் விட்டுவிட்டு நீ சென்னையை விட்டு ஓடிவந்தாயே.. அதற்காகவா உன்னை அவங்க வெறுக்கிறாங்க..?"

"மைதிலியின் சாவுக்கு நான் காரணம்னு நினைக் கிறாங்களாம்.."

"அவள் இவருடன் வாழ்ந்து ஒரு குழந்தையைப் பெற்றுக்கொண்டதே.. நீ அவளுக்குப் போட்ட பிச்சைன்னு அவங்களுக்குத் தெரியாதா..? என்ன உலகம்டா சாமி இது.. நன்றி கெட்ட உலகம்.."

மாலதி உள்ளே சென்று ஜூஸ் தம்ளர்களுடன் திரும்பி வந்தாள்.. விவேகானந்தனிடம் கொடுத்தாள்..

"உங்களையும் குத்தம் சொல்கிறாங்களா..?" என்ற அவளின் கேள்விக்கு லேசாக தலையசைத்தான் விவேகானந்தன்..

மாலதியின் முகத்தில் சிந்தனை ரேகை படிந் திருந்தது.. அவள் சுமித்ராவைப் பார்த்தபடி விவேகானந் தனிடம் வினவினாள்..

"சுமித்ராவிற்கு கல்யாண ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறதுன்னு உங்களுக்குத் தெரியுமா..?"

"தெரியும்.."

"சுமி சொன்னாளா..?"

"இல்லை.. இங்கிருந்து வந்த தூரத்துச் சொந்தக் காரர் ஒருவர் சொன்னார்.."

"அதைக் கேட்டதும்தான் கிளம்பி வந்தீங்களா..?"

"யெஸ்.."

"சொல்லுங்க.. நீங்க என்ன நினைக்கறீங்க..?"

"எதைப் பற்றி..?"

"சுமித்ராவின் கல்யாணத்தைப் பற்றி.."

"அது என்னுடன்தான் நடக்க வேண்டும் என்பது விதி.. இடையில் அதை சுமித்ரா மாற்றப் பார்த்தாள்.. முடிவு வேறுமாதிரியாகி விட்டது.. இனியும் அவளை இழக்க என்னால் முடியாது.. எனக்கு அவள் வேண்டும்.."

விவேகானந்தன் தெளிவாக அவனுடைய பதிலைச் சொல்லிவிட்டான்.. மாலதி, சுமித்ராவைப் பார்த்தாள்..

"என் மனதில் விவேக்கைத் தவிர வேறு யாரும் இல்லைன்னு உனக்கே தெரியுமே அண்ணி, இவரை நினைத்துக் கொண்டே மீதி வாழ்க்கையை வாழ்ந்து

முடித்து விடலாம்னு முடிவு பண்ணியிருந்தேன்.. இப்போது இவருடன் சேர்ந்து வாழும் வரம் கிடைத்திருக்கிறது.. அதை மிஸ் பண்ண முடியாது அண்ணி.."

சுமித்ரா இறைஞ்சினாள்.. மாலதி சிந்தித்தாள்..

34

சுமித்ராவின் மனதை மாலதி நன்கு அறிவாள்.. அதே சமயம் தன் கண்வனின் கனவையும் அவள் அறிந்து வைத்திருந்தாள்..

"சுமித்ரா கண்ணுக்கு நிறைஞ்ச கணவனோட எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைப்பது போல உயர்வான வாழ்க்கையை வாழ வேண்டும் மாலு.."

இதைச் சொல்லும்போதே சுதர்சனத்தின் கண்கள் கனவில் மிதக்கும்.. குரல் ததும்பும்..

விவேகானந்தன் அழகன்தான்.. தேவேந்திரனை விடப் படித்தவன்தான்.. பணக்காரன்தான்.. ஆனால் மனைவியை இழந்தவன்.. ஒரு குழந்தைக்குத் தகப்பன்.. அவனுடன் சுமித்ராவை இணைகூட்டிப் பார்க்க கொஞ்சம்கூட சுதர்சனம் விரும்ப மாட்டான்..

இத்தனைக்கும் மேலாக மைதிலியின் கணவனுக்கு சுமித்ராவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தால் மோகன ரங்கத்தின் பகை வரும் சூழ்நிலை உருவாகிவிட்டது..

சுதர்சனத்தையும் சுமித்ராவையும் பெற்றவர்களைப் போலக் கவனித்துக் கொண்டவர்கள் மோகனரங்கமும் பூங்கோதையும்..

அவர்களின் மருமகனுக்கு தன் தங்கையை சுதர்சனம் மணம் முடித்துக் கொடுக்க மாட்டான்..

"என்ன செய்வது..?"

"ஏதாவது செய் அண்ணி.."

சுமித்ரா மாலதியின் முன்னால் மண்டியிட்டு அமர்ந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.. மாலதி பெருமூச்சுடன் விவேகானந்தனை நிமிர்ந்து பார்த்தாள்..

"அண்ணா.. எனக்கு என்ன சொல்வதுன்னே தெரியவில்லை.. சுமியின் காதலும் மனமும் எனக்குத் தெரியும்.. அவளுடைய அண்ணனுக்குத் தெரியாது.. தெரிந்தால் துடித்துப் போய்விடுவார்னு நினைத்து மறைத்து விட்டோம்.. இப்போது அதுவே ஒரு மைனஸ் பாயிண்டாக ஆகிவிட்டது.."

"எதனால் அப்படிச் சொல்கிறீங்க..?"

"என்னைப் பொறுத்தவரை நீங்கள்தான் சுமியின் வாழ்க்கை.. நான் அப்படித்தான் நினைப்பேன்.. உங்களைப் பார்ப்பேன்.. ஆனால், சுமியின் அண்ணனின் பார்வை வேறாக இருக்கும்.."

"எப்படி..? எனக்குப் புரியவில்லை.. புரியும்படி சொல்லுங்க.."

மாலதி சங்கடப்பட்டாள்.. விவேகானந்தனிடம் உள்ள நிலைமையை எப்படி உடைத்துச் சொல்லுவது என்று கைபிசைந்தாள்..

"சும்மா சொல்லுங்க.. எது வந்தாலும் ஃபேஸ் பண்ணித்தானே ஆகவேண்டும்..?"

"அண்ணா.. அவருக்கு மைதிலியின் பேரண்ட்ஸ் மீது பாசம் ஜாஸ்தி.."

"அவருக்கு மட்டும்தானா..? சுமித்ராவுக்கும் பாசம் அதிகம்தானே.. அதனால் வந்த வினைதானே எல்லாமும்.."

"மைதிலியையும் அவர் கூடப் பிறந்த தங்கையைப் போலத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்.."

"அவள்.. அவருடைய கூடப்பிறந்த தங்கையை சென்னையை விட்டு விரட்டியவள்.. அது அவருக்குத் தெரியாது.."

"இனி சொல்ல முடியுமா அண்ணா..? அதைச் செய்தவள் போய்ச் சேர்ந்துவிட்டாள்.. இரக்கமும்.. நியாயமும் இப்போது அவள் பக்கம் திரும்பிவிட்டதே.."

மாலதியின் புத்திகூர்மையைக் கண்டு விவே கானந்தன் வியந்து போனான்.. எவ்வளவு சரியாக நிலைமையை உணர்ந்து சொல்கிறாள் இவள்.. மாலதியின் மீது அவனுக்கு மதிப்பு கூடியது..

"சரியாகச் சொன்னீங்க மாலதி.. இதில் பாதிக்கப் பட்டவங்க நானும் சுமித்ராவும்தான்.. அவள் சுமித்ராவை தூத்துக்குடிக்கு விரட்டினாள்.. என்னை கனடாவுக்கு ஓட வைத்தாள்.. இப்போது செத்தது அவளாகப் போய் விட்டாளே.. அதனால் அனுதாபமெல்லாம் அவள் பக்கம் தானே போகும்.. உயிருடன் செத்துக்கொண்டிருக்கும் நாங்கள்தானே பாவிகளாக மற்றவர்களின் கண்ணுக்குத் தெரிவோம்..?"

"சரியாகச் சொன்னீங்க.."

"ஆக்சுவலாய் மாலதி.. நான் சுமித்ராவை.. என் வாழ்வில் திரும்ப சந்திக்க வேண்டும்ன்னு நினைக்கவே யில்லை.. ஆனால்.. விதி அவளைத் தேடி வரும்படி என்னை வைத்துவிட்டது.. இது இந்த உலகத்திற்குத் தெரியுமா..?"

"நிச்சயம் தெரியாது அண்ணா.. இதோ.. கட்டியவளை மனம் துடிக்க வைத்துச் சாகடித்துவிட்டு காதலித்தவளைத் தேடி சந்தோஷம் கொண்டாட ஓடி விட்டான்னு தான் இந்த உலகம் பேசும்.."

சுமித்ரா அழுதுவிட்டாள்.. மாலதி அவளை இரக்கத்துடன் பார்த்தாள்.. விவேகானந்தன் சூன்யத்தை வெறித்தான்..

"சுமித்ரா பட்ட பாடு எனக்குத் தெரியும் அண்ணா.. அவள் அணு அணுவாய் செத்துக் கொண்டிருந்தாள்.. அப்படிப்பட்ட உயிர்துடிக்கும் வேதனையைத் தெரிந்தே மைதிலி.. சுமித்ராவுக்குக் கொடுத்தாள்.. இதை யாரிடம் போய் நாம் சொல்ல முடியும்..?"

"அவர்கள் என்ன பேசுகிறார்கள் தெரியுமா..? சுமி என்னை மயக்கிவிட்டாளாம்.. கட்டிய மனைவியை மறக்க வைக்க விட்டாளாம்.. கனடாவுக்கு நான் ஓடக் காரணமே சுமித்ராதானாம்.. மைதிலியின் மனவேதனைக்கு சுமிதான் காரணமாம்.."

"சொல்லுவாங்க அண்ணா.. ஏன் சொல்ல மாட்டாங்க.. அவங்க இதையும் சொல்லுவாங்க.. இதுக்கு மேலயும் சொல்லுவாங்க.. நரம்பில்லாத நாக்குத்தானே.. அது நான்கு விதமாகப் பேசத்தான் செய்யும்..?"

"நாங்கள் எது வந்தாலும் எதிர்த்து நிற்பதாகத்தான் இருக்கிறோம் மாலதி.."

"மைதிலிக்கு சுமித்ரா நன்மைதான் செய்தாள்.. அது அவளுக்கும் தெரியும்.. இப்போது நீங்கள் சேர்ந்து வாழத் துடிக்கறீங்க.. நான் என்னாலான உதவிகளைக் கட்டாயம் செய்வேன்.."

விவேகானந்தன் நன்றியுடன் மாலதியைப் பார்த்தான்.. அவளோ கவலை விலகாத முகத்துடன் அவனைப்

பார்த்தாள்..

35

"இன்னும் கவலையாகவே இருக்கிறீங்களே.. ஏன்..?"

"உங்களை விடோயர்னுதானே இந்த உலகம் சொல்லும்..?"

"என் சுமி சொல்ல மாட்டாள்.."

"அவருடைய அண்ணன் சொல்லுவார்.."

விவேகானந்தன் அடிபட்ட பார்வையுடன் மாலதியைப் பார்த்தான்..

மாலதி சங்கடத்துடன் தொடர்ந்து பேசினாள்..

"நீங்க மெச்சூர்டு மேன்.. இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.. சுமியின் அண்ணனுக்கு தங்கையின் மேல் பாசம் அதிகம்.. அவளை இரண்டாம் தாரமாய் கல்யாணம் பண்ணிக் கொடுக்க யோசிப்பார்.."

விவேகானந்தன் விட்ட பெருமூச்சு சுமித்ராவின் இதயத்தைச் சுட்டது.. அவளால் அல்லவோ விவே கானந்தன் இந்த சுடுசொற்களைச் சந்திக்கிறான்..

"அண்ணி.. என் விவேக்கிற்கு மனைவியாகப் போவதென்பது மட்டுமே எனக்கு முக்கியம்.. அது நூறாவது மனைவியாக இருந்தாலும் சரி.."

விவேகானந்தனின் முகம் மலர்ந்துவிட்டது.. மாலதி கூட லேசாக புன்னகை செய்தாள்..

"பார்க்கலாம்.. இது எப்படி கைகூடுமென்று தெரிய வில்லை.. ஆனால்.. நான் என்னாலான முயற்சிகளைக் கட்டாயம் செய்வேன்.."

விவேகானந்தன் எழுந்து கொள்ளப் போகும்போது.. நரேந்திரன் தளர்நடையோடு அவனருகில் செல்ல..

குனிந்து குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்..

"இவன் பெயர் என்னன்னு தெரியுமா..?" மாலதி சிரித்தாள்..

"என்ன பெயர்..?" விவேகானந்தனின் முகத்தில் ஆவல் தெரிந்தது..

"எல்லாம் உங்கள் சுமித்ராதான் பெயர் வைத்தாள்.." மாலதி மர்மத்தை அதிகப்படுத்தினாள்..

"என்ன பெயர்னுதான் சொல்லு சுமி.." எதிர்பார்ப் போடு விவேகானந்தன் வினவினான்..

"நரேந்திரன்.." சுமித்ராவின் முகம் சிவந்துவிட்டது..

விவேகானந்தனின் விழிகள் காதலுடன் சுமித்ராவை நோக்கின..

'இவள் என்னை எப்போதும் மறந்ததில்லை..'

இந்த இதமான நினைவுடன் குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு கிளம்பினான் விவேகானந்தன்.. வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தாள் சுமித்ரா..

மாலதி கன்னத்தில் கையை வைத்து யோசனையில் ஆழ்ந்திருந்தாள்..

"என்ன அண்ணி.. இப்படி உட்கார்ந்துவிட்ட..?" சுமித்ரா அவளருகில் உட்கார்ந்தாள்..

"இந்த கல்யாணத்தை எப்படி நடத்தப் போகிறேன்னு நினைத்தால் அடிவயிறு கலங்குது சுமி.."

சுமித்ராவிற்கு மட்டும் எந்தக் கலக்கமும் இல்லை.. அவள் தெளிவாக இருந்தாள்.. மாலதி சாப்பிடக் கூப்பிட்ட போது போய் சாப்பிட்டாள்.. குழந்தையை பக்கத்தில் போட்டுத் தட்டிக் கொடுத்துக் கொண்டே தூங்கி விட்டாள்..

மாலையில் வீடு திரும்பும் கணவனிடம் பேச வேண்டிய வார்த்தைகளை ஒத்திகை பார்த்துக் கொண்டே வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள் மாலதி..

தனியாக திரும்புவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தவள் அவன் தேவேந்திரனின் காரில் வந்து இறங்கவும் தடுமாறி விட்டாள்..

"சுமி.. வீட்டில் இருக்கிறாளா மாலதி..?"

சுதர்சனம் காரை விட்டு இறங்காமல் பதட்டத்துடன் கேட்டான்.. தேவேந்திரனின் முகமும் பதட்டத்தைக் காட்டியது..

"வீட்டில்தான் இருக்கிறாள்.." என்று மாலதி கூறியதும் இருவரும் ஆசுவாசப் பெருமூச்சை விட்டபடி காரை விட்டு இறங்கினார்கள்..

"மாப்பிள்ளையோடு காலையில் பேசிக் கொண்டிருந் தாளாம்.. மனசு சரியில்லாமல் இருந்தாளாம்.. ஆபீஸிற்கு வர வேண்டாம்.. வீட்டுக்குப் போன்னு மாப்பிள்ளை சொன்னாராம்.. எனக்கு போன் பண்ணி காலையிலே விஷயத்தை சொல்லிவிட்டார்.. நான் உன்னிடம் கேட்ட போது அவள் வீட்டுக்கு வரவில்லைன்னு சொன்னாயா.. எனக்குக் கையும் ஓடவில்லை.. காலும் ஓடவில்லை.."

"நீங்க கேட்டபோது அவள் வீட்டுக்கு வரவில்லை.. மதியம்தான் வந்தாள்.."

"மதியம் வரைக்கும் எங்கே போனாள்.."

"யாரோ ஒரு ஃப்ரெண்டை வழியில் பார்த்து விட்டாளாம்.. பேசிக்கொண்டிருந்தாளாம்.."

உண்மையும் இல்லாத.. பொய்யும் இல்லாத பதில்.. சுதர்சனம் சற்று ஆசுவாசமானான்..

"அப்பாடி.. இப்பத்தான்.. நிம்மதியாச்சு.. நீ சுமித்ரா இன்னும் வீட்டுக்கு வரவில்லைன்னு சொன்னதும் பதறிப் போய் மாப்பிள்ளைக்கு போன் போட்டேன்.. அவர் ஹார்பரில் இருந்தார்.. நான் சொன்னதைக் கேட்டதும் உடனே காரை எடுத்துக் கொண்டு என்னைத் தேடி வந்து விட்டார்.. இந்நேரம் வரைக்கும் நானும் அவரும் சுமித்ராவைத் தேடித்தான் அலைந்தோம்.. எங்கேயும் அவளைக்

காணோம்.. எதற்கும் ஒருதடவை வீட்டுக்கு அவள் வந்துவிட்டாளான்னு பார்த்துவிட்டுப் போக லாம்ன்னு நினைத்து வந்தோம்.."

தேவேந்திரன் இயல்பாக முன்னறை சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.. அடிக்கடி வீட்டுக்கு வந்து போகிறவன் என்பதனால் அவனிடம் பழக்கமாயிருந்த நரேந்திரன் அவனைப் பார்த்துச் சிரிக்க.. கை நீட்டினான்.. அவன் கைகளுக்குள் புகுந்து கொண்ட குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்..

"டிரஸ் அழுக்காகி விடப் போகுது மாப்பிள்ளை.."

"இருக்கட்டும்.. பரவாயில்லை.."

தேவேந்திரனைப் பார்த்துக் கொண்டே காபி டிரேயுடன் வந்த மாலதியின் மனம் கனத்தது..

கோடீஸ்வரன்.. உறவினராக இருந்தாலும்.. சமதையாய் யாரிடமும் பேசாதவன்.. நின்று பேச நேரமில்லாதவன்.. இன்றைக்கு நாள் பூராவும் தூத்துக்குடியைச் சுற்றி அலைந்திருக்கிhறன்.. அவனை அப்படித் தேட வைத்து விட்டு.. சுமித்ரா அவனைப்

பற்றிய நினைவேயில்லாமல் விவேகானந்தனுடன் உறவு கொண்டாடிக் கொண்டிருக்கிறாள்..

ஆனாலும் மாலதியால் சுமித்ராவைக் குற்றம் சொல்ல முடியவில்லை..

## 36

தேவேந்திரனின் கண்கள் சுமித்ராவைத் தேடின.. அதைப் புரிந்துகொண்ட சுதர்சனம் மனைவியைப் பார்த்தான்..

"சுமித்ரா எங்கே..?"

"உடம்பு சரியில்லை போல.. நரேனுடன்தான் தூங்கிக் கொண்டிருந்தான்.. இவன் எழுந்து வந்துவிட்டான்.. அவள் இன்னும் எழுந்து கொள்ளவில்லை.."

"உடம்புக்கு என்ன..?"

சுதர்சனம் கவலையுடன் சுமித்ராவின் அறைக்குள் போனான்.. கண்மூடிப் படுத்திருந்தவளின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தான்... சுமித்ரா விழித்துக் கொண்டாள்.. தமையனைப் பார்த்ததும் எழுந்து அமர்ந்தாள்..

"உடம்புக்கு என்னம்மா..?"

"ஒன்றுமில்லையே.."

"உன் அண்ணி.. உனக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாளே.."

மாலதியின் பொய்யைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளான சுமித்ரா..

"தலைவலி அண்ணா.." என்றாள்..

"மாத்திரை போட்டுக்கிட்டியா.."

"ம்ம்.."

"இப்போது எப்படியிருக்கு..?"

"பரவாயில்லை.."

"அப்போ.. எழுந்து ஹாலுக்கு வா.. மாப்பிள்ளை வந்திருக்கிறார்.. அவருடன் இரண்டு வார்த்தை பேசி விட்டு வந்துவிடு.."

"மாப்பிள்ளையா..?"

சுமித்ரா சட்டென்று சுதாரித்துக் கொண்டாள்.. தேவேந்திரன் வந்திருக்கிறானா..? அவசரப்பட்டு ஒரு பொய்யுடன் நிறுத்திக் கொண்டதற்கு தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.. தலைவலி இன்னும் இருக்கிறது என்று பொய்யைத் தொடர்ந்திருக்கலாமே..

மாட்டிக் கொண்டவளாய் அவள் எழுந்து வேறு வழியில்லாமல் ஹாலுக்குப் போனாள்.. அவனைப் பார்த்ததும் முகம் மலர்ந்த தேவேந்திரனிடம் ஒப்புக்காக..

"வாங்க சார்.." என்றாள்..

"ஏன் மதியம் லேட்டாக வீட்டுக்கு வந்தாய்..?"

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்ற யோசனையுடன் மாலதியைப் பார்த்தாள் சுமித்ரா.. அவள் கண்களில் தெரிந்த சமிக்ஞையை வைத்து எதையும் அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. எனவே..

"அண்ணி.. சொல்லியிருக்குமே.." என்று பொதுவாக சொல்லி வைத்தாள்..

மாலதியைப் பார்த்தான்.. மாலதியின் விழிகளில் தெரிந்த பாராட்டைப் பார்த்ததும்.. நிம்மதி வந்தது..

'ஹப்பா.. நான் சரியாகத்தான் சொல்லியிருக்கிறேன்..'

தேவேந்திரனின் கூரிய பார்வை சுமித்ராவின் முகத்தை ஆராய்ந்து காபியை பருகியபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் காலிக் கோப்பையை டீப்பாயின் மேல் வைத்துவிட்டு நிமிர்ந்து அமர்ந்தான்..

"ஆர் யூ ஆல்ரைட் நவ் சுமி..?"

"யெஸ்.."

"வேறு ஒன்றுமில்லையே..?"

"நத்திங்.."

"ஓகே.. நான் கிளம்புகிறேன்.."

அவன் எழுந்து கொண்டான்.. அவனை வழியனுப்பப் போவதைப் போல் சுமித்ரா அவனைத் தொடர்ந்து செல்ல.. இங்கிதம் தெரிந்தவனாய் சுதர்சனம் பின்தங்கிவிட்டான்.. மாலதிக்கு இங்கிதமும் தெரியும்.. சுமித்ராவின் மனமும் தெரியும் என்பதால் அவளும் கணவனுடன் அமர்ந்து விட்டாள்..

வாசல்படியை விட்டு இறங்கி.. வீட்டின் முன்பக்கம் இருந்த தோட்டத்தின் அருகில் வந்ததும்.. சுமித்ரா தயங்கி நின்றாள்.. தேவேந்திரன் அவள் முகம் பார்த்தான்.. எதையோ சொல்ல விரும்புவதை சுமித்ராவின் முகம் அவனுக்கு உணர்த்தியது..

"என்ன சுமித்ரா..?" என்று கேட்டான்..

"உங்களிடம் பேச வேண்டும்.." சுமித்ரா கூறினாள்..

"காலையில் பேசினாயே.. அதைப் பேசப் போகி றாயா..?"

"ஆமாம்.."

"அதை நான் மைண்ட் பண்ணிக் கொள்வதாக இல்லை.. நடந்ததை மறந்துவிட்டு வெள்ளிக்கிழமையில் என் வீட்டிலிருந்து உன்னைப் பெண் பார்க்க வரப் போகிறார்கள்.. அதற்கு தயாராகிக் கொள்.."

லேசாக இருள்படிய ஆரம்பித்திருந்த மாலை நேரத்தில் தோட்டத்துச் செடிகளின் மத்தியில் நின்று கொண்டிருந்த சுமித்ரா மிக அழகாக இருந்தாள்..

தூங்கி எழுந்தவுடன்.. முகம்கூடக் கழுவாமல்.. தலை கலைந்த தோற்றத்துடன் சாதாரண காட்டன் நைட்டியுடன் எப்படி இவளால் இவ்வளவு அழகாக தோற்றமளிக்க முடிகிறது என்று மனத்திற்குள் ஆச்சரியப் பட்டுப் போனான் தேவேந்திரன்..

"சார்.. காலையில் நாம் பேசிக் கொண்டிருந்தபோது இருந்த நிலைமை வேறு.. இப்போதிருக்கும் நிலைமை வேறு.."

"என்ன சொல்கிறாய்..?"

"நான் ஃப்ரெண்டுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்தேனே.. அந்த ஃப்ரெண்ட் வேறு யாருமில்லை.. விவேகானந்தன்தான்.."

"வாட்..?"

"யெஸ்.. விவேக் என்னைத்தேடி வந்துவிட்டார்.."

தேவேந்திரனின் முகம் மாறிவிட்டது.. அவன் விழிகள் கோபத்துடன் சுமித்ராவை முறைத்தன..

"நீ படித்த பெண்.. அறிவாளி.. காதல் வந்து விட்டால் சுயபுத்தி தொலைந்து போய் விடுமோ..? கொஞ்சம்கூட யோசித்துப் பார்க்க மாட்டாயா..?"

"இதில் யோசிக்க என்ன இருக்கிறது..? அவரைத் தான் நான் காதலிக்கிறேன்.. இதை உங்களிடம் காலையிலேயே தெளிவாகச் சொல்லிவிட்டேன்.."

"முட்டாளா நீ.. காதலுக்காக ஏற்கெனவே கல்யாணமான ஒருவனுக்கு தாலி கட்டாத மனைவியாக வாழப் போகிறாயா..?"

"என்னால்தான் அவர் மைதிலியின் கழுத்தில் தாலி கட்டினார்.."

"எதுவாக இருந்தாலும் சட்டப்பூர்வமான மனைவி அவள்தானே.. உன்னையே நீயேன் ஏமாற்றிக் கொள் கிறாய்..? அவனைக் காதலித்த பாவத்திற்காக உன்னை நீ தாழ்த்திக் கொள்ளப் போகிறாயா..?"

தேவேந்திரனின் கோபம் சுமித்ராவைப் பாதிக்க வில்லை.. அவள் திடத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. அதைக் கண்ட தேவேந்திரனின் கோபம் கூடியது.. குறையவில்லை..

# 37

"என் விவேக்குடன் வாழ்வதில் உயர்வு தாழ்வை நான் பார்க்க மாட்டேன் சார்.. அவர் மட்டும்தான் எனக்கு முக்கியம்.. அவருடன் மட்டும்தான் என்னால் வாழமுடியும்.. தயவுசெய்து இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.."

தேவேந்திரன் கோபத்துடன் வாய்க்குள் எதையோ முணுமுணுத்தான்.. முகச்சுளிப்போடு சுமித்ராவை முறைத்தான்..

"காதல் சுயமரியாதையையும் தன்மானத்தையும் குழிதோண்டி புதைக்க வைத்துவிட்டதா..?"

"இல்லை.. விவேக்கை காதலித்த மனது வேறு ஒருவரை காதலிக்காது.. அவருடன் மட்டும் தான் என்னால் வாழ முடியும்.. வேறு ஒருவருடன் என்னால் வாழ முடியாது.. இது என் சுயமரியாதையையும் தன்மனாத்தையும் மேம்படுத்தும் விஷயம்தானே.. குறைக்கும் விஷயம் இல்லையே..."

"பைத்தியம் போல் பேசாதே.. மைதிலியைத்தான் அவனுடைய மனைவியென்று சொல்வார்கள்.. உனக்கு வேறு பெயர் சொல்வார்கள்.. இது உனக்குத் தேவையா..?"

"விவேக்.. எனக்குத் தேவை சார்.."

"சுமி.. உன்னை என்ன சொல்லித் திட்டுவதென்றே எனக்குத் தெரியவில்லை.. மைதிலிக்காக அவனை விட்டு கொடுத்ததாகச் சொன்னாயே.. இப்போது நீயே அவளின் கல்யாண வாழ்வைக் குலைக்கலாமா..?"

'மைதிலி..!' தோழியின் நினைவில் சுமித்ராவின் கண்கள் கலங்கி விட்டன.. அவள் மெதுவான குரலில் கூறினாள்..

"மைதிலி இப்போது உயிரோடு இல்லை சார்.."

"வாட்..?"

தேவேந்திரன் இரண்டாவது முறையாக அதிர்ந்தான்.

"இது எனக்குத் தெரியாதே..."

"எங்களுக்கே தெரியாதபோது உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"உங்கள் குடும்பத்திற்கு அவர்கள் சொந்தம் தானே..?"

"ஆமாம்.. ஆனால், மைதிலி இறந்துபோன தகவலை எங்களுக்கு யாரும் சொல்லவில்லை.."

"ஏன்..?"

"தெரியவில்லை.. அவள் மன அமைதியில்லாத வாழ்வை வாழ்ந்திருக்கிறாள்.."

"கட்டாயப்படுத்தி.. ஒருவனிடமிருந்து காதலியைப் பிரித்துவிட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் மன அமைதி எங்கேயிருந்து வரும்..?"

தேவேந்திரனுக்கு மைதிலியின் செயலில் உடன்பாடு இல்லை.. அவனுக்கு மைதிலியைப் பிடிக்காமல் போய் விட்டதை சுமித்ரா அறிவாள்..

"அவள் மேல் குறைசொல்லி ஆகப் போவதென்ன.. பாவம்.. அவள்.."

'நீ உனக்காக பரிதாபப்பட்டுக் கொள் சுமித்ரா.. அவளுக்கென்ன நினைத்ததை நடத்திவிட்டுப் போய் விட்டாள்.. இப்போது நீதான் அவளால் பாதிக்கப்பட்டு நிம்மதியில்லாமல் நிற்கிறாய்..'

"அவள் செத்துவிட்டாளே சார்.."

"உன்னை உயிரோடு சாகடித்தாளே.. அதை மறந்து விட்டாயா..? அவள் உயிரோடு இருந்தபோதும் உனக்குத் துன்பம்தான்.. இப்போது போய்ச் சேர்ந்த பின்னாலும் உனக்குத் துன்பம்தான்.."

"என்னால் அப்படி நினைக்க முடியவில்லையே சார்.."

"அது உன் மனது.. நீயேன் இவ்வளவு நல்லவளாக இருந்து தொலைக்கிறாய் சுமி.. உன் அருமை யாருக்கும் தெரியவில்லை.."

"என் விவேக்கிற்குத் தெரியும்.."

தேவேந்திரன் பெருமூச்சு விட்டான்.. சுமித்ராவின் மனது தெரிந்த பின்பும் அவளை கைபிடிக்க அவன் தயாராகவே இருந்தான்... ஆனால், அப்போது விவேகானந்தன் மைதிலியின் கணவனாக இருந்தான்.. இப்போதே மனைவியை இழந்தவனாக இருக்கிறான்..

இந்த நிலைமையில் சுமித்ராவை வற்புறுத்த தேவேந்திரனால் எப்படி முடியும்..? அவன் கண்ணியவான்..

"விவேகானந்தன் உன் காதலனாக இருக்கலாம்.. ஆனால், இப்போது அவன் ஒரு விடோயர்.. ஒரு குழந்தைக்கு தகப்பன்.. நீ அவனை இரண்டாம் தாரமாக கல்யாணம் பண்ணிக் கொண்டு அவனுடைய குழந்தைக்கு சித்தியாகப் போகிறாயா..? யோசித்துப் பார்.."

"அவர் என் விவேக்.. அவரின் குழந்தை என் குழந்தை.."

அந்த நொடியில் விவேகானந்தனின் மீது அளவு கடந்த பொறாமை தேவேந்திரனுக்கு ஏற்பட்டது.. இப்படி ஒரு காதலைப் பெற அவன் என்ன தவம் செய்தான் என்று தேவேந்திரன் நினைத்துக் கொண்டான்..

"விவேகானந்தன் கொடுத்து வைத்தவன்.."

"உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவளும் கொடுத்து வைத்தவள்தான் சார்.."

"அந்த கொடுத்து வைத்தவளாக நீ இருக்க மறுத்து விட்டாயே.."

"நான் உங்களை மறுக்கவில்லை சார்.. விவேக்கைத் தவிர வேறு ஒருவரின் மேல் எனக்குக் காதல் வந்து தொலைக்காது சார்.. நான் என்ன செய்யட்டும்..?"

"சுமி.. இனிமேலும் நீ சோதனைகளைச் சந்திக்க வேண்டியதாகத்தான் இருக்கும்.."

"சந்திப்பேன் சார்.. அதற்கான மனபலம் எனக்கு வந்து விட்டது.. என் விவேக் எனக்குத் திரும்பவும் கிடைத்து விட்டார்.. அவருக்காக நான் எதையும் தாங்கிக் கொள்வேன்.."

"மைதிலியின் பேரண்ட்ஸ் உன்னைத் தூற்று வாங்கம்மா.."

"தூற்றட்டும்.."

"விவேகானந்தனின் அப்பா.. தங்கை மகளை நீதான் நிம்மதியாக வாழவிடலைன்னு நினைத்து உன்னை வெறுப்பார்.."

"வெறுக்கட்டும்.."

"இந்தக் கல்யாணம் உன் அண்ணனுக்கு மனநிறைவைத் தராது.."

எல்லாவற்றிற்கும் பதில் சொன்ன சுமித்ராவினால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.. அவள் இதழ்களில் துயரப் புன்முறுவல் ஒன்று உதித்தது..

"தெரியும் சார்.. நான் என் அண்ணனுக்கு மனக் கஷ்டத்தைக் கொடுக்கப்போகிறேன்.. அவன் தாய்க்கு தாயாய் தந்தைக்கு தந்தையாய் நின்று என்னை வளர்த்தவன்.. அவனுக்கு பிடித்தமில்லாத ஒன்றை முதன் முதலில் செய்யப் போகிறேன்.." அவள் விழிகளில் நீர் அரும்பியது..

38

சுமித்ராவின் குரல் கம்மியிருந்ததை தேவேந்திரனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. பாவம் இந்தப் பெண் என்று அவன் நினைத்துக் கொண்டான்.. நேசம் என்பதுதான் எவ்வளவு கொடியதாக இருக்கிறது..? இவள் விவேகானந் தனையும் நேசிக்கிறாள்.. இவளுடைய அண்ணனையும் நேசிக்கிறாள்.. விவேகானந்தனை இழக்கவும் இவளால் முடியாது... அதேசமயம் இவளுடைய அண்ணனுக்கு வேதனையைத் தரவும் இவள் சிரமப்படுவாள்..

எல்லாமே எல்லோருக்கும் எளிதில் கிடைத்துவிடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் தேவேந்திரன்.. இப்போது சுமித்ராவின் காதல் அவனுக்குக் கிடைக்காமல் போவதைப் போல..

"நீ கவலைப்படாதே.. உன் அண்ணனிடம் நான் பேசுகிறேன்.." தேவேந்திரன் ஆறுதலாய் கூறினான்..

"வெள்ளிக்கிழமை உங்கள் வீட்டார் வருவார்கள் என்கிறீர்களே.."

சுமித்ராவின் குரல் உடைந்தது..

"அவர்கள் வரமாட்டார்கள்.. நான் பார்த்துக் கொள் கிறேன்.."

"சார்.."

"சொல் சுமித்ரா.."

"ஐ ஆம் ஸாரி.."

"இட்ஸ் ஆல்ரைட்.."

ஒவ்வொரு மன்னிப்பின் பின்னாலும் எவ்வளவு குற்ற உணர்வு நிரம்பியிருக்கிறது என்று தேவேந்திரன் அன்று அறிந்துகொண்டான்..

ஒவ்வொரு பரவாயில்லை என்ற வார்த்தையின் பின்னாலும் எவ்வளவு வேதனை நிரம்பியிருக்கிறது என்று சுமித்ரா அன்று அறிந்து கொண்டாள்..

தேவேந்திரன் போய் விட்டான்.. தோட்டத்து முல்லைச் செடியிலிருந்து பூவாசம் மிதந்து வந்து சுமித்ராவின் நாசியை வருடியது.. அந்த சுகந்தமான நறுமணம் அவள் மனதில் இன்பமும் துன்பமும் சேர்ந்த கலவையை ஏற்படுத்தியது..

அவள் பின்னாலிருந்து காலடியோசை கேட்டது.. மெல்லிய கொலுசின் சத்தம் வருவது மாலதி என்பதை அவளுக்கு உணர்த்தியது..

"அண்ணன் போய்விட்டாரா..?"

"ம்ம்ம்.."

"பாவம்.."

"ம்ச்ச்.."

சுமித்ராவின் குரலில் தொனித்த குற்றஉணர்வை மாலதி புரிந்துகொண்டாள்.. யாரையும் வேதனைப்படுத்த சுமித்ரா என்றுமே விரும்பமாட்டாள்.. மைதிலியின் காதலன் தன்னைக் காதலித்ததால் மைதிலி பட்ட வேதனையைத் தாங்க முடியாமல் தன் காதலையே தியாகம் செய்து விட்டு வந்தவளாயிற்றே..

"சொல்லி விட்டாயா..?"

"ம்ம்.."

"என்ன சொன்னார்..?"

"விலகிக் கொள்வதாகச் சொல்லிவிட்டார்.."

"தேவா அண்ணன் ஜென்டில்மேன்.."

"நிச்சயமாய்.."

"என் அண்ணனிடம் சொல்லிவிட்டாய்.. உன் அண்ணனிடம் எப்படிச் சொல்வது..? எனக்கு வாய் வரவில்லை.."

"உங்க அண்ணனே பேசுவதாக சொல்லியிருக்கிறார்.."

"நிஜமாகவே.. காதலித்த பெண்ணின் காதலுக்காக அவளுடைய வீட்டில் யார் பேசுவார்கள்..? தேவா அண்ணனை நினைக்கும்போது சிலிர்த்துப் போகிறது.."

"ரியலி.. ஹி இஸ் எ ஜெம்.."

"சரி.. உள்ளே வா.. டி.வி. பார்க்கலாம்.."

"வேண்டாம்.. இப்படிக் காற்றாட கொஞ்சநேரம் உட்கார்ந்து விட்டு வருகிறேன்.."

அவள் மனம் தனிமையை நாடுவதை உணர்ந்து கொண்டாள் மாலதி.. உட்காரட்டும்.. ஒரே நாளில் இத்தனை நிகழ்வுகளைச் சந்தித்திருக்கிறாள்.. தனிமை அவளுக்குத் தேவைதான் என்று நினைத்தவளாய்.. சுமித்ராவை வற்புறுத்தாமல் வீட்டிற்குள் போய்விட்டாள் மாலதி..

வாசல் படியில் அமர்ந்த சுமித்ரா.. முழங்கால்களைக் கட்டி அதில் முகம் பதித்துக் கொண்டாள்.. சிலுசிலுவென வந்த காற்று அவள் உடல் தழுவிச் சென்றது.. கண்களை மூடிக்கொண்டாள்.. மனதில் மைதிலியின் முகம் வந்தது..

'ஏன் செத்துப்போனாய் மைதிலி..' சுமித்ராவின் இமையோரம் நீர் நிரம்பி வழிந்தது..

அவளுடன் விளையாடிய சிறுவயதுத் தோழி மைதிலி.. தாய் தந்தையை இழந்து நின்றபோது.. என் பெற்றோர் இனி உன் பெற்யோர் என்று தன் பெற்றவர்களை விட்டுக் கொடுத்த மைதிலி.. மாலதியின் சுபாவத்தைப் பற்றிக் கேட்டதும் கொதித்துப் போன மைதிலி.. ஆதரவாய் கரம் நீட்டித் தன்னுடன் அவளை அழைத்துக் கொண்ட மைதிலி.. இது எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்து.. துரோகி என்று சுமித்ராவை சென்னையிலிருந்து துரத்திய மைதிலி.. என்று மைதிலியின் பல்வேறு பரிமாணங்கள் சுமித்ராவின் மனத்திரையில் உலா வந்தன..

இப்போது அந்த மைதிலி இல்லை.. செத்து விட்டாள்.. தன் காதலன் திரும்பக் கிடைத்துவிட்டான் என்று சுமித்ராவினால் மனமார மகிழ முடியவில்லை..

ஆசைப்பட்ட வாழ்வை வாழ முடியாதவளாய் ஏங்கிச் செத்துவிட்ட மைதிலியின் நினைவே அவள் மனதில் மேலோங்கி நின்றது..

"சுமி.."

மாலதி அவளருகே வந்து உட்கார்ந்தாள்.. சுமித்ரா அவசரமாய் இமையோரம் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்..

"அழாதே.. உன் வருத்தம் எனக்குப் புரிகிறது.."

"விவேக் திரும்பி வந்துவிட்டார்.. ஆனால் மைதிலி..? அவள் இப்படி அல்பாயுசில் போய்விட்டாளே அண்ணி.."

சுமித்ரா தேம்பினாள்.. மாலதி அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.. மைதிலியின் மரணத்தினால்தான் விவேகானந்தன் சுமித்ராவிற்கு திரும்பவும் கிடைத்திருக்கிறான்.. ஆனால், அதற்காக மகிழ்ந்து போகாமல்.. தோழியை நினைத்து அழுகிறாளே.. இவள் மனம் யாருக்கு வரும் என்று நெகிழ்ந்து போனாள் மாலதி..

"சுமி.. எட்டு மாதங்களுக்கு முன்னால் உனக்கு மைதிலியிடமிருந்து ஒரு லெட்டர் வந்திருந்தது.."

சுமித்ரா பரபரப்பாக மாலதியிடமிருந்து விலகி அமர்ந்தாள்..

"என்ன லெட்டர் அண்ணி.. என்னிடம் நீ கொடுக்கவேயில்லையே.."

"அப்போதுதான் நீ கொஞ்சம் தேறியிருந்தாய்.. அவள் புருஷனுடன் குடித்தனம் நடத்தும் பெருமையை உன்னிடம் எழுதி.. உன் மனதை ரணமாக்கப் பார்க் கிறாளான்னு எனக்கு கோபம் வந்தது.. உன்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டேன்.."

அன்று இரவு.. எல்லோரும் தூங்கிய பின்னால்.. மைதிலியின் கடிதம் இருந்த கவரை உடைத்து.. கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள் சுமித்ரா..

39

இரவின் நிசப்தம் எங்கும் நிறைந்திருந்தது.. சுவர் கடிகாரத்தின் டிக்டிக்கென்ற ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.. கட்டிலில் நரேந்திரன் ஒருக்களித்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.. அவன் கீழே விழுந்துவிடாமல் இருக்க அணைவாய் தலையணையை வைத்துவிட்டு மேஜை விளக்கின் ஒளியில் கடிதத்தை படிக்க ஆரம்பித்தாள் சுமித்ரா..

'என் பிரியமான சுமி...

எப்படியிருக்கிறாய் என்று உன்னை நலம் விசாரிக்கும் அருகதையிலும் நிலைமையிலும் நான் இல்லை.. நட்புக்கும் பாசத்துக்கும் இலக்கணமாய் நீ இருந்தாய்.. உன்னைத் துரோகி என்று சொன்னேன்.. பிரியமில்லாத அண்ணியிடம் உன்னை போக வைத்தேன்.. நல்ல எதிர்காலம் நிறைந்த வேலையை விட வைத்தேன்.. இத்தனை செய்தும் நான் நிம்மதியாக இருக்க முடிந்ததா.. நினைத்த வாழ்வை வாழ முடிந்ததா..?

நீ போனவுடன் விவேக் என்னைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை.. நான் விஷத்தை கையில் எடுத்தேன்.. என் வீட்டாரும் அவர் வீட்டாருமாகச் சேர்ந்து அவரைத் தாலியை கையில் எடுக்க வைத்தார்கள்..

அவர் தாலி கட்டியவுடன் என்னுடன் வாழ்ந்து விட்டாரா..? அதுவும் இல்லை.. மனதார என்னை மனைவியாக அவர் ஏற்றுக்கொள்ளவே இல்லை.. என் காதல் தெரியாத போதுகூட நட்போடு என் முகம் பார்த்தார்.. என் காதல் தெரிந்த பின்னால் என்னோடு முகம் கொடுத்து அவர் பேசியதே இல்லை..

அப்போதும் நான் அவர் மனதைப் புரிந்துகொள்ள வில்லை.. கணவன் மனைவி இருவருக்குமான அந்தரங்க உறவை எல்லோரிடமும் அம்பலப்படுத்தி நியாயம் கேட்டேன்.. நியாய சபை கூடியது.. என் மாமா இப்போது விஷத்தைத் தூக்க.. மனமில்லாமல் என்னைத் தொட்டார்.. அவரைப் புண்படுத்த நினைத்த நான் காத்திருக்காமல் போனேன்.. அவர் என்னை விட்டு கனடா போய் விட்டார்..

அன்பும் பாசமும் காதலும் தானாக வர வேண்டும்.. வற்புறுத்தி அதை வரவழைக்க முடியாது என்பதை காலம் கடந்து நான் புரிந்துகொண்டேன் சுமி..

உன்னளவுக்கு என்னால் அவரைக் காதலிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.. இப்போதெல்லாம் ஏன் இவரைத் திருமணம் பண்ணிக் கொண்டோம்..

அப்படி இவரிடம் என்னதான் இருக்கிறது என்று வெறுப்பு வருகிறது..

அவர் என்னிடம் சொன்னார் சுமித்ரா..! 'கட்டாயப் படுத்தி காதலை வரவைக்க முடியாது.. சுமித்ராவை மறக்க கொஞ்ச நாள் அவகாசம் கொடு..' என்று கேட்டார்..

நான் ஏன் அவருடைய கோரிக்கையை ஏற்காமல் போனேன்.. உன் நினைவு அவர் மனதில் இருப்பதா என்ற ஆத்திரம்.. என் கழுத்தில் அவர் தாலியைக் கட்டி விட்டதால் எனக்குள் அவர் மேல் உருவாகியிருந்த ஆளுமை உணர்வு..

அவர் கேட்ட அவகாசத்தை நான் அவருக்கு கொடுக்க மறுத்துவிட்டேன் சுமித்ரா..

என் அடிமனதில் இருந்த கோபத்தை இப்போது சொல்லுகிறேன் கேள்.. எனக்கு விவேகானந்தனின் மேல் இருந்த காதலைவிட.. அவர் மேலிருந்த பழி உணர்ச்சியே அதிகமாக இருந்தது.. சிறுவயதில் இருந்து அத்தான்.. அத்தான்.. என்று அவர் பின்னாலேயே சுற்றிய என்னை விட்டு.. உன்னிடம் அவர் காதல் சொல்லியது எனக்குள் கோபத்தை உண்டுபண்ணியிருந்தது.. நான் பழிவாங்கும் வேகத்துடன் செயல்பட்டேன்..

நான் தப்புக்கணக்கு போட்டுவிட்டேன் சுமித்ரா.. என் கழுத்தில் இவரை தாலி கட்ட வைத்துவிட்டால்.. காமெல்லாம் என் அடிமையாக வைத்திருக்கலாம் என்று நினைத்துவிட்டேன்.. என் கணக்கை பொய்யாக்கி விட்டு விவேகானந்தன் என்னை விட்டுத் துரமாக ஓடி விட்டார்..

இப்போதும்கூட எனக்கு அவர் மேல் காதல் வரவில்லை.. கோபம்தான் வருகிறது.. இந்த உணர்வு என் மனதிலிருக்க.. உன்னைப் பற்றிய நினைவும் என்னைப் பற்றிய வெறுப்பும் அவர் மனதிலிருக்க.. நாங்கள் சேர்ந்து வாழ்வது இனி சாத்தியப்படாத ஒன்று சுமித்ரா..

நான் மட்டுமா உனக்கு நட்பைக் கொடுத்தேன்..? நீயும் அதே நட்பை எனக்குத் திரும்பிக் கொடுத்தாயே.. நான் மட்டுமா உனக்கு பாசத்தைக் கொடுத்தேன்..? நீயும் அதே பாசத்தை எனக்குத் திருப்பிக் கொடுத்தாயே.. உனக்குப் பெற்றோரில்லை..

எனக்கு அண்ணனில்லை.. என் பெற்றோரை உன் பெற்றோராய் நினைத்துக்

கொள்ளச் சொன்னதை சொல்லிக் காட்டினேனே.. உன் அண்ணனை என் அண்ணனாக நான் உரிமை கொண்டாடியதை நீ ஒரு நாளாவது என்னிடம் சொல்லிக் காண்பித்தாயா..?

நீ நிறைகுடம் சுமித்ரா.. நான் குறைகுடம். விவேகானந்தனுக்கு நான் ஏற்ற மனைவியில்லை.. கனடாவில் இருந்து அவர் திரும்பி வந்தாலும்.. அவருடன் நிம்மதியாக நான் வாழ மாட்டேன்.. அவரை அணுஅணுவாக சித்ரவதை தான் செய்வேன்..

இந்த வாழ்க்கை இனியும் தொடரக்கூடாது.. விவேகானந்தன் புத்திசாலி, நான் கூரிய நகங்களோடு.. வார்த்தை முள்களோடு வாழ்நாளெல்லாம் அவரோடு போராடக் காத்திருப்பதை உணர்ந்தவராய் தப்பித்துச் சென்றுவிட்டார்..

ஒரு வாரம்.. விருப்பமில்லாமல் அவரும் வெறுப்புடன் நானும் வாழ்ந்த வாழ்க்கைக்கு சாட்சியாக ஒரு பெண்குழந்தை பிறந்திருக்கிறது.. இது அவரின்

வாரிசு என்பதாலேயே எனக்கு அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை.. என் அம்மா.. அதை வேறு விதமாக நினைத்து விட்டார்கள்..

விவேகானந்தன் என்னைக் கொடுமை செய்தாராம்.. அதனால் மனம் நொந்து விரக்தியில் பெற்ற குழந்தையைப் பார்க்கக்கூடத் தெம்பு இல்லாமல் நான் இருக்கிறேனாம்.. என்னவொரு வேடிக்கை.. பார்த்தாயா..?

சிறுவயதில் இருந்தே இளவரசியாய்.. நான் கேட்டது உடனே கிடைத்து விடும் வரம் பெற்றவளாய் வளர்ந்தேன்.. அதனால்தான் நான் கேட்கும் விவேகானந்தன்

எனக்குக் கிடைக்காமல் போவதா என்ற ஆத்திரம் என்னுள் எழுந்தது.. விவேகானந்தன் கிடைத்தவுடன் நான் வெற்றியடைந்து விட்டேன்.. உன்னைத் தோற்கடித்து விட்ட கர்வம் எனக்குள் துளிர்த்தது.. நீ என்ன பெரிய இவனா..? நான் வேண்டாமென்று.. என்னைவிட வசதி குறைந்தவளின் பின்னால் போனவன்தானே நீ என்ற செருக்கு விவேகானந்தனின் மேல் எனக்கு ஏற்பட்டது..

இந்த வாழ்க்கை கடவுள் கொடுத்தது.. விவேகானந் தனை உன்னுடன் வாழ விட்டு.. என்னை நேசிப்பவனாய் பார்த்து

திருமணம் செய்திருந்தால் நான் வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்ந்திருப்பேனோ என்னவோ.. உன் மைதிலி..'

## 40

காற்றோடு கரைந்திருந்த மைதிலியின் ஆத்மாவே பேசுவது போல அந்த கடித வரிகள் இருந்தன.. சுமித்ராவின் மனதில் பாரம் ஏறியது.. தூக்கத்தில் புரண்டு படுத்த நரேந்திரன் முணுமுணுத்தான்.. அவசரமாய் அவனருகில் படுத்த சுமித்ரா அவனைத் தட்டிக் கொடுத்து தூங்க வைத்தாள்..

"அத்தை.." குழந்தையின் தளிர்கரம் அவள் கழுத்தை வளைத்தது..

அந்தப் பிஞ்சுக் கையின் ஸ்பரிசத்தால் நெகிழ்ந்து போனாள் சுமித்ரா..! இப்போது விவேகானந்தனின் குழந்தை எப்படியிருக்கும் என்ற கேள்வி அவளுள் வியாபித்தது..

அந்தக் குழந்தை செய்த தவறு என்ன.. விவேகானந்தனின் வாரிசு என்று பெற்றவள் வெறுக்க.. மைதிலியின் பிடிவாதத்தால் உருவான குழந்தையென்று பெற்ற தகப்பன் பிரிந்திருக்க.. வயதான பாட்டியின் கவனிப்பில் வளர வேண்டிய துர்பாக்கியம் அந்தக் குழந்தைக்கு ஏன் வந்தது..?

யோசித்துக் கொண்டே தூங்கிப் போய்விட்டாள் சுமித்ரா.. விடிந்தபோது.. வெளியே பேச்சுக் குரல்கள் கேட்டன..

'யாராக இருக்கும்..?'

கண்களைக் கசக்கியவாறு விழித்து எழுந்தாள் சுமித்ரா.. அவசரமாய் காபி கோப்பையுடன் அறைக்கு வந்த மாலதியின் முகத்தில் பதட்டம் இருந்தது..

"என்ன அண்ணி.."

"ரூமை விட்டு வெளியில் வராதே.. இந்தக் காபியைக் குடித்துவிட்டு உள்ளேயே உட்காரு.."

"ஏன்..?"

"சென்னையிலிருந்து மைதிலியைப் பெத்தவங்க வந்திருக்கறாங்க.."

"பெரியப்பாவும் பெரியம்மாவும் வந்திருக்காங்களா..?"

கட்டிலை விட்டு இறங்கப் போன சுமித்ராவைப் பார்த்து மாலதி அதட்டலாய் பேசினாள்..

"சொன்னால் கேட்கக்கூடாதுங்கிற முடிவோடு இருக்கிறாயா..?"

"ஏன் அண்ணி.. நான் வெளியில் வந்தால் என்ன..? ரூமுக்குள்ளேயே இருந்துவிட முடியுமா..?"

"எப்படியும் அவங்க போய் விடுவாங்க.. இங்கே தங்கும் நோக்கத்தோடு வரவில்லை போல தெரிகிறது.. வீணாய் அவங்க கண்ணில் பட்டு.. அவங்க ரத்த அழுத்தத்தை ஏன் எகிற வைக்க வேண்டும்.. பேசாமல் ரூமிலேயே இரு.. அவங்க போனதும் வெளியில் வா.."

"எப்படி அண்ணி.. நான் மைதிலியைப் பற்றி அவங்களிடம் விசாரிக்க வேண்டாமா..?"

"என்னத்தை விசாரித்து என்னத்தை ஆகப்போகுது..? அந்த அத்தையிடம்.. எப்படியிருக்கீங்கன்னு கேட்டு வைத்துவிட்டேன்.. உடனே ஜாடையாய் பேச ஆரம்பித்து விட்டாங்க.. என் கிராமத்தில் நான் கேட்காத ஜாடைப் பேச்சா..? பேசாத ஜாடைப்பேச்சா..? பதிலுக்கு கொடுத்துக் காட்டியிருப்பேன்.. பாவம்.. பொண்ணு போன துக்கத்தில் பேசறாங்கன்னு பொறுமையா வந்துவிட்டேன்.."

"அவங்க பேசினதை மனதில் வைத்துக்காதே அண்ணி.."

"நான் மனசில் வைத்துக் கொள்வது இருக்கட்டும்.. விவேகானந்தனை ஹிந்திப் பட வில்லன் ரேன்ஜூக்கு வைத்து உன் அண்ணனிடம் அழுதுக்கிட்டு இருக்காங்க..

உன் அண்ணனின் கண் சிவந்துக்கிட்டு இருக்கு.. விட்டால்.. என் தங்கையை துடிதுடிக்க வைத்து சாகடித்த பாவியைப் பழிக்குப்பழி வாங்குகிறேன் தாயே.. எனக்கு வீரதிலகம் வைத்து விடுன்னு உன் பெரியம்மாவிடம் வசனம் பேசிவிட்டு விவேகானந்தனைக் கொல்ல கிளம்பி விடுவார்போல இருக்கு.. அவங்க பேசுவதை அவர் மனசில் வைத்துக் கொள்ளாமல் இருந்தால் போதும்.."

"பாவம்.. மைதிலி செத்துவிட்ட துக்கத்தில் பேசுவாங்க.."

"அடிப்போடி இவளே.. செத்த எழவைச் சொல்லி விடாத மனுஷங்க துக்கத்தைச் சொல்லி அழுக வந்திருக் காங்களாக்கும்.. அதுவும் இத்தனை மாசம் கழித்து இப்பத் தான் இவங்க வர வழி தெரிந்ததாக்கும்.."

"ஆமாமில்ல.."

"சோழியன் குடுமி சும்மா ஆடாது.. இது வேறு பிளான்.."

"என்ன பிளான்..?"

"விவேகானந்தன் உன்னைத் தேடி இங்கே வந்து இருப்பது தெரிந்திருக்கும்.. மருமகனைப் பற்றி இல்லாத தையும் பொல்லாததையும் போட்டுக் கொடுக்க வந்திருக் கிறாங்க.."

'அப்படியும் இருக்குமோ..' சுமித்ரா கவலைப் பட்டாள்..

அவளுக்கு சுதர்சனத்தின் மனம் தெரியும்.. தங்கையை கண்கலங்காமல் வைத்துக் கொள்கிறவனுக்குத் தான் அவன் சுமித்ராவைத் திருமணம் செய்து கொடுப்பான்..

இப்படி 'கொலைக்காரன்' என்று பட்டம் கட்டிவிட்டால் விவேகானந்தனுக்கு எப்படி சுமித்ராவைக் கொடுப்பான்..?

"இப்ப அவங்க போட்ட பிளான் புரிஞ்சதா..? இதுல இரண்டும் இரண்டு அகப்பைக.. இரண்டும் கழண்ட அகப்பைக.."

"பெரியப்பா ஜென்டில்மேன் அண்ணி.."

"அது அப்போ.. இப்பதான் கதையே மாறிப் போச்சே.."

"பெரியம்மா சாது.. அதிர்ந்து பேசத் தெரியாது.."

"வெளியே வந்து பாரு.. எட்டுத்தெருவுக்கு கேட்கிறது போல வெங்கலத் தொண்டையைத் திறந்து விவேகானந்தனை விளாசித் தள்ளிக்கிட்டு இருக்காங்க.."

"எது எப்படியிருந்தாலும் நான் வெளியே வந்து அவங்களிடம் மைதிலியைப் பற்றி விசாரித்துதான் ஆகணும் அண்ணி.."

"நீ அடிதான் வாங்கப் போகிறாய் சுமித்ரா.. சொன்ன பேச்சைக் கேட்க மாட்டாயா..?"

மாலதி வெடுவெடுவென்று பேசினாள், என்ன செய்வது என்று புரியாமல் தவித்தவளாய் கையைப் பிசைந்தாள் சுமித்ரா.. அவளது தவிப்பை போக்க வந்தவன் போல சுதர்சனம் அறைக்குள் வந்தான்.. மாலதி சொன்னதைப் போல அவனது கண்கள் சிவந்திருந்தன..

"சுமி.. மைதிலி போய் விட்டாளாம்.."

புதிதாக செய்தியை அறிவது போல சுமித்ராவினால் நடிக்க முடியவில்லை.. அதேநேரம் மைதிலியின் இறப்பைப் பற்றிக் கேட்டதும் அவளது கண்கள் கலங்கி கண்ணீர் துளிகள் சிதற ஆரம்பித்தன..

"அழுகாதே சுமி.. நீ அவள் கூடவே வளர்ந்தவள்.. உனக்கு இந்தச் செய்தியைக் கேட்கும்போது அதிர்ச்சி யாகத்தான் இருக்கும்.. என்ன செய்வது..? உன்

துன்பத்தை கட்டுப்படுத்திக் கொள்.. சென்னையிலிருந்து பெரியப்பாவும் பெரியம்மாவும் வந்திருக்கிறாங்க.. வா.. வந்து அவர்களிடம் ஆறுதலாகப் பேசு.."

மாலதி தலையில் கைவைத்துக் கொள்ள.. சுமித்ரா அறையை விட்டு வெளியே வந்தாள்..

சிறுவயதிலிருந்து அவள் பார்த்து வளர்த்த பெரியப்பாவும் பெரியம்மாவும் இவர்கள்தானா என்று சுமித்ராவிற்கு சந்தேகம் வந்துவிட்டது.. அவர்களின் முகம் வெறுப்பை பிரதிபலித்ததைக் கண்டதும் ஏன் மாலதி வெளியே வராதே என்று கூறினாள் என்பது சுமித்ராவிற்குப் புரிந்தது..

இதற்கு முன்னால் மோகனரங்கத்திடம் இப்படி ஒரு நிஷ்டூரமான பார்வையை அவள் பார்த்ததில்லை.. அமைதியே வடிவான பூங்கோதையின் விழிகளில் முன்பு இந்த அளவு குரோதம் இருந்ததில்லை..

சுமித்ராவின் கைகள் நடுங்கின.. அவள் பூங்கோதை யின் அருகே உட்கார்ந்து அவள் கையைத் தொட்டாள்.. படக்கென்று கையை உருவிக் கொண்டாள் பூங்கோதை.. அடிபட்டுப் போன மனத்துடன் மாலதியைப் பார்த்தாள் சுமித்ரா..

'சொன்னால் கேட்டியா..' என்று அவள் பார்வையால் கேட்டாள்..

"என்ன ஆச்சு பெரியம்மா..?"

கேட்க வேண்டியதை சுமித்ரா கேட்டுத்தானே ஆக வேண்டும்.. அணை உடைந்த வெள்ளம் போல ஆக்ரோஷமாய் வந்து விழுந்தன பூங்கோதையின் வார்த்தைகள்..

"என்ன ஆகணும்.. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்.. தன் பிள்ளை தானே வளருமாம்.. எங்கே வளர்ந்தது..? வாழ வேண்டிய வயதில் போய்ச் சேர்ந்து விட்டது.. எந்தக் கொள்ளிக் கண் பட்டதோ எந்தப் பாவியின் வயிறு எரிந்ததோ.. எந்த நாசகாரி விட்ட சாபமோ.. என் பொண்ணு கண்ணை மூடிட்டா.. இனி எல்லோரும் நிம்மதியா இருப்பாங்க.."

பூங்கோதையின் ஜாடைப் பேச்சில் துவண்டு போனாள் சுமித்ரா..

'கேட்டுக்கொண்டாயா..' மாலதி மீண்டும் பார்வையால் கேட்டாள்..

சுமித்ரா வருத்தத்துடன் மோகனரங்கத்தைப் பார்த்தாள்.. பதிலுக்கு 'யார்.. நீ' என்று அறிமுகமில்லாத பார்வையை அவர் பார்த்து வைத்தார்..

மோகனரங்கத்தினால் இப்படிக்கூட பார்க்க முடியும் என்று அன்றுதான் கண்டாள் சுமித்ரா..

"மைதிலி எப்படி இறந்தாள் பெரியப்பா..?"

அவருடைய ஒதுக்கத்தைக் கண்டுகொள்ளாமல் சுமித்ரா கேட்டாள்..

"துடிதுடித்து இறந்தாள்.. போதுமா..? உயிரோடு வதை பட்டுப் போய்ச் சேர்ந்தாள்.. இப்போ எல்லோருக்கும் நிம்மதியாய் இருக்குமே.."

பேசுவது மோகனரங்கம்தானா என்று திகைத்து விட்டாள் சுமித்ரா.. 'என் பார்வை மட்டும் மாறவில்லை.. பேச்சும் மாறிவிட்டது..' என்று அறிவிக்கும் தோரணையில் இருந்தது.. அவருடைய குரல்..

மேலே பேச நா வராமல்.. சுமித்ரா தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.. தனக்கே இப்படி எனும்போது விவேகானந்தன் எப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளானானோ என்று அவளுக்கு இரக்கம் வந்தது..

சுதர்சனம் வருத்தத்துடனும் கோபத்துடனும் மோகனரங்கத்தைப் பார்த்தான்..

"அந்த ராஸ்கலை சும்மாவா விட்டீங்க..?"

"வேறு என்ன செய்யச் சொல்கிறடா சுதர்சனம்.. நான் உன்னைப் போல ஒரு சிங்கத்தைப் பெற்று வைத்து இருந்தால் அவனிடம் என் மகளின் சாவுக்கு நியாயம் கேட்டுப் போராடலாம்.. நான் பெற்றதே ஒற்றைப் பொண்ணு.. அவளுக்கு அண்ணன்னு சொல்லி அவனைத் தட்டிக் கேட்க யாருடா இருக்கிறது..?"

'எங்கே ஆரம்பித்து.. எப்படி முடிக்கிறாங்க..' மாலதி பல்லைக் கடித்தாள்.. அவளுக்கு அவர்களின் சாகசப் பேச்சைக் கேட்டு எரிச்சல்தான் வந்தது..

"இது என்ன பெரியப்பா.. இப்படி ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டீங்க.. அண்ணன்காரன் நான் இல்லையா..? எனக்கு ஒரு வார்த்தை தகவல் சொல்லிவிட்டிருந்தால் நான் வந்து அவன் சட்டையைப் பிடித்திருப்பேனே பெரியப்பா.. அவன் நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல நான்கு கேள்விகளைக் கேட்டிருப்பேனே பெரியப்பா.."

"அப்போ நாங்க இருந்த நிலைமையில யாருக்கும் தகவல் சொல்ல முடியாமல் போயிருச்சுப்பா.. எங்களுக்கு எடுத்துச் செய்ய யாரிருக்கா..? நாங்க தனியாய் போயிட்டோம்டா சுதர்சனம்.."

"நானிருக்கேன் பெரியப்பா.. உங்களுக்கு நான் இருக்கேன்.."

சுமித்ரா.. மாலதியைப் பார்க்க.. மாலதி, மோகன ரங்கத்தை முறைத்தாள்..

'ஊஹும்.. இந்த ஆள் அடிக்கிற வேப்பிலையில் என் புருஷன் சாமியாடாமல் விடமாட்டாரு போல இருக்கே..'

மாலதிக்கு சும்மாவே சுதர்சனத்திடம் யாரும் உரிமை யோடு பேசிவிட்டால் கேட்கச் சகிக்காது.. கூடப்பிறந்த தங்கையான சுமித்ராவையே சுதர்சனத்திடம் உரிமை பாராட்ட விடாமல் தள்ளி நிறுத்திவைத்தவள் அவள்.. இப்போது தூரத்துச் சொந்தமான மோகனரங்கம் வந்து சட்டமாய் உரிமை பாராட்டினால் அவள் விட்டு விடுவாளா..

"எல்லாம் சரிதான் மாமா.. எட்டு மாதமாய் வராத எங்களின் நினைப்பு திடீர்னு உங்களுக்கு பொத்துக் கிட்டு வந்திருக்கே.. அது எப்படின்னுதான் எனக்குப் புரிய மாட்டேங்குது.."

"மாலதி.. பெரியவங்களிடம் என்ன பேசற..?"

"பொறுங்க அத்தான்.. நான் இந்தக் கேள்வியை கேட்டது குத்தம்னு என்னை முறைக்காதீங்க.. இந்தக் கேள்வியை என் பிறந்த வீடு கேட்குது.. என் அப்பா போன மாசம் சென்னைக்குப் பேனாராம்.. அப்பவே மைதிலி போய்விட்ட செய்தி அவருக்குத் தெரியுமாம்.. 'என்னம்மா..

மாப்பிள்ளைக்கு அவங்க நெருங்கின சொந்தம்னு சொன்னே.. இப்படி செத்த எழவுக்கு உங்களைத் தள்ளி வைச்சிட்டாங்களே..'ன்னு நாக்கைப் பிடுங்கிறது போல என்னைக் கேள்வி கேட்டுவிட்டுப் போனார்.. இந்த லட்சணத்தில் நீங்க இவங்க மருமகனின் நாக்கைப் புடுங்கப் போகிறது போல கேள்வி கேட்கப் போகிறீங்களாக்கும்.. போய் கேட்டுப் பாருங்க.. 'இதைக் கேட்க நீ யாரு..?'ன்னு அவன் பதிலுக்குக் கேட்பான்.."

மாலதியின் முன்னால் தங்களது பாச்சா செல்லுபடி யாகாது என்று புரிந்துகொண்டார்கள், மைதிலியின் பெற்றோர்..

## 42

மோகனரங்கத்தின் கண்களும் பூங்கோதையின் கண்களும் சந்தித்துக் கொண்டு நயன பாஷை பேசின.. மோகனரங்கம் நிமிர்ந்து அமர்ந்தார்.. தன் சட்டைப் பையில் இருந்த ஒரு போட்டோவை எடுத்து சுதர்சனத்திடம் நீட்டினார்.. வாங்கிப் பார்த்த சுதர்சனம் கண்கலங்கி கண் சிவந்தான்..

அந்தப் போட்டோவில் மைதிலியும், விவேகானந் தனும் ஜோடியாக மாலையும் கழுத்துமாக இருந்தனர்..

"வச்சுக்கோப்பா.. மைதிலியின் நினைவு வரும் போது பார்த்துக்க.. அண்ணா.. அண்ணான்னு உன்மேல் உயிரையே வைத்திருந்தாள்.. இப்ப அநியாயமா அவளை சாகடிச்சுட்டான் இந்தப் பாவி.. உன் தங்கையின் முகத்தைப் பாருடா.. கள்ளம் கபடமில்லாமல் சிரிச்ச முகமாய் இருக்கிறாள் பாரு.. அவன் முகத்தைப் பார்த்தாயா.. ஈவு இரக்கமில்லாத கொலைகாரப் பாவின்னு அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கே.."

'கொலைக்காரப் பாவி..' அந்த வார்த்தையில் சுமித்ரா துடித்துப் போனாள்..

பூங்கோதையின் பார்வையில் சவால் இருந்தது.. நீ நினைத்ததை நடக்க விடமாட்டேன் என்ற வைராக்கியம் இருந்தது..

"வர்றோம்டா சுதர்சனம்.." மோகனரங்கம் எழுந்து கொண்டார்..

"இது என்ன பெரியப்பா.. ஒருவாய் சாப்பிடாமல் போனால் எப்படி..? என் மனசு தாங்காது பெரியப்பா.."

"இல்லை சுதர்சனா.. மைதிலி போனதில் இருந்து யார் வீட்டிலயும் நாங்க கை நனைக்கிறதில்ல.."

மோகனரங்கம், சுமித்ராவைப் பார்த்த பார்வையில் முக்கியமாய் இந்த வீட்டில் கை நனைக்க மாட்டேன் என்ற செய்தி வெளிப்பட்டது..

"இதுக காபி கூட குடிக்க மாட்டேன்னு சொல் லிருச்சுக.."

- மாலதி கிசுகிசுத்தாள்..

மோகனரங்கமும் பூங்கோதையும் போன பின்னால் சுதர்சனம் மைதிலியின் போட்டோவை கையில் வைத்துக் கொண்டு புலம்பித் தீர்த்தான்.. மைதிலியின் பெருமை களை பிட்டுப் பிட்டு வைத்தான்.. அப்படிப்பட்ட தங்கையை கொன்றவனை தன் கையால் கொன்றால்தான் மனம் ஆறுமென்றான்..

"ம்ஹூம்.. உன் கல்யாணம் நடந்தாப்புலதான்.. மைதிலியைப் பெத்தவங்க உன் அண்ணன் மனசில் விஷத்தை விதைத்துவிட்டுப் போயிட்டாங்க.. இது எங்கே போய் முடியுமோ.." மாலதி கவலையில் ஆழ்ந்தாள்..

சுதர்சனம் எழுந்திருக்கும் நினைவில்லாமல் பித்துப் பிடித்தது போல் அமர்ந்துவிட..

"இன்றைக்கு ஆபீஸ் போகும் நினைவிருக்கா.. இல்லையா..?" என்று அதட்டல் போட்டு அவனைக்

கிளப்பினாள்..

சுதர்சனம் அந்தப் பக்கம் வேலைக்குப் போனவுடன் இந்தப் பக்கம் செல்போனை கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்..

"தேவாண்ணா.. மாலதி பேசுகிறேன்.." என்று ஆரம்பித்து தேவேந்திரனிடம் மைதிலியின் பெற்றோர் வந்துபோன விஷயத்தை சொல்லி முடித்தாள்..

மறுமுனையிலிருந்து என்ன பதில் வந்ததோ.. சற்று நேரம் யோசனையுடன் அமர்ந்திருந்தவள் பெரியசாமிக்கு போன் போட்டாள்..

"அப்பா.. உடனே புறப்பட்டு தூத்துக்குடிக்கு வாங்க.. என்ன இங்கே எல்லோரும் நல்லாதான் இருக்கோம்.. உங்க மருமகனுக்கென்ன குறை..? அவர்பாட்டுக்கு எடுப்பார் கைப்பிள்ளையாய் இழுக்கிற பக்கமெல்லாம் போய் கொண்டிருக்கிறார்.. சுமித்ராவின் பாடுதான் பரிதாபமாக இருக்கு.. என்னன்னு போனில் நான் ஒப்பித்தால் தான் வருவிங்களா..? என்னடா பெத்த பொண்ணு பதறிப் போய் கூப்பிடுகிறாளே.. என்ன ஆச்சோன்னு உடனே ஓடிவர மாட்டீங்களா.. சாயங்காலம்னா.. உங்க மருமகன் வந்து விடுவார்ப்பா.. ஆமாம்.. அப்படித்தான்.. உங்க மருமகனுக்குத் தெரியாத ரகசியம்தான்.. வந்து சேருங்க.."

சுமித்ரா.. பூஜையறையில் தெய்வங்களின் படத்தைப் பார்த்தபடி அமர்ந்துவிட.. மாலதி அவளைப் பார்த்து பெருமூச்சு விட்டபடி வீட்டு வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்..

அழைப்புமணி ஒலித்தது.. ஓடிப் போய் கதவைத் திறந்தாள்.. பெரியசாமி நின்றிருந்தார்..

"என்னம்மா.. என்ன விஷயம்..? சுமித்ரா எங்கே.." என்றபடி வீட்டுக்குள் வந்தார்..

"அதோ.. அங்கே.. ஏன் கடவுளே.. என்னைப் படைச் சேன்னு கேட்டபடி பூஜை ரூமிற்குள் உட்கார்ந் திருக்கிறாள்.."

"அடப்பாவமே.. ஏன்.. இந்தப் பொண்ணு இப்படி உட்கார்ந்து இருக்கு..? பெத்தவங்க நினைப்பு வந்துடுச்சா..?"

"வேறு ஒரு நினைப்பு வந்திருக்கு.."

மாலதி, பெரியசாமியிடம் அனைத்தையும் விவரித்தாள்.. கேட்டுக் கொண்டிருந்தவரின் முகம் தீவிரமாய் மாறியது..

"இவ்வளவு நடந்திருக்கா.. இதை ஏம்மா நீ முன் கூட்டியே என் காதில் போட்டு வைக்கல..?"

"உங்க காதில் போட்டு வைத்தால்.. நீங்க உங்க மருமகன் காதில் போட்டு வைத்து விடுவீங்களே.. அந்த பயம்தான்.."

"ஏம்மா.. எதை அவர் காதில் போடணும்.. எதைப் போடக்கூடாது என்பதுகூட தெரியாத ஆளாம்மா நானு..?"

"அப்பா.. நீங்க சொல்லணும்னு சொல்ல மாட்டீங்க.. யதார்த்தமாய் வாய்விட்டு வைப்பீங்க.. இப்ப என்ன செய்யலாம்..? அதுக்கு ஒரு வழியைச் சொல்லுங்க.."

"மாப்பிள்ளைகிட்ட நீ பேசினியாம்மா..?"

"எங்கே..? நான் பேசணும்னு நினைக்கும்போதே அதுக இரண்டும் காரைப் போட்டுக் கொண்டு வீட்டு வாசலில் வந்து இறங்கி நிற்குதுகளே.. அப்பா.. அதுக வாயைத் திறந்தால் என்ன நடிப்பு.. என்ன பேச்சு.. அப்பப்பா.. வித்தாரக்கள்ளியெல்லாம் இவங்ககிட்ட

பிச்சை வாங்கணும்.."

"அடேங்கப்பா.. அதுக வித்தாரக்கள்ளிகன்னா.. உன் அப்பன் என்ன வெறும் சுப்பனா.. பேயோட்டி விட மாட்டேன்.."

"அதை முதலில் செய்யுங்க.. உங்க மருமகனை இப்ப அவங்க மேல இருக்கும் பாசப் பேய்தான் பிடித்திருக்கு.. அதை முதலில் ஓட்டி விடுங்க.."

"இதை நான் ஒரு ஆளாய் செய்ய முடியாது மாலதி.."

"பின்னே.. நம்ம ஊரையே துணைக்கு அழைக்கப் போகிறீங்களா..?"

"ஊஹூம்.. உன் அம்மா ஒருத்தி போதும்.. அவள் எட்டு ஊருக்குச் சமம்.. அவளைத் துணைக்கு கூப்பிட்டுக் கொள்ளப் போகிறேன்.."

43

ஆண்டாளுக்கு போனில் கதை சொல்லிவிட்டு.. ஒரு வாடகைக் காரைப் பிடித்து அனுப்பி வைத்தார் பெரியசாமி.. சுதர்சனம் வருவதற்குள் ஆண்டாளும் வீடு வந்து சேர்ந்திருந்தாள்..

வரும்போதே முகம் கருக்க சுதர்சனம் வந்து சேர்ந்தான்.. அதைப் பார்த்த மாலதி.. தாய் தந்தையிடம் கிசுகிசுத்தாள்..

"தேவா அண்ணன் விவரத்தை சொல்லிவிட்டார் போல.."

பெரியசாமி.. சுதர்சனத்தின் முன் அமர்ந்து..

"வாங்க மாப்பிள்ளை.." என்றார்..

"ம்ம்ம்..." என்றான் அவன்..

"என்ன மாப்பிள்ளை.. நானும் உங்க அத்தையும் வந்திருக்கிறோம்.. எங்களைப் பார்த்து வான்னு ஒரு வார்த்தை கேட்கவில்லை.. அதை மனசில வைத்துக்காம நானாய் வந்து விசாரித்தால்.. அதற்கும் 'ம்ம்ம்'ன்னு முறைக்கிறீங்க என்ன விஷயம்.."

சுதர்சனம் சுயநினைவுக்கு வந்தவனாய் நிமிர்ந்து உட்கார்ந்தான்..

"ஒன்றுமில்லை மாமா.. பல நினைப்பு மனசில் ஓடுது.. அதான்.."

"பல நினைப்பு ஓடினால்.. எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு ஒரே நினைப்பா இருங்க மாப்பிள்ளை.."

"அது எப்படி மாமா முடியும்..?"

"கஷ்டம்தான்.. பெரிய பெரிய ஞானிகளால் முடியாதது உங்களால் முடியாதுதான்.. ஆனால், ஓடுகிற நினைப்புகளில் எந்த நினைப்பு பக்கம் நியாயம் இருக்கோ.. அந்த நினைப்பின் பக்கம் நின்றுவிட வேண்டியது தானே.."

சுதர்சனம் பதில் சொல்லாமல் மௌனித்தான்.. சுமித்ரா அறையை விட்டு வெளியே வரவில்லை.. மாலதி.. சமையலறையிலிருந்து காபியுடன் வெளிப்பட்டாள்.. ஆண்டாள் மருமகனுக்கு எதிரில் சோபாவில் உட்கார்ந்து கொண்டால் மரியாதையாக இருக்காது என்று சுவரில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தாள்.. அதுநேரம் வரை அப்பா தன்னைத் தூக்காததால்.. நரேந்திரன் பெருங்குரலெடுத்து அழுது அவனது கவனத்தைத் தன் பக்கம் இழுத்தான்.. அழுத குழந்தையை ஆண்டாள் அவசரமாகத் தூக்க முயல.. மாலதி அவளை அதட்டினாள்..

"நீங்க விடுங்கம்மா.."

"அழுகிறானேடி.."

"அவன் அவங்கப்பா கண்டுக்கலைங்கிற கோபத்தில் அழுகிறான்.. வீட்டில் இருக்கிற பெண்டாட்டி பிள்ளைக நினைப்பை நினைச்சுப் பார்த்தால் இப்படி ஊரார் சுமையைத் தூக்கி மனசில் வைத்துக்கிட்டு ஓய்ந்து போய் உட்கார மாட்டாரு ம்ஹும்.. இங்கேதான்

அந்தக் கொடுப்பினையே இல்லையே.. எங்கேயோ போற மாரியாத்தா.. என்னைக் கொஞ்சம் பாராத்தான்னு காரைப் போட்டுக் கிட்டு வந்து மனசைக் கலங்கடித்துவிட்டுப் போகிறாங்களே.. அதுக்கப்புறம் பெண்டாட்டி நினைப்பு இருக்குமா.. பிள்ளைக

நினைப்பு இருக்குமா.. கூடப் பிறந்த ஒற்றைப் பிறப்பின் நினைப்பு இருக்குமா..?"

சுதர்சனம் அடிபட்ட பார்வை பார்த்தான்.. மகனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்.. அழுகையை நிறுத்திய

நரேந்திரன்.. தகப்பனின் மடியில் சலுகையுடன் சாய்ந்து கொள்ள.. மாலதி நீட்டிய காபியை வாங்கிக் குடித்தபடி..

"சுமித்ரா எங்கே...?"

"உள்ளேயிருக்கிறாள்.." மாலதி அவனருகில் அமர்ந்து கொண்டாள்..

"ஏன் லேட் மாப்பிள்ளை.." பதில் தெரிந்தும் தெரியாதவர் போல் பெரியசாமி வினவினார்..

"தேவா கூப்பிட்டுருந்தார்.."

கவனமாய் அவன் 'மாப்பிள்ளை..' என்ற வார்த்தையை தவிர்த்ததை அனைவரும் கவனித்துவிட்டு.. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்..

"தேவா என்ன சொன்னான்..?" உறவினர் என்ற உரிமையில் தேவேந்திரனை அவன் என்று சொன்ன பெரியசாமி கேட்டார்..

"நிறைய சொன்னார்.."

ஆயிரம்தான் இருந்தாலும் மாமனாரிடம் தங்கையின் பேச்சைப் பேசக்கூடாது என்ற நினைவில் சுதர்சனம் மழுப்பினான்.. பெரியசாமியா விடுவார்..?

"இதோ பாருங்க மாப்பிள்ளை.. நீங்களும் உங்க தங்கையும் தாய் தகப்பன் இல்லாத பிள்ளைக.. உங்களுக்கு நான் பெண்ணைக் கொடுத்திருக்கிறேன்.. மாலதி, சுமித்ராவுக்கு பெற்ற தாயைப் போல.. அவள் சுமித்ராவுக்கு பிரச்னைன்னு வந்திருக்கப்ப பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டாள்.. என் மகளுக்கு வரும் பிரச்னை எனக்கு வருவதைப் போல.. நானும் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டேன்.. விஷயம் என்னன்னு எனக்கும் தெரியும், அதனால நீங்க மூடிமறைக்காமல் நேரே விஷயத்துக்கு வாங்க.."

பெரியசாமி எதையும் நேரடியாய் பேசிப் பழக்கப் பட்டவர்.. எதுவாக இருந்தாலும்.. வெட்டொன்று துண்டு இரண்டுதான்.. அவரிடம் சுதர்சனம் மறைத்துப் பேச இயல வில்லை.. அவன் மனைவியைப் பார்த்தான்..

"இது உனக்குத் தெரியுமாடி.."

"தெரியும்.."

"தெரிந்துமா என்னிடமிருந்து மறைத்தாய்..?"

"சொல்லவில்லை.. அவ்வளவுதான்.. மறைத்தேன்னு சொல்லாதீங்க.. எனக்கு கோபம் வரும்.."

"எனக்கு அதைவிட கோபம் வரும்.. சுமியைக் கூப்பிடு.."

"எதற்கு..?"

"கூப்பிடுன்னு சொல்கிறேனில்ல..?"

"நீங்க அவளைக் கண்மண் தெரியாமல் திட்டுவீங்க.. வேண்டாம்.. இப்போதைக்கு எதுவும் பேச வேண்டாம்.."

"அதை நீ எனக்குச் சொல்ல வேண்டாம்.. எவனோ ஒரு கொலைகாரப் பாவியை.. பெண்டாட்டியைக் கொன்றவனை.. பெற்ற குழந்தையைத் திரும்பிக்கூடப் பார்க்காதவனை அவள் காதலிப்பாள்.. அவனுக்காக உயர்ந்த இடத்து மாப்பிள்ளையை வேண்டாம்னு தூக்கியெறிவாள்.. அதைப் பார்த்துக்கிட்டு நான் சும்மா இருக்கணுமா..?"

"விவேகானந்தன், மைதிலியைக் கொன்றதை நேரில் நீங்க பார்த்தீங்களா..? பெற்ற பிள்ளையைப் பார்க்க விடாமல் உங்க பெரியப்பாவும் பெரியம்மாவும் மறைத்து வைத்தால் பாவம் அவர் என்ன செய்வார்..?"

சுதர்சனமும் மாலதியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது.. சுமித்ரா அறையை விட்டு வெளியே வந்தாள்..

## 44

சுமித்ராவைப் பார்த்தவுடன் சுதர்சனம் மாலதியை விட்டு விட்டு தங்கையின் முகத்தையே இமைக்காமல் பார்த்தான்..

ஒரு சொல் அவன் வாயிலிருந்து உதிரவில்லை.. பார்வை.. பார்வை.. பார்வை மட்டும்தான்.. அந்த இமைக்காத பார்வையின் அனல் வீச்சைத் தாங்க முடியாதவளாய் சுமித்ரா துடித்துப் போனாள்..

அவளைக் கனல் கக்கும் பார்வை பார்த்துக் கொண்டிருப்பவன் அவளின் கூடப் பிறந்த அண்ணன்.. பெற்றோரில்லாத தங்கையை பெற்ற பெண்ணைப் போல் பாசம் காட்டி வளர்த்தவன்.. தன்னை உயிருக்குயிராய் காதலித்தவளின் காதலைவிட தங்கையின் மேலிருந்த பாசத்தை பெரிதாக எண்ணியவன்.. தாலி கட்டிக் கொண்டு வந்த புதுமனைவியைப் புறக்கணித்து தங்கையின் மேல் பாசத்தைக் கொட்டியவன்.. இந்த உலகில் அவனுக்கு எதுவும் பெரிதில்லை, தங்கையைத் தவிர..

அப்படிப்பட்ட அண்ணனுக்குத் தெரியாமல் சுமித்ரா காதலித்திருக்கிறாள்.. அந்தக் காதலை மறைத்து காதலில் தோற்றவளாய் அண்ணனின் காலடியில் வந்து விழுந்திருக்கிறாள்.. மனைவியைச் சாகக் கொடுத்த காதலன் தேடி வரவும்.. அண்ணன் பார்த்த மாப்பிள்ளையைத் தூக்கி யெறிந்திருக்கிறாள்.. இவை எல்லாவற்றையும்விட, இதையெல்லாம் அவனுக்குத் தெரியாமல் மறைத்துச் செய்திருக்கிறாள்..

சீஸரின் உடலில் பட்ட கத்திக் குத்துக்கள் அவனுக்குக் கொடுத்த வேதனையைக் காட்டிலும் 'யூ டு புரூட்டஸ்..' என்று கேட்டு.. புரூட்டஸை அவன் பார்த்த பார்வை புரூட்டஸிற்கு உண்டாக்கிய வேதனை கொடியது.. காலம் காலத்திற்கும் மறையாதது.. சரித்திரத்தில் நிலைத்து நிற்கக் கூடியது.. அந்தப் பார்வையை தன் வாழ்நாளில் புரூட்டஸ் மறந்திருக்க மாட்டான்..

சுமித்ரா மண்டியிட்டு அமர்ந்து சுதர்சனத்தின் முன் கைகூப்பினாள்.. அவள் கண்களில் இருந்து தாரை தாரை யாய் நீர் பெருகியது..

"என்னைக் கொன்றுவிடு அண்ணா.." என்றாள்..

அதைக் கேட்கவும்.. அந்தக் காட்சியைக் காணவும் சகிக்காமல் மாலதி விம்மலுடன் முகம் திருப்பிக் கொண்டாள்..

கத்தியின்றி.. ரத்தமின்றி.. அங்கே யுத்தம் புரிந்து கொண்டிருந்த அண்ணன் தங்கையைக் கண்டு பெரிய சாமிகூட வாயடைத்துப் போனார்.. ஆண்டாளின் சேலை முந்தானை சுருட்டப்பட்டு அவள் வாயில் அடை பட்டிருந்தது..

"உன் கையால் என்னைக் கொன்று விடு.. என்மீது நீ அதிக பாசம் வைத்தாய்.. வைத்திருக்கிறாய்.. நான் அதற்குத் தகுந்தவளாக நடந்து கொள்ளவில்லை.. என்மீது நீ வைத்த நம்பிக்கையை தகர்த்து விட்டேன்.. அதற்காக என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு.. ஏற்றுக் கொள்கிறேன்.. இப்படிப் பார்வையிலேயே என்னைக் கொல்லாதே.."

சுதர்சனம் பேசவில்லை..

"காதல் தப்பா சரியான்னு எனக்குத் தெரியாது.. நான் விவேகானந்தனைக் காதலிக்கவில்லை.. அவர்தான் என்னைக் காதலிப்பதாகச் சொன்னார்.. ஆனால் அண்ணா.. அவர் என்னிடம் காதலைச் சொன்ன பின்பு என்னால் அவரைக் காதலிக்காமல் இருக்க முடியவில்லையே.. நான் என்ன செய்வேன்..?"

சுதர்சனத்திடம் அசைவில்லை..

"மைதிலி என்னைத் துரோகின்னு சொல்லிவிட்டாள் அண்ணா.. அதுவரைக்கும் அவள் மனதில் விவேக் இருந்தது எனக்குத் தெரியாது.. நான் என் காதலை விட்டுக் கொடுத்தேன்.. சென்னையை விட்டு ஓடிவந்தேன்.. உன்னிடம் சொன்னால் நீ கட்டாயம் நியாயம் கேட்டுப் போய் விடுவாய்.. மைதிலியின் கல்யாணத்தை நடத்த விட மாட்டாய்.. உலகமே எதிர்த்தாலும் ஒரு கை பார்த்து விட்டு.. விவேகானந்தனுக்கு என்னைக் கல்யாணம் செய்து வைத்து விடுவாய்.. எனக்கு அது தெரியும்.. அப்படி

நீ செய்து விட்டால்.. நான் நன்றிகெட்டவள் ஆகிவிட மாட்டேனா..? பெரியப்பாவும், பெரியம்மாவும் என்னைப் பெற்ற மகள் போல் பார்த்துக் கொண்டாங்களே.. அவர்களின் பெண்ணை நான் வாழ விடாமல் செய்யலாமா.. மைதிலி என்மேல் காட்டிய அன்பிற்கும் நட்பிற்கும் நான் பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா.. அவளது வாழ்வைக் குலைக்கலாமா..? இதையெல்லாம் நினைத்துதான் நான் உன்னிடம் எதையும் சொல்லவில்லை.. என் துயரம் காண நீ சகிக்க மாட்டாய்.. பொறுக்கமாட்டாய்.. அந்த எண்ணம் தான் எனக்கு.. மற்றபடி மறைக்க வேண்டும்னு நான் மனதாலும் நினைக்கவில்லை.."

சுதர்சனத்தின் கண் லேசாகத் துடித்தது..

"உன்னிடம் சொல்ல வேண்டாம்னு அண்ணியிடம் நான்தான் சொன்னேன்.. எல்லாவற்றையும் மறந்துதான் இருந்தேன்.. ஆனால் விவேகானந்தன்.. எல்லாவற்றையும் இழந்து வந்து நிற்கிறாரே.."

சுதர்சனம் பெருமூச்சு விட்டான்..

"அவரைக் கொலைகாரன்னு பெரியப்பாவும் பெரியம்மாவும் சொல்கிறாங்க.. உனக்கு ஒன்று தெரியுமா.. அதே கொலைகாரப் பட்டத்தை எனக்கும் அவங்க கொடுத்திருக்கிறாங்க.. மைதிலியின் சாவைப் பற்றி நமக்கு ஏன் அவங்க தெரியப்படுத்தலைன்னு தெரியுமா.. நான் தான் மைதிலியின் சாவுக்கு காரணமாம்..

நீயே சொல்லு.. அவள் வாழ வேண்டும்னு.. நான் வாழ வேண்டிய வாழ்க்கையை அவளுக்கு விட்டுக் கொடுத்து விட்டு.. தூத்துக்குடிக்கு ஓடிவந்தேன்.. நானா அவளைச் சாகடித்தேன்..?"

சுதர்சனத்தின் கண்கள் கலங்கின..

"விவேக் என்னைக் காதலித்தார் என்பது மைதிலிக்கும் பெரியப்பாவிற்கும் நன்றாகத் தெரியும்.. அவர் என்னை மறக்க அவகாசம் கேட்டிருக்கிறார்..

மைதிலி கொடுக்க வில்லை.. கொஞ்ச நாள் பிரிந்திருந்தால் மனம் சரியாகும்னு கனடா போயிருக்கிறார்.. அவர் எப்படி மைதிலியின் சாவுக்கு காரணமாவார்..?"

சுதர்சனம் உதட்டைக் கடித்தான்..

"அவரின் இந்த நிலைக்கு நான்தான் காரணம்.. நான் பாவி.. காதலை விட்டுக் கொடுத்தேன்.. என்னைக் காதலித்தவரைக் கைவிட்டேன்.. விருப்பமில்லாத மணவாழ்வு நரகம்.. அதில் அவரைத் தள்ளினேன்.. இப்போது 'கொலைகாரன்' என்கிற பட்டத்தையும் அவருக்கு வாங்கிக் கொடுத்து விட்டேன்.. இத்தனையும் அவருக்கு எதனால் வந்தது.. என்னைக் காதலித்ததால் வந்தது.. அவரைக் கொலைகாரன்னு உன் வாயால் இன்னொரு முறை சொல்லாதே.. நான்தான் கொலைகாரி.. அவர் மனதைக் கொலை செய்தவள்.. அவர் வாழ்வை நாசமாக்கியவள் நான்தான்.."

சுமித்ரா, சுதர்சனத்தின் பாதங்களைப் பிடித்துக் கொண்டாள்..

## 45

அந்தக் காட்சியைக் கண்டு கண்கலங்கிப் போனார் பெரியசாமி.. ஒரு வார்த்தைகூட வாய் திறந்து பேசாமல் பார்வையாலேயே கண்டிக்கும் அண்ணன்..

அந்தப் பார்வையைத் தாங்க முடியாதவளாய் தன்னிலை விளக்கம் சொல்லி அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறும் தங்கை..

இந்தக் குடும்பத்தில் பெண் கொடுத்து தானும் உறவானதற்கு மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொண்டார் அவர்..

"நான் செய்ததெல்லாம் மைதிலியின் நன்மைக் காகத்தான் அண்ணா.. ஆனால், மைதிலி இப்படிப் போய் விடுவாள்னு நான் நினைத்துப் பார்க்கவில்லை.. விவேகானந்தன் திரும்பி வந்திருக்கிறார்.. என்னால் அவரை விட்டுவிட்டு வேறு ஒருவருடன் வாழ முடியாது.. நான் என்ன செய்யட்டும்.. நீயே சொல்லு..?"

காலடியில் கண்ணீர் விட்டு உத்தரவு கேட்ட தங்கை யைத் தூக்கி நிறுத்தினான் சுதர்சனம்.. நீண்ட மௌனத் திற்குப் பிறகு வாய் திறந்தான்..

"நான் என்ன சொன்னாலும் கேட்பாயா..?"

"நான் உன் தங்கை.. நீ வளர்த்தவள்.. நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன்.."

"விவேகானந்தனை கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாதுன்னு நான் சொன்னால்..?"

மாலதி ஏதோ சொல்லப் போனாள்.. கடுமையான பார்வையுடன் வாயில் விரலை வைத்து அவளை 'உஸ்ஸ்..' என்று அடக்கினான் சுதர்சனம்..

"மாப்பிள்ளை.." பெரியசாமி குறுக்கிட..

"இது எனக்கும் என் தங்கைக்குமான விஷயம்... இதில் நீங்கள் தலையிட வேண்டாம்.." என்று பட்டென்று சொல்லி விட்டான்..

பெரியசாமி வாய்மூடிக் கொண்டார்.. சுதர்சனத்தின் பார்வை சுமித்ராவின் முகத்தில் நிலைக்க.. அவள் உறுதியாகப் பதில் சொன்னாள்..

"விவேகானந்தன் வேண்டாம்ன்னு நீ சொன்னால்.. நான் அவரைக் கட்டாயம் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் அண்ணா.."

சுதர்சனம் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்..

"தேவாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்னு நான் சொன்னால்..?"

"மாட்டேன்னு சொல்ல மாட்டேன்.. ஆனால், செத்து விடுவேன் அண்ணா.."

சுமித்ரா உடல் குலுங்க அழுதாள்.. சுதர்சனத்தின் முகம் இறுகியது..

"இதுவும் ஒரு வகை மறுப்புதானே சுமி.."

"இல்லை அண்ணா.. என் இயலாமை.. என்னால் விவேக்கைத் தவிர வேறு ஒருவரை நினைக்கவும் முடியாது.. அவருடன் வாழவும் முடியாது.."

சுதர்சனம் கை நீட்டி பார்வையால் தங்கையை அழைத்தான்.. அவன் கரங்களுக்குள் புகுந்து கொண்ட சுமித்ரா 'கோ'வென்று அழுது தீர்த்தாள்.. அத்தனை நாள்களாய் அவள் மனத்தை அரித்த துயரத்தைக் கொட்டித் தீர்த்தாள்..

அவள் மனபாரம் குறையும் வரை அழுது ஓயட்டும் என்று காத்திருந்த சுதர்சனம்.. சுமித்ரா அழுது முடிந்ததும் அவளை பக்கத்தில் அமர வைத்துக் கொண்டான்..

"இதை நீ முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்க வேண்டும்.. நீ குழந்தை.. உனக்கு என்ன தெரியும்னு நீயாய் முடிவு எடுத்த..? மைதிலி ஆசைப்பட்டால்..

எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுத்துவிடுவாயா.. இப்போது பார்.. நிலைமை எங்கே வந்து நிற்கிறது என்று.."

சுமித்ரா தலைகுனிந்தபடி இருக்க.. ஆண்டாள் அவளுக்காக பரிந்து பேசினாள்..

"பாவம்.. பச்சை மண்ணு.. அதுக்கென்ன தெரியும்.. நடந்தது நடந்து போச்சு.. போனதைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்காமல் இனி ஆக வேண்டியதைக் கவனியுங்க தம்பி.."

மருமகன் போட்ட அதட்டலில் வாய் பொத்தி இருந்த பெரியசாமி.. மனைவியே தைரியமாய் வாய்திறந்து பேசிய பின் தான் வாயை மூடிக் கொண்டிருப்பது வீரமாகாது என்ற நினைவுடன் வாய் திறந்தார்..

"ஆண்டாளு சொல்றதும் சரிதான்.. ஆக வேண்டிய தைப் பார்ப்போம்.." பெரியசாமி முடுக்கிவிட்டார்..

"மைதிலி செத்து ஏழெட்டு மாதம்தான் ஆகிறது.. அப்படி இருக்கிறபோது.. நாம் நம் சுமித்ராவை விவேகானந்தனுக்கு கொடுத்தால் பெரியப்பாவும்.. பெரியம்மாவும் என்ன நினைத்துக் கொள்வாங்களோ.." சுதர்சனம் யோசித்தான்..

"மத்தவங்க நினைப்பைப் பத்தி நமக்கென்ன கவலை.. ஏற்கனெவே என்னென்னவோ நடந்து விட்டது.. இனியும் கல்யாணத்தை தள்ளிப்போட்டால் அதைக் கலைக்க ஆயிரம் சதி வேலைகளை அவர்கள் செய்வார்கள்.." மாலதி கூறினாள்..

"மாலதி சொல்றதும் சரின்னுதான் எனக்குப் படுது.. என் காதில் விழுந்த செய்தி ஒண்ணைச் சொல்கிறேன் கேளுங்க.. விவேகானந்தனின் உறவு முறையில் பணக்காரக் குடும்பத்தில் பெண் கேட்டு விவேகானந்தனின் அப்பா பேசியிருக்கிறாராம்.." ஆண்டாள் கவலையாகச் சொன்னாள்..

"இது என்னம்மா வெடிகுண்டைத் தூக்கிப் போடறீங்க... மைதிலி செத்து இன்னும் வருஷம் திரும்பலையே.. அதுக்குள்ள எப்படி அவரு மகனுக்கு மறுகல்யாணம் பண்ணி வைப்பாரு..? இத்தனைக்கும் மைதிலி அவருடைய தங்கச்சி மகளாச்சே.." ஆச்சரியமாக கேட்டாள் மாலதி..

"இப்பத்தானே எனக்கே விவரம் புரியுது.. விவே கானந்தன் மறுகல்யாணம் பண்ணிக் கொள்வதில் அவங்களுக்கு மறுப்பில்லை.. சுமித்ராவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக்கூடாது.. அதுதான் அவங்க வெறி.." பெரியசாமி பல்லைக் கடித்தார்..

"இப்படி எல்லோருடைய பகையையும் சம்பாதித்துக் கொண்டு நீ நிம்மதியாய் விவேகானந்தனுடன் வாழ்ந்து விட முடியுமா.. உயிருடன் இருப்பவர்களை விட்டுத் தள்ளு... மைதிலி எப்படி ஏங்கிச் செத்திருப்பாள்.. அவளுடைய ஆத்மா உன்னை சபிக்காதா..?"

சுதர்சனம் கவலைப்பட்டான்.. சுமித்ரா எழுந்து அறைக்குள் போனாள்.. சுதர்சனத்திடம் மைதிலி எழுதிய கடிதத்தைக் கொண்டு வந்து தந்தாள்.. சுதர்சனம் கண்களில் கேள்வியுடன் வாங்கிப் படித்தான்..

## 46

மைதிலியின் கடிதத்தைப் படிக்கப் படிக்க சுதர்சனத்தின் முகம் பல்வேறு உணர்ச்சிகளை பிரதி பலித்தது..

"என்ன சுமி.. இவள் இப்படி எழுதியிருக்கிறாள்.. அண்ணி உனக்குப் பிரியமில்லாதவளா..?"

"இல்லை அண்ணா.. அவளாக எழுதியிருக்கிறாள்.. விவேக் அவளை கொடுமை பண்ணவில்லை.. அவளாக அவள் வாழ்வைக் கெடுத்துக் கொண்டாள்.. எல்லோரும் என் விவேக்கை தப்பாக நினைக்கிறார்கள் அண்ணா.."

'என் விவேக்..' சுதர்சனம் தங்கையின் முகத்தைப் பார்த்தான்..

'இந்த அளவுக்கு அவன் மேல் தங்கை பாசம் வைத்திருக்கிறாளா..'

தங்கை கேட்டதைக் கொடுக்கும் அண்ணனாக அவன் செயல்பட்டான்.. எழுந்து சட்டையைப் போட்டுக் கொண்டான்..

"மாமா.. கொஞ்சம் என் கூட வாங்க.."

"எங்கே மாப்பிள்ளை..?"

"விவேகானந்தனை பார்த்துவிட்டு வரலாம்.."

"அவர் எங்கே இருக்கிறார்..?"

சுதர்சனம் தங்கையின் முகத்தைப் பார்க்க.. அவள் கை பிசைந்தாள்..

"தெரியாதே அண்ணா.."

மாலதி தலையில் அடித்துக் கொண்டு சுமித்ராவை அதட்டினாள்..

"அவருடைய செல்போன் நம்பர் தெரியுமா..?"

"அது தெரியும் அண்ணி.."

"ம்ஹும்.. அதுவாவது தெரிந்ததே.. போனைப் போடு.."

சுமித்ரா பேசியதும்.. விவேகானந்தன் பரபரத்தான்..

"என்ன சுமி.. நைட் நேரத்தில் போன் பண்ணு கிறாயே.. எதுவும் பிரச்சனையா..?"

"நிறையப் பிரச்சனைகள் வந்து வரிசையாய் நிற்கின்றன.. இப்போது அண்ணன் உங்களைப் பார்க்கணு முன்னு சொல்கிறார்.. நீங்க எங்கே தங்கியிருக்கீங்க.."

"இங்கேதான்.. ஹோட்டலில் ரூம் போட்டிருக் கிறேன்.. பட்.. உன் அண்ணன் எதற்கு என்னைத் தேடி வர வேண்டும்..? அவரைத் தேடி நான் வருகிறேன்.. அதுதான் முறை.. மரியாதை..!"

"அண்ணன் அதையெல்லாம் பார்க்க மாட்டார்.."

"அவர் பார்க்காதது அவருடைய பெருந்தன்மை.. ஆனால், உன்னைப் பெண் கேட்டு வரவேண்டியது என்னுடைய கடமை.. நானே வருகிறேன்.."

சுமித்ரா போனை அணைத்துவிட்டு சுதர்சனத்தைப் பார்த்தாள்..

"என்ன சொன்னார்..?"

சுமித்ரா.. அவன் சொன்னதைச் சொன்னாள்.. பெரியசாமி பாராட்டினார்..

"பரவாயில்லையே.. அவன் வளமை தெரிந்த பையனாக இருக்கிறானே.. அவன்தான் நம் வீட்டிற்கு சுமியைக் கேட்டு வர வேண்டும்.. அதுதான் முறை.."

அந்த வளமை தெரிந்தவன்.. கைநிறைய இனிப்பு, பூ பழமென்று சுமந்து கொண்டு அடுத்த ஆறாவது நிமிடத்தில் அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டினான்..

"வாங்க அண்ணா.." வாய்நிறைய வரவேற்றாள் மாலதி..

"ஒரு தட்டு இருக்குமா..?"

விவேகானந்தன் கேட்டான்..

மாலதி கொண்டு வந்து கொடுத்த தட்டில் பூ, பழம், இனிப்பு வகைகளை வைத்துவிட்டு சுதர்சனத்தைப் பார்த்து கைகூப்பினான்..

"நான் விவேகானந்தன்.. சுமித்ராவைக் காதலித் தவன்.. காதல் நிறைவேறாமல் மைதிலியைக் கல்யாணம் செய்து கொண்டவன்.. இப்போது மைதிலி உயிருடன் இல்லை.."

"அதனால்.. நிம்மதியாய் போச்சுன்னு என் தங்கையைப் பெண் கேட்டு வந்திருக்கிறீங்களா..?"

சுதர்சனம் தன்னையறியாமல் பட்டென்று சொல்லி விட்டான்... சுமித்ராவும் மாலதியும் பதறிப் போய் விவேகானந்தனைப் பார்த்தார்கள்.. அவன் முகம் மாறாமல் பதில் சொன்னான்..

"இல்லை சார்.. உங்கள் தங்கையிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன்.. அவள் என்னை விட்டு விலகி விட்டாள்.. மேரேஜ் இன்விடேஷன் அனுப்பிவைத்து.. நீ கடைசி வினாடியில் மனம் மாறினால்கூடச் சொல்லு.. நான் மணவறையை விட்டு எழுந்து வந்துவிடுகிறேன்னு சொன்னேன்.. அவள் அதையும் செய்யவில்லை.. மைதிலி என்னைக் குளவியாக கொட்டினாள்.. கொஞ்ச நாள் பிரிந்திருக்காலம் என்றுதான் கனடா போனேன்.. பட்.. மைதிலி இறந்துவிட்டாள்.. அதற்கு நான் காரணமில்லை.. திரும்பி வந்தவுடனேயே உங்கள் தங்கையை தேடி வந்துவிட வில்லை.. இப்போது நீங்களும் உங்கள் தங்கைக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கறீங்க.. என் வீட்டிலும் வேறு பெண் தேடுகிறாங்க.. இப்போதும் நான் மௌனமாக

இருந்து விட்டால் என் சுமி எனக்குக் கிடைக்காமலே போய்விடுவாள்.."

'என் சுமி..'

விவேகானந்தனின் வார்த்தையைக் குறித்துக் கொண்டான் சுதர்சனம்.. இப்படி 'என் விவேக்..' என்று அவளும் 'என் சுமி..' என்று அவனும் உருகிக் கொண்டிருக்கும் போது அவர்களைப் பிரித்து வைப்பது பாவம் என்று சுதர்சனத்தின் மனதிற்குப் பட்டது..

"நீங்க பெண் கேட்டு வந்திருக்கறீங்க.. ஆனால், உங்கள் பேரண்ட்ஸ் பெண் கேட்டு வர வேண்டுமே.." என்றான் சுதர்சனம்..

"வருவாங்க.. அவங்களை நான் வரவைக்கிறேன்.."

அவர்களிடம் கைகூப்பி விடைபெற்ற விவேகானந் தன் சொன்னபடி பெற்றவர்களைப் பெண் கேட்டு வர வைத்தான்.. அவனுடைய தந்தை வானத்திற்கும் பூமிக்குமாய் குதித்தார்.. ஆனால்.. மகனுடைய வாழ்வைக் கெடுத்தது.. கணவன்தான் என்ற கோபத்தில் இருந்த மரகதம்.. இப்போது விஷப்பாட்டிலை கையில் எடுத்துக் கொண்டாள்..

"என்னடி இது.."

"பார்த்தால் தெரியவில்லையா..? விஷம்... உங்களுக்கும் உங்க தங்கை மகளுக்கும்தான் விஷத்தை கையில் எடுக்கத் தெரியுமா..? எனக்கும் தெரியும்.. ஒத்தை மகனை நான் வளர்த்து ஆளாக்கி நிறுத்தி வைத்தால்.. அவனை உங்க தங்கை மகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்தீங்க.."

"அவன் இருந்து பிழைத்தானாடி.."

"நல்லா வந்திருக்கும் என் வாயில.. உங்க தங்கை மகள் ஆடின ஆட்டத்துக்கு அவள்கூட யாரும் இருந்து பிழைக்க முடியாது.. என் மகன் அப்பிராணி.. அவன் கனடாவுக்கு ஓடிப் போயிட்டான்.."

"அவங்க பெண்ணைப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறாங்கடி.."

"வளர்க்கத் தெரியாமல் வளர்த்தால் அப்படித்தான் ஆகும்.. வேறொருத்தியை மனதில் வைத்துக் கொண்டிருக் கிறான்னு தெரிந்த பின்னாலும் அவளை விலக வைத்து விட்டு வலுக்கட்டாயமாய் என் மகனை அவள் கழுத்தில் தாலி கட்ட வைத்தாளே.. அந்த ராட்சஸிக்கு கல்யாண வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள துப்பு இல்லை.. என் மகனைச் சொல்ல வந்திட்டீங்க.."

"இப்ப என்னதான் சொல்கிறாய்..?"

"என் பிள்ளை சிரிக்கணும்.. அதை கண் நிறைய நான் பார்க்கணும்.."

"ஏண்டி.. உனக்கு மட்டும்தானா அவன் பிள்ளை..? எனக்கும் அவன் பிள்ளைதானேடி.."

"அந்த நினைப்பு உங்க மனதில் இருந்தால்.. என் மகனை இப்போதாவது வாழ விடுங்க.. இல்லை.. இந்த விஷத்தை என்னைக் குடிக்க விடுங்க.."

மரகதம் அழுத அழுகையில் மாணிக்கவாசகம் சரணாகதி ஆனார்.. எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல் மனைவி மகனோடு சுமித்ராவை பெண் கேட்டு வந்து நிச்சயம் பண்ணிவிட்டுப் போய்விட்டார்..

அண்ணனின் இந்தச் செய்கை மைதிலியின் தாய் பூங்கோதைக்கு பேரிடியாக இருந்தது..

## 47

திருமணம் எளிமையாக முடிந்தது.. மணமக்களை தன் வீட்டுக்கு அழைத்துச் செல்ல மாணிக்கவாசகம் நினைத்துக் கொண்டிருந்தபோது...

"நாங்கள் கனடா கிளம்புகிறோம்.." என்றான் விவேகானந்தன்..

இதை எதிர்பார்க்காத இருவீட்டாரும் அதிர்ந்து போனார்கள்.. சுமித்ராவைப் பொறுத்தவரையில் அவன் எங்கே அழைத்தாலும் அவனைப் பின்பற்றிப் போகத் தயாராக இருந்தாள்..

"என்ன மாப்பிள்ளை.. இப்படிச் சொல்கிறீங்க.. மறுவீட்டு விருந்துக்கு வர வேண்டாமா..?" சுதர்சனம் ஆட்சேபித்தான்..

"காலையில் தாலி கட்டிவிட்டு.. சாயங்காலம் பிளேனில் ஏறுவதா..?" மாலதி கவலையோடு சுமித்ராவைப் பார்த்தாள்..

விவேகானந்தன்.. சுமித்ராவிற்கு பாஸ்போர்ட், விசா, முதலியவற்றை ஏற்பாடு பண்ணி வாங்கியது எல்லோருக்கும் தெரியும்.. ஆனால்.. திருமணமான அன்றே அவளை அழைத்துக் கொண்டு கனடா கிளம்புவான் என்பது ஒருவருக்கும் தெரியாது..

"என்னடா தம்பி.. இப்படிச் சொல்கிற..?" மரகதம் கண்கலங்கினாள்..

"தயவுசெய்து என்னைப் புரிந்துகொள்ளுங்க அம்மா. இங்கேயிருந்து நிறையப் பேரின் வயிற்றெரிச்சலோடு வாழ்க்கையை ஆரம்பிக்க நான் விரும்பவில்லை.. கனடாவில் எனக்கு பிஸினஸ் இருக்கிறது.. சொந்த வீடு இருக்கிறது.. வேண்டுமானால் நீங்களும் எங்ககூட வாங்க.." என்றான் மகன்..

"உன் அப்பாவை தனியாக விட்டுவிட்டு நான் எப்படி வருவேன்.. நீ சொல்வதும் சரிதாண்டா.. இத்தனை நாள் நீ தனியாக இருக்கிறாய்னு நினைத்து மறுகிறேன்.. இப்போதுதான் என் மருமகளும் உன் கூட வருகிறாளே.. கவலையில்லாமல் இருப்பேன்.. போய் வாப்பா.." மரகதம் விடை கொடுத்தாள்..

சுமித்ராவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே மரகதத்திடம் கூறினான் விவேகானந்தன்..

"உங்க மருமகள் மட்டும் என் கூட வரவில்லைம்மா.. என் மகளும் என் கூட வரப்போகிறாள்.."

சுமித்ராவின் முகம் பூவாக மலர்ந்துவிட்டதை திருமண மண்டபத்தில் இருந்த அனைவரும் வியப்புடன் பார்த்தனர்..

"நிஜமாக சொல்கிறீங்களா..?"

"ஆமாம்.. வாங்க.. போய் குழந்தையைக் கேட்கலாம்."

மோகனரங்கமும் பூங்கோதையும் குழந்தையைக் கொடுக்க மறுத்தனர்.. உறவினர்கள் தலையிட்டு நியாயம் பேசியபோது.. மோகனரங்கம் கொதித்தார்..

"எங்க மகளின் முகத்தை பேத்தியின் முகத்தில் பார்த்துக் கொண்டு மனம் ஆறிக் கொண்டிருக்கிறோம்.. மறுதாரமாய் வந்தவள் என் பேத்தியை எப்படிப் பார்த்துக கொள்வாள்..?"

"அவர் சொல்வது நியாயம்தானே.."

அங்கிருந்தவர்கள் மேலே பேச யோசிக்க விவேகானந்தன் பிடிவாதமாக குழந்தையைக் கேட்டான்..

"பேசாமல் கொடுத்துவிட்டால் அவங்களுக்கு நல்லது.. பெற்ற மகளின் முகத்தைக்கூட பார்க்க மாட்டேன்னு சொல்லிவிட்டாளாம் இவங்க பெற்ற பெண்.. அவள் என் மகளை வளர்த்ததைவிட சுமித்ரா குறைவாக வளர்த்துவிட மாட்டாள்.."

இப்போது விவேகானந்தனின் பக்கம் உறவினர்கள் சாய.. வேறுவழியில்லாமல் குழந்தையைக் கொடுத்து விட்டார் மோகனரங்கம்..

உறவினர்களுக்கு கை அசைத்து விடை கொடுத்து விட்டு விமானம் நோக்கி கையில் குழந்தையுடனும் பக்கத்தில் கணவனுடனும் நடந்தாள் சுமித்ரா..

சுற்றிலும் பச்சைப் புல்வெளி.. கம்பளம் போல் விரிந்திருக்க அதன் நடுவே இருந்த அழகிய வீட்டின் முன்னால் சென்று கார் நின்றது..

"இறங்கு சுமி.." விவேகானந்தன் கார் கதவைத் திறந்துவிட.. கையில் குழந்தையுடன் சுமித்ரா இறங்கினாள்.. சுற்றிலும் பார்த்தாள்.. ஒரு வீட்டிற்கும் அடுத்த வீட்டிற்கும் இடையே இடைவெளி அதிகமாக இருந்தது..

"பக்கத்தில் வீடு இல்லையே.."

"இங்கேயெல்லாம் அப்படித்தான்.."

"பேச்சுத் துணைக்கு என்ன செய்வது..?"

"எல்லாத் துணைக்கும் நான் இருக்கிறேனே.."

அவன் கண்சிமிட்டினான்.. அவளுக்கு வெட்கமாகி விட்டது.. காரில் இருந்த பெட்டிகளை இறக்கிவைத்து விட்டு காரை அனுப்பி விட்டு உள்ளே வந்தான்..

சுமித்ரா கண்விரிய வீட்டைச் சுற்றிப் பார்த்தாள்.. அழகான ஹால்.. படுக்கையறை.. டிராயிங் அறை.. டைனிங் அறை.. சமையலறை என்று பரந்து விரிந்து இருந்தது..

சுத்தமான காற்றும் பசுமையும் கருத்தைக் கவர.. கையில் தூக்கிப் போயிருந்த குழந்தையை சோபாவில் படுக்க வைத்துவிட்டு ஜன்னலோரம் போய் நின்றாள்.. கார் காரேஜ் கண்ணில் பட்டது..

"அது என்ன..?" என்று வினவினாள்..

"நம் காரின் பெட்ரூம்.." அவன் அவள் பின்னால் வந்து நின்று தழுவிக் கொண்டான்..

சுமித்ராவின் உடலில் உணர்வுகள் விழித்துக் கொண்டன.. அவனது மூச்சுக் காற்று பின்னங் கழுத்தில் படுவதை உணர்ந்தவள்.. மெல்ல விலக முயன்றாள்..

"நம் காரை விட்டு விட்டு ஏன் வாடகைக் காரில் வந்தீங்க..?"

பேச்சை மாற்ற அவள் முயல.. அவன் அவளது இடுப்பில் கைபடிய இழைந்தவாறு பதில் சொன்னான்..

"ஏர்போர்ட்டுக்கு கார் தானாக வருமா..? அதனால் தான் வாடகைக் கார்.."

அவன் கைகள் அவளது இடுப்பின் வழவழப்பான பகுதியில் ஓடி.. வயிற்றின் மீது படிய.. சுமித்ரா கண்மூடி கிளர்ந்து நின்றாள்.. அவளது நிலையை உணர்ந்தவனாய் அவளைத் தன் பக்கம் திருப்பினான் விவேகானந்தன்..

அவளது முகத்தை இறுக்கிப் பிடித்து உயர்த்தி.. அவளது இதழ்களில் முத்தமிட்டவன்..

"சுமி.." என்று கிறங்கிப் போன குரலில் அழைத்தான்..

"ம்ம்ம்.." அவள் தாளாமல் அவன் மார்பில் புதைந்தாள்..

காலம் காலமாய்.. மனதில் புதைந்து வைத்திருந்த தாபம் கரை உடைக்க.. அவன் அவளைத் தூக்கிக் கொண்டு படுக்கையறைக்குள் போனான்.. கட்டிலில் அவளைக் கிடத்தி மேலே படர்ந்தான்.. பரவினான்..

எண்ணற்ற இரவுகளில் அவளுக்குள் பொங்கி எழுந்து பொசுக்கிய அவனது நினைவுத்தீ.. அதன் முடிவினில் அவள் உடலும் மனதும் அவனைத் தேடிய பொழுதுகள்.. எல்லாம் அவளுள் பிரகாசமாய் எழுந்து கொள்ள.. அவள் அவன் கழுத்தை வளைத்தாள்.. அவன் முதுகில் அவள் கரங்கள் பரவிப் படர்ந்தன..

கிட்டாமல் விலகிப் போனவளை.. தொட்டுவிட்ட துடிப்புடன் ஆவேசமாய் அவளை ஆட்கொண்டான் விவேகானந்தன்.

காதல் என்ற உறவில் அவனுடன் பிணைந்தவள் இன்று உரிமையுடன் கலந்தாள்.. அவன் கைகளில் கரைந்தாள்.. அவனுள் மறைந்தாள்..

எல்லையற்ற திருப்தியுடன் கண்மூடிக் கிடந்தவர் களை எழுப்பியது குழந்தையின் அழுகுரல்..

"எழுந்து கொண்டாள் போல.. கட்டிலில் படுக்க வைத்திருக்கிறேன்.. கீழே விழுந்துவிடப் போகிறாள்.." சுமித்ரா.. பதறி விலகி எழுந்தாள்.. ஹாலுக்கு ஓடி குழந்தையைத் தூக்கி கொண்டாள்..

"இல்லேம்மா.. இல்லேம்மா.. அழக்கூடாதுடா செல்லம்.. அம்மா வந்துவிட்டேன் பாரு.."

பத்து மாதம் சுமந்து பெற்றவளைப் போல குழந்தையை தோளில் போட்டு தட்டிக் கொடுத்தபடி சமையலறைக்குப் போனாள் சுமித்ரா..

அவளது செயல்களைக் கவனித்தவாறே சமையலறை வாசலுக்கு வந்து நின்ற விவேகானந்தனின் முகம் கனிந்தது..

'இவளுக்குத்தான் என் குழந்தையின் மீது எவ்வளவு பாசம்..'

"தண்ணீரை சுட வைத்து.. இவளுக்கு பால் பவுடரைக் கலக்க வேண்டும்.. இந்த ஸ்டவ்வைப் பற்ற வைக்கவே எனக்குத் தெரியவில்லை.."

விவேகானந்தன் லாவகமாய் ஸ்டவ்வை பற்ற வைப்பதை வியப்புடன் பார்த்தவள்..

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்..?" என்று கேட்டாள்..

"நான்தானே சமைப்பேன்.." அவன் சிரித்தான்..

அவள் முகம் இரக்கத்தைக் காட்ட.. அவன் காதலுடன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்..

"குழந்தை பசியோடு இருக்கிறாள்.." அவள் விலகிக் கொண்டாள்..

கனடாவில் அவர்களின் வாழ்க்கை ஆரம்பமானது..

தூக்கத்தில் புரண்டு படுத்த சுமித்ராவின் கை மார்பில் வந்து விழவும்.. விவேகானந்தன் விழித்துக் கொண்டான்.. அவள் பக்கமாய் ஒருக்களித்து திரும்பி படுத்துக் கொண்டான்.. சீரான மூச்சுடன் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள்.. நெற்றியில் படிந்திருந்த முடியை விலக்கி விட்டு மென்மையாக முத்தமிட்டான்.. அவளது தூக்கம் கலையாமல் அவள் கையை விலக்கிவிட்டு எழுந்து கொண்டான்..

அவர்களின் கட்டிலை ஒட்டிய சிறு கட்டிலில் குழந்தை நிவேதிதா உறங்கிக் கொண்டிருந்தாள்.. அந்தப் பெயரை குழந்தைக்கு சுமித்ராதான் சூட்டினாள்..

"குழந்தைக்கு என்ன பெயர் விவேக்.."

சுமித்ரா திடீரென்று கேட்டபோது விவேகானந்தன் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான்..

"என்ன இப்படி முழிக்கிறீங்க.."

"என்ன பெயர்னு தெரியாது சுமி.."

"அப்புறம் எப்படி ஃப்ளைட் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்தீங்க..?"

"சும்மா.. பேபின்னு சொல்லி வாங்கினேன்.."

சுமித்ரா அவனை பார்த்த பார்வையில்..

'உன்னையெல்லாம் என்ன செய்வது..?' என்ற கேள்வி இருந்தது..

விவேகானந்தனின் அசட்டுச் சிரிப்பை சகித்துக் கொள்ள முடியாமல்..

"போதும்.. போதும்.. வழியாதீங்க.. நானே என் மகளுக்கு பெயர் வைத்துக் கொள்கிறேன்.." என்றாள் சுமித்ரா..

'இவள் மகளாம்..' விவேகானந்தன் நெகிழ்ந்து போய் விட்டான்..

"நிவேதிதா.."

சுமித்ரா மூன்று முறை குழந்தையின் காதில் சொல்லி அணைத்துக் கொண்டபோது.. விவேகானந்தனின் கண்கள் பனித்தன..

"நிவேதிதா.. அழகான பெயர்.."

"நம் குழந்தையும் அழகுதானே.."

குழந்தையைப் பார்த்தான்.. அது அழகாய் சிரித்தது..

மனதில் பாசத்துடன் கை நீட்ட.. தாவிக் கொண்டு வந்தது..

"ஷ்யூர்.. ஆனால், இந்தப் பெயரை வைக்க என்ன காரணம் சுமி.."

"நிவேதனம்.. ஆண்டவனுக்கு படைக்கப்படுவது.. இவளும் அப்படிப்பட்ட அற்புதமான படைப்புதானே.. என் விவேக்.. எனக்காக கொடுத்த குழந்தை.."

'ஏண்டி என்மேல் இவ்வளவு காதலை வைத்திருக் கிறாய்.. கையில் குழந்தையோடு இருப்பவனிடம்.. முகம் திருப்பிக் கொள்ளாமல்.. மனம் முழுவதும் காதலைச் சுமந்து கொண்டு நெருங்கி வருகிறாயே..'

என்றும் அவள் மேல் தாகத்தோடு இருப்பவன் இப்போது அதிகமாக தாகம் கொண்டான்.. இரவுகளில் அவளை விட்டுப் பிரியாமல் வேட்கையோடு படர்ந்தான்..

சுமித்ரா அவனின் வேட்கையைப் புரிந்து கொண்டாள்.. அவனுடன் வாழ முடியாமல் பிரிந்து வாடிய நாள்களை ஈடுகட்டினாள்.. கணநேரம் கூட அவனைப் பிரியாமல் உடன் உறங்கினாள்..

அவள் வேண்டும் என்ற தாபம் எழும்போது உடனே வீடு திரும்பி விடுவான் விவேகானந்தன்.. பகலில் திரும்புகிறவனின் முகம் பார்த்து அவனது மனதைப் புரிந்து கொள்வாள் சுமித்ரா..

அவன் கேட்டதைக் கொடுப்பதோடு கேட்காத தையும் வாரி வழங்கிடுவாள்.. அவளின் தாராளத்தில் மயங்கிப்போய் விடுவான் விவேகானந்தன்..

"என்னை விட்டு விட்டு ஓடியவள்தானே நீ.." சுமித்ராவைச் சீண்டுவான்..

"விட்டு விட்டுப் போனேன்.. மறந்துவிட்டுப் போக வில்லை.." அவள் இலகுவாக பதில் சொல்வாள்..

"அதைத்தான் பார்த்தேனே.. நடந்தைச் சொல்லியும் அதைப் பெரிது பண்ணாமல் உன்னையே கல்யாணம் பண்ணிக் கொள்வேன்னு ஒற்றைக்காலில் நின்றான் அந்த தேவேந்திரன்.. அவனை விட்டுவிட்டு நான் கூப்பிட்டதும் என் பின்னால் ஓடிவந்துவிட்டாயே.. அப்படி என்னிடம் என்னதாண்டி இருக்கிறது..?"

"என்ன இருக்கிறது..?"

சுமித்ரா.. தலை வைத்துக்கொள்வாள்.. அவள் கரம் அவன் முடியில் படிந்து கலைக்கும்.. பின் மெல்ல இறங்கி நெற்றியை வருடும்..

"ம்ம்.. அழகான.. அலையலையான முடி.. யாருக்கும் அடங்காமல்.. நீங்கள் சிலுப்பிக் கொண்டு நிற்பதைப் போலவே இதுவும் சிலுப்பிக் கொண்டு நிற்கிறது.."

"அப்புறம்.."

"அகன்ற நெற்றி.. பார்த்தவுடன் முத்தம் கொடுக்கத் தோன்றுகிறது.."

"போடி.. பார்த்த நேரமெல்லாம் நீ முத்தம் கொடுக் கிறவளா.. பொய் சொல்லாதே.."

"மனதில் நிறைய முறை கொடுத்திருக்கிறேன்.."

"அது கண்க்கில் வராதே.."

"எல்லாம் வரும் அப்புறம் இந்த கூர்மையான மூக்கு.. வாயடிக்கும் வாய்.. அடர்த்தியாய் என் கன்னம் குத்தும் மீசை.."

சுமித்ரா ஆசையுடன் வர்ணிப்பாள்.. அதற்கு மேல் அவளை வர்ணனை செய்ய விடாமல் அவன் நெருங்குவான்.. அவளும் ஒன்றிக் கொள்வாள்..

நிவேதிதா மூன்று வயதுக் குழந்தையாக பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தபோது.. சுமித்ரா கருவுற்றாள்..

"நிவேதா ஏங்கிப் போய் விடமாட்டாளா..?"

அவள் தயங்கியபோது.. விவேகானந்தன் கோபம் கொண்டான்..

"இப்படியே சொல்லி.. மூன்று வருடமாய் தள்ளிப் போட்டு விட்டோம்.. இனி போதும் சுமி.. நிவேதா வளர்ந்து விட்டாள்.. இன்னொரு குழந்தையை வரவேற்பாள்.."

நிவேதிதாவிற்கு நான்கு வயதாக இருக்கும்போது சுமித்ராவிற்கு கௌதம் பிறந்தான்..

குழந்தை பிறந்ததை போனில் கேட்ட சுதர்சனம் ஒருமுறை இந்தியாவிற்கு வந்து போகும்படி தங்கையிடம் வருந்திக் கேட்டுக் கொண்டான்..

"கொஞ்ச நாள் போகட்டும்னு இவர் சொல்கிறார் அண்ணா.." சுமித்ரா காரணம் சொன்னாள்..

அவளுக்குமே இந்தியாவிற்கு ஒருமுறை போய் வர வேண்டுமென்று ஆவலாக இருந்தது.. விவேகானந்தன் மறுத்துவிட்டான்..

"ஒரே ஒரு தடவை.. குழந்தைகளுக்கு குலதெய்வம் கோயிலில் மொட்டை போட்டு.. காது குத்திவிட்டு வந்து விடலாம்ங்க.."

"கனடாவில் இருக்கிறவள் பேசுகிற பேச்சா இது..?"

"எங்கேயிருந்தால் என்ன.. நம் வேர் இந்தியாவில் தானே இருக்கிறது..?"

"அதை இல்லையென்று சொன்னேனா..?"

"அப்புறம் ஏன்.. என் ஆசையைப் புரிந்துகொள்ள மாட்டேன்னு சொல்கிறீங்க.."

"வேண்டாம்டி.. உனக்கு என் பயம் புரியாது.."

"என்னன்னு சொல்லுங்களேன்.."

"நிவேதிதா குழந்தை சுமி.. அவள் மனதை யாராவது கலைத்து விடுவார்கள்.. அப்புறம்.. நம் குழந்தை நம்மை வெறுக்க ஆரம்பித்து விடுவாள்.. இப்படியே கண்காணாமல் இருந்துவிடுவோம்.."

சுமித்ரா பயந்துவிட்டாள்.. அவள் மகள் அவளை வெறுத்துவிடுவாளா..? பெற்றால்தான் அன்னையா..? நிவேதாவை வயிற்றில் சுமக்காவிட்டாலும் அவள் மேல் பாசத்தை மனதில் சுமித்ரா சுமந்தாளே.. அது அவளுக்குத் தெரியாமல் போய்விடுமா..?

சுமித்ரா தன் பயத்தை மாலதியிடம் போனில் சொல்ல.. அவள் யோசித்துவிட்டு வழி சொல்லித் தந்தாள்..

"எங்கேயும் தங்காமல்.. வந்தவுடன் திரும்பிப் போய் விடுங்க.. இங்கே இருக்கிற இரண்டு மூன்று நாள்களில்.. குழந்தையை தனியாக விடாமல் அடைகாத்தால் சரியாகப் போய்விடும்.."

மாலதி சொன்னதை யோசித்துப் பார்த்த சுமித்ரா.. விவேகானந்தனுக்கு தைரியம் கொடுத்து கிளம்ப வைத்தாள்.. விவேகானந்தனின் வீட்டிற்குப் போய் அவர்கள் இறங்கியதும் மாணிக்கவாசகத்திற்கும் மரகதத்திற்கம் மனமும் கண்ணும் நிறைந்துவிட்டது..

"வாடா.. என் ராஜா.."

மாணிக்கவாசகம் பேரனைத் தூக்கிக் கொண்டு கொஞ்ச.. மரகதம்.. வளர்ந்து நின்று நிவேதிதாவின் அழகில் மகிழ்ந்து போனாள்..

"என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கே.. சுடர் விளக்கு போல என்னமா இருக்கா.. என் பேத்தி.."

நிவேதிதாவின் வரவை அறிந்து மோகனரங்கமும் பூங்கோதையும் வந்து இறங்கினார்கள்.. வீட்டில் வேலைக் காரர்கள் மட்டுமே இருந்தார்கள்..

"பெரியய்யா குடும்பமும் சின்னய்யா குடும்பமும் குலதெய்வம் கோயிலுக்குப் போய்விட்டாங்க.." வேலையாள் சொன்hனன்..

"எதுக்காம்..?"

"பிள்ளைகளுக்கு மொட்டை போட்டு காது குத்தப் போகிறாங்களாம்.."

"என்னது.."

மோகனரங்கமும் பூங்கோதையும் அதிர்ந்துவிட்டனர்.. மோகனரங்கம் கண் சிவந்தார்..

"நமக்கு ஒரு வார்த்தை சொல்லலையே கோதை.."

"அதுதானே.. யார் வீட்டுக் குலக்கொழுந்துக்கு யாரு தாய்மாமன் வீட்டுச் சீர்செய்வது..? நாம் இங்கே கல்லுக் குண்டுபோல இருக்கும்போது.. நம்ம பேத்திக்கு அந்த சுதர்சனம் சீர் செய்வதா..?"

"நடக்க விடமாட்டேன் கோதை.."

ஆனால், அதுதான் நடந்தது.. அவர்கள் கோயிலுக்குப் போனபோது.. அங்கே யாருமேயில்லை..

"அப்பவே மொட்டை போட்டு காது குத்திவிட்டு அவங்க எல்லோரும் தூத்துக்குடிக்குப் போய் விட்டாங்களே.."

பூசாரி சொன்னதைக் கேட்டு வெகுண்டு.. தூத்துக் குடிக்கு அவர்கள் பறந்தபோது.. அங்கும் அவர்கள் கையில் சிக்காமல்.. விவேகானந்தன்.. மனைவி குழந்தைகளுடன் சென்னைக்கு திரும்பி விட்டான்.. சென்னைக்கு அவர்கள் வந்தபோது விமானத்தில் பறந்து விட்டான்..

# 51

வீட்டின் முன்புறம் இருந்த புல்வெளியில் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்த நிவேதிதாவும் கௌதமும் கார் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்..

அழகாய்.. ஆறடி உயரத்தில் இருந்த இளைஞன் ஒருவன் காரை அனுப்பிவிட்டு.. அவர்கள் வீட்டை நோக்கி நடந்து வந்தான்..

'வாட் எ ஹாண்ட்சம் மேன்..' மனதிற்குள் வியந்த நிவேதிதா.. முதல் பார்வையிலேயே அவன் தோற்றத்தில் வசீகரிக்கப்பட்டாள்..

"யாருடா அது..?"

"தெரியலை நிவி.. நம் வீட்டிற்குத்தான் வருகிறான்.."

அவர்கள் இருவரையும் சமீபித்தவன் புன்னகையுடன்,

"ஹாய் நிவேதா.. ஹாய் கௌதம்.." என்றான்..

அவர்கள் இருவரும் விழித்துக் கொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள.. அவன் புன்னகை அகலமானது..

"ஐ ஆம் நரேந்திரன்.. நினைவில்லையா நிவி.." என்றான்..

சட்டென்று நிவேதா பிரகாசமானாள்.. சிறுவயதில் அவள் சந்தித்த மாமன் மகனா இவன்..?

"வெல்கம் நரேன்.." என்றபடி கை நீட்டினாள்..

அவளின் மென்மையான கையை.. அவனது வலுவான கரம் இறுக்கிப் பிடித்துக் குலுக்கியது.. அவர்கள் வீட்டிற்குள் போனார்கள்..

நரேந்திரன் கனடாவில் படிக்க வந்திருந்தான்.. தங்களின் வீடு இருக்கும்போது சுதர்சனத்தின் மகன் வெளியே தங்கக் கூடாது என்று விவேகானந்தன் கண்டிப் பாக

சொல்லிவிட்டதால்.. நரேந்திரன்.. விவேகானந்தனின் வீட்டில் தங்கிப் படித்தான்..

"மம்மி.. ஐ லவ் நரேன்.."

நிவேதிதா ஒரு நாள் சுமித்ராவிடம் இதைக் கூறினாள்.. சுமித்ரா, விவேகானந்தனிடம் கூற.. அவன் சுதர்சனத்திடம் பேசி திருமணத்தை முடிவு செய்தான்..

இந்தியாவிற்கு நரேந்திரன் திரும்பிய இரண்டு மாதங்களில் திருமணம் நிச்சயம் ஆனது.. தூத்துக்குடியில் திருமணம் என்று திருமண அழைப்பிதழ்கள் அச்சிடப் பட்டு விநியோகம் ஆரம்பித்துவிட்டது.. திருமணத்திற்கு இரு வாரங்களுக்கு முன்னால் விவேகானந்தன் குடும்பத்துடன் சென்னைக்கு வந்து இறங்கினான்..

நிவேதிதா.. இருபத்தியொரு வயதில் அழகுப் பதுமையாக இருந்தாள்.. கௌதம் பதினேழு வயது இளைஞன்..

சென்னையைச் சுற்றிப் பார்க்க தனியாக காரை எடுத்துக் கொண்டு நிவேதிதா கிளம்பியபோது.. மரகதம் தடுக்க.. விவேகானந்தன் சிரித்தான்..

"வயசுப் பொண்ணு.. தனியாகப் போகிறேன்கிறா.. நீ சிரிக்கிற.."

"அம்மா.. அவள் கனடாவில் வளர்ந்தவள்... அவளுக்கு துணை எதற்கு..? அவள் சென்னையையே விற்று விடுவாள்.."

நிவேதிதா.. ஸ்பென்சர் பிளாசாவில் சுற்றிக் கொண்டு இருந்தபோது.. ஒருகை அவளைப் பிடித்து நிறுத்தியது..

நின்று.. நிமிர்ந்து பார்த்தாள்.. மோகனரங்கம் நின்றிருந்தார்..

"யார் நீங்க..?"

"உன் தாத்தா.."

"அவர் வீட்டில் இருக்கிறாரே.."

"அவர் உன் அப்பாவைப் பெற்றவர்.. நான் உன் அம்மாவைப் பெற்றவன்.."

"இம்பாஸிபிள்.. என் அம்மாவின் பேரண்ட்ஸ்.. என் அம்மா சின்ன வயதாக இருக்கும்போதே இறந்து விட்டாங்களாம்.."

"முட்டாள்.. அவள் உன் அம்மா இல்லை.. உன் அம்மாவைக் கொன்றுவிட்டு அந்த இடத்துக்கு வந்து அவள் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் கொலை காரி.."

நிவேதிதாவின் விழிகள் விரிந்தன.. மோகனரங்கம் அவளைத் தன்னுடன் வீட்டுக்கு அழைத்துப் போனார்.. காத்திருந்த பூங்கோதை பேத்தியைக் கட்டிப் பிடித்து கண்ணீர் விட்டுக் கதறினாள்..

மைதிலியின் போட்டோவைக் காட்டினார்கள்.. கதையை மாற்றிச் சொன்னார்கள்.. எது நடந்துவிடும் என்று விவேகானந்தன் அச்சப்பட்டு.. அத்தனை காலமாய் இந்தியாவிற்கு வராமல் கனடாவிலேயே வாழ்ந்தானோ.. அது நடந்துவிட்டது..

வெகுநேரம் கழித்து வீடு திரும்பிய நிவேதிதா சுமித்ராவைப் பார்த்து..

"யார் நீங்க..?" என்று கேட்டாள்..

"நிவி.." என்று அதிர்ந்த சுமித்ராவிடம்..

"என் அம்மாவை ஏன் கொன்னீங்க..?" என்று வேறு கேட்டு அனல் மூட்டினாள்..

"நான்தான் உன் அம்மா நிவி.."

"இல்லை.. என் அம்மாவின் பெயர் மைதிலி.. நீங்க என் அம்மாவைக் கொன்றவங்க.. என் சித்தி.."

'சித்தி..' என்ற வார்த்தையில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்து விட்டாள் சுமித்ரா..

விவேகானந்தன் அப்போது வீட்டில் இல்லை.. செய்தி அறிந்து பதறி ஓடி வந்தான்.. சுமித்ராவை மருத்துவ

மனையில் சேர்த்தார்கள்.. நிவேதிதா, மோகனரங்கத்தின் வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள்..

சுதர்சனத்திற்கு போன் போனது.. மாலதியுடன் அவன் விரைந்து வந்தான்.. மயக்கத்தில் இருந்த போதும்.. "நிவி.. நிவி.." என்று புலம்பிக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்தான்.. மனம் தாளவில்லை..

"அறுத்துப் போட்ட கொடியைப் போல் கிடக்கிறாள்டா உன் அத்தை.. பார்க்கச் சகிக்கவில்லை.. அவள் பெற்ற மகன் பக்கத்தில் நிற்கிறான்.. அவள் வளர்த்த மகளை நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கிறாள்.. பாசம் வைத்தால் உயிரைக் குடிக்கும் வம்சம்டா அது.. மைதிலியின் மேல் பாசம் வைத்தாள்.. அவள் இவளை உயிரோடு சாகடித்தாள்.. அதற்கப்புறம் அவள் மகளின் மேல் பாசம் வைத்தாள்.. அவளும் பெற்ற தாயைப் போல் இவளை உயிரோடு இரண்டாம் முறையாக சாகடிக்கிறாள்.. என் தங்கை துடிக்கும் துடிப்பைக் காணச் சகிக்கவில்லை நரேன்.."

போனில் தந்தை பதறியதைக் கேட்ட நரேந்திரனின் உடல் விறைத்துக் கொண்டது.. அவன் முகம் இறுகியது..

விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருந்த நிவேதிதாவின் செல்போன் அலறியது.. எடுத்துப் பார்த்தாள்.. நரேந்திரன் அழைத்தான்..

"ஹலோ.." என்றாள்..

"நிவி.. நான் நரேன்.."

"தெரிகிறது.. என்ன வேண்டும்..?"

"உன்னிடம் பேச வேண்டும்.. வெளியில் வா.."

"நம் கல்யாணம் நடக்காது.."

"நான் ஒன்றும் அதற்காக அலையவுமில்லை.. உன்னை அழைக்கவுமில்லை.. ஐ லவ் நரேன்னு நீதான் சொன்னாய்.. ஐ லவ் நிவேதிதான்னு நான் சொல்ல வில்லை.."

நிவேதிதாவின் முகம் அவமானத்தில் சிவந்தது.. அவன் சொல்வது உண்மையென்பதால் வீட்டை விட்டு வெளியே வந்தாள்..

"ஏறிக்கொள்.." என்றான் காருடன் இருந்த நரேந்திரன்..

வாக்குவாதம் பண்ணாமல் ஏறிக்கொண்டாள்.. கடற்கரையில் காரை நிறுத்திவிட்டு அவள் பக்கம் திரும்பி அமர்ந்தான்.. ஒரு கவரை அவளிடம் கொடுத்தான்..

"வாட் இஸ் திஸ்..?" என்றாள் நிவேதிதா..

"உன் தாயின் வாக்குமூலம்.. படித்துப் பார்.."

படிக்கப் படிக்க அவள் முகம் வெளுத்தது.. அவனை நிமிர்ந்து பார்த்தாள்..

"படித்துப் பார்த்தாயா..? இதுதான் உன்னைப் பெற்ற அம்மா.. நீ பிறந்தவுடன் உன் முகத்தைக்கூடப் பார்க்கப் பிடிக்காமல் ஒதுங்கி நின்றவள்.. தோழியென்று கூட நினைக்காமல் என் அத்தையின் காதலனைப் பறித்துக் கொண்டு ஊரை விட்டு விரட்டியவள்.. தாலி கட்டிய புருஷனை பழிவாங்கத் துடித்தவள்.. இவளையா என் அத்தை கொன்றாங்க..? அவங்க பாவம்டி.. உன் அப்பா காதலித்தது என் அத்தையைத்தான்.. என் அத்தை விட்டுக் கொடுத்ததால் உன் அம்மா அவருக்கு முதல் மனைவி ஆனாங்க.. அவர்களின் ஆவேசம் அதிகமாகி அவங்களாக உயிரை விட்டால்.. அதற்கு யார் பொறுப்பு..? மனைவியை இழந்து.. ஒரு குழந்தைக்கு தகப்பனாய்.. ஏகப்பட்ட சிக்கல்களை வைத்துக் கொண்டு நின்றார் உன் அப்பா.. கல்யாணம் பண்ணிக் கொள்ளக் காத்திருந்த பணக்காரனை உதறிவிட்டு உன் அப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அன்றைக்கே உன்னையும் தூக்கிக் கொண்டு இந்தியாவை விட்டுப் போனவங்க என் அத்தை.. அவங்களைப் பார்த்தா.. நீ யாருன்னு கேட்டாய்..? அவங்க உனக்கு அம்மா மட்டுமில்லைடி.. அன்பு தெய்வம்.."

கண்ணை மூடிக் கிடந்த சுமித்ராவின் காலடியில் விழுந்தாள் நிவேதிதா..

"அம்மா.. அம்மா.." என்று அவள் விட்ட கண்ணீரில் கண்விழித்தாள் சுமித்ரா..

"நிவி.."

"அம்மா.."

"நீ என் மகள்டா.."

"ஆமாம்மா.. நான் உங்க மகள்தான்.."

நிவேதிதா.. சுமித்ராவின் தோளில் முகம் புதைத் தாள்.. அன்னையும் மகளும் ஒன்றுசேர்ந்ததைக் கண்டு சுற்றியிருந்தவர்களின் கண்களும் நீரை வடித்தன..

தூத்துக்குடியில் நடந்த நரேந்திரன் - நிவேதிதாவின் திருமணத்திற்கு தேவேந்திரன் தன் மனைவி மக்களோடு வந்திருந்தான்.. சுமித்ராவிடம் பேசினான்..

"மனதுக்கு நிறைவாய் இருக்கு சுமித்ரா.. விரும்பிய காதலனை காத்திருந்து கல்யாணம் பண்ணிக் கொண்டாய்.. அவர் பெற்ற மகளை.. உன் மகளாய் நினைத்து

வளர்த்து உன் அண்ணன் மகனுக்கே கல்யாணமும் செய்து வைத்து விட்டாய்.. ரியலி.. யூ ஆர் வெரி கிரேட்.."

"நான் கிரேட் இல்லை சார்.. காட் இஸ் கிரேட்.."

உண்மைதான்.. கடவுள் மிகப் பெரியவர்.. அவருக்குத் தெரியும்.. காத்திருக்கும் நல்லவர்களுக்கும் அப்பாவிகளுக்கும் என்ன பரிசு கொடுக்க வேண்டும் என்பது..

சுமித்ரா உண்மையாக காதலித்தாள்.. அந்தக் காதலை மறக்க முடியாமல் தவமிருந்தாள்.. அவள் காதல் கைகூடியது.. அவளது காதலன் ஒரு நாள் அவளைத் தேடி வந்தான்.. மனம் விரும்பிய வாழ்க்கையை அவள் வாழ்ந்து விட்டாள்..

இமையோர நினைவுகளுக்கு என்றுமே தோல்வியில்லை..

- முற்றும் -